துருக்கி: குர்டிஸ்மக்களது சுதந்திரப் போர்

# உலக உலா

மார்ச் 1994



## கன்னிவெடிகளின் அபாயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் நலனே எங்களின் மூச்சு

நியாய விலை! தரமான பொருட்கள்!!

பாவனையாளருக்கு

உயர்வான சேவை!!!



கூட்டுறவின் மூலம் மக்கள் நலனைக்

கருத்திற் கொண்டு நிறைவான

சேவையை வழங்குவது

## காரைநகர்

## ப. நோ. கூ. சங்கம்

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

# உலக விவகாரங்கள்

## ஆசியா

காஷ்மீரில் ஒரு நெருக்கடி 07
பர்மாவின் புதிய வீதி 10
கண்களுக்குப் பதில் ஆயுதங்கள் 13
சாகாவரம் பெற்ற மாவோ 15
சீனாவின் துருப்புச் சீட்டு 17
போரின் காயங்களை ஆற்றுதல் 19
பழிவாங்கல் முன்னிலையில் 22
பலமின்மையின் சக்தி 25
மாவோ நினைவு நாள் 28

## அவுஸ்திரேலியா

சிட்னியில் காட்டுத் தீ 29

## ஐரோப்பா

குர்டிஸ் மக்களது சுதந்திரப் போர் 31
நாடற்ற ஓர் ஒற்றன் 35
பொஸ்னியாவின் படுகொலைகள் 37
சீன – லற்வியா உறவு 39

## அமெரிக்கா

நச்சு வாயுவின் மர்மம் 41
ஹெயிற்றியில் அமெரிக்கா தடுமாற்றம் 43
சிறைச்சாலை வேலை 45
மெக்சிக்கோவில் புரட்சி 47

## ஆபிரிக்கா

புரட்சி பரவுகிறது 51
நிர்வாக மொழி எது? 53

## வாணிகம்

இலத்திரனியல் நாட்குறிப்பு 55

## விண்வெளி

புவியின் மீது ஒரு கண் 58
நாசா: விண்வெளிக் காவலன் 60

## குற்றவியல்

துணிகரக் கடத்தல் 61

## மனிதவியல் வரலாறு

அரசர்களின் வாழ்க்கை முறை 63
செவ்விந்தியர்களின் கைப்பணி 65

## விளையாட்டு

விளையாட்டில் சதி 66

## சமூகவியல்

தொடரும் கொலைகள் 67
காப்பாற்றலும், மீட்டலும் 73

## கடலடி ஆய்வு

புதைபொருள் வேட்டை 75

## மருத்துவம்

வெங்காய வைத்தியம் 80

## முகாமைத்துவம்

நேர விணடிப்புகள் 81

## பல்திணைப் பகுதி

செய்திச் சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06
நேசப் பூக்கள் 87

விலை ரூ. 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா: 8

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-2-4-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜ தந்திரம்

## குறில்ஸ் சிக்கல்

ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் பிணக்கிற்கு உட்பட்டு இருக்கும் குறில்ஸ் தீவுகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் காலவரையறை இன்றிப் பிற்போடப்பட்டதாக, ரோக்கியோவிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற மாதம் ருஷ்யாவில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தலில், ருஷ்யத் தேசியவாதிகள் மிகுந்த பலம் பெற்றதை அடுத்து, இந்தப் பிணக்கு விடயமாக மொஸ்கோவின் நிலைப்பாடு இறுக்கமடைந்துள்ளது. ருஷ்யா, அந்தத் தீவுகளை ஒருபோதும் திருப்பித் தராது என்று, ருஷ்யப் பிரதமர் விக்ரர் செரினோமைரிடின் கூறியதைத் தொடர்ந்து, இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

## அமெரிக்கா போற்றுகிறது

பசுபிக் மா கடற்பிராந்தியத்தில், அமெரிக்க இராணுவத்தின் ஆணையாளரான அட்மிரல் சார்ள்ஸ் லார்சன், வியட்நாம் யுத்தத்தின் போது காணாமற் போன சுமார் 1,600 அமெரிக்கர்களைப் பற்றிய தகவல்களை அறிய ஹனோய் அரசு எடுத்திருக்கும் முயற்சிகளைப் போற்றியுள்ளார். சென்ற ஜனவரி 18 ஆந் திகதி அந்த நாட்டிற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தளகர்த்தர், இந்த விடயத்திற் கடந்த இரண்டு ஆண்டுகளில் வியட்நாமின் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாகக் கூறினார். தளகர்த்தரின் இந்த மேன்மைப்படுத்தற் பேச்சு, அமெரிக்கா, வியட்நாமுடன் உறவை மேம்படுத்த முயல்வதற்காகத் தாக்கிப் பேசும் முன்னாள் யுத்தகள வீரர் குழுக்களின் விமர்சனத்தை, கிளின்ரன் அரசு சமாளிக்க உதவக் கூடும்.

# சீனா

## திபெத்தியர்கள் விடுவிக்கப்பட்டனர்

அமெரிக்க நாடாளுமன்றமான கொங்கிரஸ் அவையில், சீனாவின் மனித உரிமை மீறல்கள் விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பீகிங் இரண்டு திபெத்திய அரசியற் கைதிகளை விடுதலை செய்துள்ளது. உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டும் தொழில் செய்த ஜென்டுன் ரிஞ்சன் என்பவரும், முன்னாள் பௌத்த குரு லொபோசாங்யொன்டன் என்பவரும், சுற்றுலாவுக்கு வந்த மேற்குலக நாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசியற் கைதிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்றைக் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகியிருந்தனர்.

## நிவாரண உணவுக் கையாடல்

சீனாவின் ஹூனான் பிரதேசத்தில் உள்ள 300,000 த்திற்கு மேற்பட்ட குடியானவர்கள், அரசு அனுப்பிய உணவுத் தானியங்களை உள்ளூர் அதிகாரிகள் களவாக விற்று விட்டதாற் பட்டினிக்கு உள்ளாயினர். சங்ஷி நகரத்திற்கு அனுப்பப்பட்ட 22,000 தொன் தானியத்தில் 15,675 தொன்னை விற்றுவிட்டதுடன், மேலும் 2,041 தொன்னை விற்கப் பேரம் பேசிக்கொண்டிருக்கையில், இந்தக் கையாடல் பிடிபட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து 96,673 டொலர் பெறுமதியான உள்ளூர் நாணயங்களைப் பறிமுதல் செய்ததுடன், மேலும் தண்டங்களும் விதிக்கப்பட்டன.

## சட்ட விரோதமாக ஏற்றுமதிகள் விசாரிக்கப்படுகின்றன

தொழில் நுட்பத் தகவல்களைச் சட்டவிரோதமாக வடகொரியாவுக்கு விற்றதான குற்றச்சாட்டின் பேரில், பாதுகாப்புத் துறையினர் சென்ற ஜனவரி 13ம், 14ஆம் திகதிகளிற் பல திடீர் முற்றுகைகளை நடத்தித் தேடுதல் செய்தனர். அந்தத் தொழில் நிறுவனங்களுள், மின்னியற் சாதன உற்பத்தியாளர்களான அன்றிற்சுவும் ஒன்றாகும். அந்த நிறுவனம், ஏவுகணைகள் குறித்த இடத்திற் சரியாக விழுவதை மேலும் திருத்த உதவும் தொழில்நுட்பத்தை, சீனா ஊடாக வடகொரியாவுக்கு விற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

# இந்தியா

## அணைக்கட்டுப் பிரச்சனை

சுற்றாடலுக்கு தீங்கு உண்டாக்கும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட சர்தார்சரோவர் குளத்தின் அணைக்கட்டுத் திட்டம் தொடர்ந்து நடைபெற உள்ளது. அந்த வேலைத் திட்டத்தை நிறுத்தும்படி, சுற்றாடல் மற்றும் வனத்துறை அமைச்சு இட்ட கட்டளையைப் பிரதமர் நரசிம்மராவ் நீக்கி உள்ளார். அந்தக் குளக்கட்டு வேலை, நர்மதா பள்ளத்தாக்கின் நீர், மற்றும் மின் உற்பத்தித் தேவைகளை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்டதாகும். சுற்றாடல் அலுவல்கள் அமைச்சு அணைக்கட்டுக்குப் பொறுப்பான அதிகார சபையும், குஜராத் மாநில அரசும், அந்த அணைக்கட்டு எழுவதால் வெள்ளத்தில் மூழ்கப் போகும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு, மாற்று வதிவிட ஒழுங்குகள் செய்வதை நிறைவேற்றவில்லை என்று குறை கூறியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டிக்குளி கிளை நூலகம்.



## நிச்சயமான நோவு அகற்றி

இனிமேல் நீங்கள் பல் பிடுங்கச் சென்று, பல் வைத்தியரின் கதிரையிற் கிடக்கும் பொழுது. அது உங்களுக்கு ஓர் ஒளிப்படக் கண்காட்சியாக ஆகலாம். பல் பிடுங்கும் பொழுது, அல்லது பல் ஓட்டைகள் அடைப்பதற்குத் துளையிடும் பொழுது, பல் வைத்தியருக்குத் தொல்லை தரும் சூத்தைப் பல்லர்களின் கண்களில் அந்தக் கருவியைப் பொருத்திவிட்டால், அதில் தெரியும் தொலைக்



காட்சிப்படத்தில் அவர்கள் லயித்து இருக்க, பல்வைத்தியர் தனது வேலையை இடையூறு இன்றிச் செய்ய முடியும். வோஷிங்ரனில் உள்ள ''வேர்சுவல் விஷான்'' என்ற கம்பனி, அதனைச் செய்து சந்தைப்படுத்துகிறது. பல் நோயாளர்கள் அதனை மிகவும் விரும்புவதாக, ஒரு பல் வைத்தியர் கூறினார். நோயாளர் விரும்பினால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அல்லது தாம் விரும்பிக் கொண்டு வரும் ஒளி நாடாக்களைப் போட்டுப் பார்த்துக் கொண்டு இருக்கலாம். விலை 845 டொலர்.

## பூச்சிகளைப் பிடிக்கும் பொறி

''கற்சா'' தயாரிப்புக்கள் என்ற இங்கிலாந்துக் கம்பனி ஒன்று, காருண்யமானதும், சூழலுக்கு உதவுவதுமான ஒரு சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளது. அதன் மூலம் கொசுக்கள், குளவிகள், சிலந்திகள் போன்ற பூச்சிகளை அவற்றுக்கு எவ்விதத் தீங்கும் நேராமற் பிடித்து அப்புறப் படுத்த முடியும் என்று அந்தக்



கம்பனி உறுதி கூறுகிறது. அந்தச் சாதனத்தில் நீண்ட பிடியுடன் கூடிய கூர்நுனி வடிவமான ஓர் ஏந்தி உள்ளது. அதனைப் பயன்படுத்துபவர் பூச்சியை அமரவிட்டு அந்த ஏந்தியால் அதனை மூடியதும் பிடியைத் திருப்பினால் அது புவியீர்ப்பால் இயங்கி ஏந்தியை மூடிவிடும். அப்பொழுது பூச்சி அதனுள் சிறைப்பட்டுவிடும். பின்பு தூர இடத்திற்குக் கொண்டு சென்று சாதனத்தை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு பிடியைத் திருகியதும் கதவு திறபடப் பூச்சி தப்பிப் பறந்து போகும். இந்தச் சாதனம் செயன்முறைப் படிப்பிற்காகவும், பரிசோதனைக்காகவும் பூச்சிகளைப் பிடிக்கும் மாணவர்களுக்கும், பூச்சி இயலாளர்களுக்கும் உதவக் கூடியது. விலை 8 அமெரிக்க டொலர்.

## கொழுப்புப் பகுப்பாயும் கருவி

ஒருவர், தாம் அளவுக்கு அதிகம் உடற் பருமன் கூடியவர் என்று உணரும் போது, குளியல் அறையில் ஆளை எடை நிறுக்குங் கருவி காட்டுவதை மட்டும் நம்பிக் கொண்டு இருக்க வேண்டியதில்லை. உண்டி சுருக்கி, தமது உடற் தோற்றத்தை மிளிர்வோடு வைத்திருக்க விரும்புவோர், கையடக்கமாக உடன் கொண்டு செல்லக் கூடிய, உடனடியாக உடலிற் கொழுப்பு அளவைப் பகுப்பாய்வு செய்து அறிவிக்கும் கருவி ஒன்று சந்தைக்கு வந்துள்ளது. அதனைப் பயன்படுத்தி, உடலின் கொழுப்பு நூற்று விகிதத்தையும், அவருக்கு ஏற்ற சரியான உடல் நிறை எது என்பதையும் கணத்தில் அறிந்து கொள்ளலாம், ''B.C.A Mode 680'' என்று குறிப்பிட்டுள்ள அந்தச் சாதனத்தின் மின் கவர் முனைகளைக் கை, மணிக்கட்டு, கால், பாதம் என்பவற்றிற் பாவனையாளர் பொருத்திய பின்பு வயது, பால், நிறை, உயரம், உடற்பலத்திறமை போன்ற தரவுகளை அமுக்கிகளைச் செயற்படுத்தி உட்பதிவு செய்ததும், உடலுக்குத் தீங்கு விளைக்காத வானொலிக்



கதிர்களை உட்செலுத்தி, அந்தச் சாதனத்தின் உள்ளியங்கும் கணனி உடலின் கொழுப்பு அளவு விகிதத்தையும், அவருடைய வயதுக்கு மிகப் பொருத்தமான உடல் நிறையையும், மூன்று விநாடிகளுக்குக் குறைவான நேரத்திற் பகுப்பாய்வு செய்து முடிவுகளை ஒளிகாட்டியில் வெளிப்படுத்தும். பெரிய அளவு இவ்வகை இயந்திரத்தைப் போலவே, சரியாகக் கணிக்கக்கூடிய இந்த இயந்திரம் கைக்கடக்கமாகவும், இலகுவில் இயக்கக் கூடியதாகவும் உள்ளது. இரண்டு 9 வோல்ட் மின்கலங்களால், இயங்கும் அச்சாதனம், தப்பித்தவறி இயக்கி அமுக்கப் பட்டுவிட்டால், உறங்கல் நிலையில் மிகக் குறைந்த மின் சக்தியையே செலவிடுவதுடன், பாவிக்காமல் இருந்தால், இரண்டு நிமிஷங்களில் தானாகவே மின்பாய்ச்சலை நிறுத்திக் கொள்ளும். விலை:- 1300 டொலராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பீற்றா செறோன்

''பன்முறை ஸ்கெலறோசிஸ்'' என்ற நோய்க்கு (MULTIPLE SCLEROSIS) உள்ள ஒரேயொரு சிகிச்சை பீற்றா செறோன் (BETA SERON)ஆகும். 'சிகிச்சை' என்னும் சொல்லை நன்கு கவனிக்கவும், ஏனெனில், '' பீற்றா செறோன் '' நரம்புத்தொகுதியைப் பாதிக்கும் இந்நோயைக் குணப்படுத்துவதில்லை. பதிலாக, விட்டுவிட்டு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகுபவர்களில், ( Periodic Attacks ) நோயின் விருத்தியைத் தாமதிக்கச் செய்கிறது. இந்நோயினால் ஏற்படும் விளைவுகளாவன:- பார்வைத் தொந்தரவுகள், அரைகுறைப் பாரிசவாதம் (Partial Paralysis), நடுக்கம், ஞாபக மறதி என்பனவாகும். அமெரிக்காவின் உணவு, மருந்துக் கட்டுப்பாட்டுப் பணியகத்தின் புதிய திட்டமான, உற்பத்திப் பொருள்களை விரைவில் ஆய்வுக்குட்படுத்திச் சந்தைக்கு அனுமதிக்கும் திட்டத்தின் கீழ் முதன் முதலிற் சந்தைக்கு வந்தது பீற்றாசெறோன். இவ்வாறு மிக விரைவில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதை, இம்மருந்தைச் சந்தைப்படுத்தும் நிறுவனங்களும், உற்பத்தியாளர்களான ''சைரன்'' உயிரியற்தொழில் நுட்பக் கம்பனியாரும் எதிர்பார்க்கவில்லை. இதனால், தத்போது பாதிக்கப்பட்ட 20,000 பேருக்குப் போதுமான அளவு மட்டுமே, இவர்களால் உற்பத்தி செய்து வழங்க முடியும். ஆனால், அமெரிக்காவில் 350,000 பேர் இந்நோயினால் அவதிப்படுகின்றனர். 95 ஆம் ஆண்டளவில், அனைவருக்கும் தேவையான அளவு உற்பத்தி செய்யமுடியும் என ''சைரன்'' கம்பனி நம்புகிறது. இம்மருந்து, இரண்டு நாள்களுக்கு ஒரு முறை ஊசியினால் ஏற்றப்படுவதாகும். ஒரு நோயாளிக்கு, ஒரு வருடம் பாவனையின்போது ஏற்படும் செலவு 10,000 டொலர்.

## நான்கு சாதனங்கள் ஒரே தொகுதியாக

(OKIDATA DOC IT.)

அச்சியந்திரம் (Printer), பிரதியாக்கி (Copier), ஃபாக்ஸ்இயந்திரம் (FAX), ஆவண ஸ்கானர் (DOCUMENT SCANNER) ஆகிய நான்கு சாதனங்களையும் உள்ளடக்கியதாக, ''ஒக்சிடேற்றா'' என்ற கம்பனி அழகிய மேசை மேற்றொகுதி ஒன்றை ( DESK TOP UNIT ) ''டொக் இற்'' என்ற பெயரில் தயாரித்து விற்பனை செய்கிறது. சிறிய வர்த்தக ஸ்தாபனங்களிலும்,



அலுவலகங்களிலும் இடத்தை மிச்சப்படுத்த இந்த '' டொக் இற் '' பெரிதும் உதவும். இதன் விலை 3,000 டொலர். அச்சியந்திரம் முதலான மேற்குறிப்பிட்ட சாதனங்களைத் தனித்தனியே வாங்குவதற்கு ஆகும் செலவை விட டொக் இற் இன் விலை 3,000 டொலர் தொடக்கம், 4,000 டொலர் வரை குறைவாகும், அத்துடன், ''ஒக்சிடேற்றா '' கம்பனியின் கூற்றுப்படி, பிரதியாக்கி பழுதுபட்டாலும், அல்லது அச்சியந்திரம் இயங்க மறுத்தாலும், '' டொக் இற் '' இன் ஏனைய செயற்பாடுகள் தடங்கலின்றித் தொடர்ந்து நடக்கும். ''டொக் இற்'' 92 இல் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு மாதத்தினுள், வருடத்தின் சிறந்த உற்பத்திப் பொருளுக்கான ஐந்து பரிசுகளை வென்றது.

## கைக்கடிகாரத்திலிருந்து வெளிச்சம்

கடந்த ஆண்டு பெப்ரவரியில், உலக வர்த்தக மையக் கட்டடத்திற் குண்டு வெடித்தவுடன் பீதியினால் ஏற்பட்ட அமளி துமளிக்கிடையே, ரவர் 1 இல் மின்சாரம் துண்டிக்கப்



பட்ட நிலையில், கேர்ட்பிளிக் என்ற முதலீட்டு ஆய்வாளர் ஒரு தொகுதி மக்களை, 40 இருண்ட புகைமண்டிய படிக்கட்டுத்தொகுதிகளைக் கடந்து, பாதுகாப்பாக ரவர் 1-க்கு வெளியே அழைத்துச் சென்றார்.இதற்காக அவரிடமிருந்த ஒரேயொரு ஒளி முதல், அவரது '' இன்டிகுளோ '' எனும் பெயருடைய ''ரைமெக்ஸ்'' கம்பனியின் கைக்கடிகாரமாகும். இரவில் மணி பார்ப்பதற்காக இக்கடிகாரத்திலிருந்து வரும் நீலப் பச்சை ஒளிர்வு இவ்வாபத்து வேளையிற் பேருதவியாய் அமைந்தது. மின் ஒளிர்வியல் தொழில் நுட்பத்தைப் (ELECTRO LUMINESCENT) பருமனிற் சிறிதாக்கி, எப்போதும் அணையாததும், நச்சுத்தன்மையற்றதுமான ஒளிர்வைத் தோற்றுவிக்க, ''ரைமெக்ஸ்'' கம்பனி செய்த பத்து வருட முதலீட்டுக்குக் கிடைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் சன்மானம் இதுவாகும். இது வரை 4.5 மில்லியன் 'இன்டிகுளோ' கடிகாரங்களை இக்கம்பனி விற்பனை செய்துவிட்டது. 15டொலரிலிருந்து பல்வேறு விலையுள்ள மாதிரிகளில் இவ்வொளிர் மணிக்கூடுகள் கிடைக்கின்றன. கேர்ட் பிளிக் அணிந்திருந்தது 42.95 டொலர் விலையான மாதிரியாகும்.) ''ரைமெக்ஸ் கம்பனியின் சரித்திரத்தில் இல்லாத இவ்வெற்றிகரமான அறிமுகத்தால், அக்கம்பனி செலுத்த தேண்டிய வருடாந்த வரி 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

## கிளின்ரன் சுகாதாரத் திட்டம்

1,342 பக்கங்களுடன் ''சுகாதாரப் பாதுகாப்புச் சட்டம்'' என்ற தலைப்பில் இச்சட்டப் புத்தகம் வெளியாகியுள்ளது. 2,000 ஆண்டு வரைக்கும் 700 மில்லியன் டொலர்களை இதற்கெனச் செலவிடுவதெனவும் இதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவையெனவும் செனெட்டர் ஜோன். டீ. றொக்பெல்லர்




மக்களைக் கேட்டுள்ளார். இது சாத்தியப்பட வேண்டுமானால், முதற் பெண்மணி கிலாறி றோடாம் கிளின்ரன், மற்றும் அவரது 500 சுகாதாரக் கொள்கை ஆலோசகர்களும் அனைத்து அமெரிக்கர்களது சுகாதாரத்தையும் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் மருந்துப் புரட்சியும் உருவாக வேண்டும். இத்திட்டம் 1994 இன் பிற்பகுதியில் திருத்தி யமைக்கப்படும். இத்திருத்தத்தில் சில மாற்றங்களும் ஏற்படலாம்.

## நியூற்றன் தகவல் மட்டை

அன்று நியூற்றனால் அப்பிள் பெருமையடைந்தது. இன்றோ அப்பிளால் நியூற்றன் பெருமையடைகின்றார். ''அப்பிள்'' கம்பனி 93 இல் ''நியூற்றன்'' என்கின்ற



தகவல் மட்டை (Message Pad) எனப்படும் புது வகைக் கணனி ஒன்றை உற்பத்தி செய்தது. இக் கணனி பாவனையாளரின் கிறுக்கல்களைப் பெற்றுத் தானாகவே அத் தகவல்களை ஒழுங்கு படுத்திக் கோப்புகளிற் சேர்க்கும் என்று கருதப்பட்டது. ஓர் அந்தரங்க உதவியாளரின் வேலையைச் செய்வதால் இது அந்தரங்க உதவியாட் கணனி Personal Digital Assistant) எனப்படுகிறது. இதனால் தனியாட் கணனி (PC) போன்ற பல்வேறு கணனி வகைகளுடன் அந்தரங்க உதவியாட் கணனி எனும் புதிய கணனி வகையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தகவல் மட்டையானது பாவனையாளரின் கிறுக்கல் எழுத்துக்களை விளங்கச் சிரமப்படுகிறது எனத் தற்போது கூறப்படுகிறது. 699 டொலர் விலையான ஒரு பொருளுக்கு இப்படிப்பட்ட ஒரு குறை இருப்பது பாரதூரமான விடயமாகும். இத் தகவல் மட்டையை விளம்பரப்படுத்துவதற்காக அப்பிள் கம்பனி பெருந்தொகைப் பணத்தைச் செலவளித்தது. நிற்க, வியாபார ரீதியாகப் பிறரால் மேற்கொள்ளப்பட்ட தந்திரங்களின் விளைவாகவே இத் தகவல் மட்டைக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது என ''அப்பிள்'' கம்பனி கூறுகிறது.

## அரிசோனா



குளிரூட்டப்பட்ட தேனீர் - பூஸ்டனை மறந்து விடுங்கள். இன்றைய தேனீர் விருந்து புறக்லினில்தான் புறக்லினில் உள்ள ''பெரொலிற்றோ - வல்டாகியோ அன் சன்ஸ்'' என்ற பிரத்தியேக நிறுவனமொன்று முதல் வருடத்தில் மாத்திரம் 10 இலட்சம் (24 ரின்களைக்கொண்ட) 'அரிசோனா குளிரூட்டப்பட்ட தேயிலை' யை விற்பனை செய்துள்ளது. ஒரு மாதத்திற்கு 500, 000 பெட்டிகள் விற்பனையாகின்றன. நியூயோர்க் உட்பட 40 பெரு நகரங்கட்கு இதன் விநியோகம் விரிவடைந்துள்ளது. கொள்கலனில் அடைக்கப்பட்ட குளிரூட்டிய தேனீரில் விசேடமான தனித் தன்மைகள் ஒன்றும் இலலையெனினும் இதற்கு உலகச் சந்தையில் சூடுபிடித்துள்ளது என்று கூறுகின்றார் குடிவகை சந்தைப்படுத்தும் ஆலோசகர் மைக்கல் பெலாஸ் அவர்கள். இதன் ஒரு வருட விற்பனை 170 மில்லியன் டொலரை எட்டிவிடும் என்றும் இவர் கூறுகின்றார்.

குளிரூட்டப்பட்ட தேனீர் என்றாலே அற்புதம்; அதனிலும் அரிசோனாவின் கொள்கலனின் அழகோ பிரமாதம். இவற்றிற்கே உரித்தான தென்மேற்குப் பாணியில் இவை கண்ணைக் கவருகின்றன. அத்துடன் உறுதியானதும் கூட. 12 அவுன்ஸ் நிறையுள்ள 'கொம்பிறிற்றேஸ்' தேனீரிலும் பார்க்க 4 அவுன்ஸ் நிறையில் கூடியது. ஆனால் விலையோ அதன் விலைக்குச் சமமானது. இத் தேயிலைத்தூளும் தரத்தில் சிறந்ததாகவே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதில் விழுந்தவை



★ முதலில் பேச்சுவார்த்தை, பின்பு யுத்த நிறுத்தம் என்று அவர்கள் கூறினர். நீங்கள் காருண்யமற்றவர் கறளென நான் கூறிவிட்டேன்.

*கமரூச் முதல்வர் கியூசம் பானைத் திருப்திப் படுத்துவதற்காக, கம்போடிய முதல் பிரதமர் நொறோடொம் றணாறிட் கூறியது.*

★ முன்னைய சோவியத் ருஷ்யாவில் ஸ்ராலின் நினைவு தினத்தை எவரும் கொண்டாடியதில்லை. எனவே சீனாவில் மா-ஓவின் நினைவு நாள் கொண்டாட்டங்கள் தேவையில்லை.

*மா-ஓவின் கொள்கைகையப் பின்பற்றியதனால் 20 வருடங்கள் அஞ்ஞாதவாசம் செய்த சீனாவின் மருத்துவ நிபுணர் சூ-லி ஆங்கிங் மா-ஓவின் 100ஆவது வருடாந்தக் கொண்டாட்டத்தின் போது கூறியது.*

★ ''இந்தப் பாரவண்டியை இழுத்துச் செல்வது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''

*என்று இந்தியாவின் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் தனது இராஜினாமாக் கடிநத்தைப் பிரதமர் நரசிம்மராவிடம் கையளித்த போது கூறியது. இவரது இக்கடிதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.*




★ நீங்களும் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். இஸ்ரேலைக் கட்டி எழுப்புவதற்கு உயிருள்ள உடல்களே தேவை-உயிரற்ற உடல்கள் தேவையில்லை. எனது நண்பர் ஒருவர் இதைக் கூறியுள்ளார்,

*இறந்த யூதர்களின் உடல்களை இஸ்ரேலில் புதைப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரும் யூதர்களின் மத்தியில் றாபின்-ஜே-காசின் கூறியது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆசியாவில் காஷ்மீர் விவகாரம்

புது டில்லியிலிருந்து
— ஹமீஸ் மக்டொனால்ட் —

## காஷ்மீர்ப் பிரச்சனையால், இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதங்களைப் பாவிக்குமளவுக்குச் செல்லலாம். இதைத் தடுக்க, அமெரிக்கா இரு நாடுகளையும் பேச்சுவார்த்தை மூலம் தங்கள் பிரச்சினையைத் தீர்க்கும்படி வற்புறுத்துகின்றது.

1947ஆம் ஆண்டு இந்திய உப-கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகள் உதயமாகின. காஷ்மீர் போன்ற மன்னர் ஆட்சி உள்ள சிறிய நாடுகளையும் பிரிட்டிஷார் விட்டுச் சென்றனர். இந்தச் சிறிய நாடுகள் 600 வரை இருந்தன. இவையாவும் இந்தியக் குடியரசில் ஐக்கியமாகின. 17 மில்லியன் மக்களைக் கொண்ட, முஸ்லிம் மன்னர் ஆண்ட ஹைதராபாத், இராணுவ நடவடிக்கை மூலம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. காஷ்மீரும் மன்னர் ஆட்சியுள்ள சிறிய நாடாகவே இருந்தது. இங்கு 4 மில்லியன் குடிமக்கள் இருத்தனர். இவர்களில் முக்கால் வீதமானோர் முஸ்லிம்கள். ஆனால், மன்னர் ஓர் இந்து. இவருடைய கொடுங்கோல் ஆட்சியை இந்துக்களும் வெறுத்தனர். இவர், சிலகாலம் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணையாமல், தனது இறைமையைக் காப்பாற்றி வந்தார். ஆனால், பாகிஸ்தான் ஆதரவுடன் வட-மேற்கு எல்லைப் புற பாதன் (Pathan) பழங்குடியினர் காஷ்மீரைத் தாக்கியவுடன், மன்னர் தான் இந்தியாவுடன் இணைவதாகக் கூறித் தனது நாட்டுக்குப் பாதுகாப்புத் தரும்படி இந்தியாவை வேண்டினார். உடனடியாக இந்திய இராணுவம் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டது. பாதன் போராளிகள் பின்வாங்கினர். ஆனால், காஷ்மீரின் மேற்கிலும், வடக்கிலும் உள்ள முஸ்லிம்கள் இந்திய இராணுவத்திற்கெதிராகப் போர்க்கொடி தூக்கினர் இவர்கள் நசுக்கப்படுவதைத் தடுக்க, பாகிஸ்தான் தனது இராணுவத்தை அனுப்பியது. 1949ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு, ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்தது. ஆனால், இன்று வரை வடக்கிலும், மேற்கிலும் தான் பிடித்த பகுதியை ‘‘ஆசாத் காஷ்மீர்’’ என்ற பெயருடன், பாகிஸ்தான் தனது பொறுப்பில் வைத்திருக்கின்றது. மிகுதி, ‘ஜம்மு காஷ்மீர்’ என்றபெயருடன்இந்தியாவால் ஆட்சி செய்யப்பட்டுவருகின்றது. 1949ஆம் ஆண்டு தொடக்கம், இரு பகுதிகளுக்கிடையிலான எல்லைக் கோடு பேணப்பட்டு வருகின்றது. இந்த எல்லைக் கோடு, யுத்த நிறுத்தக் கோடு (Cease Fire Line) என்றும் பச்சைக் கோடு (Green Line) என்றும் அழைக்கப்படுகின்றது.

பொது நூலகம் யாழ்ப்பாணம்
இரவல் நூலகம்.


இந்திய எதிர்ப்புப் பேரணி; இந்திய பாகிஸ்தான் பேச்சுக்களில் முக்கிய விடயம் - காஷ்மீர்.

எவ்வாறு அழைப்பினும், இந்தக் கோடு காஷ்மீர் விவகாரத்தின் கசப்பான உண்மைகளில் ஒன்று. இதன் இரு பக்கங்களிலும் இரு நாட்டு இராணுவமும் தங்கள் ஆட்சியைச் செய்து வருகின்றன. அண்மைக் காலத்தில் பாகிஸ்தான், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு இராணுவப் பயிற்சி அளித்து, இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட காஷ்மீருக்குள் நுழைய விடுகின்றது. இதனால் இந்திய இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் போர் நடந்தபடியே இருக்கின்றது. இத்துடன், இந்தக் கோடு இமாலயப்பிரதேசத்தில் துல்லியமாகக் கணிக்கப்படாததால், இரு இராணுவமும் தினசரி சூடு பரிமாறிக் கொள்ள வாய்ப்பு உண்டு. தெற்கு ஆசியாவின் ‘அரசியற் படத்தில்’ (Political Map) காஷ்மீர் விவகாரம் மிகவும் உஷ்ணமான பிரச்சனை. பனிப்போர் ஓய்ந்துவிட்டது. இரு வல்லரசுகளும் போட்டி போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இந்தியாவையும், பாகிஸ்தானையும் மோத விட்டகாலம் மலை ஏறிவிட்டது. இரு நாடுகளும், தொடர்ந்து முறுகல் நிலையை வளர்ப்பதிற் பிரயோசனம் இல்லை என்பதை ஓரளவு உணர்ந்து விட்டன. உலக அரங்கில் தனது நம்பகத் தன்மையை இந்தியா இழந்து வருவதும் இந்த நாடு இப்பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர விரும்புவதற்குக் காரணமாகலாம்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 1-3ஆம் திகதிகளில், இந்தியாவின் வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்சிற், தனது பதவிக்குச் சமமான பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஷறியர் கானுடன் காஷ்மீர் பற்றிப் பேசுவதற்கு இஸ்லாமாபாத் சென்றார். இவர்களின் பேச்சுக்களில் முக்கிய விடயம், மேற்கூறிய கோட்டினாற் பிளவுண்ட காஷ்மீர் பற்றியதே ஆகும். பல தசாப்தங்களுக்குப் பின், காஷ்மீர் பற்றிய முக்கியமான பேச்சுக்கள் நடைபெற்றன. ஆனால் எதிர்பார்த்தது போல் பயன் பூஜ்யமே என்றாலும், பேச்சுக்கள் முறியாது தொடரும் என்பதிற் பலருக்கும் நம்பிக்கை. இமாலயப் பிரதேசத்தில் எல்லைக் கோடு தெளிவில்லாத பிரதேசத்தைச் சியாச்சென் பனிக்கட்டிப் (Siachen Glacier) பிரதேசம் என்றும் அவதானிகள் தெரிவிப்பர். இங்கு இரு இராணுவமும் தங்கள் மோதல் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகின்றன. டிக்சிற் — ஷறியர் கான் பேச்சுக்களில் இவ்விடயமும் இடம் பெற்றது. வெகு விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் சியாச்சென் பற்றி இணக்கம் ஏற்படுமென்று நம்ப இடமுண்டு. காஷ்மீர் விவகாரம் சுமுகமான முடிவுக்கு வருமென்பதற்கு இச் செய்தி முன்னோடியாகும்.

இந்தியாவும், பாகிஸ்தானும் முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதற்குப் பல உடனடியான காரணிகள் உள்ளன. வெளிஉலகு-பிரதானமாகஅமெரிக்கா இவர்கள் இருவரும் தொடர்ந்து போராடுவதை அனுமதிக்கத் தயாராயில்லை. இரு நாடுகளும், நெடுந்




# காஷ்மீர்க் குறிப்பேடு

**ஓகஸ்ற் 1947:-** காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேராது நடுநிலை வகிக்கிறார்.

**ஒக்ரோபர் 1947:-** பாதன் (Pathan) போராளிகளும், பாகிஸ்தான் இராணுவமும் வடக்கிலிருந்து காஷ்மீருக்குள் நுழைகின்றனர். மகாராஜா இந்தியாவின் உதவியை நாடுகின்றார். இந்தியாவுடன் சேரும் சாசனத்தில் ஒப்பமிடுகின்றார்.

**ஜனவரி 1949:-** ஐ. நா தலையிட்டு எல்லைக் கோடு போடுகின்றது. பாகிஸ்தானை, அதன் துருப்புக்களை வாபஸ் பெறும்படியும், இந்தியாவை மக்கள் கருத்துக் கணிப்பீடு செய்யும்படியும் ஐ. நா பரிந்துரை செய்கின்றது. இரண்டும் நிறைவேறவில்லை.

**ஓகஸ்ற் 1953:-** காஷ்மீர் முதன் மந்திரி ஷேக் அப்துல்லா சிறையிலிடப் படுகின்றார்.

**ஓகஸ்ற் 1965:-** இரு நாட்டு யுத்தம் ஆரம்பம்.

**ஜூலை 1972:-** 1971 ஆம் ஆண்டு நடந்த இன்னுமோர் இந்திய பாகிஸ்தான் யுத்தத்தின் பின் சிம்லா உடன்பாடு ஏற்படுகிறது. இதன்படி, இரு நாடுகளும் பேச்சுக்கள் மூலம் காஷ்மீர் பிரச்சனையைத் தீர்க்க ஒத்துக் கொள்கின்றன,

**பெப்ரவரி 1975:-** சிறையிலிருந்து விடுதலை பெற்ற ஷேக் அப்துல்லா, பிரதமர் இந்திரா காந்தியுடன் ஒப்பந்தம். இதன்படி, காஷ்மீர் இந்தியாவுடன் இணையும்.

**பெப்ரவரி 1987:-** ஷேக் அப்துல்லாவின் மகன் ஃபருக் அப்துல்லா, காஷ்மீர் முதல்வராக வெற்றியீட்டுகிறார். இவருக்கு ராஜீவ் காந்தியின் உதவி கிடைக்கின்றது.

**ஜனவரி 1990:-** ஃப்ருக் அப்துல்லாவின் ஆட்சி கலைக்கப்படுகின்றது. காஷ்மீர், புது டில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம் பாயும் ஏவுகணையைப் பாவிக்கும் நிலையில் உள்ளன. இது அணுயுத்தத்திற்கு வழிவிடும். இதை உணர்ந்து கிளின்ரன் அரசு இரு நாடுகளுக்கும், குறிப்பாக இந்தியாவுக்கும் அதிர்ச்சி வைத்தியம் செய்யத் தொடங்கியுள்ளது, காஷ்மீர், இந்தியாவின் சொத்தல்ல என்று அமெரிக்கா அடித்துக் கூறி விட்டது. இதை ஐரோப்பிய நாடுகள் பலவும், இந்தியாவின் நண்பன் ருஷ்யாவும், இராஜதந்திர மொழியில் இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரத்தால் தாங்கள் உலக அரங்கில் தனித்து விடப்பட்டதாக இரு நாடுகளும் உணர்கின்றன. அண்மையில் அமெரிக்காவில் நடந்த ஆசிய – பசுபிக் பொருளாதார ஒற்றுமை மகாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் சமுகமளிக்க இயலவில்லை. காற் பேச்சுக்களிலும் (GATT), தெற்காசியப் பொருளாதார வியாபாரப் பேச்சுக்களிலும் இரு நாடுகளும் பங்களிப்புச் செய்ய இயலவில்லை. மேலும், வறிய நாடுகளுக்குத் தலைமை தாங்கி, ஐரோப்பிய நாடுகளுடன் பேரம் பேச இந்தியா எடுத்த முயற்சிகள் பெருந் தோல்வியில் முடிந்தன.

தான் ஒரு வல்லரசென்றும் தனக்கொரு நிரந்தர இடம் ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையில் வேண்டுமென்றும், இந்தியா அண்மையிற் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. இதற்குக் காஷ்மீர் விவகாரம் பெருந் தடையாகவுள்ளது. பெரும் நிலப்பரப்பும், சனத்தொகையும், கொண்ட இந்தியா, சிறியதொரு பாகிஸ்தானுக்கு இணையாகப் பேசப்படுகின்றது. மேலும், ஐ. நாத் தீர்மானங்கள் பலவற்றை உதாசீனம் செய்யும் இந்தியா, ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் கோர எக்காரணமும் இல்லை.

இரு நாடுகளும் மேற்கு நாடுகளின் மூலதனத்தை வரவேற்கின்றன. இரு நாடுகளும் தங்கள் பொருளாதார மேம்பாட்டுக்கு, அமெரிக்கா போன்றநாடுகளின் முதலீட்டை அத்தியாவசியம் என எண்ணுகின்றன. இதனால் காஷ்மீர் விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர விரும்புவதில் அதிசயமில்லை. ஆனால், இந்தியாவின் எண்ணம் எல்லாம், மேற்கூறிய எல்லைக் கோட்டையே சுற்றி வருகின்றது. திரு. டிக்சிற் இதை இஸ்லாமாபாத் பேச்சுக்களில் தெரிவித்துள்ளார். ஆனால் காஷ்மீர் மக்களின் விருப்பு வேறு விதமாகவுள்ளது. வெளிப்படையாக ஜம்முக் காஷ்மீர் முஸ்லிம்கள் இந்திய உறவை விரும்புவது சந்தேகமாயுள்ளது. தனது இஷ்டம் போல் இப் பிரச்சனையைத் தீர்க்க இந்தியாவால் முடியாதென்பது அரசியல் அவதானிகளின் கணிப்பு.

(F) பார் ஈஸ்ரேன்,
எக்கனமிக் றிவியூ.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

பொற்கனவுகள்

## மழை நீர் நிறைந்த, சகதி வாய்க்கால்களில் நிகழும் அவலங்கள்

பொன்னாசைக்கு என்றுமே பின்னடைவு கிடையாது. பெரும் தீவுக் கூட்டப் பகுதிகளில் அவரச அவசரமாக அகழப்படும் சுரங்கங்களை நோக்கி, ஆயிரமாயிரம் இந்தோனேசியர்கள் விரைந்து வந்து சேர்கின்றனர். மேற்கு ஜாவாவின் லபாக் பிரதேசத்தில் உள்ள ஜுலாங் மலையின் அடிவாரத்தில் இருக்கும் கரடுமுரடான நிலத்தில், தங்கச் சுரங்கம் தோண்டியவர்கள் நாளந்தம் 1.3 கிலோ கிராம் அளவு தங்கத் தாது மண் தேடிக் கொள்கின்றனர். சராசரித் தேட்டமாக 455 கிராம் தங்கம் கிடைத்தால், பண்ணைத் தொழிலாளராகத் தினசரிக் கூலியான அற்ப முதலுக்கு உளைந்து உழைத்த கிராமத்தவர்களுக்கு, சுரங்கத் தொழிலால் 4,500 டொலர் அளவு வருகிறது. விற்பனையை ஒரு கூட்டுறவுச் சங்கம் கைக்கொண்டு உள்ளதால், இறப்பவர்கள் தவிர மற்ற அனைவரும் நன்மை பெறுகின்றனர். சென்ற டிசம்பர் 24 ஆந் திகதி, கடும் மழையால் நிலம் இளகி மண்சரிவு ஏற்பட்டபொழுது, குறைந்தது 13 சுரங்கத் தொழிலாளர்களாவது உயிரோடு புதையுண்டிருப்பர். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தங்கத் தவிப்பு ஏற்பட்ட காலம் முதல் இது வரை, அநேகம் பேர் சரிவுண்ட சுரங்கங்களுக்குள் அகப்பட்டு இறந்துள்ளனர். ''ஆபத்துக்கள் எத்தனை வந்தாலும், நாங்கள் எங்கள் தேட்டத்தைக் கைவிட முடியாது'' என்று, பொன் தேடும் ஒருவர் கூறினார். அரசாங்கம் அந்தச் சுரங்கங்களை மூடத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், பொன் அள்ளத் துடிப்போர்கள், தாங்கள் தொடர்ந்தும் அதனைச் செய்யப்போவதாகக் கூறுகின்றனர். பொன்னுக்கு உள்ள மவுசு வரவர இன்னும் கூடிக்கொண்டே செல்கிறது. வியாபாரப் பேரத்தால், சென்ற ஆண்டு பொன்னின் விலை இன்னும் உயர்ந்தது.

ஏசியா வீக், ஜனவரி 19, 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்மாவின் புதிய வீதி

எழுதியது:
— றெபன் மெறிபு —

தாய்லாந்தின் ஊடாகப் பர்மாவைக் கடந்து, தென் கிழக்குச் சீனாவினுட் செல்லும் ஒழுங்கற்ற கரடுமுரடான வீதியின் நீளம் 1,300 மைல். வீதியிலே சென்று, மீண்டும் திரும்பி வருவதற்கு 9 நாள்கள் எடுத்தன. உண்மையிலே, சாதனைத் துணிவையும் விஞ்சியதொரு மகத்தான முன்னெடுப்பு என்று தான் இதனைக் கூறவேண்டும். எனினும், மலைத் தொடரின் எழிற் காட்சிகள், வெளி இடப் பொருள்களைத் தொகுத்து விற்பனை செய்யும் சந்தைகளிற் பொருள்கொள்ளும் வாய்ப்புக்கள், பலவர்ண உடை தரித்துக் கவர்ச்சி காட்டும் இனக்குழுக்களைக் காணும் சந்தர்ப்பங்கள் என்பன, இடர் நிறைந்த இந்தப் பயணத்தின் நற்பயன்களாகும். ஆனால் காட்சியழகுகளையும், அனுபவங்களையும் நிழற்படமாகவோ, படஅட்டைகளாகவோ பேணி வைக்கக் கூடிய உல்லாசப் பயணம் என்று இதைக் கொள்ளமுடியாது. பெரும்பாலும், கடந்து செல்ல மிகக் கடினமான வீதிகள், பொதுவுடைமை வாதிகளாலே விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், இராணுவச் சர்வாதிகாரிகளின் கெடுபிடிகள், கெரில்லாக்களின் தலையீடுகள் என்பன இப் பயணத்தின் போது குறுக்கிடும் இடர்ப்பாடுகள். இவற்றினூடாகத் தான், சாதனைத் துணிவுக்கு-சோதனைக்கு இடம் கிடைக்கின்றது. கடந்த மாதம் சேறழுந்திய சில்லுகளோடு கூடிய 40 வாகனங்களிலே சென்ற பயணக்குழு ஒன்றில் பத்திரிகையாளரான நானும் இடம்பெற்று, தென் கிழக்குச் சீனா வரை சென்றுவந்த கதை, சிறியதொரு (Little history) வரலாறு தான்,

**பட்டுப் பாதை: சாதனைத் துணிவு மிக்க பயணிகள், சீனாவை இணைக்கும் வகையில், பர்மாவின் புராதனப் பாதை வழி ஒன்றினை மீண்டும் திறக்கின்றார்கள்.**

பர்மாவுக்கும், தாய்லாந்துக்கும் எல்லைக் கோட்டில் அமைந்துள்ள யுனான் மாகாணம், இராணுவ ஆட்சியினரால் மியன்மார் என இன்று அழைக்கப்படுகிறது. இதனைக் கடப்பதன் மூலம் யுனானுக்கும், விரைவாக வளர்ந்து வரும் தென்கிழக்காசியாவுக்கு மிடையே, புதியதொரு போக்குவரத்துப் பாதையை நாம் மீளத் திறக்கின்றோம் என்பது தான் அர்த்தம். இரண்டாவது உலக மகா யுத்தம் வரை, நெருங்கிய இணைப்போடு பெரிதும் பயன்பட்டதும், புராதன காலந்தொட்டுப் பட்டுப் பாதை (Silk Route) எனப் பெயர் பெற்றதுமான இந்த வீதி (பழைய பர்மா, வீதிக்கு வடக்கில் உள்ளது.) ஜப்பானியரோடு போர் நிகழ்த்திய நேசப்படைகளுக்கு, அக்காலத்திற் பொருள்களை விநியோகம் செய்யப் பயன்பட்டது. மகாயுத்தத்தின் பின்னர் பயங்கரவாதிகளும்,போதை வஸ்துக் கடத்துவோர்களுமே இதனைப் பயன்படுத்துகிறார்கள். அண்மையில் தாய்லாந்தும், பர்மாவும், சீனாவும் இதனை வேறு வேறான வர்த்தக நோக்கங்களுக் கேற்றதாக மாற்ற முயன்று வருகின்றன. இம்மூன்று நாடுகளும் பொறுப்பேற்று அனுமதி வழங்கிய "சிநேக பூர்வமான கரவன் பயணந்தான்" நாங்கள் மேற்கொண்ட பயணம். "இவ் வீதியை பயன்படுத்தும் முன்னோடிகள் நீங்கள் தாம். உங்களைப் போல் பலரும் இம் முயற்சியில் ஈடுபடுவர் என்பது எங்கள் நம்பிக்கை" என்கிறார் சீன அதிகாரி ஒருவர்.

அடிக்கடி, சட்டத்தை மீறிக் கிளர்ச்சி செய்வோர் நிறைந்த பர்மாவின் ஷான் மாகாணத்தில், அழுக்கு மிகுந்த 150 மைல் வீதியினை மேற்குறித்த மூன்று அரசுகளும் செல்வவளம் மிக்கதாயும், உல்லாசப் பயணிகளுக்கு உரியதாகவும், வியாபாரிகளின் பொருள்களைக் கொண்டு சென்று விற்க வசதியாகவும் மாற்றலாம் என்று நம்புகின்றன. கிளர்ச்சிகளுக்கும் மேலாகத் தலையெடுத்து வருவது உலகின் போதைவஸ்து வியாபாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் 70 வீதம் இடம் பெறும் பிரசித்தமான 'தங்க முக்கோணம் (Golden Triangle) இந்த வீதியின் இடையே அமைந்து கிடக்கும் உண்மைதான். (தங்க முக்கோணம் தாய்லாந்து, பர்மா, லாவோஸ், ஆகியவற்றின் எல்லைப் புறத்தில், அவற்றைச் சுற்றி வளைத்துக் கிடக்கிறது.) பாரமான பொருள்களை ஏற்றிச் செல்லத்தக்க வகையில் இந்தப் பாதையைத் திருத்தி அமைக்க நீண்டகாலம் எடுக்கும். வா (WA) என்னும் குலக்குழுவைச் சேர்ந்த கெரில்லாக்கள் நிறைந்துள்ளதும் இந்தப் பகுதியில் தான். இவர்கள் இராணுவ ஆட்சியோடு வலுவற்றதொரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டுப் பத்திரிகையாளர் உள்ளிட்ட, அதி கடின வாகனச் சாரதியத்தில் ஆர்வம் மிக்கவர்களும் பணத்தைப் பாராமற் செலவழிக்கத் தயாராயுள்ளவர்களும், தலைக்கு 1,200 டொலர் செலுத்தி எமது பயணக்குழுவில் இடம்பெற்றார்கள். எமது பயணம் தாய்லாந்து அதிகாரிகளின் பொறுப்பில், பெறுமதி வாய்ந்த வாகனங்களில் மேற்கொள்ளப்பட்டது. மிகத் திறமையும், துணிவும் மிக்க எமது சாரதிகள் அஞ்சியும், தயங்கியும் தமது வேகத்தை முழுமையாகக் காட்ட முடியாது இடையிடையே நிறுத்தியும், தொடர்ந்த சம்பவங்கள் எமது பயணத்தில் அடிக்கடி நிகழ்ந்தன. இடையிடையே எழுந்த புழுதிப் படலம் சாரதியத்திற்குப் பெருந் தடையாக அமைந்தது. இவ்வேளைகளில், தங்களின் பின்னால் வரும் வாகனங்கள், குருட்டாம் போக்கில் தமது வாகனங்களை மோதிவிடக் கூடாது என்று அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்.

## பிரதேச எழில்

இந்த ஆபத்துக்களுக்கிடையிலும், ஏராளமான எழிற் காட்சிகள் வழியெல்லாம் எங்களைக் கவர்ந்தன. மலைகளில் தேக்குமரங்கள், மூங்கில்கள், படிமுறை வயல்கள் (Terrace Fields) பசுமையைப் போர்த்து எழிலார்ந்த காட்சியை வழங்கின. அகா என்னும் இனக்குழுவினர், நீண்ட பரல்களோடு (Bare-led) கூடிய நெருப்புக்கல் பூட்டிய வேட்டைத் துவக்குகளைச் சுமந்து கொண்டு, பறவை வேட்டையில் ஈடுபடுவதைக் கண்டோம். இவர்களின் இனத்தினரான பெண்கள் வெள்ளி உருண்டைகளாலும், பழைய பிரித்தானிய நாணயங்களாலும் அணி செய்ததும், சிவப்புத் துணியாலானதுமான தலை மறைப்பால் நெற்றிவரை மூடிக்கொண்டு, அதற்கு மேலாக நெற்றியோடு இணைந்த கயிற்றுத் தூக்குகளில் விறகுகளை வைத்து, முதுகுகளிற் சுமந்து சென்றது அழகான காட்சி. ஆனால், இந்தக் காட்சிகளுக்கிடையே எங்கள் வாகனச்சில்லுகள் சேற்றினுள்ளே முற்றாக அழுந்திப்



போய், மேற்கொண்டு பயணம் செய்ய முடியாதபடி தற்காலிக இடையூறை ஏற்படுத்தியதையும் மறந்துவிடமுடியாது.

சீன எல்லையிலிருந்து 12மைல் தொலைவில், ஆற்றின் மேலமைந்த ஒரு பாலத்தை நாங்கள் கடந்து கொண்டிருந்தவேளையில், எமது பர்மிய வழிகாட்டி, 'வா' படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தைக் கடந்து கொண்டிருப்பதாகச் சொன்னார். 'வா' படையினர் மிகக்கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள். உங்கள் கார்க் கண்ணாடிகளை முற்றாக மூடிவிடுங்கள். படங்கள் பிடிப்பது முற்றாகத் தடைப்படுத்தப்பட்டுள்ளது; மீறிப்படம் பிடித்தால், பெருந்தொல்லைகளுக்கு உள்ளாக நேரும். நாங்களும் அவ்வாறே கவனமாகச் சென்ற பொழுது, அங்கொன்றும் இங்கொன்றுமாக 'வா' பையன்கள் காணப்பட்டார்கள். இவர்கள், மிகவும் வயது குறைந்தவர்கள். கமருச் பாணியிற் குல்லாய் தரித்திருந்தார்கள். ஏ. கே-47 தானியங்கித் துப்பாக்கிகளைக் கொண்டு சென்ற அவர்களில், பலரின் உயரத்தின் அளவுக்குச் சமமாகத் துப்பாக்கிகள் விளங்கின. இவர்களின் பிரதேசத்தைக் கடப்பதற்குப் பயணிகள் குறித்ததொரு தொகைப் பணம் அளிக்க வேண்டும் என்பது, பர்மிய இராணுவ ஆட்சியினரோடு இவர்கள் செய்துள்ள ஒப்பந்தம்.

நாங்கள் சீனாவின் எல்லைப் புறத்தை அடைந்ததும், எங்களுக்கு உயர் பிரமுகர்களுக்கான வரவேற்பு வழங்கப்பட்டது. இரு பொலிஸ் மெய்க்காப்பு வாகனங்கள் முன்னும் பின்னும் வர, எங்களை 500 மைல் வரை நீண்டுகிடந்த நல்ல வீதி வழியாக, யுனான் தலைநகரான 'குன்மிக்'குக்கு அழைத்துச் சென்றனர். வழியெங்கும் அரசாங்கம் ஒழுங்கு செய்திருந்தபடி, கிராமப்புற மக்களும், நகரமக்களும் வீதியின் இரு மருங்கிலும் ஆயிரக்கணக்கிற் கூடிநின்று எங்களை வாழ்த்தினர். பல்லின மக்களுமாக 1·8 மில்லியன், சனத்தொகை கொண்ட குன்மிக் சீனாவின் பல நகரங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே திறந்த சந்தைப் பொருளாதாரம் அமைந்து வளர்ந்து வரும் நகரம். புதிய உணவு விடுதிகள், அலுவலகங்கள், தொழிற் சாலைகள், பலமாடிக் கட்டடங்கள் எங்கு பார்த்தாலும் முனைத்துக் கொண்டிருக்கின்றன. கோப்பிக்கடைகளிலும், உணவு விடுதி மண்டபங்களிலும், விபச்சாரிகள் வாடிக்கையாளர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதையும் கண்டோம்.

## முன்னோடிப் புதுமைகள்

கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டு வருமானம் 10 சதவீதம் கூடியுள்ளதென்றும், வெளிநாட்டு வர்த்தகம் 28 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும், வெளிநாட்டு முதலீடு, உல்லாசப் பயணிகள் வருகை என்பன விரிவடைந்துள்ளன என்றும் பெருமையாகப் பேசிக்கொள்கின்றனர். தங்கள் நகரத்துக்கு வருகைதந்து, புதுவழி திறந்தமைக்காக நன்றி செலுத்தினர். ''யுனானின் எதிர்கால நுழைவாயில், சீனாவுக்கும், தென் கிழக்காசியாவுக்குமிடையே அமையும்'' என்று, மாகாண உதவி ஆளுநர் லியூஜிங் தெரிவித்தார். ''உங்களுடைய வருகைக்கு நன்றி. தென் மேற்குச் சீனாவுக்கும், தென் கிழக்காசியாவுக்கும் தரையூடான பாதை திறக்கப்பட்டுவிட்டது.''

பர்மா, சீனா, இந்தோசீனா ஆகிய நாடுகளுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு, தனது நாடு தளமாக அமைவதே தாய்லாந்தின் மிக அடக்கமான ஆசை. தாய்லாந்து வர்த்தகர்களும், உணவுவிடுதி நடத்துவதையும் பிற வர்த்தகங்களில் ஈடுபடுவதையும் விரும்புகின்றார்கள். இவற்றோடு, சிற்றுண்டிக் கடைகளும், வாயுநிரப்பி நிலையங்களும் சீனாவில் நடத்த அவர்களுக்கு ஆசை இருக்கிறது. ஆனால் அதே வேளை, மலிவான கூலி வசதிகளைப் பயன்படுத்தி, சீனா தனது பொருள்களைக் குறைந்த விலையிலே - தாய்லாந்து விலையின் மூன்றில் ஒரு பங்கு விலையிலே - தாய்லாந்தில் விற்றுவிடுமோ? அவ்வாறு குவிக்கப்பட்டால், தமது வியாபாரம் படுத்துவிடுமோ! என்ற அச்சமும் அவர்களுக்கு உண்டு. சட்டவரம்பு மீறி நடைபெறும் போதைவஸ்து வியாபாரம், தங்கமுக்கோணத்திலிருந்து தாய்லாந்திலும் பரவிவிடுமோ? என்ற பீதிக்கும் இடமிருக்கிறது, சீனாவோ, தாய்லாந்தின் விபச்சாரிகள் விற்பனைக்குத் தங்கள் மண்ணும் பலியாகிவிடலாம், என்று அஞ்சுகிறது. சீனக்காவல் துறையினர், 1989 விருந்து தாய்லாந்து விபச்சாரிகள் சுமார் 5,000 பேர் வரை விற்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கின்றனர்.

பர்மாவைப் பொறுத்தவரையில் இந்த வீதியானது எந்தநேரத்திலும் கெரில்லாக்களால் முடப்படலாம் என்ற பீதி உண்டு. பர்மிய இராணுவ ஆட்சி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகுந்த வெறுப்பைச் சம்பாதித்துவிட்டது, இந்த வெறுப்பு, நோபெல் சமாதானப் பரிசு பெற்ற ஆங்சாங் சுஷியைத் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதனால், மேலும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்தச் செயலால், ஆசிய அபிவிருத்தி வங்கியோ வேறு வெளிநாட்டு நிறுவனமோ, றங்கூன் அபிவிருத்தித் திட்டத்திற்குக் கடனுதவி வழங்கத் தயங்குகின்றன. விலங்குச் சங்கிலிமாட்டிய கைதிகள் - இவர்களிற் சிலர் அரசியற் கைதிகள் – வீதியிலே கடும்வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதும், இந்த வெறுப்புத் தீக்கு நெய்வார்க்கிறது. நாங்கள் பயணம் செய்த இரு நாள்களிலும், இந்தக் கைதிகள் வீதி வேலையிலிருந்து தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்டுள்ளனர் என்று, கிராமவாசிகள் எமக்குச் சொன்னார்கள். பலவகையிலும் தனிமைப் படுத்தப்பட்ட பர்மாவின் இராணுவ ஆட்சியாளர், இத்தனைக்குமிடையிலும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கும் வெளிநாட்டு முதலீட்டிற்கும் றங்கூனில் இடமளிக்க, படிப்படியாக முனைவது தான் வியப்பு.

பர்மிய மக்கள், ஆங் சாங்சுஷியின் சிறைவாசத்தை மறக்கச் செய்வதற்காகவும், அவருடைய ஜனநாயகத் தேசிய லீக்கை நினையாதிருக்கச்செய்வதற்காகவும் இராணுவ ஆட்சி தனது கொடுமைகளைச் சிறிது தளர்த்தினாலும், மக்கள் பழைமையை மறக்கும் நிலையில் இல்லை. ''எங்கள் உள்ளங்கள், அவரை என்றுமே மறக்கப் போவதில்லை'' என்கிறார் கெண்டஸ் என்ற இடத்தில் நாம் சந்தித்த பெண் ஒருவர்.

பர்மாவின் வீதி திறக்கப்பட்ட போதிலும், அதைத் திருத்தும் நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. சாதனைத் துணிவு மிக்க பயணிகள் - எந்த விதமான இடையூறையும் மேற்கொள்ளத் தயாரானவர்கள்–பயணம் செய்வதற்கு மட்டுமே அது பொருத்தமானது.

நியூஸ்வீக் ஜனவரி 10, 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மா :-

# கண்களுக்குப் பதில் போர் ஆயுதங்கள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

## இராணுவ விற்பனை, வங்காள விரிகுடாவிற் சீனாவின் தோற்றத்தை உயர்த்துகின்றது.

பர்மாவின் பலம்வாய்ந்த புலனாய்வுத்துறைத் தலைவர் லெப் ஜெனரல் கின் நியூன்ருடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்காக, கச்சின் எதிர்ப்பாளரின் இராணுவத் தலைவர் வடபர்மாவின் மலைகளிலிருந்து சென்ற ஒக்ரோபர் மாதம் வந்த பொழுது, அவர் தனியே வரவில்லை. சீனா, தனது தென் எல்லையில் உள்ள பர்மாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளிற் கவனம் செலுத்துவதைக் காட்டும் நோக்குடன், கச்சின் தலைவர் மேஜர்—ஜெனரல் ஜாஉ மாய் உடன், நான்கு சீன மெய்க்காவலரும் வந்தார்கள்.

பாங்கொக்கில் உள்ள ஓர் இராணுவப் பகுப்பாய்வாளர் கூறியதாவது – ''தென் திசையை நோக்கி, வங்கக்குடா வரைக்கும் சீனா ஒரு பாதையைத் திறக்கின்றது. இந்திய உபகண்டத்துக்கும், தென் கிழக்காசியாவுக்கும் இடையே இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் பர்மா இருப்பதனால், சீனா தனது வெளிநாட்டுக் கொள்கையில் இதற்கு ஒரு முக்கிய இடத்தைக் கொடுத்துள்ளது.''

சீனா—பர்மா எல்லையிற் சமாதானத்தைப் பேணுவது, சீனாவின் தந்திரோபாயத்தின் ஒருபகுதியாகும். இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த பகுதி றங்கூனில் ஆட்சி செய்யும் இராணுவக் குழுவுக்குப் பெருந்தொகையாகப் போர் ஆயுதங்களைக் கொடுப்பதாகும். 1990 ஆம் ஆண்டு முதற் தடவையாக ஆயுதங்கள் கொடுத்த பின்னர், சென்ற வருடமே மிகக் கூடிய அளவிற் சீன இராணுவத் தளபாடங்கள் பர்மாவிற் குவிந்தவண்ணம் இருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களின் பெறுமதி 1. 2 பில்லியன் அமெரிக்க டொலரிலும் கூடியது என, மேற்கூறிய இராணுவப் பகுப்பாய்வாளர் கூறுகின்றார். சென்ற வருடம் ஜனவரி மாதத்திற்குப் பின்பு, சிறிய ஆயுதங்களையும், அவற்றுக்குத் தேவையான வெடிப்பொருட்களையும் சுமந்து வரும் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள், சீனாவின் யூனான் மாகாணத்திலிருந்து பல தடைவைகள் எல்லையைக்கடந்து வந்துள்ளன. கடல் மூலமும் பாரிய ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிளர்ச்சிகளுக்கு எதிராக உபயோகிக்கக்கூடிய, 63 வகையான 107 மிமீ எறிகணைச் செலுத்திகள் முப்பது தொகுதிகளும், ஆட்டிலறித் துவக்குகளும், 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான றேடியோக் கருவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 5தொன் நிறையுடைய 900 கனரகவாகனங்களும் கொடுக்கப்பட்டு, அடுத்த ஆறு மாதங்களில் வெவ்வேறு அளவுகளில் 300 கனரக வாகனங்களும் வந்துசேர இருப்பதாகப் புலனாய்வுத்துறையினர் அறிவிக்கின்றனர்.

மேலும், கடல் மூலம் அனுப்பப்பட்ட 100 போர்த்தாங்கிகளையும், கவச வாகனங்களையும் விட, வகை 85 ஆன துருப்புக்களைக் கொண்டு செல்லும் 150 கவச வாகனங்களும், ரீ 69 வகையான 50 பிரதான போர்த்தாங்கிகளும், ரீ. 63 வகையான 50 பாரங்குறைந்த நிலம்—நீர் ஊடகப் போர்த்தாங்கிகளும் அனுப்பப்படுவதற்கான முன்னேற்பாடுகளும் திட்டத்தில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மாவின் இராணுவம் மட்டு மல்ல; கடற்படையும், விமானப் படையுங்கூட சீனாவின் உதவியினால் நவீனமயப்படுத்தப்படுகின்றன. பன்னிரண்டு எஃவ்-7 போர் விமானங்களைக் கொண்ட ஒரு விமானப்படை அணி 1991 ஆம் ஆண்டு மே மாதம் கொடுக்கப்பட்டது. சென்ற மே மாதம் மேலும் ஒரு அணி கொடுக்கப்பட்டு இன்னும் சில மாதங்களில் மூன்றாவது அணியும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளர்ச்சிகளுக்கு எதிராகச் செயற்படக்கூடிய நிலத்தைத் தாக்கும் ஏ. 5. எம் வகையான இரு விமானப்படை அணிகளும் தருவதாகப் பர்மாவுக்கு வாக்களிக்கப்பட்டது. இவற்றில் அநேகமானவை மண்டலேக்குத் தெற்கே மெய்த்ரிலா தளத்தில் நிறுத்தப்படுவன. மீள் எரிபொருள் நிரப்பவும், மீள் சரக்குகள் ஏற்றவும், வடக்கிலுள்ள மையிற்கினா விமானத் தளத்தையும், வடக்கிலுள்ள சிறிய வஷியோ தளத்தையும் 'உபயோகித்து கச்சின் மற்றும் ஷான் மாநிலங்களிற் கிளர்ச்சியாளரைத் தாக்க இவ் விமானங்கள் உதவும்.

பர்மாவில் சீனாவின் அக்கறை வடக்கே கச்சின் மலைகளிலிருந்து கீழ் நோக்கி இந்தியச் சமுத்திரம் வரையும் நீள்கின்றது. வங்கக் குடாவையும், அந்தமான் கடலையும் பர்மாவின் ஊடாகச் சீனா அடைவதற்காகப் பர்மாவின் கடற்படையை நவீனமயப்படுத்த அது முன்னுரிமை கொடுப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

1991 ஆம் ஆண்டில் ஆறு ஹைனான் வகைத் தாக்கும் வேகப் படகுகளும், சென்ற வருடம் மேலும் நான்கு படகுகளும் கொடுக்கப்பட்டன. அண்மையிற் கொடுத்த அணியுடன், 70 சீனக் கடற்படைக் குழுவினர் அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் நடுத்தர அதிகாரிகள்-படகுகளைச் செலுத்தப் பயிற்சி கொடுக்கவும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட றேடார்க் கருவிகளை இயக்கவும் வந்திருந்தனர்.

பர்மாவின் கடற்படை வசதிகள் மேற்குத் திசையில் சிற்வீயிலும், ஐறாவடி ஆற்றுக் கழிமுக பாசேயினிலும், றங்கூனுக்கு அண்மையில் மங்கி பொயின்ரிலும், தென் கிழக்கே மேர்குயிலிலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் அமைந்துள்ள தளங்களில் இருந்தன.

தற்போது புலனாய்வு மூலகங்களின் அறிக்கைகளின்படி இவற்றின் வசதிகளை உயர்த்தி நவீனமயப்படுத்தப் பர்மியருக்குச் சீனத் தொழில் நுட்பவியலாளர் உதவி அளித்து பாசேயினுக்கு அண்மையில் ஹையின்கியியிலும் மிக முகியத்துவம் வாய்ந்ததாகப் பிரதான நிலப்பரப்பில் இருந்து 300 கிலோ மீற்றர் தூரத்தில் தெற்கே கொக்கோஸ் தீவுகளிலும் தளங்கள் அமைக்கப்படுகின்றன.

வங்கக்குடாவில் தற்போது சீனப் போதனாசிரியரும், தொழில் நுட்பவியலாளருமே இருந்தாலும் கொக்கோஸ் தீவுகளிற் புதிய றேடார்க் கருவிகள் சீனரால் வடிவமைக்கப்பட்டவை. சீனத் தொழில் நுட்பவியலாளரின் உதவியினால் இயக்க வேண்டியிருப்பவை-இக் கடற் பிரதேசத்தைச் சீனப் புலனாய்வுத்துறையினர் கண்காணிக்க உதவக்கூடியன.

இந்து சமுத்திரத்தைப் பாரம் பரியமாக இந்தியா தனது நீர்ப் பிரதேசமாகக் கருதும் பொழுது கொக்கோசில் சீனாவின் சமூகம் நியூடெல்கிக்குக் குறிப்பான கவலையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் கொக்கோஸ் தீவுக்கு அண்மையில் அந்தமான்தீவில் உள்ள போற் பிளேயரில் இந்தியாவின் கடற்படைத் தளமொன்று அமைந்துள்ளது. பல வழிகளில் இந்தியாவின் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இவ்வருட முற்பகுதியில் இந்துமாகடலிற் கூட்டுக் 'கடற்படைப் பயிற்சிகளுக்காக இந்தோனேசியாவுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது. மேற்கு சுமத்திராவின் நுனியில் இருந்து அதிக தூரத்தில் கொக்கோஸ் இல்லாத காரணத்தினால் சீனாவின் பிரதேசங் கடந்த எண்ணங்களால் எச்சரிக்கையாயுள்ள இந்தோனேசியாவும் கவலை அடைய நேரிடலாம்.

கொக்கோசில் சீனாவின் வளரும் பிரசன்னத்தின் சமகாலத்தில் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அண்மையில் இப் பயிற்சிகள் நடைபெற ஏதுவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வேறு ஆசியான் அங்கத்துவ நாடுகளுடனும் பாதுகாப்புப் பிணைப்புக்களை வலுப்படுத்த இந்தியா அண்மைக் காலங்களில் அக்கறை காட்டியுள்ளது.

தாய்லாந்தும், தனது மேற்குக் கரைப் பக்கத்தில் நடைபெறும் செயற்பாடுகளில் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

தாய்லாந்தின் முதுநிலை இராணுவ அதிகாரியால் இராணுவப் பத்திரிகையான ''காஓராயில்'' எழுதப்பட்ட கட்டுரையொன்றில் பர்மாவின் புதிய ரோந்துப் படகுகளில் அம்சங்கள் ஆராயப்பட்டும், மேர்குயிற்கு அப்பால் அமைந்துள்ள கடான் தீவை விளக்கமாகக் காட்டும் தேசப்படமும் இணைக்கப்பட்டுள்ளது, சீனப் போதனாசிரியர்கள் அங்கே தங்கியுள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது.

மத்திய கிழக்கில் இருந்து ஜப்பானுக்கு வரும் பெற்றோலிய நெய், மலாக்கா நீரிணையின் ஊடாக வருவதால் அதற்கு மிக அண்மையில் இடம்பெறும் மேற்கூறிய பதற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளால் டோக்கியோவும் விசனம் அடைந்துள்ளது. சீனா மேர்குயிற்கு அண்மையில் பினாங்கிலிருந்து 400 கிலோ மீற்றர் வடக்கேயும், மலாக்கா நீரிணையின் வாயிலிலும் பிரசன்னமாயிருப்பதால் ஜப்பான் கவலை அடைந்துள்ளதாக ஜப்பானிய அதிகாரிகள் இப்பத்திரிகைக்குக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் ...
சுண்டிக்குளி கிளை நூலகம்.

## சீனா:

# மாவோ சாகாவரம் பெற்றவர்!

''மியா''விலிருந்து
— ஜேம்ஸ் வோல்ஷ் —

## அவரின் நூறாவது பிறந்த நாள் அண்மையிற் கொண்டாடப்பட்டது.

நவசீனாவின் தனிப்பெரும் சிற்பி மாவோ என்பதிற் சந்தேகமில்லை. ஒரு நூற்றாண்டிற்கு மேலாக நலிவுற்றிருந்த நாட்டைத் தட்டியெழுப்பிய பெருமை இவரைச் சாரும். கரையோரச் சீனா முழுவதும் அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, சீனமக்கள் தமது நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டிருந்ததொரு காலம். பலதரப்பட்ட பிரிவினைச் சக்திகள் நாட்டைக் கூறு போட்டிருந்தன. முற்போக்கான தொழில் நுட்பத்தாலும், இராணுவப்பலத்தாலும், மேற்குலகம் சீனாவை அடக்கிவைத்திருந்த அக்காலம். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல், சீனாவில் ஜப்பானிய ஆக்கிரமிப்பு அமைந்ததெனலாம். இந்தச் சீர்கெட்ட நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர், மாவோ எனப்படும் மாசேதுங். இவர், சீனத் தேசியத்தைத் தட்டியெழுப்பினார். பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் மூலம், மக்கள் வாழ்வை மலரச்செய்யப் பெரும் முயற்சி எடுத்தார். இவர் தலைமையில் சீனாவின் ஒருமைப்பாடும், சுய ஆதிக்கமும் மீண்டும் உதயமாகியது என்பது வரலாற்று உண்மை.

இவர் வாழ்வைப் பல கோணங்களிலிருந்து ஆராயலாம். இவர் தீவிரப் பொதுவுடைமைப் புரட்சிவாதி யென்பதும், தலைசிறந்த சீன மொழிக்கவிஞர் என்பதும் பலருக்குத் தெரியும். ஆனால் இவரின் செயற்பாடுகளாற் பல சீன மக்கள் மடிந்துள்ளனர் என்பதும் சரித்திர உண்மையே. 1966 ஆம் ஆண்டு, பிரசித்திபெற்ற கலாசாரப் புரட்சியை மாவோ ஆரம்பித்தார். பெருந்தொகையான மக்கள், தமது பிறந்த கிராமங்களிலிருந்து வெகு தூரமுள்ள இடங்களுக்குத் துரத்தப்பட்டனர். இந்தப் பணியில், பல சீன இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். புதிய சீனாவைக் கட்டியெழுப்ப, இதுவே மார்க்கம் என்று இவர்கள் நம்ப வைக்கப்பட்டனர், கலாசாரப் புரட்சியென்று, காரணமின்றிப் பெயர் சூட்டப்பட்ட இந்த நடவடிக்கையாலும், வேறு விவசாயத் தோல்விகளாலும், 30 மில்லியனிலிருந்து 46 மில்லியன் மக்கள் வரை இறந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மாவோ ஒரு சர்வாதிகாரியென்றும், விஷயமறிந்தோர் புத்தி சொன்னாற் கேட்க மாட்டாரென்பதும், இப்போது தெரியவருகின்றது. இவர், வஞ்சம் தீர்ப்பதில் வல்லவர் என்றும், வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

என்றாலும், நவசீனாவின் பிதாமகன் என்ற இடம் இவருக்கு எப்போதும் உண்டு. அன்று சீரழிந்த நிலையிலிருந்த சீன விவசாயிகள், இவரை நன்றியுடன் நினைவு கூருகின்றனர். 1930 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், தனது படையினருடன் நெடியதோர் பேரணியை (The Long March) நடத்தி, உலகின் கவனத்தைக் கவர்ந்தார். இந்தப் பின்வாங்கல், (Retreat) இறுதியானதென்றே பலரும் நினைத்தனர். ஆனால் வட-மேற்கு யான் அன் (Yan-An) குகைகளில் மறைந்திருந்தபடி, புரட்சியை நடத்தியவண்ணம் இருந்தார் மாவோ. 1949 ஆம் ஆண்டு வெளி உலகுக்குத் தனது படைகளுடன் வந்து, வெற்றிகரமாக நாட்டைக் கைப்பற்றினார். புரட்சியைப் பற்றிப் பேசும் இடங்களிலெல்லாம்,



சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவர்கள், பைஜிங் தலைநகரில் வைக்கப்பட்டிருக்கும் மாவோவின் பூதவுடலுக்கு மரியாதை செய்த வண்ணம், அணிவகுத்துச் செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சாதனை மேற்கோள் காட்டப்படுவது சகஜம்.

மாவோவின் பொருண்மியக் கோட்பாடுகள், இன்று, பெரும்பாலும் கைவிடப்பட்டுள்ளன. இன்று மூத்த தலைவர் டெங் சியோ பிங் (Deng Xiaoping) அவர்களுடைய சந்தைப் பொருளாதாரமும், மேற்குலகத் தொடர்பும் நற்பயன் கொடுக்கத் தொடங்கியுள்ளன. ''செல்வம் சிறப்புடையது''; இது டெங் தொடக்கிவைத்த மந்திரம். சீனா, இப்பாதையிலே சென்று கொண்டிருப்பது கண்கூடு. காலப்போக்கில் மாவோவின் தோல்விகளும், குறைபாடுகளும், அவர் காலத்தில் நடந்த உயிரிழப்புக்களும், மக்களால் மறக்கப்பட்டு, பிறிதோர் காரணத்திற்காக அவர் கௌரவிக்கப்படுகின்றார். ஒரு சீனப் பேராசிரியர் பின்வருமாறு சொல்கிறார்:- ''நான் மாவோவின் செயற்பாடுகளை வெறுக்கிறேன். ஆனால், நவசீனா அவரின் முயற்சியால் உருவான தொன்று. கட்டுக்கோப்பான, பலம் பொருந்திய சீனாவை அவர் உருவாக்கினார். தான் கண்ட கனவுகள் யாவற்றையும் நனவாக்க முயன்றபோது, விரும்பத்தகாதவையும் நடந்துள்ளன'' என்பதாக. ருஷ்யாவில் (Stalin) ஸ்ராலினுக்கு நடந்ததுபோல, மாவோ இறக்கி வைக்கப்படும் சாத்தியக்கூறுகள் தெரியவில்லை.

தென்மத்திய மாகாணம் ஹுனானில் (Hunan), அவர் பிறந்த கிராமத்தில் 10 மீற்றர் உயரமுள்ள வெண்கலச் சிலையொன்று அண்மையில் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான சீனமக்கள், நாட்டின் பல பாகங்களிலிருந்து இதைத் தரிசிக்க வந்தவண்ணம் இருக்கின்றனர். மாவோ வெளியிட்ட சிறிய சிவப்புப் புத்தகம் (Little Red Book) மக்களாற் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது. இவருடைய படம் பதிக்கப்பட்ட பதக்கங்கள் பெருமளவு விற்பனையாகின்றன. காயோ ஜின் மெங் என்ற காவல்துறை அதிகாரி 10,000 மாவோ பதக்கங்களையும், முத்திரைகளையும், சிறிய சிலைகளையும் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்றார். டெங் ஆட்சியின் பின், பொருளாதார மேம்பாட்டுடன் பெருமளவு ஊழலும் நாட்டிற் பெருகியுள்ளது, இது, மாவோ காலத்தில் கேள்விப்படாத தொன்று. இக்காரணத்திற்காகவும் மாவோ போற்றப்படலாமென்று, சீன ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், டெங் அவர்களின் எண்ணங்களுக்கு, நாட்டில் நூறு வீத ஆதரவு இல்லையென்பதையும் இது காட்டுகிறது.

மாவோ இல்லாத சீனாவைக் கற்பனை பண்ணிப்பார்க்க முடியவில்லை. வோஷிங்ரன் இல்லாத அமெரிக்காவையும், லெனின் இல்லாத ருஷ்யாவையும், காந்தி இல்லாத இந்தியாவையும் மனம் ஏற்க மறுப்பது போல் என்று வைத்துக் கொள்வோம். உலக வரலாற்றுப் பெருந் தலைவர்கள் வரிசையில் வைக்கப்படவேண்டியவர் மாவோ. இவரின் குறைகளை உணர்ந்துள்ள சீனத்தலைவர்களும், இவரின் புகழ் பாடியே தங்கள் பதவிகளைத் தக்க வைத்துள்ளனர். மாவோ சீனாவின் சின்னம் என்பதை, இவர்களால் மறைக்க முடியாது. சீன அரசியல் வானில், மாவோவுக்கு நிரந்தர இடமொன்றுஎப்பொழுதுமே உண்டு.

''ரைம்'', ஜனவரி 10, 1994

---

மாபெரும் சொற்பொழிவு

## ஹொங்கொங்கில் பிரமாண்டமான ஒரு புத்தர் சிலை

250 தொன் நிறையான 202 துண்டுகளை ஒன்றிணைத்துப் புத்தரது வெண்கலச் சிலையை உருவமைப்பதற்கு 9 மில்லியன் டொலர் செலவாகியுள்ளது.

அவருடைய மாபெரும் வலக்கரம் சாந்தியும், அருளும் பாலித்துக் கொண்டு இருக்கிறது. ஹொங்கொங்கின் லாண்டாவ் தீவில் அமைந்துள்ள இந்த 24 மீற்றர் உயரமான புத்தர் சிலை ஏற்கனவே ஹொங்கொங்கையும், சீனாவையும் அண்மிக்கச் செய்து விட்டது. 1973 ஆம் ஆண்டில் திட்டம் தீட்டப்பட்டு, 1984 டிசம்பர் 29 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட இந்த டியன்டான் புத்தர் சிலை, ஹொங்கொங்கில் வடிவமைக்கப்பட்டுச் சீனாவில் வெண்கலம் உருக்கி வார்த்துச் செய்யப்பட்டது. இது சீனாவை நோக்குமுகமாக அமைக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் இருந்து வந்த மதகுருமார்கள் கலந்து கொண்ட மதச் சடங்கின்போது, 10,000-க்கு மேற்பட்ட மக்கள் சூழ்ந்திருக்க, அந்தத் திறப்பு விழா நிகழ்ந்தது. ஹொங்கொங்கின் ஆளுநர் கிறிஸ்ரோபர் பற்றன் மதச் சுதந்திரம் பற்றிப் பேசினார். ஹொங்கொங்கில் இருக்கும் சீனாவின் மிகமுக்கிய நபரான, ''க்ஷின்ஹுவா'' செய்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜுஹுஊ நான், சீன மக்களின் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசினார். அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து' திறப்பு விழாவைக் குறிக்கும் நாடாவை வெட்டி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

சீனாவும், பிரித்தானியாவும் ஒன்றிணைந்து முதலீடு செய்து அங்கு ஒரு புதிய விமான நிலையத்தைக் கட்டினால், அந்த வழி ஊடாகப் பயணம் செய்யும் விமானப் பிரயாணிகளும் புத்தரின் ஆசி பெற வாய்ப்புக் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் துரும்புச் சீட்டைக் கொண்டு சீனா விளையாடுகிறது

## இராஜதந்திரம்:-

**அணுவாயுத நிறுத்தத்தின் மூலம், சமாதான முடிவுக்கு வரச் சீனா முயன்று வருகிறது.**

எழுதியவர்:

— ஸ்டிவன் ஸ்றசர் —

சீனா, வடகொரியாவின் அணுவாயுத நிகழ்ச்சி நிரல் நெருக்கடிக்கு முடிவு காண்பதில், திரைக்குப்பின்னால் முதன்மையான பங்கு வகித்தது. சீன இராஜதந்திரிகள் ஐக்கிய அமெரிக்காவுக்கும், வடகொரியாவிற்குமிடையே பேச்சு வார்த்தை இடம் பெற, அமைதியான வகையில் உதவி புரிந்தனர். ஐ. நா. சபை கொரியாவிற்கு வழங்கிய விருப்பத் தெரிவினை அது நிராகரித்த வேளையில், அவர்கள் தங்களின் பொறுமையான இராஜதந்திரத்தை வெளிப்படுத்தியது நற்பயனை அளித்தது. வடகொரியாவின் அணுவாயுத வாய்ப்புக்களைச் சர்வதேசக்குழு பரீட்சிப்பதான ஒப்பந்தம் அணுகிவருவதாகத் தோற்றுகின்றது. அமெரிக்கரின் நோக்கில், இப்பேச்சுவார்த்தையானது வடகொரியாவே தனது அணுவாயுதப் பரிசோதனையைக் கைவிட்டு, அதற்கு மாற்றான வேறு ஆய்வில் இறங்க வழிவகுத்துள்ளது. ஆனால் சீனரைப் பொறுத்தவரையில், அமெரிக்கா வடகொரியாவுடன் பேசுவதற்கு விரும்பவைத்ததே பெருஞ்சாதனை தான். இதனால், " பனிப்போர் ஒன்று முடிவுக்கு வந்தது " என்று, கொரிய விவகாரப் பிரிவுத் தலைவரான லி பின் சீன வெளிநாட்டலுவல் அமைச்சுக்குக் கூறியதோடு, " ஐ. அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்குமிடையே உறவினை மேம்படுத்த எம்மால் முடியுமானால், இது ஒரு முக்கிய நிகழ்வுதான் " என்றும், தொடர்ந்து கூறினார்.

ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யாவுக்கு எதிராகச் சீனாவின் துரும்புச் சீட்டைப் பயன் படுத்துவதாகக் கூறப்பட்ட அபிப்பிராயத்தைச் சீனா மறுத்துள்ளது. ஆனால், தனது சொந்தப் பிரதேசத்திற் கேந்திரச் சமநிலையைப் பேணுவதற்காகச் சீனா தான் அமெரிக்கத் துரும்புச்சீட்டைக் கையாண்டிருக்கிறது என்பதே உண்மை. எல்லாவற்றிலும் மேலாக, வடகொரியாவுடன் இணைந்ததான அதன் 1,400 கிலோ மீற்றர் கரையோரப் பிரதேசத்தில் ஸ்திர நிலை ஏற்படுத்துவதே, சீனாவின் அடிப்படை நோக்கமாய் இருந்தது. ருஷ்ய ஒன்றியத்தின் வீழ்ச்சியும் மேற்கு நாடுகளுக்குச் சீனா தனது பொருளாதாரத்தினைத் திறந்துவிட்டதும், வடகொரியாவின் ஆதிக்கத்தைத் தனிமைப்படுத்திவிட்டன. இதனால், வடகொரியாவின் பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டதை, அது ஏற்றுக்கொள்ளச், செய்திருக்கிறது. தலை கீழாகிவிட்ட உலக ஒழுங்குக் கேற்ப வோஷிங்ரன் தன்னை அங்கீகரித்ததன் மூலம், தனது பொதுவுடைமைக் கொள்கைக்கான கடைசி நம்பிக்கை தொடர்வதற்கு — வாழ்வதற்கு — வாய்ப்பு உண்டு என்று வடகொரியா கருதுகின்றது. ஐக்கிய அமெரிக்காவுடன் நெருக்கமான பிணைப்பு ஏற்படுத்தும் விருப்பத்தினை அது வெளியிட்டபொழுது, பெய்ஜிங்கின் (சீனாவின்) கொள்கை உருவாக்குவோரான லீ, " எனது கருத்துப்படி, அவர்கள் அணி அலங்காரத்தை விடுத்து இதயத்தாற் பேசுகிறார்கள் " என்றார்.



டெங் (இடது) உடன் கிம்

சகோதர நண்பர்கள் ஆனால் தூரத்துச் சொந்தக்காரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்க வழிகள்

அண்மைக்காலத்திலே, வட கொரியாவின் மீதான ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை ஒரு சிறிதளவே இளகியுள்ளது. 1980 இன் பிற்பகுதியில், ''நகையாடும் இராஜதந்திரம்'' நிலவியபோது, வடகொரியர் ஒருவர் வரவேற்பு வைபவம் ஒன்றின் போது தங்களுடன் உரையாட முற்படின், அவரோடு பேசுவதற்கு அமெரிக்க இராஜதந்திரிகள் அனுமதிக்கப் பட்டார்கள். 1988 இல் ஆரம்பத்திலே ஐ. அமெரிக்க, வட கொரியத் தூதரகங்களின் அலுவலர்கள், கீழ்மட்ட நிலையிற் கிரமமாக ஒருவரோடு ஒருவர் தொடர்புகளை ஆரம்பித்தார்கள். இவையாவும், அணுவாயுத மேற் பார்வை பற்றி நியூயோர்க்கில் பேச்சுவார்த்தை அதிமேல் மட்ட அளவில் நடைபெற வழிவகுத்தன. இந்தப் பேச்சுவார்த்தைகள் வாயிலாக, குறுகிய சூலப் போர் நிறுத்தம் ஏற்படக் கொரியப் போர் ஒரு முடிவுக்கு வந்தது. இவ்வேளையில் சீனா மிகக் கவனமாக, பக்கவழிகளிலே தன்னை நிலைப்படுத்திக் கொண்ட போதிலும், ஐக்கிய அமெரிக்கா வழங்கிய செய்திகளை வடகொரியாவுக்குக் கையளித்து வந்தது. பேட்டி ஒன்றின் போது லீ கூறியது இது:- ''இருசாராரும் நேருக்கு நேர் தொடர்பு கொள்வது தான் நல்லது. வடகொரியாவுடன் நாங்கள் வைத்திருந்த தொடர்பு காரணமாக, ஐக்கிய அமெரிக்காவின் கருத்துக்களை ஒழுங்குமுறையில் வடகொரியாவுக்கு அறிவித்து வந்தோம்.''

சீனாவும், வட கொரியாவும் இன்னமும் பொதுவுடைமைக் கோட்பாட்டு அடிப்படையிலே சுமுகமான நேச உறவு கொண்டுள்ளமையும், ருஷ்ய ஒன்றியத்தின் நிழலிலே வடகொரியா 45 ஆண்டுகளாய் வாழ்ந்து, ருஷ்ய ஒன்றிய வீழ்ச்சியின் பின்னர், சீனாவுடன் கூடிய இறுக்கத்தொடர்புகளைக் கொள்ள வேண்டியமையும் அவசியமான வரலாற்றுத் தேவைகளாகும். இதனோடு சீனா, வடகொரியாவின் எரிபொருள் தேவையின் 40 சதவீதத்தை அதற்கு வழங்கி, பண்டமாற்று அடிப்படையில் அதனிடமிருந்து உலோகத்தாது, சீமெந்து, கண்ணாடிப் பொருள்களைப்பெற்று வந்தது. அதன் மேலதிகத் தேவையான எரிபொருள்களைப் பிறநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முறையிற் கடனுதவியும் வழங்கியது. ஆனால், 1992 இன் பின்னர் சீனா பண்டமாற்று முறையை நிறுத்திக்கொண்டு, உலகச் சந்தை விலைக்கு அமைய எரிபொருளை வடகொரியாவுக்கு விற்கத் தொடங்கியது. இதனால், வட கொரியாவுக்கு உண்டான எதிர் விளைவு என்ன என்று தெரியவில்லை. ஆனால் வடகொரியாவைப் பொறுத்தவரை, அதன் எரிபொருள் சக்தித்தேவை நிறைவேற்றத்திற் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை.

சீனாவின் வர்த்தகத்தொடர்பு, வடகொரியாவோடு நிலையாகவும் மிகச் சிறப்பாகவும் இருந்துவரும் அதே வேளையில், தென்கொரியாவுடனான அதன் வர்த்தகத் தொடர்பும் மேலும் செழிப்பாக உள்ளது. இவ்விரு நாடுகளினதும் வர்த்தக உறவுகள், பண அளவில் 1992 இலும், 1993 இலும் மிகவும் கூடியுள்ளன. ''கொள்கைகளுக்காக வடகொரியா, பணத்திற்காகத் தென்கொரியா'' என்று, கிழக்கு ஐரோப்பியப் பத்திரிகையாளர் ஒருவர் கூறியது பொருத்தமானதே எனினும், அரசியல் ரீதியாகவும் சீன — தென்கொரிய உறவுகள் பலமடைவது, வடகொரியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்துவது இயற்கையே.

கொரியாக் குடாநாட்டில் அரசியல் ஸ்திரநிலை ஏற்பட்டு, வடகொரியாவும், தென்கொரியாவும் - கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது போல இணையும் நிலை ஏற்பட்டால், அதனோடு சீனா கொள்ளும் உறவின் மூலம், ஜப்பானுடைய மேலாதிக்கத்தை விழுத்தும் வாய்ப்புச் சீனாவுக்கு ஏற்படலாம். ஆனால், அதேவேளை இந்த இணைப்பினால் வடகொரியாவிற்கு ஏற்படும் சரிவு காரணமாக, அங்கிருந்து அகதிகள் பெருகிச் சீனாவில் தஞ்சமடைவதைச் சீனா தாங்கிக்கொள்ளவும் நேரலாம். அணுவாயுதச் சிக்கல் ஏற்படவும், அதனைத் தீர்க்கும் சாட்டில் ஐக்கிய அமெரிக்கப்படை எல்லைப் புறத்தில் வந்து முகாமிடவும் கூடும். இந் நிலை ஏற்படா திருக்கத் தென்கொரியாவுடன் தனது உறவை வளர்ப்பதும், அதே சமயம் வட கொரியாவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் சீனாவின் அவசிய தேவைகளாகின்றன.

சீனாவானது, பொருளாதாரச் சீர்திருத்தத்தில் வடகொரியா தனது வழியினைப் பின்பற்ற வேண்டும் என்று, அதனோடு இச்சகமாக நடந்து வருகிறது. வடகொரியத் தலைநகரான பியோங் யாங்கிலும், வேறு பெரிய நகரங்களிலும், சீனாவின் உற்பத்திப் பொருள்களான துணிகள், துவிச்சக்கர வண்டிகள் முதலியவற்றைப் பங்கீட்டு அட்டைகளின் தேவையின்றியே, கைக்காசு கொடுத்து வாங்க வழி செய்யப்பட்டுள்ளது. அதே வேளை வடகொரிய வர்த்தக அதிகாரிகள் ஹொங்கொங், மக்கோ உள்ளிட்ட பிரதேசங்களிலே முதலீடு செய்யக் கூடியவர்களின் கவனத்தை ஈர்க்க முனைந்து வருகின்றனர். சீனாவில் உலாவும் வதந்திகளின்படி, கிம் இல் சுங் (வடகொரியத்தலைவர்) அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பே சீனாவுக்கு அழைத்து, அங்குள்ள விசேட பொருளாதார வலயங்களை அவருக்குக் காட்டித் தமது வெற்றியைப் பறைசாற்றியதாகக் கூறப்படுகிறது. கிம் அவர்களின் அரசு, வடகொரியாவின் நுகர்வு உற்பத்திப்பொருள்கள் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ச்சி கொள்ளவைப்பதிற் கூடிய அக்கறை கொண்டிருக்கிறது. ஆனால் சீனாவின் தொழில் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், வடகொரியாவின் வளர்ச்சி கவலை தரும் அளவு தாழ்ந்தே உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று, வடகொரியா தனது வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால், ஐக்கிய அமெரிக்கா அதனை அங்கீகரித்துச் சர்வதேச உதவிக் கதவுகளை அதற்குத் திறந்துவிடல் வேண்டும். அணுவாயுதச் சிக்கலின் பின்னணியில் வடகொரியாவின் கணிப்பு இது. இக் கணிப்பினைச் சீனாவும் வரவேற்கிறது. அமெரிக்கா எந்த அளவுக்கு வட கொரியாவின் ஸ்திர நிலையினைக் கருத்திற் கொண்டுள்ளதோ, அந்த அளவுக்குச் சீனாவும் கருத்திற் கொள்கிறது. ''சர்வதேசச் சமூகம், இன்று எல்லா நாடுகளுக்கும் திறந்துவிடும் ஒன்றாக மாறி வருகிறது. வடகொரியா இவற்றிலிருந்து தனிமைப்படுவதை எவரும் விரும்பவில்லை.''

ஆனால், அமெரிக்காவை இலகுவாக விலைக்கு வாங்க முடியாது. நியூயோர்க்கில், வட கொரியாவின் அணுவாயுத வாய்ப்புக்களைச் சோதனை செய்யச் சர்வதேசக் குழுவை அனுமதிப்பதற்கான வேண்டுதல் அடைகாக்கும் பருவத்தில் இருப்பதால், இக் கோரிக்கைக்கு வடகொரியா இணங்கும் பொழுதே, ஐக்கிய அமெரிக்காவுக்கும், அதற்குமிடையில் இராஜதந்திர உறவுகள் நிலையாக ஏற்படலாம். இது சாத்தியமானால், வோஷிங்ரன் சர்வதேசச் சமூகத்தின் ஒத்துழைப்பாளராக வடகொரியா அமைவதற்கு வாய்ப்பளிக்கும். இதனைக் கிம் இல் சுங் உணர்ந்து செயற்படாது விட்டால், அவரது ஆதிக்கத்துக்கு ஊறு உண்டாவது நிச்சயம்.

*நியூஸ் வீக், ஜனவரி,10, 1994.*

# போரின் காயங்களுக்குப் பணம் கொண்டு கட்டும் முயற்சி

*நொம்பென்னிலிருந்து*

— றொன் மொறீயு —

**கம்போடியா:-**

**அரசியல் நெருக்கடிகள் தளர்ந்து, பொருளாதாரம் மீள்கிறது. ஆனால் இது கடைசிவரை நிலைக்குமா? என்பதே கேள்வி.**

கடந்த ஜூலையில் கம்போடியாவின் நிதிஅமைச்சரான சாம் றெயின்சி தாமே பொறுப்பேற்று ''நாட்டின் பொருளாதாரம்'' அனைவருக்கும் இலவசம் ஆகக் கிடைக்க வழிகண்டு விட்டார். 25 ஆண்டுக்கால உள்நாட்டுப் போரினால் கம்போடியா ஒழுங்கு என்ற உணர்வையே இழந்து விட்டது என அவர் சொன்னார். வர்த்தக நிறுவனங்களிற் சில மட்டுமே, வரி இறுப்பதில் அக்கறை காட்டின. சுங்க அதிகாரிகள் இலஞ்சம் பெற்றுக் கடத்தற்காரர்களுக்கு ஆதரவளித்தனர். தேவைக்கும் அதிகமான அரச ஊழியருக்கு நிதி வழங்குவதற்கென ஆட்சியாளர்கள் பணத் தாள்களை அச்சிட்டனர் 'பொல் பொட்ஸ்' இனது கமரூச் என்னும் கெரில்லாக்களுக்கும் நிதிஉதவ இந்தமுறையே கையாளப்பட்டது. றெயின்சி பதவி ஏற்குமுன் இருந்த நிலை ஊழலுக்கு ஓர் எடுத்துக் காட்டு. அரசு பெற்றுக்கொண்ட தொகை 4.8 மில்லியன் டொலர்; செலவழித்ததோ 10 மில்லியன் டொலர். இந்த மேலதிகச் செலவீனம் பணவீக்கத்தினை ஏற்படுத்தியது. பணவீக்கம் மாதந்தோறும் 90 சத வீதம் ஆனது. கம்போடியாவின் ஒழுக்க நெறியே சீர்குலைந்திருந்தது என்பதை நினைவு கூரும் றெயின்சி ''நாம் எமது பொருளாதாரத்தினை ஸ்திர நிலைக்குக் கொண்டு வரல் வேண்டும்; அல்லது, சீற்றமடையும் கம்போடியர் அதை வீதிகளுக்கு எடுத்து வந்துவிடுவார்கள்'' என்றார்.

றெயின்சி மிக விரைவாகக் ''காட்டின் நிலை'' யிலிருந்து, நாகரிக நிலைக்குக் கம்போடியாவைத் திருத்தி அமைப்பதில் ஈடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். சுங்க வரியை இரு மடங் காக்கியதோடு கள்ளக் கடத்தலில் ஈடுபடுவோரிடமிருந்து பெறப்படும் மேலதிக வரியிலிருந்து அரைப் பங் கைச் சுங்க அதிகாரிகள் பெற வாய்ப்பு வழங்கினார். கடமை எதுவும் இன்றி மாயையில் வாழ்ந்த அதிகாரிகளில் நூற்றுக்கணக்கான வரை விலக்கினார். ஒக்ரோபர் மாத வாக்கில் அரசிறை வருமானம் 10 மில்லியன் டொலராக உயர்ந்தது. செலவீனம் 8 மில்லியன் டொலராகக் குறைந்தது. இதனால் பணவீக்கம் பூச்சியத்திற்கும் கீழே இறங்கியது. கம்போடியாவின் நாணயமான 'றியல்' கடந்த மாதத்திற் பெறுமதியற்றதாய் இருந்தது. இன்று டொலருக்கு மாற்றாகப் பெறுமதியில் உயர்ந்து விட்டது.

## நோய்வாய்ப்பட்ட அரசர்

கம்போடியாவின் பொருளாதார மறுமலர்ச்சியின் பயனாக அரசியலிலும் அமைதி நிலவத் தொடங்கியுள்ளது. கம்போடிய அரசர் சிகானொக் அவர்களின் மகனான இளவரசர் நோறோடொம் றணறிட் ஐக்கிய நாடுகளின் பக்க உதவியோடு உள்நாட்டுப் போரினைத் தீர்மானமாக முடிவு கட்டும் நோக்குடன் நடந்த தேர்தலில் தம் ஆதரவாளர்களோடு வெற்றி பெற்றுள்ளார். ஆனாலும் தேர்தலின் முடிவாக அவர் தம்முடைய முன்னாள் பரம வைரியான ஹூன் சென்னுடன் கூட்டாட்சி அமைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். காரணம் அவருடைய கட்சிக்கு அடுத்த நிலையில் ஹூன் சென்னுடைய கட்சி, பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிவிட்டது. றணறிட் இளவரசர் நிதி வெளிநாட்டு விவகாரங்களுக்கும், ஹூன் சென் பாதுகாப்பிற்கும், இராணுவத்திற்கும் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களின் கூட்டானது தேர்தலைப் புறக்கணித்த கமரூச் கெரில்லாக்களின் வடமேற்குப் பிரதேசச் செல்வாக்கினை ஒடுக்குவதற்கு உதவியது. ஆனால் 38 ஆண்டுகள் பதவி நீக்கத்தால் விலகியிருந்தபின் மீண்டும் அரசராகியுள்ள சிகானொக்கிடமே நிலையான அமைதிக்கான மதிப்பார்ந்த பொறுப்பு உள்ளது. 71 வயதான சிகானொக் பெய்ஜிங்கில் (சீனாவில்) புற்று நோய்க்கான விசேட சிகிச்சை பெறுகின்றார். இளவேனிற் காலத்தில் நாடு திரும்ப விருக்கும் அவரோடன்றி, கிளர்ச்சியாளரின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற வாய்ப்பில்லை.

கம்போடியாவின் பொருளாதாரம் கமரூச் கெரில்லாக்கள் இன்றுள்ளது போலப் பெருமளவில் உள்ளவரை அமைதியாகச் செயற்படுவது இயலாது. 50 கம்போடியரில் ஒருவர் இராணுவ வீரராயுள்ள கம்போடியாவில் பெருமளவு பணம் இராணுவத்திற்கே செலவாகின்றது. கல்விக்கோ, கைத்தொழில் முதலீட்டுக்கோ பணம் முற்றாகவே செலவாவதில்லை எனலாம். பொருளாதாரம் சென்ற ஆண்டு 5.5 சதவீதமாக அதிகரித்தது. இந்த ஆண்டு 7 லிருந்து 8 சதவீதமாக உயரும்என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தொடர்ந்து ஒரு தசாப்த காலத்திற்கு இந்த 8 சதவீத அதிகரிப்புத் தொடர்ந்தால் மட்டுமே 1960 இன் பிற்பகுதியில் நிலவிய பொருளாதாரச் சுபீட்சத்தை அடையலாம். ''மற்றைய தென்கிழக்காசிய நாடுகள் போன்று பொருளாதார நிலையில் ஓர் அற்புதமான வெற்றியையோ, விரைவான உயர்வையோ நான் இங்கும் காணவில்லை'' என்றார் உலக வங்கியின் பொருளாதார நிபுணர் மைக்கல் வாட். அவர் ''பெருமளவிலான அடிப்படை மாற்றங்கள் பலவும் மேற்கொள்ளவேண்டி உள்ளன.'' என்கிறார்.



வரிகளை ஒழுங்கான வகையில் அறவிடுவதற்கு உகந்த முறையில் வணிக நடவடிக்கைகள் பதியப்படுதல் வேண்டும் என்று றணறிட் கட்டளை பிறப்பித்திருக்கிறார். வரி விகிதத்தைக் கூட்டியுள்ளதோடு சொத்துரிமையாளரிடமிருந்து முதன் முறையாகச் சொத்துடைமை வரியும் அறவிடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச ஊழியரையும், படையினரையும் ஊக்குவிப்பதற்கென அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் 20 சத வீதப் படியுயர்வினை நிறுத்தவும் முயற்சி தொடங்கியிருக்கிறது. நாட்டாட்சி அதிகாரிகள் தமது இல்லங்களுக்கு இப்பொழுது 20 தொடக்கம், 30 டொலர்களே கொண்டு செல்லக் கூடியதாக இருக்கிறது. 300 டொலருக்கு மேல் மாத வருமானம் பெறுபவரிடமிருந்து வரி அறவிடப்படுகிறது,

கம்போடியாவின் முன்னுரிமைப் பொருளாய் இருந்து வந்தது அரிசியாகும். 1960 இல் ஆண்டுதோறும் 500,000 தொன் அரிசி கம்போடியாவிலிருந்து ஏற்றுமதியானது. இன்று அது தனது சுயதேவையையே நிறைவு செய்ய முடியாத நிலை. 9 மில்லியன் கம்போடியரில் 80சதவீதமானவர் கிராமப்புறங்களிலே வாழ்ந்தும் விவசாயம் முன்னேறாமைக்கு நவீன விவசாய சாதனங்களைப் பயன்படுத்தாமையும், செப்பமில்லாத அழுக்கு நிறைந்த வீதிகளினூடாக உற்பத்தித் தானியத்தை நகரங்களுக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளும், கிளர்ச்சியாளர்கள் புதைத்துள்ள கண்ணிவெடிகளின் ஆபத்துக்களுமே முக்கிய காரணிகள். இந்த ஆண்டு கம்போடியாவின் உணவுக்கு வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய அரிசியின் அளவில் 150,000 தொன் வீழ்ச்சி கண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் குறை நிரப்பாக 90,000 தொன் அரிசியை வழங்கியபோதும் எஞ்சிய தேவையானது குடியானவர்களைப் பட்டினியாளராக மாற்றிக் கிளர்ச்சியாளரின் முகாம்களை அவர்கள் நாட நேரிடும் என்ற கவலையும் ஏற்பட்டுள்ளது.

'றனறிட்' அரசு கடந்த கோடைக் காலத்தில் எடுத்த தாக்குதல் நடவடிக்கையால் 2,000 கெரில்லாக்கள் தமது இயக்கத்திலிருந்து விலகி காட்டிக்கொடுப்போராகியுள்ளனர். இப்பொழுது கெரில்லாக்களின் தொகை 6,000 திலிருந்து 10,000 வரை தான். இவர்களிடையே மிக மோசமான பிரிவினைகள் உண்டாகியிருப்பதாகவும், இதனால் போரிடுவதா? அல்லது, சமாதானப் பேச்சுவார்த்தையில் இறங்குவதா? என்ற தடுமாற்ற நிலை நிலவுவதாகவும் வதந்திகள் உலாவுகின்றன. நிலமாறு காலத்து அதிகாரிகளாகக் கம்போடியாவில் தங்கி தேர்தலில் வெற்றிக்கு உதவிய 16,000 ஐ. நா. இராணுவத்தினர் நாட்டிலிருந்து வெளியேறிவிட்டாலும், கெரில்லாக்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டு தளர்வதாகவே காணப்படுகிறது. ஐ. நா. வினர் வெளியேறிய வெற்றிடத்தை ஒன்றிணைந்த கம்போடியப் படைகொண்டு நிரப்பவேண்டிய தேவையும் உள்ளது. ஆனால் கம்போடியப் படையின் செயற்திறம் போதியதாயில்லாததால் குற்றவியல் நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. திருட்டுக்கள் பெருகுகின்றன. இத் திருட்டுக்களில் கம்போடியப் படையினருக்கும் பங்குண்டு என்று பெரும்பாலான கம்போடியர்கள் நம்புகின்றனர். ஐ. நா. படையினர் விலகியதால் கம்போடியப் படைக்கான செலவினங்களும் அதிகரித்துள்ளன.

## ஆற்றுலா

எனினும் வெளிநாட்டரசுகள் அடுத்து வரும் இரு ஆண்டுகளில் ஒருகோடி டொலரை நிதியுதவியாக வழங்க முன்வந்துள்ளன. இந்த நிதியுதவியின் பெரும்பகுதி விவசாயப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே பயன்படும். இந் நிதியுதவியில் 300 மில்லியன் இதுவரை வழங்கப்பட்டுவிட்டது. தனியார் நிறுவனங்களும் இந் நிதியுதவிக்குப் பின் நின்றுதவி வழங்க முன்வந்துள்ளன. சிங்கப்பூர் விமான சேவை, கம்போடிய அரச விமான சேவைக்கென முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சேவை



இந்த ஆண்டின் நடுப்பகுதியில் இயங்கத் தொடங்கும். மேலும் 80 வெளிநாட்டுக் கம்பனிகள் தொழில் முதலீடு செய்யவும், 160 கம்பனிகள் முதலீடு செய்ய விரும்பியும் உள்ளன. இவை சப்பாத்துத் தொழிற்சாலையிலிருந்து உல்லாசப் பயணிகளுக்கான ஹொட்டல்கள் வரை எல்லாவகைக் கைத்தொழில்களிலும் முதலீடு செய்ய ஆர்வங் காட்டுகின்றன. 1960 களில் 1 மில்லியன் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வரை விஜயம் செய்ததை நினைவிற்கொண்டு கம்போடிய ஆட்சியாளரும் உல்லாசப் பயணத்தை மறுசீரமைப்புச் செய்வதனால் பொருளாதாரம் மேலோங்கும் என நம்புகின்றனர். வீதிகளைத் திருத்தியமைக்கும் முன்பே வெளிநாட்டுப் பயணிகள் ஆற்றில் உலாச் சென்று 'அங்கோ வாட்' ஆலயத்தைப் பார்வையிட அதிகாரிகள் திட்டந் தீட்டுகின்றனர்.

போர்க்காலங்களாலே விகாரமடைந்த முகத்தினை உலகக் கண்களிலே படாமல் மறைத்து வந்த ஓர் அரசு மீண்டும் சுகமடைந்து தனது வடுக்களைப் போக்குவதற்கு முயல்கின்றதன் வெளிப்பாடுகள் தாம் இவை. "தேசிய நலன் பற்றியோ, சமுதாய நலன் பற்றியோ எந்தவித உணர்வும் அற்றுப்போக வைத்த 20 ஆண்டுக்கால உள்நாட்டுப் போரின் கொடுங் கொலைகள் நிறைந்த காலம்" என்று கடந்த காலம் பற்றி றெயின்சி சொன்னார். "இப்பொழுது பெருமிதமும், பொதுச் சேவையும் சார்ந்த உணர்வு நிலவுகிறது. அதிகாரக் குழுவும், கூடிய அர்ப்பண உணர்வோடும், கூடிய திறமையோடும், குறைந்த அளவு ஊழல்களோடும் செயற்படத் தொடங்கியிருக்கிறது." பெரும்பாலான கம்போடியர் தமது தொழில்களையும், குடும்ப நலன்களையும் பேணுவதற்கு முனைகின்றனர்.

ஆனால் இன்றுள்ள கேள்வி கமரூச் புரட்சியானது நோய்வாய்ப்பட்ட அரசரின் திரும்புகைக்கு முன் மீண்டும் தலையெடுக்குமா? அல்லது, வேறு சக்தி ஏதாவது அந்த இயக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்குமா? என்பதே.

*நியூஸ்வீக், ஜனவரி 10, 1994.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு:-

# பழிவாங்கல் முதன்மை பெறும்போது....

எழுதியவர்:

— கெலின் ஃ பெடார்க்கோ —

'மொடெச்சை லப்பிட்' இன் கொலையில், யார் அவரைக் கொன்றார்கள் என்பது முக்கியமல்ல, எங்கே கொன்றார்கள் என்பதே முக்கியமாகும். ஹீப்புரொன் என்னும் மேற்குக்கரைப் பட்டினத்திற் குடியேறிய 15 பிள்ளைகளின் தந்தையான லப்பிட், தனது நான்கு பிள்ளைகளுடன் சென்ற திங்கட்கிழமை இரவு பேருந்துத் தரிப்பிடமொன்றில் நிற்கும் பொழுது, கடந்து செல்லும் மோட்டார் வாகனத்தில் இருந்து பாலஸ்தீனியத் துப்பாக்கியாளர் சுட்டதில் லப்பிட்டும், இவரது மூத்த மகனும் கொல்லப்பட்டனர். இவர்களின் உடல்கள் கிடந்த இடத்தில் இருந்து சில மீற்றர் தூரத்தில், 48 மணித்தியாலங்களுக்கு முன்னர், லப்பிட்டின் சக குடியேற்ற வாசிகள் கடந்து செல்லும் வாகனமொன்றை, காரணமேதும் இன்றி மறித்து, பிரயாணிகள் இருக்கையை நோக்கிச் சுட்டதில், பாலஸ்தீனிய மரக்கறி வியாபாரியும் 13 பிள்ளைகளின் தந்தையுமான தலால் அல் பக்கிறி கொல்லப்பட்டதன் அடையாளமாக இரத்தக்கறைகள் காணப்பட்டன. சமாதானச் சகவாழ்வு என்னும் புதிய சகாப்தத்தை, இப் பழிக்குப் பழி வாங்கல் நடவடிக்கை பகிடிக்கு இடமாக்குகின்றது.

பாலஸ்தீனியராற் கொல்லப்பட்ட யூதரின் அவலநிலை, இஸ்ரேலில் எப்போதும் கோபத்தையே விளைவிக்கும். ஆனால், இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் தீவிரவாதக் குடியேற்றவாசிகள் மீது அநேக இஸ்ரேலியருக்கு அனுதாபம் கிடையாது. பாலஸ்தீனியத் தீவிரவாதிகளைப் போன்று, தீவிரவாதக் குடியேற்றவாசிகளும் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். வேறு ஏதாவதிலும் ஒற்றுமைப்படமுடியாத இவ்விரு குழுக்களும், வன்முறைக்குத் தொடர்ந்து உயிரூட்டுவதில் வெற்றியடைந்துள்ளனர். காசாப் பிரதேசம், மற்றும் மேற்குக்கரையின் ஒரு பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகளை விலக்குவதற்கு ஐந்து நாள்களுக்கு முன்னர், பழிக்குப் பழிவாங்கும் கொலைகளைக் கட்டுப்படுத்த, அப்பிரதேசத்தினுள் மேலும் 5,000 இராணுவ வீரரைப் பிரதம மந்திரி யிற்சாக் ரபின் அனுப்பவேண்டியிருந்தது. செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்குப் பின்னர், இப் பழிக்குப்பழிவாங்கும் சுற்றில் 41 பாலஸ்தீனியரும், 11 இஸ்ரேலியரும் கொல்லப்பட்டுள்ளனர்.

**குடியேறியவர்களுக்கும் பாலஸ்தீனியருக்குமிடையே ஏற்படும் பழிக்குப்பழி வாங்கும் வன்முறை, சமாதான சகவாழ்வைக் குலைக்கின்றது**

சடுதியாக வந்த சமாதான ஒப்பந்தத்தினால், முதலிற் செயலிழந்த குடியேற்றவாசிகள் பின்னர் கடும் பதற்றம் அடைந்தனர். சென்ற வாரம் வரைக்கும், அவர்களின் பாதுகாப்பைக் கோரி விடுத்த கூக்குரல், மற்ற மக்கள் தொகையினர் மீது அவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் கொலைகள் அதிகரித்ததனால், அவர்களின் பாதுகாப்புக்குப் புதிய உத்வேகத்துடன் அரசாங்கம் செயற்பட வேண்டியிருந்தது. அதே நேரத்தில், பாலஸ்தீனியருடன் பாதுகாப்பு ஒழுங்குகளை நடைமுறைப்படுத்த, கிளர்ந்தெழும் தமது குடிமக்களை அடக்க வேண்டும் என்பதும் ரபினுக்குத் தெரியும்.

லிக்குட் கட்சி அரசாங்கங்களிற் சக்தி வாய்ந்தவர்களாகத் திகழ்ந்த குடியேற்ற வாசிகள், தொழிற்கட்சி சென்ற வருடம் ஆட்சியைக் கைப்பற்றிய பின், தமது நிலை பலமிழப்பதைக் கண்டார்கள். இவர்கள் மக்கள் தொகையின் 4 நூற்று வீதமே என்றும், எஞ்சிய 96 நூற்றுவீதத்தினரின் நலனைப் பேண வேண்டும் என்றும், ரபின் தெளிவுபடுத்தினார். அநேகர், புதிதாகத் திருமணம் முடித்த இளம் வயதினர் எனினும், பைபிளிற் கூறப்பட்ட யூத இனம் ஒருகாலத்தில் வசித்த பிரதேசத்திலேயே தாம் வசிக்கவேண்டும் என, கடும் போக்குடன் பிடிவாதமாக இருக்கின்றனர்.

அமெரிக்காவிற் குடியேறிய மதப்பற்றுள்ள மக்களால் துன்பப்படுத்தப்பட்ட அமெரிக்க யூதரே இக்குடியேற்ற வாசிகளில் மிகவும் கடும் போக்காளராகச் செயற்படுகின்றனர். 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்திற்குப் பின்னர், மேற்குக் கரையிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசாப் பிரதேசத்திலும் அமைக்கப் பட்ட 144 யூதப்பட்டினங்களின் அழிப்பின் முதற்படியே, செப்ரெம்பர் மாத ஒப்பந்தம் என ஏறக்குறைய எல்லாக் கடும் போக்காளர்களும் கருதுகின்றனர். அவர்கள் யாவரும் ஆயுதம் தரித்துள்ளார்கள். 30,000 பேர் வரையில் றைஃபிள்ஸ், மற்றும் கைத்துப்பாக்கிகள் வைத்துள்ளார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் பல குடியிருப்புக்களிற் கண்ணிகள், மற்றும் கிறெனேட்டுக்களைக் கொண்டுள்ள களஞ்சியங்களும் உள்ளன.

ஜெருசலேமுக்குத் தெற்கே உள்ள வியாபார நகரமான ஹீப்புரோன் நகரிலே தான், இரு பகுதியினரும் கடும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இங்கே 90,000 பாலஸ்தீனிய மக்கள் மத்தியில், 6,000 குடியேற்ற வாசிகள் பலமாக வேரூன்றியுள்ளார்கள். 1929 ஆம் ஆண்டு ஓர் அராபியக்குழு 60 யூதரைப் படுகொலை செய்தபின், அங்கே யூதரின் வாழ்க்கை முடிவுற்றது. ஆனால் அரசக் கொள்கையை மீறி, யூத விழாவொன்றைக் கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டு, 32 யூதக் குடும்பங்களுக்குத் தலைமை தாங்கி, றபி மோஷே லெவிங்கர் 1968 ஆம் ஆண்டு மீண்டும் பிரச்சனைக்குரிய யூத வாழ்க்கையை அங்கே தொடங்கினார். அவர்கள் திரும்பிப் போகவில்லை.

ஒரு காலத்தில், பாலஸ்தீனியப் பாதணிக்கடை உரிமையாளர் ஒருவரைச் சுட்டுக் கொன்றதற்காகப் 10 வாரங்கள் சிறையிருந்தவரான லெவிங்கர், இருவாரங்களுக்கு முன் மீண்டும் ஹீப்புரோனை, செய்தி முன்னணிக்குக் கொண்டு வந்தார். கல்லெறியும் பாலஸ்தீனிய மக்கள் கூட்டத்தினுள்ளே, இவரின் சக குடியேற்றவாசிகள் சுட்டுக்கொண்டு வீதி வழியே செல்வதையும், அந்நேரத்தில் இஸ்ரேலியப் படைவீரர் தலையிடாமல் பார்த்துக் கொண்டு நிற்பதையும், இஸ்ரேலியத் தொலைக்காட்சி காட்டியது. ஆறு பேருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

சிரியா:

## மீண்டும் சமாதான விளையாட்டில்

சென்றவாரம் ஜெருசலேமுக்கும், டமாஸ்க்கஸ்க்கும் இடையில் இரு தடவைகள் போய் வந்து போதுமான நற்செய்தியைப் பெற்ற பின்னரே வோரன் கிறிஸ்ரோப்பர் தனது மத்திய கிழக்குச் செயற்பாட்டை முடிக்கக் கூடியதாகவிருந்தது. இஸ்ரேலியருக்கும், பாலஸ்தீனியருக்கும் இடையே நடைபெறும் வன்முறையைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பினும் மத்திய கிழக்குப் பேச்சு வார்த்தைகளை, சிரியா பகிஷ்கரிப்பதை நிறுத்த முயற்சித்ததாக வியாழக்கிழமை மட்டில் அமெரிக்க வெளிநாட்டுச் செயலர் அறிவிக்கக்கூடியதாக இருந்தது.

முட்டுக்கட்டையை உடைப்பதற்காக, ஜெனீவாவில் கிளின்ரனுடன் சிரிய ஜனாதிபதி ஹஃபீஸ் ஆசாத்திற்கு ஒரு சந்திப்பு ஏற்படுத்துவதான இராஜதந்திர பழத்தைக் கிறிஸ்ரோப்பர் முன் வைத்தார். ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெறும் உச்சி மகாநாடு பெப்ரவரி மாத மட்டில் வோஷிங்ரனின் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் சிரிய அரசைச் கொணர்ந்து ஆசாத் மிகவும் விரும்பும் தனது உயர் இராஜதந்திர நிபுணத்துவத்தை வெளிக்காட்ட உதவும். அத்துடன் அரபாத்-ரபின் ஒப்பந்தத்துக்கு தனது பூரண சம்மதத்தைக் கொடுக்காத காரணத்தையும் கிளின்ரனுக்கு விளக்க ஒரு வாய்ப்பையும் கொடுக்கும்.

இஸ்ரேலிடம் ஒரு போதும் காட்டாத நல்லெண்ணத்தைச் சிரியா காட்டியதற்கு, பதிலுபகாரமாகக் கிறிஸ்ரோப்பரின் அறிவிப்பு வந்தது. 1980 களில் லெபனானில் காணாமற் போன இஸ்ரேலிய இராணுவ வீரரைப் பற்றி விசாரிக்க உதவுவதாகவும் இம்மாத முடிவில் 1,200 சிரிய யூதர் வெளியேற அனுமதி வழங்குவதாகவும் ஆசாத் உறுதியளித்தார். இச் சைகைகள் கவனிக்கப்படாமற் போகவில்லை. அடுத்த நாள் அமெரிக்க நிர்வாகம், சர்வதேசப் பயங்கரவாதத்திற்குச் சிரியா உதவியளித்ததாகவும், பல அமெரிக்க விமானங்களைக் குவைத்திலிருந்து மாற்ற அனுமதிப்பதாகவும் அறிவித்தார்.

இவ்வகையான செயற்பாடுகள் இரு நாடுகளுக்குமிடையே பதற்றத்தைத் தணிக்கலாம், ஆனால் நிலையான சமாதானத்தின் அத்திவாரம் கோலான் குன்றுகளாகும். பேச்சு வார்த்தைகளின் பின்னர் இக்குன்றைச் சிரியாவிற்குக் கையளிக்க இஸ்ரேல் இணங்கலாம், ஆனால் சமாதான ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் இரு நாடுகளுக்குமிடையே சாதாரண தொடர்புகள் ஏற்பட்ட பின்னரே ஒரு பரிசாக இக்குன்றுகள் இறுதியில் கையளிக்கப்படலாம். பதிலுக்குச் சிரியா விரும்புவது அமெரிக்காவிடமிருந்தே வரவேண்டும். கோலான் பிரதேசத்தின் இராணுவ வெளியேற்றத்தை அமெரிக்கத் துருப்புக்கள் உறுதிப்படுத்துவதும், சிரியாவை மேற்குலக நாடுகள் ஏற்பதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய்க்கிழமை இரவு, லப்பிட்டின் பிரேத ஊர்வலம் பெத்லகேம் ஊடாக ஹீப்புரோன் நோக்கிச் சென்ற பொழுது, துக்கத்திற் பங்குபற்றியவர்கள் பழிக்குப்பழி வாங்கவும், அரசாங்கத்திற்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்யவும் கூக்குரல் இட்டார்கள். பாலஸ்தீனிய மக்கள் கற்களை எறிய, பதிலுக்கு வீதி மருங்கிலும் உள்ள அராபியரின் வீடுகளின் ஜன்னல்களைக் குடியேற்றவாசிகள் உடைத்தார்கள்.

ஹீப்புரோன் நகரின் யூதச் சவக்காலையை ஊர்வலம் அண்மித்த பொழுது, மீண்டும் கற்கள் எறியப்பட, இந்தத் தடவை குடியேற்றவாசிகள் இயந்திரத் துப்பாக்கிகளாற் சுட்டார்கள்.

புதன்கிழமை காலை, 24 மணித்தியால ஊர் அடங்கு காரணமாகப் பாலஸ்தீனியக் கடைகள் பூட்டப்பட்டு, வீதிகள் வெறிச்சோடி, ஹீப்புரோன் நகரம் பதற்றத்தில் உள்ள பேய் நகரமாக மாறிவிட்டது. 32 வயதுடைய ஷாலோம் ஷாறாபி, தனது தோளின் மீது தொங்கவிடப்பட்ட யூசி இயந்திரத் துப்பாக்கியுடன், யூதரின் புற நகர்ப் பகுதியில் ஒரு கூட்டம் தவழும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்ட இடத்தில் மட்டுமே, மனிதச் சந்தடி காணப்பட்டது. பெத்லகேமில் ஒரு குடியேற்றவாசி தாக்கப்பட்டார் எனச் சடுதியாகச் செய்தியொன்று வந்தது. குளியல் அறைக்குத் தேவையான சிறிய இணைப்பு ஒன்று வாங்கும் பொழுது, யெயிர் கோகென் பாலஸ்தீனியத் துப்பாக்கியாளன் ஒருவனால் வயிற்றிற் சுடப்பட்டார். இச் செய்தியால் ஆத்திரமடைந்த ஷறாபி ''இன்று ரபின் இங்கே வருவாரானால், அவர் துரோகியெனக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படுவார்'' என்று கூறினார்.

குடியேற்றவாசிகளைப் பாதுகாக்க நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை என்று, இவர்கள் ரபின் மீது குற்றம் சுமத்துகிறார்கள். சமாதான ஒப்பந்தத்தில், பாலஸ்தீனிய மக்களுக்கு யாவும் '' நன்கொடைகளே'' தவிர, வேறொன்றுமில்லை எனக்கூறும் அவர்களின் உண்மையான தாக்கம் ஒப்பந்தம் மீதே உள்ளது. 4,000 பாலஸ்தீனியக் கைதிகளை வெளியே விடுவது, அவர்களுக்கென ஓர் இராணுவம் (அதாவது 15,000 பேரைக் கொண்ட பாலஸ்தீனியக் காவற்றுறை) மற்றும் பாலஸ்தீனிய வன்முறைக்கு பாராமுகம் ஆகியனவாகும். '' பயங்கரவாதிகள், வாகனத்திற் பாதுகாப்பாக வந்து, எங்களில் ஒருவரைச் சுடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. முன்னரிலும் பார்க்க, ஆணவம் உள்ளவர்களாகச் செயற்படுகிறார்கள்'' என, பென்சில்வேனியாவிற் பிறந்தவரும், குடியேற்றவாசிகளின் பேச்சாளருமான யெக்கீல் லெய்ற்றர் கூறுகிறார்.

இவ்வகையான மனப்பாங்கின் மத்தியில், சமாதான முயற்சியை உயிருடன் வைத்திருப்பது கடினமாகும். சென்ற வாரம் பேச்சுவார்த்தை இழுபறி நிலையை அடைந்த காரணத்தினால், வெளிநாட்டு அமைச்சர் ஷிமோன் பெறெஸ் ஐச் சந்திக்க ஸ்பெயின் நாட்டுக்கும், பின்னர் ரபின் ஐச் சந்திக்கக் கைறோவிற்கும் யாசிர் அரஃபாத் பறக்க வேண்டிய தாயிற்று. புதிய ஜெரிக்கோ வலயத்தின் பருமன், எல்லைப் போக்குவரத்தின் கட்டுப்பாடு, யூதக் குடியேற்றங்களைச் சுற்றி நிறுத்தப்பட்ட இஸ்ரேலியத் துருப்புக்களின் செயற்பாட்டு விதிகள் ஆகிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னரே, புதிய பாலஸ்தீனிய வலயங்களை விட்டு ரபின் தனது படை அணிகளை விலக்குவார்.

வன்முறைச் சுற்று நாட்டைச் சீர்குலைப்பதனால், பழைமை வாதிகளான லிக்குட் கட்சியே குடியேற்றவாசிகளின் விழிப்புக் குழு நடவடிக்கைகளைப் பகிரங்கமாகக் கண்டித்துள்ளது. ''தாமே நடவடிக்கை எடுத்தால், மக்களின் அபிப்பிராயத்தை மாற்றலாம் என எண்ணியிருந்தார்கள். அது தவறான கருத்தாகும்'' என, லிக்குட் கட்சித் தலைவர் பெஞ்சமின் நெற்றான் யஹீ கூறினார்.

கூட்டுறவிலும் பார்க்க, பழிக்குப்பழி வாங்கலிற் கூடிய நாட்டமுடையவர்கள் தவறான கொள்கையைப் பின்பற்றினாலும், தமது செய்கைகளை நிறுத்தப் போவதில்லை. ஹீப்ரோனில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில், மோட்டார் வாகனமொன்றில் இரு பாலஸ்தீனியச் சகோதரர்களின் உடல்களும், மற்றும் அவர்களின் மைத்துனர் ஒருவரின் உடலும், சென்ற வெள்ளிக்கிழமை காணப்பட்டன. லப்பிட்டின் கொலைகளுக்கு, பழி வாங்கும் கொலைகள் இவை என, ஓர் அநாமதேயத் தொலைபேசி அழைப்புக் கூறியது. சகவாழ்வைப் பற்றிச் சிந்திக்காத மக்களுக்கு சமன்பாடு எளிதாயுள்ளது. ''நான் ஹீப்புரோனில் வசிக்க முடியாதெனில், சமாதானம் இல்லை'' எனக் கூறுகிறார், குடியேற்றவாசி டேவிட் யிஸ்ரேலி.

நிருபர்கள்:- டேவிட் அய்க்மன்/ரெல் அவிவ் மற்றும் றொபேட் ஸ்லேற்றர்/ ஹீப்புரோன் / உதவியுடன்
கட்டுரையாக்கம்:- கெல்வின் ஃபெடார்கோ

ரைம், டிசம்பர் 20, 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமின்மையின் சக்தி

மீண்டும் ஒரு தடவை, முழு உலகமும் யாசீர் அரஃபாத்தை நோக்கி ஒன்று சேர்கின்றது. உண்மையான நம்பிக்கையில்லாமற் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதாக, இஸ்ரேல் அவர் மீது குற்றஞ் சுமத்துகின்றது. தான் கீறிய கோட்டில் நிற்குமாறு. ஜோர்தான் அவரை எச்சரிக்கின்றது. இவரின் பயங்கரமான எதிரிகளுக்குச் சிரியா ஊக்கம் அளிக்கின்றது. அவர் எதேச்சாதிகாரியாகச் செயற்படுகிறார் என, மிதவாதப் பாலஸ்தீனியர் குறை கூறுகிறார்கள். அவர் மிகவும் மென்மையானவர் எனத் தீவிரவாதிகள் கூறுகிறார்கள். ஒவ்வொரு நாளும் அவர் மீது அழுத்தம் அதிகரிக்கின்றது. அரஃபாத்தை வியர்வை சிந்தவைப்பதாக, சமாதானத்தில் இவரின் கூட்டாளியான இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் றபின் சென்ற வாரம் எச்சரித்தார். ''நான் வியர்வை சிந்தவில்லை'' என ரியூனிசில் இருந்து அரஃபாத் கடுமையாகப் பதிலளித்தார். தனக்கு வேண்டிய இடங்களிலெல்லாம் அரஃபாத், எதிரிகளைச் சரியாக வைத்துள்ளார். நீண்டு நிலைத்திருக்கக்கூடிய தந்திரமானவர் என்பதிலும் பார்க்க, பலமின்மையையும் ஓர் ஆயுதமாகப் பாவித்து, நிலைமையைத் திறமையுடன் கையாளக்கூடிய முன்னாள் குத்துச்சண்டை வீரர் முகம்மது அலி குத்துச்சண்டை அரங்கிற் கயிற்றின் மீது சாய்ந்து எதிரியை ஏமாற்றுவது போல், தோல்வியடையுந் தறுவாயில் அரஃபாத் மிகத் திறமையாகச் செயற்படுவார்.

அரஃபாத்திற்கு நிலமில்லை; நாடில்லை; மற்றும் உண்மையான இராணுவமுமில்லை. இவ்வகையான நெம்புகள் இல்லாவிடினும், காசாப் பிரதேசத்திலும், ஜெரிக்கோவிலும் பாலஸ்தீனியச் சுயாட்சியை அமைக்கும் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளில் திறமையாகச் செயற்பட்டுள்ளார். வரும் நாள்களில், மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்க இருக்கின்றன. தனக்குத் தேவையானவற்றைப் பெறாவிடின், ஹமாஸ் இயக்கத்திலுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் தன்னை அமுக்கிவிடுவார்கள் என எச்சரிக்கின்றார். தனது கௌரவத்தை முன்வைத்து, தான் ''ஜெரிக்கோவின் மேயர்,'' அல்லது 'ஒரு பந்துஸ்தானின்' தலைவராக இருக்க முடியாது என உறுதிபடக் கூறுகிறார். தனது பேரால், மற்றவர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மீறவும் பின்நிற்க மாட்டார். மிகப் பிந்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர், தனது பிரதிநிதிகளால் எட்டப்பட்ட புரிந்துணர்வை மறுத்து, பெரிய திருத்தங்களைச் செய்யும்படி அரஃபாத் நிர்ப்பந்தித்தார்.

**மத்திய கிழக்கு:-**

**தோல்வியடையும் தறுவாயில் அரஃபாத் மிகத் திறமையானவராக உள்ளார்.**

சென்ற செப்ரெம்பர் மாதம் வோஷிங்ரனில் அரஃபாத்தும் றபினும் கைகுலுக்கி முடிவுக்குக் கொண்டு வந்த கட்டமைப்பு உடன்படிக்கையில், காசா மற்றும் ஜெரிக்கோப் பிரதேசங்களிலிருந்தும் இஸ்ரேலியரின் வெளியேற்றத்திற்கு மிகையாக, பாலஸ்தீனியருக்கு வாக்குறுதியொன்றும் அளிக்கப்படவில்லை. வெளிப்பாதுகாப்பு, தன் வசமேயிருக்கவேண்டும் என இஸ்ரேல் வற்புறுத்துகின்றது. அத்துடன் பாலஸ்தீனியச் சுயாட்சிப் பிரதேசங்களிலிருந்து வருவோர், போவோரைக் கண்காணிக்கும் உரிமையையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் வற்புறுத்துகின்றது. ஆனால், அரஃபாத் சலுகைகளைப் பிடுங்கிக்கொண்டேயிருக்கின்றார். பாலஸ்தீனியர் எல்லையைக் கடக்



பாலஸ்தீனியர் தமது தோழர் ஒருவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சந்திப்புக்களிற் பிரசன்னமாயிருக்க, இஸ்ரேலியர் அனுமதித்திருக்கிறார்கள். அரஃபாத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள், பயங்கரவாதிகளைத் துரத்திப் பிடிக்கும் உரிமையை இஸ்ரேல் வற்புறுத்த மாட்டாது என ரபின் கூறுகிறார். ஆனால், அவ்வேலையைப் பாலஸ்தீனியக் காவற்றுறையினர் செய்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. வேறு ஒரு முக்கிய விடயத்தில், அதாவது ஜெரிக்கோவைச் சுற்றியுள்ள சுயாட்சிப் பிரதேசத்தின் பரப்பை, முன்பு கையளிக்க ஒப்புக்கொண்ட பரப்பிலும் இரு மடங்கு, ஏறக்குறைய 54 சதுர கிலோமீற்றர் (21 சதுர மைல்கள்) கொடுப்பதாக இஸ்ரேல் கூறுகின்றது. அரஃபாத் மூன்று இலக்கப் பரப்பிற்கு வாதாடுகிறார்.

பி. எல். ஓ தலைவருக்குத் தொடர்ச்சியாக ருசியான உணவுத் துண்டுகளை எறிவது போல், சென்ற வாரம் 101 அராபியக் கைதிகளை இஸ்ரேல் விடுவித்தது. ஒரு காலத்தில் இஸ்ரேலிய மக்களால் கற்பனை கூடப் பண்ணமுடியாத ஒரு விடயத்தை, இஸ்ரேலிய அதிகாரிகள் மக்களுக்கு விளக்க முயற்சி எடுக்கிறார்கள். ''இடைக்கால நிர்வாகத்தின் பின் அமைக்கப் படும் சுயாட்சி அமைப்பு, ஒரு சுதந்திர அமைப்பாக அல்லது, பாலஸ்தீனிய அரசாக மாறும் சாத்தியக்கூறுகளை நாம் தட்டிக்கழிக்க முடியாது'' என சென்ற வாரம் விவசாய மந்திரி யாக்கோவ் ரிசூர் குடியேற்றவாசியினரை எச்சரித்தார்.

பாலஸ்தீனியச் சுதந்திரத்தை அரஃபாத் வற்புறுத்துவது, அவரின் அரேபிய நண்பர்களுக்குக் கவலையை உண்டாக்குகின்றது. கிழக்கிலிருந்து, ஜெரிக்கோவிற்குச் செல்லும் பாதையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஜோர்தானின் அரசர் ஹுசேன், அரஃபாத்திற்கு ஓர் இறுதி எச்சரிக்கையை அண்மையில் விடுத்தார். அம்மான் உடன் ஒத்துழைக்கவும், அல்லது வேறுபல அம்சங்களுடனும் மேற்குக் கரையில் மீண்டும் ஜோர்



தான் வங்கிக்கிளைகளைத் திறக்க அனுமதி வழங்கவும், பி. எல். ஓ அதிகாரிகள் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றிற் கையொப்பமிட்டு நெருக்கடியைத் தவிர்த்தனர். இப்பிரதேசத்தில், தானே மிகவலுவுள்ளவர் எனக்கருதும் சிரிய ஜனாதிபதி ஹாஃபீஸ் ஆசாத், அரஃபாத்தின் மீது வெறுப்படைந்து,

## எதிரிகளிற் சிறந்தவர்கள்

அரஃபாத், எல்லாத் திசைகளிலிருந்தும் தாக்கப்படுகிறார்.

மிகத் தீவிரமான விமர்சகர்கள்:

யிற்சாக் ரபின், பல மாதங்கள் நடந்த பேச்சுவார்த்தையின் பின்னர், அரஃபாத்தின் நழுவும் போக்கால், இஸ்ரேலியப் பிரதமர் ஆழமாக விரக்தியடைந்துள்ளார்.

மன்னர் ஹுசேன், ஜோர்தானின் மன்னர், மேற்குக் கரையை இழந்தார். இப்பொழுது, அரஃபாத் தலைமை தாங்கும் ஒரு பிரதேசத்தின் மீது, தனது ஆதிக்கத்தை இழப்பதிற் கவலை கொண்டுள்ளார்.

ஹஃபீஸ் ஆசாத், இப்பிரதேசத்தில், தானே பெருந்தலைவர் என சிரிய ஜனாதிபதி கருதுகின்றார். தனது அனுமதியில்லாமற் சமாதான உடன்படிக்கை செய்ததற்காக, அரஃபாத் மீது கோபமுற்றிருக்கிறார்.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்தப் பலகாலமாக முயற்சித்து வருகிறார். தனது அனுமதியில்லாமற் செய்யப்பட்ட பி. எல் ஓ இஸ்ரேலிய ஒப்பந்தத்தினாற் கோபம் அடைந்துள்ளார். பி. எல். ஓ வில் உள்ள அரஃபாத்தின் எதிரிகளை வரவேற்று, தான் இஸ்ரேலுடன் ஓர் ஒப்பந்தம் செய்யும் வரைக்காவது, அரஃபாத் இஸ்ரேலிய ஒப்பந்தத்தைப் பலமாக விமர்சிக்க அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்துள்ளார்.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் பாலஸ்தீனிய மக்களே, இந்த நாள்களில் அரஃபாத்தின் எதிரிகளாயுள்ளனர். இவர் ஓர் எதேச்சாதிகாரியாக மாறுகின்றார் என அவர்கள் விசனப்படுகிறார்கள். இவரின் எதேச்சாதிகார வழிமுறைகளை எதிர்த்து, அண்மைக்காலங்களில் இப்பிரதேசங்களில் வசிக்கும் பி. எல் ஓவின் ஃபற்ராஹ் பிரிவின் உயர் அங்கத்தவர்கள் விலகி விட்டனர். பி. எல். ஓ விற் கூடியளவு ஜனநாயகம் வேண்டுமெனக் கோரி பலராலும் மதிக்கப்படும் மதத்தவரான ஹைதர் அப்டெல் ஷாஃபி தலைமையில் ஒரு குழுவினர் ரியூனிசுக்குச் சென்றனர். பி. எல். ஓ தலைமைத்துவம், ஒழுங்கற்ற முறையில் உடனுக்குடன் தட்டுத்தடுமாறிச் செயற்படுவதாக, 118 முன்னணிப் பாலஸ்தீனியப் பிரமுகர்களாற் கையொப்பமிடப்பட்ட விஞ்ஞாபனம், இக்குழுவினாற் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நாள்களில் ரியூனிஸ் இல் அமைந்துள்ள பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைமையகத்தில் நடைபெறும் விவாதம், நிதி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதே அரஃபாத்தின் விருப்பமாகும். ''அவர் காவற்றுறை, சுங்கத்துறை, விமானநிலையத்தில் இறங்கும் உரிமை போன்றவற்றைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். ஆனால், நிதி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை அனுமதிக்கமுடியாது'' என அவரின் விமர்சகர் ஒருவர் கூறுகிறார். முதல் வருடத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவது நாட்டின் தலைவர், பொருளாதாரக் கட்டுப்பாட்டைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கவேண்டும். பொருளாதாரத்தை நெறிப்படுத்துபவரே, எதிர்காலத்தின் கொள்கையையும் நெறிப்படுத்துவார் என, அரஃபாத்தின் ஆதரவாளர் ஒருவர் கூறுகின்றார்.

அரஃபாத்தை வெளியேற்ற, சீர்திருத்தவாதிகளும் இன்னும் ஆயத்தமாகவில்லை. ''அவரின் இடத்திற்கு வேறொருவரும் இல்லை'' என, மேற்குக்கரையின் முன்னணிச் சீர்திருத்தவாதி காஸான் அல் காரிப் கூறுகிறார். கர்சாவிலும், ஜெரிக்கோவிலும் அரஃபாத் தனது கொடியை நாட்டவேண்டும். இன்னும் சிலகாலத்திற்கு, அரசியற் கயிற்றில் இறுக்கமாய்ப் பிடித்துக் கொள்வார் போல் தோன்றுகின்றது. அந்த நிலையில், பழைய கெரில்லா தனது சூழ்ச்சிகள் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டிவரும். பாலஸ்தீனிய மக்கள் எதிர்பார்க்கும் புதிய நாடொன்றின் கருவுக்கு, இரகசிய இயக்கமொன்றின் மத்திய செயற்பாடுகளான நிதியை இரகசியமாகப் பேணல்; திறமையிலும் கூடுதலாக, விசுவாசத்திற்குப் பரிசு வழங்கல் போன்றவை பொருத்தமாயிருக்கமாட்டா. இஸ்ரேலில், பலவருடங்களாகத் தன்னிச்சையாக இல்லாமல் இஸ்ரேலிய மக்களுடன் சேர்ந்து வாழ்ந்த பாலஸ்தீனிய மக்கள், தமது தலைவர்களிடமிருந்து தந்திரத்தையும், விநோதமான நெகிழ்ச்சியையும் மட்டும் எதிர்பார்க்கவில்லை. ''நாம் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன, சட்டத்திற்கும், ஜனநாயகத்திற்கும் அமைவாக நடக்கும் நாடொன்றின் மக்களுடன், எமது மக்கள் மிக அண்மையில் வாழ்ந்துள்ளார்கள் என, மேற்குக்கரைப் பத்திரிகையாளர் தாவூத் கட்டாப் கூறுகின்றார். இறுதியில், தமது மக்களிலே தனக்குச் சமமானவனை அரஃபாத் சந்திக்க நேரிடலாம்.

— எழுதியவர்கள்: —

ஜெருசலேமிலிருந்து
ஜெஃப்றி பா(ர்)த்தலெ,
மற்றும் ரியூனிஸ் இல் இருந்து
கிறிஸ்ரோப்பர் டிக்கி.
நியூஸ்வீக் ஜனவரி 17 1993.

# இடம் பிடிக்கத் துடிக்கும் அண்ணன்

## முர்ராஜா பூட்டோ, அரசியல் அதிகார விளையாட்டு நடாத்துகிறார்.

பாகிஸ்தானின் தலைமைக் குடும்பத்திற்குச் சிறைவாசம் வெகுவாகப் பழக்கப்பட்டதாக உள்ளது. பிரதமர் பெனாஸீர் பூட்டோ, அவருடைய தாய் நுஸ்றற், தந்தை சுல்பிகார் அலி பூட்டோ ஆகிய அனைவரும் சிறையிலிருந்துள்ளனர். தந்தையார், சிறையிலிருந்தது மட்டுமல்லாமல், அங்கேயே தூக்கிலிடப்பட்டுச் சாகவைக்கப்பட்டார். இப்பொழுது பிரதமரின் சகோதரர் மீர் முர்ராஜா பூட்டோ (39) அவர்களுடைய வழியைப் பின்பற்றுகிறார். சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்ஸில் 16 ஆண்டுகள் தஞ்சம் பெற்று இருந்த அவர் சென்ற நவம்பர் 5 ஆந் திகதி கராச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அதற்கு அடுத்த நாள் அவர் அல் சுல்பிகார் அமைப்பு என்ற மறைமுகமான கெரில்லாக் குழுவுக்குத் தலைமைதாங்கிய குற்றச்சாட்டின் பேரில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றின் முன்பு நிறுத்தப்பட்டார். 1981 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அனைத்துலக விமானச் சேவையின் விமானமொன்றைக் கடத்திய சம்பவத்திலே சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானியக் கடற்படைப் படகுகளின் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பாக அடுத்த குற்றச்சாட்டு உள்ளது. தான் செய்தவை அனைத்தும் சட்ட முறைப்படி அமையாத ஜெனரல் ஜியா உல் ஹக்கின் ஆட்சிக்கு எதிராகவே செய்யப்பட்டன என்று முர்ராஜா சொல்கிறார். நுஸ்றற் முழுமையாகத் தன் மைந்தனின் பின்னால் நிற்கிறார். ஆனால் சகோதரியான பிரதமரோ நடு நிலைமை வகிக்கிறார். முர்ராஜாவுக்கும் அரசியல் இலட்சியங்கள் உள்ளன. சென்ற ஆண்டு ஒக்ரோபரில் நடந்த பொதுத் தேர்தலில் தனிப்பட்ட வேட்பாளராகப் போட்டியிட்ட அவர் சிந்து மாகாண ஆட்சி மன்றில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சில அவதானிகளின் பார்வையில் அவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைமைத்துவத்திற்காகத் தனது சகோதரிக்கு எதிரான போட்டியாளர் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோவின் நூறாவது பிறந்த நாள் விழாக்கள்

சீனத் தலைவர் மாவோவின் நூறாவது பிறந்த தினம் இவ்வருடம் ஜனவரி மாத நடுப்பகுதியில் கொண்டாடப்பட்டது. இன்றைய சீனாவின் பிதாமகர் என்ற பெருமை அவருக்கு உண்டு. புது யுகத்திற்கு வழிகாட்டியவர் மாவோ. இன்றைய சீனாவின் சிற்பி என்று இவரை வர்ணிப்பது மிகவும் பொருத்தம். நூறாவது பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு மிகவும் பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஹூனான் மாகாணத்தில் அவர் பிறந்த கிராமம் திடீர் முக்கியத்துவம் பெற்றதில் அதிசயமொன்றுமில்லை. கொண்டாட்டங்களின் மையம் இக்கிராமம் என்றால் மிகையாகாது. ஆனால் பத்திரிகைகளிலும், அவர் உருவம் பதித்த நினைவுப் பொருள்களிலும் 1930 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்ட அவருடைய புகைப்படமே பாவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்போதைய தலைமுறைக்கு மாவோ மிகவும் இளையவராகவும், தோற்றம் பொலிவுடையவராகவும் காட்சி தருகின்றார். அவருடைய எண்ணங்களும், கனவுகளும் என்றும் இளமை வாய்ந்தவை, காலத்தை வென்றவை என்பதைக் காட்டுவதாக இருக்கின்றன. பலகோடிச் சீன மக்களுக்கு அந்நிய ஆதிக்கத்தை தூக்கியெறிந்த ஒரு வலுவான சின்னமாகவே மாவோ காட்சியளிக்கின்றார். சீனாவின் சுபீட்சம், நல்ல எதிர்காலம் யாவும் மாவோவின் கைங்கரியம் என்று மக்கள் பூரணமாக நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கையுடன் மக்கள் திருப்திப்பட்டால் போதும், மாவோ 27 வருடங்கள் அதிகாரத்தில் இருந்தவர், புரட்சிவாதியாக, அதிகாரத்தை இலக்குவைத்துப்போராடும் பொதுவுடைமைவாதியாக இருந்த காலத்தில் கொண்ட எண்ணக் கோர்வைகளை மாவோ தன் வாழ்நாளில் மாற்றமுடியவில்லை. முடிவில்லாத வர்க்கப்போராட்டம், பின்தங்கிய பொருளாதாரம் இவை அவர் சீனாவுக்கு விட்டுச்சென்ற முதுசம் என்று சொல்ல இடமுண்டு. நசுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரம் என்றாலும் சீனாவை உலக அரங்கில் இருபதாம் நூற்றாண்டின் பிரஜையாக அவர் வைக்கத் தவறிவிட்டார் என்பதே உண்மை வரலாறு. இந்த வேலையை, திருத்தவேலை என்றே சொல்லவேண்டும். செய்தவர் டெங் கியோ பிங். ஆனால் இவரால் கூட மாவோவைத் தூக்கியெறிய முடியாது. மாவோவின் பேரிலேயே பாரிய பொருளாதார மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. சீனாவின் வாழ்வில் மாவோ வலுவாக வேரூன்றி விட்டதே இதன் காரணம். மாவோவின் பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் புதுப் புது அர்த்தங்களைக் கண்டுபிடித்து நாட்டில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சீனாவின் புதிய தலைவர்களுக்கு உண்டு. எத்தனை சித்தாந்த நெளிவுகள் நிகழ்ந்தாலும், யாவும் மாவோவின் அனுக்கிரகம் என்பதே சீனக் கற்பனை. மேற்கு உலகுக்கு நிகரான ஜனநாயக வாதியாகவும், எதிர்காலத்தில் மாவோ காட்சி தந்தால் சீன மக்கள் ஆச்சரியப்படமாட்டார்கள்,

கொண்டாட்டங்களின் ஒரு பிரதான அங்கம் மாவோவின் அரசியல் அல்லாத பல்வேறு திறமைகளை வெளிக்கொணர்தல் அவர் ஒரு சீன மொழிப் புலவர்; சீன இனத்தவரின் புராதன உணவுப் பிரியர்; ஆகையால் பல சீன நகரங்களில் அவருடைய ஆக்கங்கள் அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டன. அவருடைய சிந்தனைகள் சீர்தூக்கி ஆராயப்பட்டன. அவர் விரும்பி உண்டு களித்த சோயா அவரையில் செய்த உணவுகள், பன்றி மாமிசத்தில் செய்யப்பட்ட விதம்விதமான நளபாகங்கள் யாவும் உணவகங்களில் அவருடைய பெரிய படங்களுக்குக் கீழ் விற்பனைக்கு விடப்பட்டிருந்தன. அவர் காலத்தில் பிடிக்கப்பட்ட ஆவண ரீதியான திரைப்படங்கள் மீண்டும் திரையரங்குகளில் காட்டப்பட்டன. அவரை அறிந்தவர்கள், அவருடன் கடமையாற்றியவர்கள், சமகாலத்தவர்கள் எல்லோரும் கௌரவிக்கப்பட்டனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவர்கள் பங்குபற்ற வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டன.

சீனாவின் பொருளாதார மலர்ச்சி கசப்புணர்வுகளை மறக்கச் செய்துள்ளது. அவருடைய செயற்பாடான கலாசாரப் புரட்சியால் பள்ளிக்குச் செல்லாமல் கட்சி வேலைகளில் காலத்தைப் போக்கிய சில முன்னாள் மாணவர்கள் இன்று மனம் வருந்துகிறார்கள். ஆனால் மாவோவைத் தூற்ற மறுக்கிறார்கள். தாம் இழந்த இளமைக் காலத்தை நினைத்தே பெருமூச்சு விடுவதாக உணவகம் ஒன்றை நடத்தும் குனியன் என்னும் 46 வயதினர் கூறுகிறார்: ''தான் பரிமாறும் உணவுகள் போல மாவோவின் ஞாபகம் பலதரப்பட்டது. சில இனிப்பவை. இன்னும் சில கசப்புத் தருபவை. கண்ணீரை வரவழைக்கும் நினைவுகளும் உண்டு'' என்கிறார் குனியன்.

எழுதியவர் : ஸ்ரீபன் ஸ்ராசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா :-

## அதிதீவிரமாய்ப் பரவும் காட்டுத்தீ, சிட்னி நகரை அச்சுறுத்தி, ஒரு மில்லியன் ஏக்கருக்குக் கூடுதலாக அழித்தது,

# நியூ சவுத் வேல்சில் கரும் வெள்ளி



பயங்கரக் காட்டுத் தீ: முண்டெழும் சுவாலை ஆயிரக் கணக்கான மக்களை தப்பியோடத் தூண்டியது.

கரும் வெள்ளி என்று தெரிய வரக் கூடிய ஒரு நாளில், வட சிட்னியின் அமைதியான புற நகர்ப் பகுதியைத் தீச்சுவாலைகள் அடைந்தன. 24 மணித்தியாலங்களில், அவுஸ்திரேலியாவின் சனத்தொகை கூடிய நகரைநோக்கி, வடக்கு, தெற்கு மற்றும் மேற்குத் திசைகளிலிருந்து நெருப்புச் சுவர்கள் போன்றெழுந்த தீயின் நாக்குகள், நகரத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு முன்னேறிவிட்டன. புற நகரில் தமது வீடுகளைக் காப்பாற்ற, துணிவுள்ள மக்கள் சிலர், நீர் நிரப்பிய வாளிகளையும், தோட்டத்திற்கு நீர் பாய்ச்சும் குழாய்களையும் எடுத்து ஆயத்தமாகி விட்டனர். இராட்சத வாளிகள் மூலம், கடற்படை உலங்கு வானூர்திகள் நீரைப் பொழிந்தன. ஒரு பலனும் ஏற்படவில்லை. பாதுகாப்புத் தேடிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு ஓடி, வீதிகளிற் குழப்ப நிலையை ஏற்படுத்தினர். அவுஸ்திரேலியாவின் அண்மைக்கால வரலாற்றில், மிகப் பயங்கரமான காட்டுத்தீ நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தின் ஒரு மில்லியன் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பரப்பைக் கருக்கி, கண்டத்தின் கிழக்குக்கரை வழியே 750 மைல் தூரத்தைக் கடந்தது. 150 வீடுகளை அழித்து, எரிகாயங்களுக்குள்ளானதாலும், புகையைச் சுவாசித்ததாலும் நூற்றுக்கணக்கானோர் வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. வீழ்ந்த மரங்களில் அகப்பட்டு இறந்த இரு தீ அணைப்போர் உட்பட, நால்வர் இறந்தனர். தீ இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை ஆனால், வார முடிவிற் காற்றில் ஏற்பட்ட திசைமாற்றமும், வெப்பநிலை வீழ்ச்சியும் தீயணைக்கும் படையினருக்கு ஆறுதலைக் கொடுத்தன. இரண்டு, அல்லது மூன்று நாள்களுக்கு வானிலை இவ்வாறு இருக்குமாயின், மாநிலத்தின் தீ முழுவதையும் அணைக்கலாம் என, மாநிலத்தின் தீ அணைக்கும் சேவைப் பகுதித் தலைவர் பில் கொப்பபேக் கூறினார்.

புது வருட நாளுக்குப் பிந்திய காலப்பகுதியில், காட்டுத் தீ முதலாவதாகத் தோன்றியது. 104 பாகை ஃபரன்கைற் கோடைகால வெப்பநிலையில், காய்ந்த பற்றைகள் மற்றும் புதர்கள் எரிவதனாலும், உயர் வேகக் காற்றினாலும் உந்தப்பட்ட பலமைல் அகலமான மதில் போன்ற தீச்சுவாலை, மணிக்கு 30 மைல் வேகத்திற் கிழித்துக் கொண்டு வந்தது. காய்ந்த யூக்கலிப்ரஸ் மரங்கள், பெரிய தீப்பிழம்புகளாக வெடித்துச் சிதறின. 7,000 தீயணைப்போரும், மற்றும் இராணுவ வீரரும், கரையோரப் பாதுகாவலரும் தீயை அணைக்க அழைக்கப்பட்டனர். சிட்னிக்கு வடக்கேயும், தெற்கேயும் பிரதான வீதியையும், சிட்னி - பிறிஸ்பேன் புகையிரதப் பாதையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிக் கொண்டு, வீதிகளையும் மற்றும், தீயைத் தடுக்கும் முகமாக விடப்பட்ட இடைவெளிகளையும் தாண்டி, தீ முன்னேறியது. படகுச் சொந்தக்காரர் தீயிலிருந்து தப்புவதற்காக, படகுகளைச் செலுத்திக் கொண்டு சிட்னித் துறைமுகத்துக்குள் சென்று விட்டனர். நகரை மூடி மறைக்கும் புகை மண்டலத்தையும், துறைமுகப் பாலத்தைத் தீ ஒளியேற்றுவதையும் புகழ்பெற்ற இசைநாடக அரங்கின் வெண்ணிற ஓட்டின் மீது செம்மஞ்சள் நிறம் பிரகாசிப்பதையும், அங்கிருந்து அவர்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

150 வெவ்வேறு காட்டுத் தீயின் வகை எண்ணப்பட்டன வென்றும், அவற்றில் அரைவாசி வரை வேண்டுமென்றே தொடக்கப்பட்டவையென்றும், அதிகாரிகள் சந்தேகப்பட்டனர். இவற்றைத் தொடக்கியவர்களைக் கைது செய்யத் தகவல் தருவோருக்கு, 100, 000 அவுஸ்திரேலிய டொலர்கள் (68, 000 அமெரிக்க டொலர்கள்) சன்மானம் தருவதாக அவர்கள் அறிவித்தார்கள். நூற்றுக் கணக்கானோர் சிட்னிக் காவற்றுறையினருக்குத் தகவல் கொடுத்து, 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். டசின் கணக்கான புறநகர் வீடுகளை எரித்த, தீயுடன் தொடர்புடைய 13 வயதுச் சிறுவனும், அவர்களில் ஒருவனாகும். சந்தேக நபர்கள் 20 வருடங்கள் வரைச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடலாம்.

வாரமுடிவுமட்டில் தீ அணைப்போர், சொத்துக்களைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு, மக்கள் உயிர்களைக் காப்பாற்றுவதில் கவனஞ் செலுத்தினார்கள். பறக்கும் தீக்கொள்ளிகளும், வேண்டுமென்றே தீ வைப்போரும், புதிய தீ வைப்புக்களைத் தொடக்கிக் கொண்டிருந்தார்கள். வீடுகளுக்கு வெளியே நெருப்பு எரிப்பதை, அதிகாரிகள் தடைசெய்தனர். வீடுகளை விட்டு வெளியேற மறுத்த குடியிருப்பாளருடன், அவசரக் கால மீட்பு அதிகாரிகள் பலத்த விவாதத்தில் ஈடுபட நேர்ந்தது. எரியும் பகுதிகளைத் தடைசெய்து, காவற்றுறையினர் வீதித் தடைகளை ஏற்படுத்தினர். அவற்றின் ஊடாக மோட்டார் வாகனங்களைச் செலுத்த, சாரதிகள் முற்பட்டனர்.

தீயினால் ஒளியேற்றப்பட்ட நியூசவுத் வேல்சின் காட்சி, நவம்பர் மாதம் தென் [கலிபோர்னியாவிற் பரவி, நூற்றுக்கணக்கில் வீடுகளை அழித்த தீயை நினைவூட்டியது. பருவகாலங்களில், காய்ந்த பற்றைகளில் வழமையாக ஏற்படும் தீயை வேண்டுமென்றே வளர்த்து இரு சந்தர்ப்பங்களிலும், ஒரு சகாப்த அழிவைச் சமூகத்துரோகிகள் ஏற்படுத்தினார்கள் எனத் தோன்றுகின்றது. சூழற் பாதுகாப்போரின் அழுத்தம் காரணமாக, தேசியப்பூங்காக்களிலும், காடுகளிலும் கீழ் வளரிகள் அகற்றப்படாத காரணத்தால், அவை இலகுவாக எரியக்கூடிய நிலையில் உள்ளன என, விவசாயிகள் முறையிடுகிறார்கள். காரணம் யாதாயிருப்பினும், சிட்னியை அச்சுறுத்தும் தீச்சுவாலை, கலிபோர்னியத் தீயிலும் பார்க்கக் கூடிய அழிவை மிக விரைவாகச் செய்கின்றது போல் தோன்றுகின்றது. ''நகரின் புறநகர்ப்பகுதிகள் எரிகின்றன; மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இது ஒரு பேரழிவாகும்'' என, காட்டுத் தீ அணைப்புச் சேவைப் பணியக அதிகாரி அலன் நப்பியர் கூறுகின்றார்.

## வளைகுடா யுத்தம்:- ''ஸ்கட்ஸ்'' ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை, ஓர் ஏமாற்றுதலாகும்.

முன்பு கூறியது போல், அமெரிக்காவின் ''பற்றியொற்'' ஏவுகணைகள், ஈராக்கின் ருஷ்யத் தயாரிப்பான ''ஸ்கட்ஸ்'' ஏவுகணைகளைத் தவறாமல் தாக்கி அழிக்க வல்லவை அல்ல என்று, ஈராக்கிற்கு எதிராக நடத்தப்பட்ட யுத்தத்தின் பின்பு அமெரிக்க ஐங்கோணச் செயலகம் கூறுகிறது. ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு நேர்காணலில், இரண்டு முன்னாள் இஸ்ரேலியப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இவ்வாறு கூறியுள்ளனர். மொஷி அறன்ஸ், ஜெனரல் டான் ஸொம்றொன் ஆகிய அந்த இரண்டு அதிகாரிகளும் ''பற்றியொற்'' ஏவுகணைகளால், ஒரு ''ஸ்கட்'' ஏவுகணையைக் கூட முழுமையாகச் சுட்டு வீழ்த்த முடியவில்லை என்று கூறுகின்றனர். ''நியூஸ் வீக்'' சஞ்சிகைக்குக் கிடைத்த ஒரு தகவலின் படி, இரகசியமாக இஸ்ரேலிய விமானப்படை நடத்திய ஓர் ஆய்விலிருந்து இது தெளிவாகத் தெரியவந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. ''பற்றியொற்'' ஏவுகணைகள், இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்ட ''ஸ்கட்ஸ்'' ஏவுகணைகளை இடை மறிப்பதில் 20 வீதம் செயற்பட்டதாக, தாம் 11.2.91 அன்று, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்ஸுக்குக் கூறியதாக அறன்ஸ் சொன்னார். அதற்கு 4 நாள்களுக்குப் பின்பு புஷ், ஐங்கோணச் செயலகத்தில் இருந்து கிடைத்த புள்ளி விபரங்களை ஒப்பித்து ''பற்றியொற்'' ஏவுகணைகளின் செயற்றிறன் அநேகமாகச் சரியான நிலையில் உள்ளதாகக் கூறினார். இப்பொழுது அமெரிக்கப் படை, இஸ்ரேலில் ''பற்றியொற்'' ஏவுகணைகளின் செயற்றிறன் 40 வீதம் அளவு இருந்ததாகச் சாதித்துக் கொண்டு உள்ளது. ''ஸ்கட்ஸ்'' ஏவுகணைகளை வானில் எதிர்த்து முட்டி வீழ்த்திப் பாலைவனத்துள் தள்ளுவதாகச் சொன்ன கதைகள் என்னவாகின?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக் கூட்டத்திலிருந்து அமைதியான குடிமக்களாக மாறுவோர்

**துருக்கியில், குர்டிஷ் மக்கள், சுதந்திர அரசு அமைத்திடக் காணும் கனவானது அங்கு இரத்த ஆற்றினை ஓட வைக்கும் கொடிய போராக உருவெடுத்துள்ளது.**

எப்பொழுதும் சச்சரவிடும் ஒரு மலைவாழ் மக்கள் கூட்டத்தின் போட்டி அவலக்குரல், 400 ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்தது போலவே, இன்றும் ஒலித்த வண்ணம் இருக்கிறது. பிரான்ஸின் போபோனியர் போலவே, குர்டிஷ் இனத்தினர் தங்களின் நீண்ட, துயர் நிறைந்த வரலாற்றிலிருந்து எந்த ஒரு பாடத்தையும் படித்துக் கொள்ளவில்லை என்றே தோற்றுகிறது. இவர்கள், எப்பொழுதும் தங்களுக்கிடையிலே இரத்தம் சிந்தும் சண்டைகள் புரிபவர்களாயும், குலக்குழு விரோதங்களில் ஈடுபட்டுக் குழப்பம் விளைவிப்பவர்களாயும் இருந்து கொண்டே, துருக்கியர், அராபியர், பாரசீகர்களால் நசுக்கப்படுவதாகவும் உணர்கின்றார்கள். ஆனால் அரசுகளோ, இவர்களுக்கு எப்பொழுதும் நேசக்கரம் நீட்டுவதாகவே சொல்லிக் கொள்கின்றன. தென் கிழக்குத் துருக்கியிலிருந்து, சிரியா வரை நீண்டு கிடக்கும் மலைகளின் தொடர், சிரியா, ஈராக், ஈரான் ஆர்மீனியாவின் ஒரு பகுதிக்கூடாக அமைந்துள்ளது. அந்த மலைப்பிரதேசத்தில் வாழும் இம்மக்களின் நாடு, 'எவரையும் மதிக்காதது' என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. இது, இவர்களின் பாதுகாப்பரண் அமைந்ததும், அந்நியரால் விலக்கப்பட்ட பிரதேசம் எனக் கொள்ளத் தக்கதுமாய், இயற்கை வளங்கள் மலிந்து 3,000 ஆண்டுகளுக்கு மேலாகச் சுதந்திர நாடாக உள்ளதுமாய் பரபுவழிக் கதைகள் மூலம் அறியக்கிடக்கின்றன. பல நூற்றாண்டுகளாய்க் குர்டிஷ் இனத்தினர், தங்களை ஆள்வோருக்கு எதிராகக் கிளர்ச்சிகளை நடத்தி வந்துள்ளனர். கடந்த எழுபதாண்டுகளில் மட்டும், இவர்கள் எழுபது தடவைகள் துருக்கியருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருக்கின்றனர், ஆனால், இந்தக் கிளர்ச்சிகள் மிகக் கடுமையான முறையில் அடக்கப்பட்டன. இது போன்றே ஈராக்கினதும், ஈரானினதும் ஆட்சியைக் கவிழ்க்க முனைந்து, துருக்கியரால் ஒடுக்கப்பட்டது போலவே ஒடுக்கப்படும் விதிக்குள்ளாயினர்.




இந்தத் தடவை. நிலைமை முற்றிலும் வேறாகியுள்ளது ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள், துருக்கியின் தென் மேற்கு மூலையில் ஒன்பதாண்டுகளுக்கு முன்பு தொடங்கிய எதிர்ப்பு நடவடிக்கைகள், கடந்த பன்னிரண்டு மாதங்களிலே 10 தொடக்கம் 20 மாகாணங்கள் வரை மிகத் துரிதகதியிற் பரவி முழுமையான போராக உருவெடுத்துள்ளன. துருக்கியின் வரலாற்றில், குர்டிஷ் இனத்தினர் நடத்திய மிக நீண்டதும், மிகுந்த வெற்றியளித்ததுமான கிளர்ச்சி இது தான். தீவிரவாதிகளும், குடிமக்களுமாக நாளொன்றுக்குச் சராசரி 30 பேரின் மரணங்கள் ஏற்பட்டு, மொத்தம் 11,000 சாவுகள் வரை இடம் பெற்றிருக்கின்றன. இந்தத் தொகை மிகவும் பெருமளவினதே. தென் மேற்குத் துருக்கியின் தலைநகரான டியார் பாக்கிர் நகரிலே, மிகுந்த பாதுகாப்பரண் அமைந்த தளத்தினைப் பார்க்கையில், அந்தக் காட்சியானது வியட்நாம் போரின் உச்சக்கட்டத்தில் பினாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம் காட்சியளித்ததை நினை வூட்டுகிறது. சண்டையினால் அகதி களான அரை மில்லியன் மக்களில், குர்டிஷ் இனத்தின் தலைமறைவுப் போராளி முகவர்களான ஆயிரக் கணக்கானவர்களும் அடங்குவர். இவர்கள் நகரத்தில் நிறைந்து கிடக் கிறார்கள், தாக்கும் உலங்குவானூர் திகள் துப்பாக்கிப் படகுகள், குண்டு வீச்சுவிமானங்கள் ஓடு பாதைகளில் வரிசையாக நிறுத்தப்பட்டு, பகல் வேளைகளிலும், இரவு வேளை களிலும் அவை சென்று, கெரில்லாக் களின் பலம் வாய்ந்த தளங்களின் மீது தாக்குதல் நடத்துகின்றன. சுமார் 200,000 படைகள், சுற்ற வுள்ள பிரதேசத்தில் தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளனர். இவற் றுள், கெரில்லாக்களை எதிர்த்துப் போரிடும் பயிற்சி பெற்ற விசேட பிரிவும் அடங்கும். இன்று, கெரில் லாக்களை அவர்களின் ஒளிவிடத் தில் வைத்து, தாக்கி அழிப்பதற் கென 10,000 விசேடப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். மறைந் திருந்து தாக்குவதும், அவ்வாறு மறைந்திருந்து தாக்குவோரை அழிப்பதிற் படைகள் ஈடுபட்டிருப் பதுமான இந்த இழிவான போரி னால், இடையில் அகப்பட்டுள்ள நாட்டுமக்கள் பெரும் பாதிப்புக்குள் ளாகின்றனர். இரவுகளில், நகரின் பல வீதிகளும் கெரில்லாக்களின் கட்டுப் பாடுகள் வைக்கப்படுகின்றன. பகல் வேளைகளில், திடீர் திடீரென அவர்கள் வீதித்தடைகளை ஏற்ப டுத்திக் குடிமக்களின் வாகனங் களையும் படைவாகனங் களையும் தடுத்து, பரிசோதனை என்ற பெயரில் வாகனச் சாரதி களையும், பயணிகளையும், சுட்டுக் கொள்வதும் இடம் பெறுகின்றது. பகுப்பாய்வாளர் சிலர், இந்தப் போர் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று என்று குறிப்பிட்டாலும், அது படிப்படியாக விரிவடைந்து கொண்டே இருக்கிறது.

பெருகிவரும் விரக்தி காரண மாகத் தீவிரவாதிகள் துருக்கிய அதி காரிகளை – தென் கிழக்குத் துருக்கி யில் உள்ளவர்களை - வஞ்சம் தீர்க் கிறார்கள். பத்திரிகையாளரையும், அரசியல்வாதிகளையும், அவர்கள் அந்தப் பகுதியிலே காணப்பட்டால், கொல்லப்போவதாகப் பயமுறுத்து கிறார்கள் குர்டிஷ் தீவிரவாதிகள், புகைத்தல், மதுவருந்தல் என்ப வற்றிற்குத் தடைவிதித்துள்ள தோடு, துருக்கியப் பத்திரிகை களையும் தணிக்கை செய்கிறார் கள். எண்ணெய்க் கொம்பனிகளும், நிரப்பு நிலையங்களும் மூடப்பட வேண்டுமென்று வலுவந்தத்துக்கு உள்ளாகின்றன. துருக்கிய வல்லா திக்கத்தின் அடையாளச் சின்னங் கள் என்று முத்திரை குத்தப்பட்டு, ஆசிரியர்கள் கொலைக்கு இலக்கா கின்றனர். கடந்த மூன்று மாதங் களில் மட்டும், கொல்லப்பட்ட பள்ளியாசிரியர்கள் தொகை 47; எரிக்கப்பட்ட பாடசாலைகள் 500; மூடப்பட வேண்டும் என்று கட்டா யப்படுத்தப்பட்டவை 3060. துருக்கியரோடு எவரும் தொடர்பு வைத்தல் கூடாது என்ற எச்ச ரிக்கை, இதுவரை 200 குர்டிஷ் பெண்களையும், பிள்ளைகளையும் பலி கொண்டிருக்கிறது.

இல்நூர் செவிக், அங்காராவி லுள்ள ‘துருக்கி டெய்லி நியூஸ்’ என்னும் ஆங்கிலமொழிப் பத்திரி கையின் ஆசிரியர். இவர் ‘‘குர்டிஷ் கெரில்லாப் படை, துருக்கியரசுக்கு அச்சமூட்டும் ஒன்று’’ எனக் கருத் துத் தெரிவிக்கிறார். 47 வயதான வரும், ஆறு மாதங்களின் முன்பே பிரதம மந்திரிப் பதவிக்கு வந்த வருமான டன்சு சில்லர், ‘‘பயங் கரவாத இயக்கம் ஒன்று, மரபு வழிப் படையாக மாறி வருகிறது. அதற்கு முகங் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமது அரசுக்கு உண்டு’’ என்று ஒத்துக்கொள்கிறார். ‘‘அதன் நோக்கம், மக்களிடையே ஜனநாயகத்தைக் கொணர்வதும், அவர்களின் நல்வாழ்வுக்கு உறு துணையாவதும் அல்ல; நாட்டைப் பிளவு படுத்துவது தான் நோக்கம். தனது வழியிலே குறுக்கிடுபவர்கள் துருக்கியரானாலும் சரி, குர்டிஷ் பெண் குழந்தையானாலும் சரி, அவர்களை அது கொன்றொழிக் கிறது. மார்ச் மாதம் நடைபெற விருக்கும் தேர்தலைத் தடுத்து நிறுத்தும் அதன் நோக்கத்தினை நாம் அனுமதிக்கப்போவதில்லை.’’ இந்த விடயந்தான், துருக்கிய அர சுக்கும், அதன் நேச நாடுகளின் கூட்டான நேட்டோவுக்கும் ஏற்பட் டுள்ள பெருந்தலையிடி. இனவாத முரண்பாடுகளும், அரசியற் சமயம் சார் நெருக்கடியும் சூழ்ந்துள்ள வேளையில், துருக்கியில் ஜனநாய கத்தை நிலைப்படுத்துவதும், சம யம் சாராத நிலைப்பாட்டினை உருவாக்குவதும் அவசியமானவை என்பதை, துருக்கியின் பங்காளி களான ஐரோப்பியச் சமூகத்தினர் உணர்ந்துள்ளனர். வடக்கில் காக் கேஷஸ் மலைப் பிரதேசத்தில், முன் னால் ருஷ்ய சோவியத் ஒன்றியத்தி லிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட ஜோர்ஜியா, ஆர்மீனியா, அஸர்பைஜான் பகுதிகளில் ஏற் பட்டுவரும் கிளர்ச்சிகளை அடக்கு வதில் ருஷ்ய அரசுப்படை ஈடுபட்டுள்ளது. தெற்கிலும் கிழக்கிலும் சிரியா, ஈராக்,



துருக்கி-ஈராக் எல்லையில் ஒரு குர்டிஷ் அகதி முகாம்.

ஈரான், ஈராக் சிரியா, கிறீஸ் ஆர்மீனியா வும் கலகக்கா ரருக்கு உதவு வதாகக் குற் றஞ் சுமத்தப் படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரான் ஆகிய நாடுகளிடையே நிலவிய முன்னைய விரோதம், இன்று மீண்டும் தணலாகி எரியத் தொடங்கியுள்ளது. இவை யாவிலும் மேலாக ஈராக், ஈரான், கிறீஸ், சிரியா போன்ற நாடுகளுடன் ஆர்மீனியா இணைந்து கொண்டு, குர்டிஷ் கெரில்லாக்களுக்கு இரகசியமாக உதவி வருவதற்கும் ஆதாரங்கள் உள்ளன. தீவிரவாதிகளுக்கு வழங்கப்படும் இந்த உதவி பற்றி, துருக்கிய பிரதமர் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியுள்ளார். ''இவர்கள் எமக்கு நண்பர்களென்றால், தங்கள் நட்புறவை வெளிப்படுத்த வேண்டும். இல்லையென்றால், எது அவசியமானதோ அதனை — அந்த நடவடிக்கையை - நாம் எடுப்போம்.'' அவசியமான அந்த நடவடிக்கை என்று சில்லர் சொல்வது, இராஜதந்திர அழுத்தம் கொடுப்பதையோ, மீறினால், இராணுவத் தாக்குதலை நடத்துவதையோ குறிக்கின்றது என்பது தெளிவு.

பல தசாப்தங்களாக நிகழும் (துருக்கியின் தலைநகரம்) கொள்ளையடித்தலால் ஏற்படும் அமைதியின்மையை, குர்டிஷ் மலைப்பிரதேசத்தில் அங்காரா களைந்துவருகின்றது. வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவராயும், பின்னடைந்தவராயும், தமக்கு எனத் தனித்துவமான மரபாசாரங்களுக்குக் கட்டுப்பட்டவராகவும் விளங்கும் குர்டிஷ் மக்கள் நடத்தி வந்த குர்டிஷ் மொழிப் பத்திரிகைகள் தடைக்குள்ளாயின. துருக்கிய அரசு, குர்டிஷ்களுக்கு மலை வாழ் துருக்கியர், என்று நாமமிட்டு, அவர்களைத் தனது ஆட்சிக்குள் அடக்கியுள்ளது. துருக்கியர் எனத் தம்மை அங்கீகரிக்க ஒப்பிய குர்டிஷ்கள், துருக்கிய அரசிலே முதன்மையான பதவிகளுக்கு நியமனம் பெற்று உயர்ந்தனர்.

துருக்கிய அரசின் இத்தகைய நடவடிக்கைகளால் அதிருப்தி கொண்ட குர்டிஷ் மக்களின் எதிர்ப்பு வெளிப்பாடானது, 1980 இல் மார்க்சியச் சார்புடைய குர்டிஷ் தொழிலாளர் கட்சியின் மூலமாகத் தோன்றி, அங்காராவிலிருந்து விடுபட்ட, தனித்ததோர் அரசை அமைக்கும் முனைப்பான போராட்டமாக உருக்கொண்டது, இப்போராட்டமானது, தீவிரவாத கெரில்லாச் சண்டையாக வளர்ந்து. இன்று நிதிவளமும், ஆயுதபலமும் மிக்க ஒரு வலிமைவாய்ந்த இயக்கமாகியுள்ளது. இதன் வளர்ச்சிக்கும், வலுவுக்கும் மூலகாரணராய் உள்ளவர், ''அபோ'' என அழைக்கப்படும் 44 வயதான அப்துல்லா ஒக்கலன் என்ற புரட்சிவாதியே. நிலமற்ற, ஏழைப் பெற்றோர் மகனான இவர், இன்று நடைபெறும் பயங்கரப் போரின் மையஸ்தானமான குர்டிஷ் பிரதேசத்திற் பிறந்தவர். இவரைப் பற்றி வருணிக்கையில், இவரை அடிக்கடி சந்தித்து வரும் பத்திரிகையாளர் ஒருவர், ''நல்ல பாம்பின் பரிவு உடையவர்'' என்கிறார்.

டமஸ்கசில் தமது தலைமைச் செயலகத்தை அமைத்துக் கொண்டு, குர்டிஷ் தொழிலாளர் கட்சியின் மீது வரையறை கடந்த ஆதிக்கத்தைச் செலுத்திவரும் அப்துல்லா, ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டதோடு, துருக்கிய அரசினைப் பகிரங்கமான கருத்துப் பரிமாறலுக்கு வருமாறு அழைத்தார். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகள் சடுதியில் முறிவடைந்தன. இந்த முறிவுக்கு காரணம், மே மாதம் 24 ஆம் திகதி துருக்கியக் கொமாண்டோக்கள் பயணம் செய்த பஸ் ஒன்றினை நிறுத்தி, அதில் வந்த ஆயுதபாணிகளல்லாத 38 கொமாண்டோக்களையும் குர்டிஷ் தொழிலாளர் கட்சி கொடுங்கொலை புரிந்தது தான். ''பேச்சுவார்த்தைகளின் நிபந்தனைகளுள் ஒன்றான ஆயுதக் குறைப்பினைத் துருக்கியப் படைகடைப்பிடித்தபோதும், அதனை இவ்வாறு அழிக்க முயன்றமை, படையினருக்குக் கடுங்கோபத்தினை உண்டாக்கியது இயல்பே எனக்கூறிய டியா பாக்கிரின் உயர் ஆளுநரான உனல் ஏகானுக்கு, தமது கட்சியினர் நிகழ்த்திய கொலைக்கான காரணத்தை அப்துல்லா பின்வருமாறு தெரிவித்தார்:- ''குர்டிஷ் தொழிலாளர் கட்சியினர், தாங்கள் அடைந்திருந்த பேரிழப்பினால் விரக்தியடைந்திருந்தனர். அவர்களின் விரக்தியைப் போக்கடித்துப் புத்தூக்கம் அளிப்பதற்கு, எனது பலத்தைக் காட்டவேண்டிய தேவை இருந்தது. அந்தத் தேவையை நிறைவு செய்யவே, இந்தக் கொடுங் கொலை இடம் பெற்றது.''

இதனையடுத்து மூன்று வாரங்களின் பின்பு, ஐரோப்பிய நாடுகளில் உள்ள துருக்கியின் வங்கி அலுவலகங்கள், உல்லாசப் பயணிகள் முகவர்கள் மீது தாக்குதல் நடத்தி, துருக்கியின் பொருளாதாரத்தை ஒழித்துக் கட்டுமாறு, அப்துல்லா ஒக்கலான் தம் கட்சியினரைப் பணித்தார். (இந்த அலுவலகங்கள் ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ளன.) ''குர்டிஷ் வாழ்கின்றது'' என்ற கோஷத்தோடு தொடங்கப்பட்ட இத்தாக்குதலின் பயனாக, குர்டிஷ் தொழிலாளர் கட்சியினைச் சார்ந்தவர்களென்று தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகித்த நூற்றுக்கணக்கான குர்டிஷ்களைப் பிரான்ஸ் கடந்த மாதம் சுற்றிவளைத்துச் சிறைப் பிடித்தது. ஜேர்மனி, தன்மண்ணி லிருந்த குர்டிஷ்களை நாடு கடத்தியது.

இத்தனைக்கும் காரணமான அப்துல்லா ஒக்கலான், தனது பழிவாங்கல் யாவுக்கும் காரணம், 1925 இல் துருக்கியருக்கு எதிராக நடந்த கிளர்ச்சியிற் கலந்து கொண்ட தமது தந்தை கொல்லப் பட்டதே என்கிறார். இவர் மிகவும் திறமைசாலி. கல்வியில் மிகுந்த முன்னேற்றம் காட்டி அங்காராப் பல்கலைக்கழகத்தில் அரசியற் பாடத்தைக் கற்றவர். அங்கு கற்ற கல்வியைப் பூர்த்தி செய்திருப்பாரா னால், துருக்கியின் உயர் நாட்டாட்சி யாளர் பதவிக்கு நியமனம் பெற அவருக்கு வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் அதை அவர் கைவிட்டு, குர்டிஷ்களின் வறுமை, அடிமைத் தனம் முதலியவற்றைக் களைவதற் காக, புரட்சிவாதிகளோடு சேர்ந்து தலைமறைவாகி, 1978 இல் குர்டிஷ் தொழிலாளர் கட்சியை நிறுவினார். இக்கட்சியை நிறுவு வதற்குச் சுமார் பன்னிரண்டு குர்டிஷ் இளைஞர்கள் இவருக்கு உறுதுணை புரிந்தனர். இவர்களின் குறிக் கோள், ஈராக், ஈரான், ஆர்மீனியா, சிரியா, துருக்கி ஆகியவற்றிலிருந்து விடுபட்ட, ''மார்க்சிய லெனினிய சுதந்திரக் குர்டிஷ் அரசினை'' நிறுவுவதாகும். ஆனால், இவரின் குறிக்கோளில் சந்தேகம் கொள்ப வர்கள் பலர், சயநலமும், ஆதிக்க ஆசையும் மிக்கவராகவே, இவரைப் பற்றிக் கருத்துக் கொண்டிருக் கிறார்கள். ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதியாகவும், தமது அபிலாஷைகளை நிறைவேற்ற முனைபவராகவுமே இவரது பேச்சுக்களும், கருத்துக்களும் இனங் காட்டுகின்றன. குர்டிஷ் பிரதி நிதிகளாகத் துருக்கிய நாடாளு மன்றத்தில் அங்கம் வகிப்பவர் களுடைய கருத்துக்களுக்கும், தீர்மானங்களுக்கும் செவிசாய்க்காத வராகவும், குர்டிஷ் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களைத் தவிர்த்தே சிந்திப்பவராயும், துருக்கிய அரசு அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதை வெறுப்பவராயுமே ஒக்கலான் உள்ளார். எனவே ஒக்கலானும், அவரைச் சார்ந்தோரும் ஆயுதப் போரைத் தொடர்ந்து நடத்திக் கிளர்ச்சிக்கே முதன்மையளிப்பார் களாயின், அவர்கள் துருக்கிய அரசின் சலுகைகளை வேண்டாம் எனப் புறக்கணிப்பதோடு, சமா தானம் ஏற்படுவதற்கான காலம் நீண்டு கொண்டே செல்லும் என்பதும் நிச்சயம்.



வலிமை மிக்க வல்லுநர் அப்துல்லா ஏக்கலன். 'அபோ' என்றும் இவரை அழைப்பர். ''இவர் நல்லபாம்பின் பரிவு'' படைத்தவர்.

ஆதாரங்கள்:- முகமது அலி கிசாவி (அங்காரா) நயோமி மொறிஸ் (பே(ர்)லின்) ஜேம்ஸ் வைல்ட் சிரட்)

டைம், டிசம்பர் 6, 1993

## கியூபர்கள்

### உரிய இடம்

போர்டோ றீகோவில் அண்மையில் நிகழ்ந்த கரிபியன் நாடுகளின் மெய் வல்லுனர் போட்டிகளின் போது 50 பேரளவு கியூப விளையாட்டு வீரர்கள் அமெரிக்காவிடம் தஞ்சம் பெற்றுக் கொண்ட பொழுது அவர்கள் சரி யான இடத்தில் வைத்து அப்படிச் செய்து கொண் டுள்ளனர். அமெரிக்க குடி வரவுச் சட்டங்கள் கியூபர் களுக்கு உடனடித் தஞ்சம் தருவனவாக இருந்தாலும் அப்படித் தஞ்சம் கேட்டுத் தப்பி வந்த இடம் அமெ ரிக்க மண்ணாக இருக்க வேண்டும் என்று உள்ளது. சுமார் 2,300 வெனிசுவேலா, டொமினிகன் குடியரசு, ஸ்பெயின் உட்பட பல நாடுகளில் அமெரிக்காவி டம் தஞ்சம் கேட்டுத் தேங்கி நிற்கின்றனர். அமெரிக்கா அவர்களுடைய விதியை இன்னும் பரிசீலித்துக் கொண்டு உள்ளது.

❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— எழுதியது —
ஜேம்ஸ் ஓ ஜக்சன்

ஜேர்மனி:

# நாடற்ற ஓர் ஒற்றன்

**கிழக்கு ஜேர்மனியின் ஒற்றாடற் பகுதிப் பிரதம அதிகாரி மார்க்கஸ் வுல்∴ப் ஒரு தேசத்துரோகியா? அல்லது, பனிப் போரினால் துன்புறுத்தப்பட்டுப் பழிக்குப்பழி வாங்குபவரா?**

அவர், ''தேசத் துரோகி'' எனத் தீர்ப்புக் கூறப்பட்ட குற்றவாளியைப்போலத் தோன்ற வில்லை. நோபல் பரிசு பெற்றவர் போலக் காணப்பட்டார். டிசம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் டஸ் ஸல் டோர்ல்ப் நீதிமன்றம் அவ ருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண் டனை வழங்கியபோது நலன் விரும் பிகள் புன்முறுவல் பூத்து நின்ற அவரைச் சூழ்ந்து அன்புடன் மலர்ச் செண்டுகளை அவர் கரங்களிற் சமர்ப்பித்தனர். இவ்வாறு நீதித் தீர்ப்பிற் தமக்கு நம்பிக்கையில்லை எனக் காட்டினர். முன்னாள் ஒற்றர் படைப் பிரதம அதிகாரியான வுல்∴ப் செம்மலர்ச்செண்டு ஒன்றை அசைத்து மகிழ்வுடன் பிரகடனஞ் செய்தார், ''இது வெற்றி பெற் றோன் தோற்றவனுக்கு வழங்கும் நீதி: இது ஒரு வெறும் வெளிப் பகட்டு'' என்று.

கிழக்கு ஜேர்மனியின் ஒற்றா டற் சேவைத் துறையின் முன்னாள் பிரதம அதிகாரியான வுல்∴ப் எழு பது வயதினர். தேசத் துரோகம், கைக்கூலி ஆகிய இரு குற்றங்க ளுக்காகத் தம்மீது விசாரணை தொடங்கிய நாள் முதல் இந்தக் கருத்தை அவர் வலியுறுத்தி வந் தார். மேற்குலக நாடுகளில் நூற் றுக்கணக்கான ஒற்றாடல் வல் லாரை அமர்த்தி அவர்கள் தரும் உளவுச் செய்திகளுக்குப் பணம் வழங்கியதாக ஒப்புக்கொண்ட அவர், அது குற்றவியலின் பார்ப் பட்டது என்பதை மறுத்தார். நிச்சய மாய்த் தேசத் துரோகம் அல்ல என்று வாதிட்டார். அந்நாளில் தாம் ஜேர்மன் ஜனநாயகக் குடியர (ஜீ. டீ. ஆர்) (ஜே. ஜ. கு.) சின் பிரஜை என்றும் அந்நாட்டுச் சட் டங்களுக்கு அமையத் தாம் பணி புரிந்ததாயும் வற்புறுத்தினார். ''எந்த நாட்டுக்கு நான் துரோகஞ் செய்த தாகக் கருதப்படுகின்றேன்?'' என்று வினாவினார்.



அரசியற் கேலிக்கூத்து; சோஷலிஸத் தலைவர் கைஸி, தமக்கு அரும்பணி ஆற்றிய தோழருக்கு ஆறாண்டுச் சிறை வாசம் கிடைத்தபோது, ''சென்று வருக'' என கைகுலுக்குகிறார்.

இவ்வினாவுக்கு இனிமேல் தான் விடை கிடைக்கவேண்டும். வுல்∴ப் பிணையில் விடப்பட்டுள்ளார். அரசயாப்பு நீதிமன்றம் நாட்டின் உச்சமன்று, கார்ள்ஸ்றூ ஹேயில் இருப்பது அவரது மேன் முறையீட்டு விண்ணப்பத்தை விசாரிக்கும் வரை அவர் சுதந்திரமாக உலாவலாம். அவர் அடித்துரைக்கிறார்; ''நான் குற்றவாளியானால் மேற்கு ஜேர்ம னியில் 1979 முதல் 1982 வரை ஒற்றாடற்றுறை முதல்வராயிருந்த வரும், தற்போது வெளியுறவு அமைச்சராயிருப்பவருமான க்ளோஸ் கிங்கெல்லும் என்போன்ற குற்றவாளியே. நான் முன்னை நாள் ஜேர்மன் அரசுகளில் ஒன் றில் ஒற்றாடல் துறைக்குத் தலைமை வகித்தமைக்காக இன்று நீதிமன்றத்தில் நிற்கிறேன். அதே பொறுப்பில் மற்ற ஜேர்மன் அர சிற் பதவி வகித்த அவர் இன்று ஐக்கிய ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சராகத் திகழ்கிறார்.''

உயர் நீதிமன்றச் சட்டங்களும், தீர்ப்பும் எப்படி இருப்பினும் டஸ்ஸல் டோர்∴ப் பிரதேச நீதிமன்று விரி வான சாட்சியங்களைக் கொண்டு விளங்கி அவருக்குத் தீர்ப்புக் கூறி யது. 33 ஆண்டுகளாகக் கிழக்கு ஜேர்மனிய ஒற்றாடல் முதல்வர் என்ற முறையில் மேற்கு ஜேர்மனிக் குள் பெருமளவிலான ஒற்றர்க ளைப் புகுத்தி உள்ளார். (''கிழக்கு மேற்குப் பனிப்போர்'' எனப் பேசப்படும் உளவு பார்த்தல் முறை யில்) அவர்கள் அரசாங்கம், இரா ணுவம், கைத்தொழில் ஆகிய துறை களுள் நுழைந்து கிழக்கு ஜேர்மனிக் கும், சோவியத் ருஷ்யாவுக்குமாக உளவு பார்த்தார்கள். அவர்களுள் மகாதுஷ்டன், முன்னாள் மேற்கு ஜேர்மன் நாட்டுத் தலைவரான வில்லி பிறான்றீறின் உதவியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுள் ஒருவனாகப் பணிபுரிந்த குந்தர் கில்லோம் என்பவனே.

சாட்சிகள் முப்பதுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் வுல்ஃப் எப்படித் தமக்கு உதவியவர்களுக்குப் பெரும் நிதியளித்தும், பயமுறுத்தியும், காதல் லீலைகளுக்குள் வலைப்படுத்தியும், உளவு பார்ப்பித்தார் என்று விரிவாகக் கூறினார். ஆணழகர்கள் மூலம் தனிமையில் மகிழ்ச்சியின்றி இருந்த நடுத்தரவயதுப் பெண் செயலாளர்களை மயக்கி இரகசியங்களைப் பெற்றாராம். பிரஸ்ஸல்ஸ் நகரிலுள்ள வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனத்தின் (நேட்டோ) தலைமை அலுவலகத்திலிருந்து உயர் இரகசியங்களைக் களவாடிய ஓர் ஆள் ''ருபாஜ் (Topaz)'' என்ற புனைபெயரில் பத்து ஆண்டுக் காலத்தில் 500,000 டொலர் உபகாரம் பெற்றுள்ளான். வுல்ஃப் இதனை மறுக்கவும் இல்லை; மன வருத்தம் தெரிவிக்கவும் இல்லை. ''ஒற்றாடற் சேவையின் முறைகள் சாதாரண கௌரவச் சமுதாய அறக் கோட்பாடுகளுக்கு அடங்கியன அல்ல'' என்றார். மேனாட்டு நிபுணர்கள் கணிப்பின்படி வுல்ஃப் தம் தொழில் முறையிற் கௌரவமாகவே செயலாற்றினார். இவர் படுகொலைகளில், மிருகத்தனமான தந்திர முறைகளைக் கடைப்பிடித்தவர் அல்லர்.

ஆனால் நீதிவழங்கிய ஐவரும் வேறுவிதமாகக் கருதினர். ''இரு நாட்டு ஒற்றாடற் சேவைகளும், இருநாடுகளும் கூட ஒன்றின் கண்ணாடி விம்பமாக மற்றொன்று இருக்கவில்லை எனக் கருதினர். ''இத்தகைய ஒரு சிறந்த விவேகி, தாம் பணிபுரியும் ஆட்சியாளர் எத்தகையோர் என்பதை அறியாதிருந்தார் என்று கற்பனை செய்யக்கூட முடியாது'' எனத் தம் தீர்ப்பில் எடுத்துக் காட்டினர். பிரதம நீதியரசர் கிளௌஸ் வாக்னர், ''பனிப்போர்க்'' காலத்தில் தான் பெற்ற வெற்றிகளுக்குப் பழிவாங்கவே இவ்விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்று வுல்ஃப் குற்றஞ் சாட்டியதை மறுத்துள்ளார். ''அவர் முன்னைநாள் கிழக்கு ஜேர்மனியில் குறியிடு என்பதற்காகக் குற்றஞ் சுமத்தப்படவில்லை. மேற்கு ஜேர்மனிக்கு எதிராக அவர் ஒற்றாடியதிற் சொந்தப் பங்குக்குத் தான் இவ்விசாரணையும் தீர்ப்பும்; இது அரசியல் தீர்ப்பு அல்ல, நீதித் தீர்ப்பே'' என்றார் வாக்னர்.

கிழக்கு–மேற்கு ஜேர்மன் மக்களில் வியப்பூட்டக்கூடிய அளவு பெருந்தொகையினர் இவ்விசாரணை குறித்து உளம் நலிந்துள்ளனர். ''வுல்ஃப் எமது பகைவருட் தலையாயவர். அவர்பால் எனக்குச் சிறிதும் அனுதாபம் இல்லை. அப்படியே ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் மீதும். ஆனால் இத் தீர்ப்பு என் நெஞ்சில் ஒரு தீய உணர்வை விட்டுச் செல்கிறது'' என்கிறார், சுதந்திர ஜனநாயகக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜேர்ஹாஸ்போம் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிப் பேச்சாளர் ஹோஸ்ற் ஐல்ம் என்பவர், பாராளுமன்றச் சட்ட விவகாரங்களுக்குரியவர். இவர் சொல்கிறார்: ''இவ்வாறான வழக்குகள் முன்னைநாட் பனிப்போர் வேற்றுமைகளை (பொதுவுடைமை ஜனநாயக கிழக்கு மேற்குப் போட்டியை) அழியவிடாது நிலை நிறுத்துவன. இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் நாம் மன்னிப்புக் கருத்தை மீண்டும் சிந்திக்கவேண்டும்.''

முன்னாளில் வுல்ஃபின் பகைவர்களாயிருந்தோரிற் சிலர் கூட அவருக்காகப் பரிந்து பேசினர். ''தான் சரி எனக் கண்டவாறு தன் நாட்டுக்குச் சேவை செய்தவன் மீது பின்னர் அவனது பகைவர்கள் வழக்குத் தொடர்வது இயற்கை; கடந்த செயல் என எனக்குத் தோன்றுகிறது'' என்கிறார், முன்னாள் (அமெரிக்க) மத்திய உளவுத் துறை (சீ. ஐ. ஏ) இயக்குனர் றிச்சாட் ஹெல்ம்ஸ். 'அது பழிவாங்கலே தான். ஏனென்றால் இவர்களுக்கு மாறாக அவ்வளவு திறமையாக அவர் செயற்பட்டார். ''இவ் விசாரணை யாப்புக்கு மாறானது என்பேன். அக்காலத்தில் நிலைபெற்றிருந்த அரசின் கட்டளைப்படியே அவர் ஒற்றாடல் புரிந்தார். அப்பொழுது (ஜேர்மன்) சமஷ்டிக் குடியரசின் சட்ட மா அதிபர் எவராயினும் அவரைக் கைது செய்யும்படி உத்தரவிட நினைத்தும் இருக்க மாட்டார். இப்பொழுது அவரைப் பிடிக்க முடியும் என்ற காரணத்தால் அவருக்கு எதிராக இராஜத் துரோகக் குற்றஞ் சுமத்துவதை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாது'' என்று தொடர்ந்தும் சொன்னார் றிச்சாட் ஹெல்ம்ஸ்.

வேறு சிலருக்குப் புதிராயிருக்கும்; விடயம் மேற்கே உயர் மட்டத்தில் இன்றுள்ள புள்ளிகள் சிலரின் உளவுசார் செயற்பாடுகளை வெளிப்படுத்துவதாகப் பயமுறுத்தி விசாரணையை மெல்லக் கைவிடும்படி செய்ய வுல்ஃப் ஏன் முயலவில்லை? என்பதே. அவர் வெளிப்படுத்த முன்வந்தால் பொண் தலைநகரின் அரசியல்தலைமைக்கு இன்று பேரழிவு ஏற்படலாம் என்பது எவரும் உய்த்துணரும் விடயம். ஆனால் வுல்ஃப் அப்படி ஏதும் செய்யவில்லை. 1991 ஆம் ஆண்டு 'ரொம்' சஞ்சிகை நேர்முகத்தின்போது அவருடைய மிக்க வலுவாய்ந்த முகவர் (ஏஜன்ற்) யார்? என்ற வினாவுக்கு அவர் கூறிய விடை, ''அதை இப்போது உங்களுக்கு வெளிப்படுத்தினால் அந்த ஆளுக்கும், எனக்குங் கூட ஆபத்து ஏற்படும்'' என்றார். எப்பொழுதாவது அப்படி வெளியிடும் நோக்கம் உண்டா? என்ற வினாவுக்கு ''ஒருசமயம் எழுத்தில் பொறித்து வைக்கக்கூடும்'' என்று சதித்திட்ட ரீதியான புன்சிரிப்புடன் தமது மேசை லாச்சிக்குள் ஓர் ஆவணத்தை மறைத்து வைத்திருப்பவர் போலக் கையாற் காட்டினார்.

மர்ம நாவல் மன்னன் ஜோன் கார்லே அடுத்த நாவல் எழுத, ஒரு நூலிழை இதோ! ஆவலைக் கிளறும் பெயர்களை லாச்சிக்குள் பூட்டி இரகசியமாக வைத்த எல் மார்க்ஸ் வுல்ஃப் நவயுக மர்ம ஒற்றன் பாத்திரமான ''கர்லா'' ஆகச் சித்திரிக்கப்படுவார்தானே.

பேர்ளினிலிருந்து நோமி–மொறிஸ்
வோஷிங்ரனில் இருந்து
ஜே. பீற்றர் ஜெல் ஆகியோர்
அனுப்பிய அறிக்கைகளின்
உதவியுடன் எழுதப்பட்டது.

ரைம்–டிசம்பர், 20 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் பின்தள்ளி, மேலெழும் கசாப்புத்தனமான படுகொலைகள்

சிலவேளைகளில் இரத்தப் பெருக்கு மயமான இறந்த காலம், நிகழ்காலத்தைப் பகடி பண்ணுவதாக மேலெழுவதைக் காணலாம். இத்தகைய ஒரு சந்தர்ப்பம் கடந்த மாதம், முதலாம் உலக மகாயுத்தத்தின் 75ஆவது ஆண்டு நிறைவின் போது உண்டாயிற்று. கட்டுக்கடங்காத தேசியமும், அதன் பெயரால் உடன் பிறந்தோரையே படுகொலை செய்த கொடுமையும் காரணமாக நீதியும் நேர்மையும் மரணித்ததான அந்தப் போரின் முடிவு, வரலாற்றிலே நிலைத்து நின்று எதிர் காலப் போர்களுக்கான சாத்தியத்தைக் கண்டனம் செய்வதாக அமைந்தது, ஆனால், கடந்த காலப் பிழைபாடுகளால் இறந்து போனவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற ஐரோப்பியர், உலக மகா யுத்தம் தொடங்கிய முன்னைய யூகோசிலாவியாவில், பகுத்தறிவே பறிபோனதோ? என்று ஐயுறத்தக்க வகையில், மனிதத்தன்மையையே கைவிட்டு விட்டு, கசாப்புத் தனமான படு கொலைகளை நடத்துவது தான் முரண்பாடானதாக விளங்குகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதும், எவராலும் இயலாத காரியம். இராஜதந்திரமும் இங்கு தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. போரிடுவோர், தம் நிலைப்பாட்டிலே ஊன்றி நிற்பதோடு, சர்வ தேசிய நிறுவனங்களுக்குப் பயப்படுவதாகவும் இல்லை. சேபியர் - குறோஷியரிடையே, இரகசியமான முறையிலே போர்த் தவிர்ப்புப் பேச்சு வார்த்தைகளை ஐ. நா நடாத்திய போதிலும், அவை இடைநடுவில் முறிவடைந்தன. மீண்டும் ஒரு சர்வதேச மாநாட்டினை ஜெனிவாவிற் கூட்டுவதற்கு ஐ. நா. மேற்கொள்ளும் முயற்சிக்கும், எல்லாப்பக்கங்களிலுமிருந்து மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

**பொஸ்னியாவிற் படுகொலைகள் தொடர்கின்றன, மாரிக்காலம் அண்மிக் கொண்டிருக்கிறது. மரண எண்ணிக்கை உச்சத்தை அடையும் என்பது நிச்சயம்.**



குடிமக்களுக்கு எதிராகக் காட்டுமிராண்டிச் செயல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. சரஜீவோவில், பல மாதங்களாக எறிகணைகள் வீசப்படாதிருந்து, மீண்டும் சேபியர் கனரக எறிகணைகளால் நகரத்தை அதிரவைக்கத் தொடங்கிவிட்டனர். செப்ரெம்பர் தொடக்கம், ஆட்லறி எறிகணைகள் சோனா மாரியாகச் சொரியப்படுகின்றன, இவை பாடசாலை ஒன்றில் வீழ்ந்ததால், நான்கு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். 40பேர் படுகாயம் அடைந்தனர். இந்தப் பயங்கர தாக்குதலால் பாடப் புத்தகங்களிலும், மேசைகளிலும் இரத்தம் படிந்ததோடு, அவல ஓலங்களும், அழுகைகளும் எழுந்தன. இவற்றினிடையே, இறந்தவர்களின் உடல் சிதறிக் கிடந்தன

ஐ. நா. வானொலிக்கு, பொஸ்னியாவின் பிரதம மந்திரி அனுப்பி வைத்த கடிதத்தின் ஒரு பகுதி இது:- எவ்வளவு பெருந்தொகையாகப் பள்ளிப் பிள்ளைகளைப் பிணமாக்கலாம்? என்று, திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் தான் இது.''

விறைத்துக் கிடந்த வெளியுலகிற்கு, அப்பாவிகளைக் கொன்றதான படிமங்கள் வெளிப்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட விழிப்பு கொடுமையிழைத்தவர்களின் குற்ற உணர்வைக் குத்திக்கிளறி, அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பா

களைச் செயலற்றவர்கள் ஆக்கிவிட்டது. "நாங்கள் பொஸ்னியத் தலைநகரைச் சீரழிக்க அனுமதிக்க மாட்டோம். உலகத் தொடர்பிலிருந்து, அது தனிப்படுத்துவதற்கும் 'இடமளியோம்'' என்று, வெள்ளை மாளிகைப் பத்திரிகைச் செயலாளர் டீ. டீ. மையர்ஸ் அறிவித்த போதிலும், பொஸ்னியாவில் இடம் பெற்ற பயங்கரக் கொடுமைகளை வெளிப்படுத்த அவர் மறுத்துவிட்டார். இந்த அதிரடி நடவடிக்கையைத் தொடர்ந்து, சேபியரின் தாக்குதல் அளவு படிப்படியாகக் குறைந்தது.

தாக்குதல்களின் போது, வேறொரு பைத்தியகாரத்தனமான நடவடிக்கையும் இடம் பெற்றது. ஒட்டமன் துருக்கிய சாம்பிராஜ்யக் காலத்தினைச் சேர்ந்ததும், கலாசாரச் செல்வமாகப் பேணப்பட்டதும், சுண்ணக்கல் கொண்டு கட்டப்பட்டதும், பாதசாரிகள் பயன்படுத்தி வந்ததுமான "ஸ்டாரி மோஸ்ட்" என்ற புராதனப்பாலம் ஒன்று, குறோஷியரின் ஏவுகணைகளால் முற்றாக அழிந்து போயிற்று. யுத்தத்தின் பிரதான இலக்கு அது என்றும், முஸ்லிம்கள் ஆயுதங்களைக் கொண்டு செல்ல அந்தப் பாலத்தைப் பயன்படுத்தினர் என்றும், அதனாலேயே அதனை அழிக்க வேண்டி நேர்ந்தது என்றும், குறோஷியர் தமது செயலை நியாயப்படுத்தியபோதிலும், உண்மையில் "அதுஆயுத விநியோகத்திற்கு எந்த வகையிலும் பயன்படுத்தப் பொருத்தமற்றதாகும்" என்று, அகதிகள் நிவாரணத்திற்குப் பொறுப்பாயிருந்த ஐ. நா. ஸ்தானிகர் கருத்துத் தெரிவித்தார். "மக்கள், தண்ணீர் எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்திய அந்தப் பாலம், பாரம் கூடிய ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு உகந்ததன்று." மோஸ்டர் வானொலியில் நிருபராகப் பணியாற்றிய ஓமர் வெட்றிக், "இந்தப் பாலம், வானவில் போல விளங்கி, ஒருநாள், இருசாராரும் சண்டையை விடுத்துச் சமாதானமாக வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளை அளிக்கும்" என்றார்.

ஆனால், யூ. என். எச். ஆர். ஸி. யின் தலைவரான ஜெரி ஹல்ம், பாலம் அழிவுற்ற செய்தியைத் தமது அலுவலகத்துக்குத் தெரிவித்தபோது ஏற்பட்ட துயர் அதிர்ச்சியைப் பின்வருமாறு விபரிக்கிறார்:— "எங்கள் அலுவலகத்தில் எல்லாமாகப் பணியாற்றிய 25 பேர்களில் குறோஷியர்கள் 12 பேர். முஸ்லிம்கள் 12 பேர். இவர்களோடு நானும் சேர்ந்து, பாலம் உடைக்கப்பட்டதற்காகக் கண்ணீர் சிந்தினோம்." "ஸ்டாரி மோஸ்ட்" பாலத்தின் அழிவோடு, பெறுமதி வாய்ந்த பால்கன் வரலாற்றின் ஒரு பகுதியும் இழப்புக்கு உள்ளாயிற்று. இப்பொழுது, குறோஷியர்கள் மொஸ்டர் வீதியிலிருந்த அனைத்துப் பாலங்களையும் உடைத்து விட்டார்கள். ஐ. நா. ஸ்தாபனம், அந்த வீதியில் வசித்து வந்த முஸ்லிம்களுக்கு உதவிகளை வழங்கப் பயன்பட்ட ஒரே ஒரு பாதையையும், மற்றைய குறோஷியர்கள் தங்கள் பாதுகாப்பில் வைத்திருப்பதால், உதவிகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

இப்பொழுது மாரிக்காலம் சமீபித்துக் கொண்டிருக்கின்றது. பொஸ்னியாவின் மத்திய பகுதியில் வாழ்ந்துவரும் 2 மில்லியன் மக்களில், பெரும்பான்மையினரான முஸ்லிம்களுக்கு அந்தப் பருவ காலத்தில் ஐ. நா. உதவி கிட்டா விட்டால், கடும் குளிருக்கும், பசிக்கும் தாக்குப்பிடிக்க முடியாது செத்தொழிந்து போக நேரும் என்று, ஐ. நா. ஸ்தாபனம் அஞ்சுகிறது. தங்களுக்கு ஆயுத உபயோகத்திற்கான சந்தர்ப்பத்தை அதிகமாகவும், அவற்றை உபயோகிப்பதற்கான அரசியல் இசைவு திட்டவட்டமாகவும் கிடைக்காவிட்டால் தாங்கள் அம்மக்களுக்கு உதவி செய்வது பற்றி மீளாய்வு செய்யவோ, முற்றாக நிறுத்தவோ வேண்டிவரலாம் என்று, ஐ. நா. வின் சிரேஷ்ட அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். அமெரிக்க நிதியாளரான ஜோர்ஜ் சொறோஸ். தனது சொந்தப் பணத்திலிருந்து 50 மில்லியன் டொலர்களை சரஜீவோ மக்களுக்கு உதவப் பயன்படுத்துவதற்கும் வகையின்றித் தவிக்கிறார். "ஐ. நா. வினர், சரஜீவோவிலே பூதாகாரமான தடுப்பு முகாம் ஒன்று நடத்துவதற்கு உதவுகிறார்கள்" என்று குற்றம் சாட்டுகிறார் அவர். மாரிகாலத்தில், அகதிகள் நிவாரண முகாம் நடாத்தும் தம் திட்டத்திற்கு, 20 பங்காளர்களைச் சேர்த்துக்கொண்டு, பொஸ்னியாவில் அதற்கான நிலத்தைக் கோரி விண்ணப்பித்துள்ளார். "தொலைக் காட்சியில், மக்கள் குளிரினால் விறைத்துச் சாவதைப் பார்க்கும் வரை நாம் காத்திருந்தால், அது காலங்கடந்த ஒன்றாகிவிடும்" என்றும் அவர் கூறினார். இராஜதந்திர ரீதியில் ஒரு முடிவுக்கு வர முடியாத நிலையும், மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்க முடியாமலும் காலந்தாழ்த்தியதால், ஏற்கனவே கை கடந்து செல்லும் அளவுக்கு விடயங்கள் சென்றுவிட்டன.

"நாம், வேண்டிய சாதனங்களைப் பயன்படுத்தி, போரைத் தடுத்து நிறுத்த முயலாவிட்டால், அடுத்த நூற்றாண்டில், மனவாத முரண்பாடுகளின் பயனாக விளையும் போர்களாற் பெருஞ் சீரழிவு நேரிடும்" என்று, பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கொய்ஸ் மிற்றெறன்ற் எச்சரித்துள்ளார். ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் தொலைந்து விட்ட சாதனம் எது வென்றால், அது அரசியல் உறுதிப்பாடே.

லெளறா பீற்றர் மோஸ்ரர் | இருவரதும் செய்தியறிக்கைகளிலிருந்து.

ரைம், நவம்பர் 22, 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரம்:
# சீனாவும், பால்ரிக் குடியரசுகளும்.

*மொஸ்கோவிலிருந்து எழுதியவர்:*
— ஜெஃப்ரி லில்லி —

ருஷ்யாவை ஆண்ட ஜார் மன்னர்களின் ஆட்சியில் பால்ரிக் கடலோரக் குடியரசுகளான (Baltic Republics) எஸ்தோனியா, லற்வியா, லிதுஏனியா (Estionia, Latvia, Lithuania) ஆகிய மூன்று நாடுகளும் மொஸ்கோவின் பிடியில் இருந்தன. 1917 ஆம் ஆண்டு நடந்த ருஷ்யப் புரட்சியின் பின், இவை தம்மை ருஷ்யாவின் இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டன. ஆனால், 1940 ஆம் ஆண்டு ஹிற்லர், ஸ்ராலின் (Hitler and Stalin) ஆகிய இரு சர்வாதிகாரிகளின் ஒப்பந்தத்தின்படி, இந்த மூன்று நாடுகளும் மீண்டும் ருஷ்யாவின் பிடியிற் சிக்கின. 1991 ஆம் ஆண்டு வரையில் ருஷ்யாவில் நிகழ்ந்த அரசியல் குழப்பங்களின் போது, இம்மூன்று நாடுகளும் மீண்டும் விடுதலையாகின. ருஷ்யா, தனது ஆட்சிக் காலத்தில் இந்தக் குடியரசுகளின் தனித்துவத்தை இல்லாதொழிக்கப் பெரும்பாடுபட்டுள்ளது. நாட்டுத் தலைவர்களை நாடுகடத்தியும், ''ஆபத்தானவர்கள்'' என்று வர்ணிக்கப்பட்டபலரைக் கொன்றும், இந்த நாட்டு மொழிகளை நசுக்கியும், ருஷ்ய மொழியைக் கட்டாய பாடமாக்கியும், ருஷ்யா பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது. இந்த நாடுகள் மூன்றும், தாம் கலாசார ரீதியாகவும், மொழிவாரியாகவும், மேற்குலகைச் சேர்ந்தவர்கள் என்று, இனங்காட்டிக் கொண்டுள்ளன. ஆகையால், இதைத் தடுக்கும் முகமாக ருஷ்ய ஆட்சியாளர்கள் மேற்கு நாடுகளின் வானொலியைக் கேட்பதைக்கூட, பெரும் குற்றமாக்கியிருந்தனர்.

இன்று இந்த நாடுகள் மூன்றும், தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பெரும் பொறுப்புடன் இருக்கின்றன. இந்த மூன்று நாடுகளும், சீனாவின் வர்த்தக உறவைப் பெரிதும் மதிக்கின்றன. இதற்காக, இந்தக் குடியரசுகள் சீனாவுடன் பலம் வாய்ந்த இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் சீனாவோ, ஒரு பாரிய நிபந்தனையை விதித்திருக்கின்றது. தாய்வானுடனான இராஜதந்திர உறவை வைத்திருக்கும் யாதொரு நாட்டுடனும், சீனா இராஜதந்திரத் தொடர்பை வைத்திருப்பதில்லை. தாய்வான் என்கிற நாட்டுடன் இராஜதந்திர உறவு வைத்திருக்கும் நாடு, சீனாவுடன் இராஜதந்திரிகளைப் பரிமாற யோக்கியதையற்றதென்ற ரீதியிற் சீனா செயல்படுகின்றது. ஆனால் இதற்கு விதிவிலக்காகப் பால்ரிக் குடியரசுகளில் ஒன்றாகிய லற்வியா, இன்று உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. அதாவது, சீனாவுடனும், தாய்வானுடனும் இராஜதந்திர உறவுகளை ஒரே சமயத்தில் வைத்திருக்கும் ஒரே ஒரு நாடு என்ற பெருமை லற்வியாவுக்குண்டு.



லற்வியா, வர்த்தகம் கூடுவதையே பெரிதும் விரும்புகின்றது.

1991 ஆம் ஆண்டு செப்ரெம்பரில், லற்வியாவின் தலைநகர் றீகாவில் (Riga) தனது உத்தியோகபூர்வமான தூதுவரகத்தைச் சீனா நிறுவியது. இந்தத் தூதுவரகமே, மூன்று குடியரசுகளுடனான இராஜதந்திரத் தொடர்புகளைக் கவனிக்கப்போதுமானதென்று, அச்சமயம் சீனா தனது எண்ணத்தையும் வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாய்வானும் தனது தூதுவரகத்தை றீகாவில் திறந்த போது, சீனா கடுங்கோபம் கொண்டது. சீனத் தூதுவரகத்திலுள்ள அதிகாரிகள் யாவரும் ஒட்டுமொத்தமாகச் சீனாவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டனர். ஆனால், சீனா தனது வழமைக்கு மாறாக, லற்வியாவுடனான இராஜதந்திரத் தொடர்புகளை முற்றாக நீக்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்தும் உறவுகளைப் பேணிவருவது தான் உண்மை நிலை. இரு நாடுகளுக்கும் இடையிலான பலதரப்பட்ட பொதுவான விடயங்கள் சம்பந்தமாக லற்வியாவின் வெளியுறவு அமைச்சுடன் சீனா தொடர்பு கொண்டு வருவதே, இதற்குச் சான்று. லற்வியாவின், சர்வதேச உறவுகளைக் கவனிக்கும் கழகத்தைச் சார்ந்த இலினா ஸ்ராபுறோவா, (Elena Staburova) இதைப் பின்வரும் சொற்களால் விபரித்துள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள், (சீனா) 'போகும் போது கதவைஇழுத்துச் சாத்த வில்லை.''

லற்வியா ஒரு சிறிய நாடு. அதன் சனத்தொகை 2½ மில்லியன் மாத்திரமே. குறைந்த சனத்தொகை கொண்ட சிறிய நாடாகிய தாய்வான், லற்வியாவுடன் நெருங்கிய உறவுகளை விரும்புகின்றது. லற்வியா அரசும், பாராளுமன்றமும், தாய்வானைத் தள்ளிவைக்கும்படி கேட்கும் சீனக் கோரிக்கையை உதாசீனம் செய்துள்ளன. இன்னும் இரண்டு வருடங்கள், தொடர்ந்து தாய்வான் தூதரகம் றீகாவில் இருக்கட்டும். பின்பு யோசிக்கலாம் என்று அரசும், பாராளுமன்றமும் தீர்மானித்துள்ளன. தாய்வானின் லற்வியாத் தூதர் கினன் சங் (Keenan Chang), 30 வருடங்களாகத் தாய்வான் தூதரகப் பல நாடுகளிற் கடமையாற்றியுள்ளார். தாய்வான் தூதரகம் தொடர்ந்து றீகாவில் நிலைப்பதற்கு, தாய்வானுக்கு நிறைந்த பொருளாதார உதவிகள் செய்யவேண்டுமென்று தனது அரசுக்கு இவர் அறிவித்துள்ளார். ஆனால், லற்வியாவில் தாய்வான் முதலீடுகள் மிகவும் குறைந்தே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் வரக்கூடிய சாத்தியக் கூறுகளும் தென்படவில்லை. ஆனால் சீனாவுக்கும், லற்வியாவுக்குமிடையில் அமோகமான வர்த்தக உறவுகள் நிலவுகின்றன. இவை, பெருகும் அறிகுறிகளும் தெரிகின்றன. லற்வியாவின் அரசியல்வாதிகள், தாய்வானியர்கள் வாய்ப்பேச்சில் வீரர்கள் என்பதை உணரத் தொடங்கிவிட்டனர்.

ஆசியாவில், சீனாதான் லற்வியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளன். 11 மில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதியைச் சீனாவுக்கு லற்வியா 1993 ஆம் ஆண்டு அனுப்பியுள்ளது. இதில் மூன்றில் ஒன்றைத்தான், தாய்வானுக்கு லற்வியா ஏற்றுமதி செய்துள்ளது. சீன-லற்வியா உறவுகள் சீரடைந்தால், கூடுதலான ஏற்றுமதி வியாபாரம் செய்யலாம் என்பதை, லற்விய அரசு உணரத் தொடங்கியுள்ளது. இரு சிறிய நாடுகள் ஒட்டி உறவாட வேண்டுமென்ற வாதம் எடுபடாது என்பதே, பார்வையாளர்களின் கணிப்பு. லற்வியா சம்பந்தமான சீனாவின் மென்போக்கும், ஒரு புதிராக இருக்கின்றது. சீனாவிடம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வந்து விட்டது என, சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எது எப்படியென்றாலும், லற்விய-சீன உறவுகள் பலமாவதும், லற்விய-தாய்வான் தொடர்புகள் உதிர்வதும், எதிர்காலத்தில் நிகழலாம் என்று துணிந்து கூறலாம்.

F) :பார் ஈஸ்ரன் எக்கனொமிக் றிவியூ, ஜனவரி 13, 1994.

ஓ பாலஸ்தீனமே!

## சமாதான நம்பிக்கை இன்னும் சாகவில்லை

எவருமே, அதனை அத்தனைஇலகுவென்று கருதியதில்லை. ஆனால் சென்ற ஆண்டு செப்ரெம்பரில், வரலாறு படைத்த இஸ்ரேலிய-பாலஸ்தீனிய சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு. டிசம்பர் 13ஆந் திகதி இஸ்ரேலியத் துருப்புக்கள் காஸாத் திடற் பரப்பிலிருந்து வெளியேறுவர் என்று, பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் கூறியது. அந்தநாளும் வந்து போனது. ஆனால், ஓர் இஸ்ரேலியப் படைவீரன் கூட வெளியேறவில்லை. ப. வி. இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் றாபினும் முக்கிய சிக்கல்கள் பலவற்றை இன்னும் தீர்த்துக் கொள்ள உள்ளனர். இஸ்ரேலிய வலதுசாரிகளும், பாலஸ்தீனிய இஸ்லாமியப் போராளிக் குழுக்களும், இன்னும் கடும் பகையுடன் தான் இருக்கின்றன. சில இஸ்ரேலியக் குடியேற்றவாசிகள், தங்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தப் போவதாகச் சூள் உரைத்துள்ளனர். சிறிது கால யுத்த நிறுத்தத்தின் பின்பு, ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலியப் படையினர் மீது மீண்டும் தாக்குதல் தொடுக்கத் தொடங்கியுள்ளனர். யாசீர் அரபாத் கூட, அவருடைய தான்தோன்றித்தனமான தலைமைத்துவம் என்ற குற்றச் சாட்டுக்காக, ப. வி. இயக்கத்தின் உட்பிரிவுகளாற் கண்டனம் செய்யப்படுகின்றார். இருந்தும் கூட, இஸ்ரேலும், ப. வி. இயக்கமும் இன்னும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு உள்ளன. நம்பிக்கை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் கூட, 45 ஆண்டு காலப் பகைமையை முடிவுக்குக் கொண்டு வரும் அருஞ்சந்தர்ப்பத்தை நாடி, முயற்சிகள் தொடர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலின் அருமை வெயிலில்.....

லிங்கம் கூல்பாரின் அருமை

இந்தக் கோடை வெயிலில்!



★ சுவையான ஐஸ்கிறீம்

★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

★ சர்பத், சோடா

இன்னும்

★ கேக், றோல்ஸ், பற்றிஸ்

பல சிற்றுண்டிகளை ஒரே இடத்தில்
சுவைத்திட




லிங்கம் கூல்பார்

அருச்சுனா வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகரில் 24 மணிநேர சேவையுடன் கூடிய

## ★ விருந்தினர் விடுதி ★

பாதுகாப்பான சூழலில் உங்கள்
வசதிக்கேற்ப தங்கிடும் அறைகள்!

உங்களுக்கேற்ப 24 மணிநேர சேவை!!

தினசரியும், மாதாந்த வாடகைக்கும் உண்டு

# குமரன் ரூறிஸ்ற் இன்

67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

உங்கள் அன்றாட அத்தியாவசிய தேவைக்கு
வேண்டிய தரமிக்க அரிசி வகைகளை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள வேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# V. S. K. RICE MILL

அது மட்டுமா?

முதற்றர அரிசியான V. S. K ROSE
அரிசியை விற்பனை செய்யும்
ஒரே ஸ்தாபனமும் இதுவே.

நயம், நம்பிக்கை, நாணயம்
இதற்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**V. S. K RICE MILL**
LOTTON ROAD,
NAVALY,
MANIPAY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடாவில் எழுந்த நச்சு வாயுவின் மர்மம்

எழுதியது
— கிறிஸ்டைன் கோமென் —

## இரசாயன இயக்கியால் ஐ. நா. படையினர் பாதிப்புக்கு உள்ளானதற்கு ஈராக்கியர் பொறுப்பாளரா?



நச்சுவாயுவை ஏவுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஈராக் குண்டுகள்

வெண்முகிற் படலம் எழுந்த அந்த நாளை லாறி கேயால் என்றுமே மறக்கமுடியாது. 1991 ஜனவரி 20 ஆம் திகதி வளைகுடாப் போர் தொடங்கிய மூன்றாம் நாள் அன்று சவூதி அரேபியாவில் தமது படைப்பிரிவு உருவாக்க முகாமில் ஒரு சாய்மனைக் கதிரையிலே கே சிற்றுறக்கத்தில் இருந்த பொழுது அந்த நிகழ்ச்சி இடம் பெற்றது. சவூதி அரேபியாவிலிருந்து 160 கிலோ மீற்றரிலும் தொலைவான குவைத் எல்லையில் அமைந்திருந்த அந்த முகாமின் அருகில் வெடித்த ஏவுகணையின் பயங்கர ஓசையால் கேயின் தூக்கம் கலைந்தது. அவர் தமது வாயுக் காப்பு முகமூடியை அணிந்து கொள்ளு முன்னரே அமோனியாவின் நாற்றம் அவரது மூக்கைத் துளைத்து ஈரலைத் தாக்கியது. அவ்வேளையில் தமது படை முகாமின் மேலாக வெண்மையான முகிற் படலம் படர்வதை அவர் கண்டார். ''அந்த நேரத்திலிருந்து எங்கள் ஆட்கள் நோய் வாய்ப்படத் தொடங்கினர்'' என்றார் கே.

படையினரின் கைகளிலும், புயங்களிலும் சிவந்த நிறத்தில் பெருங் கொப்புளங்கள் தோன்றின. ஒரு வாரம் ஆகுமுன்பே கே நாள் முழுவதும் பெருங் களைப்புக்கு உள்ளானார். அன்றிலிருந்து கடுமையான வயிற்றுப் போக்கும், உடற் பொருத்துக்களிலே பாரிய நோவும் ஏற்பட்டன. அவரோடிருந்த மற்றைய படையணியினரும் இதே நோயினால் பீடிக்கப்பட்டனர். ''இவர்கள் முன் எப்பொழுதும் இல்லாதவாறு கடந்த இரண்டு வருடங்களாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்'' என்கிறார் டஸ்கெஜியில் (அலபாமா) உள்ள சிரேஷ்ட படைவீரர்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பான மருத்துவ நிலைய அதிகாரி சாள்ஸ் ஜாக்சன். கே யின் மீது வைத்திய சோதனைகளை நடத்தியும், முதலாம் உலக யுத்தத்தின் போது படையினருக்கு ஏற்பட்ட நோய்கள் பற்றி ஆய்வு நடத்தி எழுதப்பட்ட மருத்துவ சஞ்சிகைக் கட்டுரைகளைப் படித்துப் பார்த்தும் ஜாக்சன் வந்த முடிபு, அக இரசாயன இயக்கியின் பாதிப்புக்கு உள்ளார் என்பதே. வளைகுடாப் போரில் பங்குபற்றி இவ்வித நோய்க்கு உள்ளான முதலாவது போர் வீரர் கே என்பது தெளிவாயிற்று. அவரைப் போலவே ஆயிரக்கணக்கான படையினர் நோய்க்குள்ளாகி வருந்துவதும் புலனாயிற்று.

இருந்தபோதிலும் ஜாக்சனின் ஆராய்ச்சி முடிவினைச் சிரேஷ்ட படை வீரர் விவகார மருத்துவச் செயலகம் ஏற்றுக் கொள்ளாது குறைத்தே மதிப்பிடுகின்றது. எனினும் ஜோர்ஜியாவின் கொலம்பஸ் நகரத்தைச் சேர்ந்தவரும், 52 வயதானவரும், வளைகுடாப் போரில் ஈடுபட்டவருமான கே இன்னமும் தம்மைப் பீடித்த நோயிலிருந்து விடுபடவில்லை. அவர் தம்மைப் பாதித்தது இரசாயன இயக்கியே (Chemical Agents) என்று உறுதியாக நம்புகிறார். பெருந்தொகையான சிரேஷ்ட படைவீரர்கள் தம்மை நேர் கண்ட கூட்டம் ஒன்றிலே தங்களின் முறைப்பாடுகளை ஐக்கிய அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் அலட்சியப்படுத்தியோ, அல்லது அவர்களை நோயாளராய் நடிப்பதாக முடிவு செய்து பதவி நீக்கியோ வருகிறது என்று குறைப்பட்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டோர் கோரியதற்கிணங்க இன்று கே முதலியோரின் நோய்க்கான மர்மத்தினை ஆராய்வது துரிதப் படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 8,000 சிரேஷ்ட படையினர் தங்கள் நோய் அறிகுறிகள் பற்றி ஐக்கிய அமெரிக்க அரசிற் பதிவு செய்துள்ளார்கள். இவர்களின் பிரச்சார நடவடிக்கைகள் ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க அரசினால் மேலும் கணிக்கப்படும் வகையில் செக்கோ செலாவாக்கியாவின் அறிக்கை அமைந்தது. நரம்புகளுக்கு நஞ்சினைப் பாய்ச்சும் சரின் கடும் மஞ்சள் வாயு என்பவற்றின் சேர்க்கையான நச்சு வாயுவே பாலைவனப் புயலின்போது (ஐ. அ. போர் நடவடிக்கையின் போது) கையாளப்பட்டதாக இவ்வறிக்கை விபரித்தது. ''ஈராக்கியர் எதிர்ப்புக்கான ஆயுதங்கள் எவற்றையும் பயன்படுத்தாது இந்த நச்சுவாயுவை ஏவிவிட்டார்கள்'' என்று ஐ. நா. பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டார். எனினும் இதன் உண்மைத் தன்மை சந்தேகத்திற்கு உள்ளாகியுள்ளது. ஏனெனில் இதே வாயு எதிர்ப்பக்கம் திரும்பி ஈராக் மீது பரவிப் பாதிப்பு உண்டாக்கவும் வாய்ப்புண்டு. அன்றியும் இந்த வாயுவின் வீச்சினால் எந்த ஒரு மரணமும் ஏற்படவில்லை. இருப்பினும் செக்கோசெலவாக்கியரிலும் பலர் இந்த நோய்க்கு உள்ளானதும், அவர்கள் நடத்திய ஆய்வும் இரசாயன இயக்கி பற்றிய உறுதியைத் தருவதும் சிந்திக்க வேண்டியனவே.

மிக அண்மைக் காலத்தில் இந்த மர்மம் வேறொரு முடிவினை நோக்கித் திசை திரும்பியுள்ளது. சவூதியின் ஜுபெயில் நகரில் அமைந்த கைத்தொழில் நிறுவனங்களின் நெருக்கத்தினால் சூழல் மாசடைந்து அதன் அண்மையில் முகாமிட்டிருந்த படை வீரர்களைப் பாதித்திருக்கலாம் என்பதே அந்த முடிபு. ''எங்கள் படையினரிலே சிலர் கைத்தொழிற் பயன்பாட்டு இரசாயனங்களின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கலாம்'' என்று வால்டர் றீட் படை மருத்துவ நிலைய அதிகாரி மேஜர் ஜெனரல் றொனால்ட் பிளாஸ் கூறியதும் இங்கு கருத்திற் கொள்ளத் தக்கதே. இந்தப் பாதிப்பானது குறித்த படை வீரர்கள் எதிர்காலத்தில் எந்த ஒரு சிறிய சூழ்நிலை மாசிற்கும் எதிர்நிற்க முடியாத நிலைக்கு அவர்களை ஆளாக்கி விட்டது.



''பலவகை இரசாயனப் பெருக்கால் விளைந்த உணர்ச்சித் தாக்கம்'' என டாக்டர்களால் பதிவு செய்யப்பட்ட இந் நோய் அறிகுறி எல்லா வித நோய்களுக்கும் உரியதாகக் கொள்ளப்பட இயலாதது என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டியதாய் உள்ளது. இது பற்றி மேலும் ஆய்வு நடத்துவதற்கென அரிதானதும், சடுதியில் ஏற்படுவதுமான நோய்கள் பற்றிய ஆய்வு நிபுணரும், நோபல் பரிசு பெற்றவருமான ஜோசுவா லெடஸ்பேக் என்பவரின் தலைமையில் றொக்:பெல்லர் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வுக் குழு நிறுவப்பட்டுள்ளது. ஆனால் இது பற்றி இதுவரை ஏற்பட்டுள்ள பல திற ஆய்வுகளினதும் இடைவெளியை நிரப்பி உண்மையை வெளிப்படுத்தும் கடமை பென்ரகன் அதிகார பீடத்தையே சார்ந்ததாகும்.

*ரைம், நவம்பர் 22, 1993*

## உளவாளிகள் கைதாகினர்

தாய்வான் பொலிசார், தற்சமயம் சேவையில் உள்ள 3 இராணுவ அதிகாரிகளைக் கைது செய்துள்ளனர். அவர்களில் ஒருவர், கடற்படையின் ஆயுதக் கொள்வனவுப் பிரிவின் பிரதித் தலைவர் ஆவார். அவர்கள், இரகசிய ஆவணங்களை வெளியே அனுப்பிய குற்றச்சாட்டின் பேரிற் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்பட்ட கடற்படைக் கப்ரன் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களைக் கொண்டு, இந்த மூன்று அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத்திற்கும், உளவுத் துறைக்குமிடையிற் புரிந்துணர்வு இல்லையென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

எழுதுபவர்:- மோர்(ர்)ரன் அப்றோமோவிற்ஸ்.
இவர் அமெரிக்க உளவுத்துறைக்குப் பொறுப்பான முன்னாள் உப-செயலாளரும், தற்சமயம் சர்வதேசச் சமாதானக் குழுவொன்றுக்குத் தலைவருமாவார்.

அமெரிக்க அரசியற் சாசனத்திற் சட்டவாக்கம், சட்ட அமுலாக்கல், நீதித்துறை என்று மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. இந்த மூன்றுடன் உளவுத்துறையையும் கூட்டுச் சேர்க்க வேண்டியுள்ளது. செய்திகளைச் சேகரிப்பதற்கும், அவைகளின் பகுப்பாய்வுக்கும் உளவுத்துறை அத்தியாவசியம். அமெரிக்கா போன்ற வல்லரசுக்கு உளவுத்துறை கண்ணும், காதும் போன்று முக்கியம் வாய்ந்ததாகும். பனிப்போர் நடந்த காலத்தில் சீ. ஐ. ஏ. எனப்பட்ட அமெரிக்க உளவுத்துறை, கே. ஜீ. பி. எனப்படும் ருஷ்ய உளவுத்துறையுடன் ஒரு தனிப்பட்ட யுத்தத்தையே நடத்திவந்துள்ளது. ஆதியில் எதிரிகளைக் கண்காணிக்கவென்றே, அதுவும் யுத்த காலத்திற் பிரதானமாக உளவுத்துறை நிர்மாணிக்கப்பட்டதென்பது வரலாறு. ஆனால், இன்றைய உலகில் நண்பன், எதிரி என்ற பாகுபாடின்றி, உளவுத் துறையினர் செய்திகளைத் திரட்டித் தமது அரசுகளுக்கு அனுப்பிய வண்ணம் உள்ளனர். நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளும், சில சமயம் உள்நாட்டுக் கொள்கைகளும் உளவுத்துறையினர் நிர்வாகத்திற்குச் சமர்ப்பிக்கும் செய்திகளிற் பெரும்பாலுந் தங்கியுள்ளன. நிர்வாகமும் உளவுத்துறையும், நகமும், சதையும் போல், ஒற்றுமையுடன் பரஸ்பர நம்பிக்கை கெடாத வண்ணம் நடப்பது அவசியம்.



அறிஸ்ரைட் எதிர்ப்புப் பேரணியில் ஹெயிற்றி இராணுவத்தினர்

இந்த வகையில் அமெரிக்க நிர்வாகத்திற்கும், உளவுத்துறைக்குமிடையிற் புரிந்துணர்வு இல்லையென்ற செய்தி திடுக்கிட வைக்கின்றது. உளவுத்துறை கொடுக்கும் துப்புக்களை அரசியல்வாதிகள் பிரச்சாரக் கருவிகளாக, அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்துவதாகப் பரவலாகப் பேசப்படுகின்றது. இதனால், உளவுத்துறையால் அரசுக்குக் கொடுக்கப்படும் புலனாய்வுச் செய்திகளின் இரகசியத் தன்மை காப்பாற்றப்படவில்லையென்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. எனவே, உளவுத்துறையின் தனித்துவமும், சுதந்திரமாகச் செயலாற்றும் தன்மையும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், அரசியல்வாதிகளோ, உளவுத்துறை தனது கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்றும், விஷயந் தெரியாதவர்களெல்லாம் இத் துறையிற் புகுந்து விட்டனர் என்றும் தமது தரப்பிற் கூறுகின்றனர். இதுபோன்ற வாதப் பிரதிவாதங்கள், அமெரிக்க அரசியல் வாதிகள் — உளவுத்துறையினர் உறவைச் சுற்றி எழுந்துள்ளன. உளவுத்துறையிலும் பார்க்கத் தமக்குக் கூடுதலான இரகசியச் செய்திகள் தெரியும் என்ற அளவுக்கு அரசியல்வாதிகள் சென்று விட்டனர். இதனால், இரு பகுதியினருக்கும் இடையிற் கசப்பும், கொதிப்பும் நிலவுவது நியாயமே.

இரு பகுதியினருக்குமிடையிற் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள உறவை, ஹெயிற்றித் தீவு விவகாரம் நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. இத்தீவு, மேற்கு இந்தியத் தீவுத் தொகுதியில் ஒன்றாகும். இங்கு அரசியற் கொந்தளிப்பும், இராணுவப் புரட்சியும், பகலும், இரவும் போலத் தவறாது வருகின்றன. இங்கு நடப்பவற்றை அமெரிக்கா கூர்ந்து கவனித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது. ஏனென்றால், மேற்கு இந்தியத் தீவுகளும், ஹெயிற்றியும் அமெரிக்காவின் அடிவயிற்றுப் பகுதியில் இருக்கின்றன. இவ்வளவு அண்மித்துள்ள ஹெயிற்றித் தீவு பற்றிய சரியான அறிக்கைகளை, சீ ஐ. ஏ. தரத் தவறிவிட்டது என்று நிர்வாகம் குறைப்படுகின்றது. ஆனால், தான் கொடுத்தவை பிழையற்றவை என்று உளவுத்துறை அடம்பிடிக்கின்றது. இங்கே தான் முறுகல் நிலையின் தோற்றுவாய் இருக்கின்றது. ''வோஷிங்ரன் போஸ்ற்'' போன்ற கழுகுப் பார்வையுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் இந்த நிலைமையைச் செய்தியாக்கிப் பரப்பி வருவது, இரு பகுதியாளரையும் சங்கடத்திற் குள்ளாக்கி விட்டது.

பல தசாப்தங்களின் பின் ஹெயிற்றியில் ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்தன. இதில் அமெரிக்க ஆதரவு பெற்ற ஜீன் பேட்றாண்ட் அறிஸ்ரைட் வெற்றி பெற்றார் ( JEAN-BERTRAND ARISTIDE ). ஆனால், இவர் பதவியில் அமருவதை அந்த நாட்டு இராணுவம் விரும்பவில்லை. அவர்கள் உடனடியாக இராணுவப் புரட்சியில் இறங்கினார்கள். இதன்பயனாக அறிஸ்ரைட் நாட்டைவிட்டு ஓடி அமெரிக்காவிற் தஞ்சம் புகுந்துள்ளார். கிளின்ரன் நிர்வாகத்தின் ஹெயிற்றித் தீவு சம்பந்தமான வெளியுறவுக் கொள்கை, அறிஸ்ரைட் அவர்களைச் சுற்றியே இருக்கின்றது. எப்படியென்றாலும், அவரை அரியாசனம் ஏற்றுவது தான் அமெரிக்காவின் இப்போதைய நிலை. இராணுவத்தை அடிபணிய வைக்க, அமெரிக்கா ஹெயிற்றி மீது பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்துள்ளது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடை அஸ்திரம் கியூபாவிலும் சேர்பியாவிலும் பெருந்தோல்வி கண்டுள்ளது. இந்த இரு நாட்டுத் தலைவர்களையும், மக்களுக்கு வேண்டாதவர்களாக்கக் கொண்டு வரப்பட்ட பொருளாதாரத்தடை, அத்தலைவர்களை மக்களின் செல்லப்பிள்ளைகளாக்கி விட்டது. ஹெயிற்றியிற் பட்டினியால் பலர் மடிந்துள்ளனர். ஆனால், இராணுவ ஆட்சி நீடிக்கின்றது; அமெரிக்க எதிர்ப்பும் தொடர்கின்றது. இச் சமயத்தில் சி. ஐ. ஏ. அரசுக்கு ஓர் அதிர்ச்சியான தகவலைக் கொடுத்துள்ளது. அறிஸ்ரைட் ஒரு மன நோயாளி; அவரை அமெரிக்கா ஆதரிப்பது நல்லதல்ல என்பதே அந்தச் செய்தி. நிர்வாகம் இதை ஏற்காமல், உளவுத்துறையைச் சாட ஆரம்பித்துள்ளது. அரசியல்வாதிகள் தாம் விரும்பிய தகவல்களை ஏற்பதும், விரும்பாதவற்றைத் தள்ளிவைப்பதும் ஓர் அமெரிக்க நிகழ்வு எனலாம். இதனால், உளவுத்துறை ஏமாற்றம் அடைந்துள்ளது. அமெரிக்கா தனது வல்லரசுப் பேராண்மையைக் காப்பாற்றிக் கொள்வதாயின், நிர்வாகமும், உளவுத்துறையும் ஒன்றுபட்டு உழைத்தல் மிகவும் அவசியம்.

# கிளின்ரனின், தாய்ப்பாச நினைவுகள்

*அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், ஆறு ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட வேளையில், அவருடைய அன்னையைப் பற்றிய நினைவுகள் அவர் மனத்தை நிறைத்திருந்தன. திட்டமிட்டபடி, அவர் தனது பயணங்களை நிறைவேற்றினார். அவர் புறப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்பு, அவருடைய அன்னை வேர்ஜீனியா கெலி காலமாகிவிட்டார். அதனால் அவருடைய பயணம் எப்போதும் தனது தாயை இழந்த சோகச் சாயல் படர்ந்ததாகவே இருந்தது. அமெரிக்கச் செய்தி விமர்சகர் ஒருவரான டெட் கொப்பெல் அவருக்குக் கொடுத்த தியான நூல் ஒன்றை அவர் எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருக்கக் காணப்பட்டமை, அவர் தனது அன்னையைப் பற்றி நினைந்துருகிக் கொண்டிருந்தமையைக் காட்டுவதாக இருந்தது. அவர் மொஸ்கோவில் உள்ள கசான் பேராலயத்திற்குச் சென்ற பொழுது, தனது அன்னையின் நினைவாக மெழுகுவர்த்திகளைத் தீபமேற்றித் தியானித்தார்.*

*அவருடைய பயணத்தின் போது, தனது அன்னையின் சுயசரிதையின் வரைவுப் பிரதிகள் பலவற்றை உடன் கொண்டு சென்றார். திருமதி கெலிக்கு, தான் இன்னும் சில மாதங்கள் தான் வாழ்வேன் என்ற எண்ணம் இருந்ததால், '' பில் அதனை விரைவிலே நிறைவேற்றுவார்'' என்று, அந்த நூல் வெளியீடு சம்பந்தமாகக் கூறியிருந்தார், அந்த நூலின் ஆசிரியரான கிளின்ரன், பயணத்தின் போது தனக்குக் கிடைத்த ஓய்வு வேளைகளில், அந்த நூலை ஆராய்ந்து கொண்டு இருக்கக் காணப்பட்டார். புறூலக்ஸ் நகரிற்குச் சென்ற போது, அங்கு ''செக்ஸபோன்'' இசைக் கருவியை இசைக்க மறுத்த அவர், அதற்குப் பதிலாக அந்த மாலைப் பொழுதிற் பக்திப் பாடல்களை இசைத்தார். பின்பு, மது அருந்தற் சந்திப்பு ஒன்றுக்குச் சென்ற பொழுது, இன்னுமொருவர் வைத்திருந்த 'செக்ஸபோன்'' இசைக்கருவியை இரவல் வாங்கி இரண்டு இராகங்கள் வாசித்தார். அப்பொழுது, அவருடைய மனைவி மேசையிற் கரண்டியால் தட்டித் தாளம் போட்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலை வேலை

# தடுமாறும் பிரத்தியேக உரிமை

அமெரிக்க வெளிநாட்டு உதவிச் செயலர் வின்ஸ்ரன் லோட் மக்கள் சபைக்கு விளக்கமளிக்க சென்ற செப்ரெம்பர் மாதம் சென்றார். சிறைக்கைதிகளால் செய்யப்பட்ட பொருள்களைச் சீனா, அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மக்கள் சபை விசாரித்துக் கொண்டிருந்தது. ''சிறைக்கைதிகளால் செய்யப்படும் பொருள்கள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு அமெரிக்க அரசு மிகப்பெரிய முயற்சி எடுக்கின்றது'' என லோட் தனது விளக்கத்தில் கூறினார். அதே நேரத்தில் ஒறிகன் மற்றும் கலிபோர்னியா மாநில அரசுகளின் சிறைச்சாலை அதிகாரிகள் தமது பிரதேசச் சிறைக்கூடங்களில் கைதிகளால் செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்யத் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதாவது அவ்வகையான பொருள்களை இறக்குமதி செய்ய அமெரிக்கச் சட்டம் தடை செய்கின்றது. ஆனால் மற்ற நாடுகளுக்கு விற்பதைத் தடை செய்யவில்லை.

ஒரு சர்வதேசப் பிரச்சினைக்கு மத்தியில் இறங்குகின்றோம் போல் தோன்றுகின்றது என கலிபோர்னிய மாநிலச் சிறைச்சாலை அதிகாரியொருவர் கூறினார். ஆனால் இரு மேற்குக்கரை மாநிலங்களும் தமது திட்டங்களை நிறுத்தவில்லை. '' எமது தொழிலாளர் யாவரும் தாமாகவே தொழில் செய்கின்றார்கள்'' என ஒறிகன் மாநில நன்னெறிப்படுத்தும் திணைக்களத்தின் ஏற்றுமதித் திட்டத்தின் நிர்வாகி ஃபிரெட் நிக்கொல்ஸ் கூறுகிறார். ''நடைமுறையில் இருக்கும் கூலியையே அவர்களும் பெறுகிறார்கள். அவர்களை வேலை செய்யக் கட்டாயப்படுத்துவதுமில்லை; மனிதாபிமானமற்ற முறையில் அவர்களை நடத்துவதுமில்லை'' என மேலும் கூறுகிறார். கைதிகள் தமது நேரத்தைப் பணம் சேர்க்கக்கூடிய வழிகளில் செலவிடுகிறார்கள், சந்தைப் படுத்தக்கூடிய திறனைப் பெறுகிறார்கள். மற்றும் அவர்களுக்கிடையே ஏற்படும் சண்டைகளும் குறைகின்றன என அதிகாரிகள் கூறுகின்றனர் இதே மாதிரியான விவாதத்தைச் சீனரும் தமது சிறைச்சாலைத் தொழிற்சாலைகளைப் பற்றி முன் வைக்கலாம். '' இரு நாடுகளுக்குமிடையே பெரிய வித்தியாசங்கள் உள்ளன '' என நிக்கொல்ஸ் கூறுகின்றார்.



அமெரிக்காவில் சிறைக்கூட வேளைத்தளங்களில் சிலகாலமாக விற்பனைக்குரிய பொருள்கள் செய்யப்பட்டுவருகின்றன. உள்ளூர் உற்பத்தியாளருடன் போட்டியைத் தவிர்ப்பதற்கு யார் இவற்றை வாங்கலாம் என்பதை அதிகாரிகள் வரையறுக்கிறார்கள். உதாரணமாகக் கலிபோர்னியாவில் கைதிகளால் செய்யப்பட்ட பொருள்கள் வரிச்சலுகைகள் உடைய நகரங்கள், மற்றும் அரச முகவர் நிறுவனங்களுக்கு மட்டுமே விற்கப்படலாம். இம்மாநிலத்தின் சிறைச்சாலைத் தொழில் அதிகாரசபை சென்ற வருடம் 125 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்தது, சிறைச்சாலைகளின், பண்ணைகள், தொழிற்சாலைகள், சேவைகள் ஆகியவற்றிற்கு உபகரணங்கள் கொடுக்கவும் அந்நிறுவனங்களைச் செயற்படுத்தவும் இப்பணம் உபயோகப்படுகின்றது என அதிகாரிகள் கூறுகின்றார்கள். எல்லாமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிபோர்னியாவில் 22 சிறைக் கூடங்களில் 6,300 கைதிகள் 70 வெவ்வேறு செயற்பாடுகளில் தொழில் புரிகிறார்கள். இவற்றில் பன்றி வளர்க்கும் பண்ணைகளும், பாற் பண்ணைகளும், தரவுகள் பதியும் சேவைகளும் அடங்கும்.

ஏற்றுமதிப் பணம் பெறக்கூடிய வாய்ப்பு உடைகளுக்கும், வீட்டுத் தளபாடங்களுக்கும் கூடுதலாக உண்டு. இன்றுவரை பரீட்சார்த்தமாக மட்டுமே பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ''அமெரிக்க ஏற்றுமதியாளருடன் சேருவதே எமது தந்திரோபாயமாகும். பொருள்களை வாங்க ஒருவர் இருப்பதாகவும், பொருள்கள் வெளிநாடு செல்வதாகவும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்'' எனச் சிறைச்சாலை தொழில் அதிகார சபையின் சந்தைப்படுத்தும் பிரிவின் தலைவர் ஏ. கேட்டிஸ் பார்க்ஸ் கூறுகிறார். ஏற்றுமதிப் பிரிவொன்றையும் அமைத்திருக்கிறார்கள். டெனிம் ஜீன்ஸ், ஜக்கெற்ஸ், கவர் ஓல்ஸ் ஆகிய கலிபோர்னிய கிளாசிக்ஸ் என வியாபாரப் பெயரிடப் பட்டவையிலும், சப்பாத்துக்கள் மற்றும் பூட்ஸ் ஆகிய பாதணிகளிலும் வாங்குவோர் அக்கறை காட்டுகின்றார்கள்.

ஒறிகன் மாநிலத்தின் திட்டம் இதிலும் உயர்ந்ததாகும். சிறைச்சாலைகளில் செய்யப்பட்ட டெனிம் ஜீன்ஸின் முதலாவது ஏற்றுமதி ஜப்பானுக்குச் சென்றது. அதன் பெறுமதி 28,000 டொலர்களாகும். நிக்கொல்சின் எதிர்பார்ப்பின்படி 1991 ஆம் ஆண்டு முடிவில் வெளிநாட்டு ஏற்றுமதி 200,000 டொலர்களை எட்டும் என்றும் 1998 ஆம் ஆண்டிலிருந்து வருடமொன்றுக்கு 2 மில்லியன் டொலர்களாகும் எனவும் கூறுகின்றார். நியூசிலாந்து, இத்தாலி, ஜேர்மனி, பிறேசில், கனடா, மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து வாங்குவோர் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

ஒறிகன் மாநிலத்திட்டம் வியாபார நோக்கத்தைக் கொண்டுள்ளது. யூனிகுறூப் என்னும் புதிய நிறுவனத்திற்கு நிக்கொல்ஸ் தலைமை தாங்குகிறார். போட்லாந்தில் தளம் அமைந்துள்ள உலகளாவிய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் அதிபர் ஜீன் போஸ்ரல் யோசனை வழங்குபவராகவும், முகவராகவும் சேர்ந்துள்ளார். தனது ஜீன்ஸ், ஜாக்கெற்றுகள், மற்றும் வேலைசெய்யும் போது அணியும் சேர்ட்டுக்கள் ஆகியவற்றுக்குச் ''சிறைக்கூட நீலங்கள்'' (Prison Blues) என்ற வர்த்தகப் பெயரை யூனிகுறூப் பதிவு செய்துள்ளது. வயது குறைந்தோருக்குத் ''துணை போனவன்'' எனப்படும் உடைகள் விலைப்படுகின்றன. பென்டுல்ரனிலுள்ள யூனிகுறூப்பின்

**அமெரிக்காவின் சிறைச்சாலைகள் ஏற்றுமதி செய்ய முடியுமாயின், சீனாவின் சிறைச் சாலைகள் ஏன் ஏற்றுமதி செய்ய முடியாது.**

ஈஸ்ற்ரேன் ஒறிகன் நன்னெறிப்படுத்தும் நிறுவனத்தின் உடைகள் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்யப் பல கைதிகள் ஒழுங்கு வரிசையில் காத்திருக்கிறார்கள். தற்போது 50 கைதிகள் அங்கே வேலை செய்கிறார்கள். தேவைப்படும் கட்டளைகள் வரும்பொழுது 300 பேர் தேவைப்படும் என நிக்கொல்ஸ் கூறுகிறார்.

ஒறிகன் சட்டத்தின்படி 'வெளியே' உள்ளவரின் நாட்கூலிக்கு ஒத்த சம்பளம் ஒத்த வேலை செய்யும் கைதிக்கும் கொடுக்கப்படல் வேண்டும். அவ்வாறெனின் மணித்தியாலம் ஒன்றுக்கு 7.50 டொலர் வரை சம்பளத்திட்டம் செல்லும். அமெரிக்க இறக்குமதியாளரினால் விரும்பப்படும் வெளிநாட்டு உற்பத்தியாளரால் கொடுக்கப்படும் சம்பளத்திலும் உயர்வாகக் கொடுப்பதாக நிக்கொல்ஸ் கூறுகிறார். தமது குடும்பத்துக்கு பணம் அனுப்பவும், தாம் இழைத்த குற்றச்செயலினால் அறை வாடகை ஆகியவற்றுக்கு மாநில அரசுக்குப் பணம் செலுத்தவும் இவர்களின் உழைப்பில் 80 வீதம் பெறப்படும். அவர்கள் வருமான வரியும் கட்ட வேண்டும். கலிபோர்னியா சிறைச்சாலைக் கைதிகள் மணித்தியாலத்திற்கு 40 சதங்களுக்கும், 95 சதங்களுக்கும் இடைப்பட்ட பணத்தைச் பெறுவார்கள். அப்பணத்தைப் சிறைச்சாலை உணவு விடுதியில் செலவழிக்கலாம் அல்லது தமது குடும்பங்களுக்கு அனுப்பலாம்.

வெளிநாட்டுச் சிறைச்சாலைப் பொருள்களைப் பற்றிய மத்திய அரசின் கருத்துக்கள் வெளிப்படையாக இருந்தாலும் தாம் உறுதியான சட்ட வரம்பில் நிற்பதாக மாநில அதிகாரிகள் கூறுகின்றனர். சிறைக்கூடத்தொழில் அதிகாரச் சபையை நிறுவிய பீனல் சட்டம் ஏற்றுமதியை அனுமதிக்கிறது என இச்சபையின் பொது முகாமையாளர் றிச்சாட் லௌறி கூறுகிறார். வேறு ஜீன்ஸ் விற்பவர்களும் தம்மை ஆதரிப்பதாக நிக்கொல்ஸ் கூறுகின்றார். கைதிகளின் புனர்வாழ்வுக்கு உதவப் பலர் முன்வருகிறார்கள். பலவகைத் திறன்களைப் பெறவும், வேலை செய்யக்கூடிய ஒழுங்காற்றுப் பண்பு மற்றும் எழுத, வாசிக்க தமது திறனை உயர்த்தவும் கைதிகள் கற்கிறார்கள் என்று நிக்கொல்ஸ் கூறுகின்றார், ''அவர்கள் திரும்பி வராமல் இருக்க நல்ல எதிர்பார்ப்புக்களுடன் அவர்களை வெளியே அனுப்புகிறோம்'' இவ்வாறு தொழிலில் ஈடுபடும் கைதிகள் சண்டை பிடிப்பதில் நாட்டம் குறைந்து தப்பியோடுவதற்கு, திட்டம் தீட்டுவதிலும் குறைந்த நாட்டமுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

சிறைச்சாலைகளில் செய்யப்பட்ட பொருள்களை அமெரிக்கா ஏற்றுமதி செய்ய முடியுமானால் அவ்வகையான பொருள்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிற்கு விற்கச் சீனா அல்லது வேறு நாடு அனுமதிக்கப் படாதது ஏன்? இவ்விடயத்தில் ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகம் போன்று ஜனாதிபதி பில் கிளின்ரனின் நிர்வாகமும் பீஜிங்குடன் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கின்றது. மற்ற நாடுகளில் உள்ளவற்றிலும் பார்க்க அமெரிக்க சிறைச்சாலைகள் எல்லா விதத்திலும் உயர்ந்தவையா? சீனக் கைதிகள் கட்டாயப்படுத்தப்பட்டு வேலை செய்கிறார்கள், கொடுமைப் படுத்தப் படுகிறார்கள், வேலைக்கேற்ற கூலியும் கொடுக்கப்படுவதில்லை என்ற அபிப்பிராயம் அமெரிக்காவில் உள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அல்லது வேறு நிறுவனம் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு இவ்வபிப்பிராயம் சரிபார்க்கப்படவேண்டும். நீதியை நிலைநாட்ட அமெரிக்கச் சிறைச்சாலைகளிலும் இதே ஆய்வுகள் செய்யப்படவேண்டும். கைதிகள் சுரண்டப்படாதிருப்பின் அவர்கள் வேலை செய்து கிடைக்கும் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் ஒரு குறையும் இல்லை.

*ஏசியாவீக், டிசம்பர் 15, 1993*

---

# மெக்சிக்கோ நாட்டில் இனக் கலவரம்

ஐக்கிய அமெரிக்காவின் தெற்கெல்லை நாடான மெக்சிக்கோவில் கலவரங்கள் வெடித்துள்ளன. மெக்சிக்கோவின் தெற்கு மாகாணம் சியாப்பாஸ் (CHIAPAS) பெருமளவு இந்தியர்கள் வாழும் பகுதியாகும். இந்தியர்களென்று பொதுவாக வர்ணிக்கப்படும் இவர்கள் ஐரோப்பியர்கள்; குறிப்பாக, ஸ்பெயின் நாட்டவர் மெக்சிக்கோவில் குடியேறு முன் அங்கிருந்த பழங்குடியினர் என்று சொல்வதே மிகப் பொருத்தம். ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட முதலாம் உலகின் அங்கத்துவ நாடென்று தன்னை இனங்காட்ட மெக்சிக்கோ எத்தனிக்கும் இவ்வேளையில் கலவரங்கள் மூண்டது, அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அரசியல் ஸ்திரத் தன்மைக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் தான் ஓர் எடுத்துக்காட்டு என்று மெக்சிக்கோவின் பிரச்சார இயந்திரம் சிலகாலமாகப் பறைசாற்றி வந்துள்ளது. அண்மைக்கால நிகழ்வுகள் வேறு விதமான செய்திகளைச் சொல்லுகின்றன.



சியாப்பாஸ் நகரம் ஒன்றில் போராளிகளின் நடமாட்டம். மக்கள் ஆதரவு இவர்களுக்கு நிறைய உண்டு.

சியாப்பாஸ் பிராந்திய மக்கள் பெரும்பாலும் விவசாயிகள். தேசிய மொழி ஸ்பானிஷ் இவர்களுக்கு இரண்டாவது மொழி. இவர்களுக்குத் தாய்மொழி ஒன்றுண்டு. மேலும் வட மெக்சிக்கோ, மத்திய மெக்சிக்கோ போன்ற பகுதிகளில் இருந்து தெற்கில் குடியேறிய பெரும் பண்ணையாளர்களும், மாட்டு மந்தைச் சொந்தக்காரர்களும், கோப்பித் தோட்ட முதலாளிகளும் இவர்களுக்குரிய நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். இதற்கு மத்திய அரசின் ஆதரவு நிறையவுண்டு. அண்மையில் பதவியிறக்கப்பட்ட மெக்சிக்கோவின் உள்விவகார அமைச்சர் கொன்சாலெஸ் கரிடோ (Gonzalez Garrido) இப் பிராந்தியத்தின் ஆளுநராகக் கடமையாற்றிய காலத்தில் செல்வந்தக் குடும்பங்களின் நலனைக் காக்கப் பழங்குடியினரை வஞ்சனையுடன் நடத்தவுள்ளார். வடக்கு மெக்சிக்கோ முன்னேற தெற்கும், அங்குள்ள மாயாவின் இந்தியர்களும் வறுமைக் கோட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். சியாப்பாஸ் வெடிக்கக் காத்திருந்தது. இதை அரசு ஒத்துக் கொள்ளவேயில்லை. நாட்டில் எல்லாம் நலம்; அமெரிக்க, பிரிட்டிஷ் முதலீட்டாளர்கள் தாராளமாக இங்கு வரலாம் என்ற ரீதியில் அரசு இயங்கியது. 1929 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அரசமைப்புப் புரட்சிக் கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியே பதவியிலிருந்து வருகின்றது. கடந்த ஐந்து வருடங்களாக இக் கட்சியின் வேட்பாளர் கார்லோஸ் சலினாஸ் டீ கோத்தரி மெக்சிக்கோ நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றார். இவரின் வழிகாட்டலில் நாடு கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆதரவாளர்களால் சலினாஸ் என்றழைக்கப்படும் இவர் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தின் பாதுகாவலன் என்று வர்ணிக்கப்படுகின்றார். எனவே முதலீடு செய்யும் நாடுகளினதும், உலகளாவிய வர்த்தக ஸ்தாபனங்களினதும் பேராதரவு இவருக்கு நிறைய உண்டு. சொலிடாறிட்டி (Solidarity) எனப் பெயரிடப்பட்ட ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் திட்டம் ஒன்றை இவர் செயற்படுத்துகின்றார். ஆனால், இஃதொன்றும் சியாப்பாஸ் வாழ் இந்தியர்களைச் சென்றடையவில்லை. அரசாங்கக் கணக்குகளின்படி பெரும் பகுதி சொலிடாறிட்டின் பணம் தெற்கில் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்தியர்களின் கையில் இது கிடைக்கவில்லை. இவர் மெக்சிக்கோ நாட்டிற்குப் பெற்றுக்கொடுத்த வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (North American Free Trade Agreement) சரித்திரக் கீர்த்தி வாய்ந்ததென அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முதலாம் உலக நாடுகளுடன் சரிசமனாக மெக்சிக்கோவும் வளரவேண்டுமென்பதே சலிமைஸ் அவர்களின் கனவு. ஆனால் அவர் முதல் தரமானதோர் உள்நாட்டுப் பிரச்சனைக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

சபாற்றிஸ்ரா தேசிய விடுதலை இராணுவம் (Zapatista National Liberation Army) இவ்வருட முதல் நாள் நடத்திய திடீர்த் தாக்குதல் மெக்சிக்கோ அரசுக்கும், அமெரிக்கக் கண்டத்திற்கும் பேரதிர்ச்சி கொடுத்துள்ளது. 1910 ஆம் ஆண்டு ஏழை விவசாயிகளின் உரிமைக்காகப் போராடிய எமிலியானோ சபாற்றிஸ்ரா என்ற தியாகியின் பெயரையே இந்த இயக்கம் தனக்குச் சூட்டியுள்ளது. 1910 ஆம் ஆண்டுக் கிளர்ச்சிகளிலும் இவருடைய தலைமையில் இந்தியர்கள் பெரும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த வருடப் போராட்டத்தை நடத்துபவர்கள் இந்தியர்களின் இன அழிப்பைத் தடுப்பது தான் தங்கள் பிரதான குறிக்கோள் என்று பிரகடனம் செய்துள்ளனர். செல்வந்தர்களுக்கும், வறியவர்களுக்குமிடையிற் பெரும் வித்தியாசம் தெற்கில் நிலவுகின்றது என்று நடுநிலைப் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய மக்களின் இந்தப் போராட்டத்தைக் குவாத்தமாலா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின் சதியென்றும், இந்த நாடுகளின் கைக்கூலிகள் செய்யும் கலகத்தைப் பெரிதுபடுத்த வேண்டாமென்று அரசு ஆரம்பத்தில் கூறியபோதும் அதன் தொடர் நடவடிக்கைகள் வேறு கதை சொல்கின்றன.



கை கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமக்கள்; இராணுவம் செய்ததாகக் குற்றச்சாட்டு.

இந்தியர்களின் இந்தப் போராட்டம் நாட்டிற் பரவலாக அடிமட்டத்திலுள்ள சீர்கேட்டை வெளியரங்கப்படுத்தியுள்ளது. தனியார் கையில் பெருமளவு செல்வமும், நிலமும் சேருதல், நாட்டின் பல்வேறு பழங்குடியினருக்கெதிராக அரசின் இனவாதம், கட்டுக்கடங்காத ஊழல், ஏழைகளின் தொடரும் வறுமை போன்றவை நாடளாவிய பிரச்சனைகளாகும். சியாப்பாஸ் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படுகின்றது என நாடே பார்த்தபடி இருக்கின்றது. அரசமைப்பு மாற்றம் நிகழத்தான் வேண்டும், அதிகாரம் பரவப்படத்தான் வேண்டும் என்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி நடந்ததென்ன? லஸ் கசாஸ் (Las Casas) நகரில் புதுவருடக் கேளிக்கைகள் முடியும் தறுவாயில் இருந்தபோது 300 இராணுவச் சீருடை அணிந்த போராளிகள் ஏழை இந்தியர்களின் சார்பில் தாம் மெச்சிக்கோ அரசுக்கெதிராகப் போர் தொடுப்பதாகக் கோஷமிட்டபடி நகர சபைக் கட்டடத்தினுள் நுழைந்தனர். இங்குள்ள அலுவலகப் பொருள்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டுத் தீயூட்டப்பட்டன. இதே மாதிரி தெற்கின் ஒக்கோ சிங்கோ, அல்தாமிரானோவஸ், மாகறிட்ராஸ் போன்ற நகரங்கள் ஆயுதபாணிகளான போராளிகள் வசம் வீழ்ந்தன. மெக்சிக்கோவின் காவல்துறையினர் பாதுகாப்புத்தேடி மறைந்தனர். 2,000 போராளிகள் இந்தப் போரில் பங்கேற்றனர். நாலு நாள்களில் இன்னும் ஏழு பிரதான நகரங்கள் போராளிகள் வசமாயின. ஐந்தாம் நாள் மத்திய அரசு கனரக ஆயுதங்களுடன் 15,000 பேர் கொண்ட விமானப்படை உள்ளடக்கிய இராணுவத்தைச் சியாப்பாசுக்கு நகர்த்தியது. பெரும் போர் மூண்டது. திட்டமிட்டபடி நாலு நாள்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் அமெரிக்க நாடுகளில் குழப்பங்கள். ஒரு கண்ணோட்டம்

கௌத்தமாலா ( Guatemala )

32 வருடங்களாக இங்கு உள்நாட்டுப்போர் நடக்கின்றது. உயிரிழப்புக்கள் 100,000 – க்கு மேல் என்று கணக்கிடப்பட்டுள்ளன. அமைதிப் பேச்சுக்கள் சென்ற வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எல்சல்வடோர் ( EL Salvador )

இந்த நாட்டில் நெடுங்காலமாக நடந்த உள்நாட்டுப்போர் முடிந்து இரண்டு வருடமாகின்றது. ஆனால், வலதுசாரிக் குண்டர்கள் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடதுசாரிகளை இவர்கள் அண்மையில் கொன்றுள்ளனர்.

நிக்கரகுவா ( Nicaracua )

பல கட்சி ஜனநாயகம் இங்கு மீண்டும் கொண்டுவரப் பட்டாலும் இராணுவம் தொடர்ந்தும் சண்டனிஸ்ரா கட்சியின் கையில் உள்ளது. மாற்றுக் கட்சிகள் போருக்குத் தம்மைத் தயார்ப் படுத்துகின்றனர்.

வெனெசுவெலா ( Venezuela )

பல இராணுவப் புரட்சிகளும், வேறு குழப்பங்களும் இந்த எண்ணெய்வள நாட்டைத் தொல்லைப் படுத்துகின்றன. சென்ற வாரம் சிறைச்சாலை ஒன்றில் நடந்த மோதல்களில் 123 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

பெரு ( Peru )

ஒளிரும் பாதை ( Shining Path ) என்ற பயங்கரவாத இயக்கம் பல மக்களைக் கொன்றுள்ளது. அரச படைகள் வெற்றிகரமாக இவ்வியக்கத்தை நசுக்கியுள்ளனர். சென்ற வருடம் இதனால் 1,672 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு பில்லியன் பெறுமதியான பொருள் நட்டமும் ஏற்பட்டுள்ளது.

பிறேசில் ( Brazil )

இங்கு பணவீக்கமும், அரச அதிகாரிகளின் ஊழல் நடவடிக்கைகளும் தலை தூக்கியுள்ளன. அரசமைப்பு ஆட்டம் கண்டுள்ளது. மீண்டும் இராணுவப் புரட்சி வரலாமென மக்கள் அஞ்சுகின்றனர்.

ஆர்ஜென்ரினா ( Argentina )

மந்த நிலையிலிருந்த பொருளாதாரம் உசுப்பி விடப்பட்டுள்ளது. ஆனால் இறுக்கமான பொருளாதார நடவடிக்கைகள் தலைகரில் மக்கள் கண்டனப் பேரணிகள் நடத்துமளவுக்குச் சென்றுள்ளன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தமது தாக்குதலை முடித்துக்கொண்டு போராளிகள் தமது மறைவிடங்களுக்குத் திரும்பினர். ஆனால் இராணுவமோ பல மனித உரிமை மீறல்களையும் பொது மக்கள் மீது காரணமற்ற கொடூரத்தையும் நிகழ்த்தியுள்ளது. இது உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. அகோர விமானத் தாக்குதல்களில் குடிமக்கள் இறந்தனர். பெரும் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது.

சியாப்பாஸ் போராட்டம் நாடு பூராகக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மெக்சிக்கோவின் தலைநகரில் சியாப்பாஸ் மக்களுக்கு ஆதரவாக 15,000 பேர் கொண்ட கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. இடதுசாரிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சலினாஸ் அரசு மீது வசைபாடினர். இரண்டு பாரிய கார்க் குண்டுகள் தலைநகரில் வெடித்தன. ஒன்று இராணுவச் செயலகத்தின் அண்மையிலும், அடுத்தது வர்த்தக மையத்திலும் என்று செய்திகள் கூறுகின்றன. இத்துடன் தலைநகருக்கு மின்சாரம் கொடுக்கும் நிலையம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. தொலைபேசி மூலம் இன்னும் பல குண்டுத் தாக்குதல்கள் வர இருப்பதாக அரச அதிகாரிகள் மிரட்டப்பட்டனர். மெக்சிக்கோவின் பங்குச் சந்தையில் ஆட்டங் காணப்பட்டது. இதுவரை கேள்விப்படாத வீழ்ச்சி ஏற்பட்டதாகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் சலினாஸ் இரண்டு விதயான பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கவேண்டியுள்ளது, ஒன்று தெற்கில் ஆரம்பமான குழப்பம் நாடு பூராகப் பரவாமல் தடுப்பது. இங்கு எல்லாம் நலமே என்று இதுகாறும் வளர்த்து வந்த தோற்றம் கெடாமல் பார்ப்பது. இண்டாவது பொருளாதாரப் பாதிப்பு முதலீட்டாளர்கள் பின்வாங்காமல் நாட்டில் சகஜ நிலையைக் கொண்டு வர வேண்டியதின் அவசியம்; இத்துடன் அவருடைய அரசியல் கட்சியின் எதிர்காலமும் இரண்டறக் கலந்துள்ளது. 1929 ஆம் ஆண்டு தொடக்கம் ஆதிக்கஞ் செலுத்திய கட்சி இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த தேர்தல்களில் தோல்வியைத் தழுவுதல் நிச்சயம்.



உலங்கு வானூர்தி மூலம் துருப்புக்கள் இறக்கப்படுகின்றன.

ஜனாதிபதி சலினாஸ் இராணுவ நடவடிக்கைகளைத் திடீரென நிறுத்தியுள்ளார். இது முதற்கட்ட நடவடிக்கை. கடும் போக்காளரான உள்விவகார அமைச்சர் கொன்சாலெஸ் கரிடோ பதவி இறக்கப்பட்டார். இவருடைய இடத்திற்கு யோர்கே கார்பிசோ என்ற இந்திய மக்கள் அனுதாபி அமர்த்தப்பட்டார். போராளிகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த முன்னாள் தலைநகர் நகர பிதா கமாச்சோ சொலிஸ் (Camacho Solis) அரச தூதுவராக நியமிக்கப்பட்டார். இவர் விட்ட அழைப்புகளுக்குப் போராளிகள் இன்னும் பதிலிறுக்கவில்லை. கமாச்சோ ஒரு கைதேர்ந்த இராஜதந்திரி. ''யாவருக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வை யாம் காணவேண்டும்'' என்பது அவரின் நிலைப்பாடு. தொடக்கத்தில் அரசு போராளிகளை ஆயுதங்களைக் கீழே போடும்படியும், நிபந்தனையற்ற சரணாகதி அடையும்படியும் நிர்ப்பந்தித்துள்ளது. ஆனால் பின்பு இதிலிருந்து அரசு பின்வாங்கியுள்ளது வெளிப்படையாகத் தெரிகின்றது. கமாச்சோ போராளிகளை ஒரு அரசியல், மற்றும் இராணுவச் சக்தியாக ஏற்றுள்ளது இதைக் காட்டுகின்றது. போராளிகளின் பிரதிநிதிகளைத் தாம் சந்திக்கத் தயாராக இருப்பதாகக் கமாச்சோ மேலும் தெரிவித்துள்ளார். நிபந்தனையற்ற ஒருபட்ச யுத்த நிறுத்தம் அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சபாற்றிஸ்ரா தேசிய விடுதலை இராணுவத் தலைவரும், தளபதியுமாகிய கொமான்டன்றே மார்கோஸ் அவர்களை மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்து அவதூறு செய்வதையும் அரசு நிறுத்தியுள்ளது.

சியாப்பாஸ் மக்களைக் கவர அரசு சென்ற வாரம் சில காலம் பிந்திய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 20 தொன் உணவு வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. புனர்வாழ்வு நிதியமாக ஒரு மில்லியன் டொலர் தருவதாக அரசு உறுதியளித்துள்ளது. அரசு பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர மிகவும் தீவிரமாக இருப்பது இன்னுமொரு காரணத்திற்காக என்று சொல்லப்படுகின்றது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் புதிய ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கின்றது. அமைதியின்மை எதிர்க்கட்சிக்குச் சாதகமாக அமைந்துவிடும், என்றாலும் இந்தியர்களின் குறைகளைத் தீர்த்து வைப்பது எளிதானதொன்றல்ல. பாரிய சமுதாயப் பொருளாதார மாற்றம் கொண்டு வரப்படவேண்டுமென்றும், அரசியல் மாற்றங்களும் நிகழவேண்டுமென்றும் விஷயமறிந்தோர் கூறுவதில் பெரும் உண்மை உண்டு. நிலைமை இவ்வாறிருக்க போராளிகள் தொடர்ந்து பல தாக்குதல் நடத்தக்கூடிய வலிமையுடனும் கொள்கைப் பிடிப்புடனும் தமது நிலைகளிற் காத்திருக்கின்றனர்.

தொகுப்பு: உலக உலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாதம் வேரூன்றிவிட்டது.

எழுதியவர்;

— ஜோசுவா ஹம்மர் —

ஒரு காலத்தில் அமைதிக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்பட்ட சூடான் நாடு(Sudan) இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கும், சர்வதேசப் பயங்கர வாதத்தை வளர்க்கும் நாடுகளிலொன்று என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகிவிட்டது. முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த இந்த நாடு 1956 ஆம் ஆண்டு விடுதலை அடைந்துள்ளது. எகிப்துடன் பொது எல்லையை வைத்திருக்கும் இந்த நாடு இப்போது பலவிதத்திலும் எகிப்துடன் முரண்பட்ட நாடாகவே இருக்கின்றது. எகிப்து இஸ்லாமிய அடிப்படைவாதிகளை அடக்க பெரும் பிரயத்தனம் எடுக்கும் இவ்வேளையில் சூடான் பல நாடுகளிலிருந்து துரத்தப்பட்ட அடிப்படைவாதிகளுக்கும், பயங்கரவாதச் செயல்கள் புரிந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டோருக்கும் புகலிடம் கொடுத்து வருகின்றது, அண்மையில் எகிப்தில் நடந்த பல இஸ்லாத்தின் பெயரால் செய்யப்பட்ட கொலைகளுக்கு எல்லையைக் கடந்துவந்த சூடானின் விருந்தினரே பொறுப்பு எனக் கூறப்படுகின்றது.

இஸ்லாமிக் ஜிகாத் எனப்படும் பாலஸ்தீனிய இயக்கம் தனது செயலகத்தையும், பயிற்சிக் களத்தையும் சூடான் தலைநகர் காட்டுமில் (Khartoum) வைத்திருக்கின்றது.



தேசிய இஸ்லாமிய முன்னணியின் தலைவர் ஹசான் அல்-துறாபி இஸ்லாமியப் புரட்சியை நாட்டில் வேரூன்றச் செய்வதுடன், ஏற்றுமதி செய்வதும் இவருடைய பணிகளாகும்.

அது போன்று ஹாமாஸ் (Hamas) இயக்கமும் இங்கு நல்ல வரவேற்புப் பெற்றுள்ளது. ஈரான் வளர்த்துவரும் ஹிஸ்புல்லா இயக்கத்திற்கும் இவ்வாறே சூடானில் தங்க இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சூடானிலுள்ள ஈரான் தூதுவர் மஜீத்கமால் வடக்குச் சூடானில் முகாமிட்டிருக்கும் அடிப்படைவாதிகளுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று எகிப்து முறையிட்டுள்ளது. இங்கு முகாமிட்டுள்ளோரே இரவோடிரவாக எகிப்தினுட் புகுந்து பல கொலைகளைச் செய்துள்ளனர் என்பது எகிப்தின் குற்றச்சாட்டு. அண்மையில் அமெரிக்கர்கள் முகம்மது பாராஅயிடிற் என்பாருடன் சோமாலியாவில் போராடிக்கொண்டிருக்கும் போது சூடான் நாட்டுத் தருமஸ்தாபனம், தவா இஸ்லாமியா உணவு என்ற போர்வையில் போராயுதங்களை இவருக்கு அனுப்பி வைத்ததாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

1989 ஆம் ஆண்டுவரை சூடான் வாக்குப் பெட்டி மூலம் தனது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும் நாடாகவே இருந்தது. அவ்வருடம் ஜனாதிபதியாக இருந்தவர் சதிக் அல்-மாடி (Sadiq Al - Máhdi) என்பவர். பல ஊழல்கள் புரிந்தார் என்று நாடளாவிய புகார் வர, தற்போது ஜனாதிபதியாக விருக்கும் ஓமார் ஹசன் அல் பஷீர் தலைமையில் இராணுவப் புரட்சி வெடித்தது. அன்று தொடக்கம் மேற்கு நாடுகள் தாராளமாகக் கொடுத்துவந்த நிதி உதவிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. சென்ற ஆகஸ்ட் மாதம் ஐக்கிய அமெரிக்கா தயாரிக்கும் பயங்கர வாதத்தை வளர்க்கும் நாடுகள் என்ற பட்டியலில் சூடான் நாடு சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் கிடைத்து வந்த சிறிய அமெரிக்க உதவியும் நின்றுள்ளது, சூடான் இன்று சர்வதேச அரங்கில் தனித்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவுகள் இரண்டு விதமாகும். ஒன்று தனித்து விடப்பட்டு விட்டோம், நாம் சர்வதேச சமூகத்திற்கும், அதன் கோட்பாடுகளுக்கும் அடிபணிய அவசியமில்லை என்ற சுய இரக்கத்தின் பிரதிபலிப்பான சிந்தனை; இரண்டு வேறு நாடுகளின் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்கத் தயங்காமை.

மதச் சமுத்துவத்திற்கும், பொறுமைக்கும் சூடான் ஒரு காலத்தில் முன் உதாரணமாக இருந்ததுண்டு. இன்று மதவாதத்திற்கு இலக்கணம் வகுக்கும் நாடு சூடான். தெற்கு சூடான் நாட்டு முஸ்லிம் அல்லாத மக்கள் தனிநாடு கோரி யுத்தம் செய்யத் தலைப்பட்டுள்ளனர். இவர்களுடைய அபிலாசைகளை நசுக்க சூடான் அரசு பெரும் எடுப்பில் உள்நாட்டு யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது. தலைநகர் காட்டுமில் உள்ள அரச அலுவலகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள் யாவும் தமது அலுவலர்களையும், அதிகாரிகளையும் 45 நாள்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதன் பொருளாதாரப் பாதிப்புச் சிறிதளவு அல்ல. இத்துடன் நாள்தோறும் அலுவலக நேரம் முடிந்தவுடன் உடற் பயிற்சியுடன் யாவரும் இராணுவப் பயிற்சியும் செய்யவேண்டியுள்ளது. அண்மையில் நாட்டின் தொலைக்காட்சியில் இஸ்லாமிய மத விஷயங்களுடன், மேற்குலகுக்கு எதிரான பிரச்சாரமும் மேற்கொண்டு வரப்படுகின்றன,

சூடான் நாடு இன்று தேசிய இஸ்லாமிய முன்னணி (National Islamic Front) என்ற தீவிர மதச் சார்புக் கட்சியின் பிடியில் இருக்கின்றது. நாட்டின் தலைவர் அல் பஷீர் என்றாலும், இந்த முன்னணியின் தலைவர் ஹசான் அல் துறாபி (Hassan Al-Turabi) ஒரு கொமேனி போன்ற அதிகாரங்களுடன் நாட்டில் அதிசக்திவாய்ந்த மனிதராகத் திகழ்கின்றார். இவர் பிரான்சு நாட்டில் மேற்படிப்புப் படித்தவர். ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் புலமையுள்ளவர், இவருடைய கனவு ஒரு சர்வவியாபியான, புவியியல் எல்லைகளால் தடைப்படாத பரந்த இஸ்லாமாகும். இதற்குப் பலாத்காரம் தேவையெனின் பிரயோகிக்கத்தான் வேண்டும். முஸ்லிம் நாடுகளில் பதவியிலிருக்கும் அரசுகளை இரக்கமின்றித் தூக்கியெறிய வேண்டும், அவர்களின் இடத்திற்குச் சுத்தமான திருக்குர் ஆன் முறை அரசுகள் நிறுவப்படல் வேண்டும். மேலும் துறாபி இஸ்லாமின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளை வாஞ்சையுடன் நோக்குகின்றார்.

இந்தத் துறாபியின் கொள்கைகளாலும் தெற்கில் நடக்கும் உள்நாட்டுப் போராலும் சூடான் பொருளாதாரம் ஸ்தம்பித நிலையை நெருங்கிவிட்டது. மேற்குலக உதவிகள் மிகவும் சொற்பமாகிவிட்டன. உலக வங்கி, சர்வதேச நிதியம், போன்றவையும், சகல ஐரோப்பிய, அரேபிய, ஆபிரிக்க வங்கிகளும் சூடானுக்குக் கடன் கொடுப்பதை அறவே நிறுத்தியுள்ளன. நாட்டின் போக்குவரத்துச் சேவைகளும், தனியார் வாகனங்களும் எரிபொருள் தட்டுப்பாடால் அவதியுறுகின்றன. எண்ணெய் வாங்கப் பணம் இல்லை என்பதுதான் இரகசியம். கறுப்புச் சந்தையில் ஒரு கலன் பெற்றோல் டொலர் ஏழுக்கு விற்பனையாகின்றது, அரசு பெரும்பாலும் மத்திய கிழக்கில் பெரும் செல்வந்தர்கள் கொடுக்கும் நன்கொடைப் பணத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இஸ்லாமியப் புரட்சியின் தாயென வர்ணிக்கப்படும் ஈரான் சூடானுக்கு கடனுக்கு எண்ணெய் விநியோகம் செய்ய மறுத்துள்ளதென்றால் நிலைமையின் சீர்கேட்டை நாம் அளவிடமுடியும்,

ஆனால் தேசிய இஸ்லாமிய முன்னணி நாட்டின் மீது தனது பிடியை இறுக்கிக் கொண்டே போகின்றது. நாட்டின் சகல வளங்களும் அதன் கட்டுப்பாட்டில் வந்துள்ளன. நிர்வாகம், வர்த்தகம், சகல முயற்சிகளும் அதன் ஆணையின் படியே நடக்கின்றன அதன் கட்டளைப்படியே இராணுவத்திலிருந்து மதக் காரணங்களுக்காக 5,000 வீரர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அரசுக்கெதிரானவர்கள் அல்லது தீவிர இஸ்லாமியக் கருத்துக்களை ஆதரிக்காதவர்கள் கைதுசெய்யப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் மிகவும் சாதாரணமாகிவிட்டது. கல்வி இஸ்லாமிய கோட்பாடுகளுக்கமைய நடக்கின்றது. கிறிஸ்தவர்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர். இஸ்லாமிய மக்கள் பொலிசார், சகல நகரங்களிலும் திருக்குர் ஆன் விதிகளை அவமதிக்கும் குற்றங்களுக்கு உடனடி தண்டனை வழங்கி வருகின்றனர்.

அண்மையில் ஒரு மேற்குலகப் பத்திரிகையாளரின் கேள்விக்கு துறாபி பின்வருமாறு பதில் கொடுத்துள்ளார்; ''தன்னம்பிக்கைக்கும், தன்



மேற்குலக எதிர்ப்புக் காட்டும் பாதுகாப்புப் பயிற்சிகள். யாபேரும் 45 நாட் கட்டாய இராணுவப் பயிற்சி பெற வேண்டும்.

நிறைவுக்கும் எமது நாடு தகுந்த உதாரணம் எங்களிடம் பணமும் பிரச்சார யுக்திகளும் இல்லை. என்றாலும் உலக நாடுகள் பல எமது முன்மாதிரியைப் பின்பற்றுகின்றன.'' இது எவ்வளவு உண்மையென்று தெரியவில்லை. என்றாலும் மனிதனின் தன்னம்பிக்கையைப் போற்ற வேண்டியுள்ளது. இன்னுமொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் துறாபிசொல்கிறார்:'' இஸ்லாமியப் புரட்சிக்கெதிரான பிரச்சாரம் எமது நாட்டை உலகப் புகழடையச் செய்துள்ளது. இன்று எல்லோரும் எம்மைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். பயங்கரவாதத்துடன் எம்மைத் தொடர்பு படுத்துகிறார்கள். பரவாய் இல்லை''. சூடானின் இன்றைய நிலைக்கு அவர் சிறிதளவேனும் மனம் வருந்துவதாகக் காணோம். இவருடைய பணி நாட்டில் இஸ்லாமியப் புரட்சியை வேரூன்றச் செய்வதுடன் நிற்கப்போவதில்லை. இவர் இஸ்லாமியப் புரட்சியை ஏற்றுமதி செய்யப்போவதும் நிச்சயம்.

நியூஸ்வீக், ஜனவரி 10, 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்-ஆபிரிக்கா

# எதிர்காலத்தில் அதன் நிர்வாகமொழி என்ன?

இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் அரியாசனம் ஏறும் அரசியல் யாப்பு (Consti-tution) ஆங்கிலம், ஆபிரிக்கான்ஸ் (English, Afrikaans) என்ற இரண்டு ஐரோப்பிய மொழிகளுக்கும், இன்னும் ஒன்பது ஆபிரிக்க மொழிகளுக்கும் சம அந்தஸ்துக் கொடுத்துள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால் இந்த நாட்டின் நிர்வாகம், வர்த்தகம், கல்வி போன்ற சகல கருமங்களும் இந்தப் பதினொரு மொழிகளிலும் நடத்தப்படும் என்பதே. இந்த அரசியல் யாப்பில் என்ன விஷயங்கள் இடம்பெற வேண்டும், வெள்ளை கறுப்பு இன மக்களின் அரசியல் உறவுகளும், அதிகாரப் பங்கீடுகளும் எவ்வாறு அமைய வேண்டுமென்ற பேச்சுக்கள் எல்லாம் கடந்த இரண்டு வருடங்களாக ஆங்கில மொழியில் மாத்திரம் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சுக்களின் காரணமாகவே ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் புதிய சகாப்தமொன்று தென் – ஆபிரிக்காவில் பிறந்துள்ளது. அது மாத்திரமல்ல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி யாப்பு ஆங்கில மொழியிலேயே அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. பின்பு பழைமை விரும்பிகள் நிறைந்த பழைமைக்கட்சி (Conservative Party) கேட்டுக் கொண்டதற்கமைய ஆபிரிக்கான்ஸ் மொழிப்பெயர்ப்பொன்று அச்சாகி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்காவில் இரண்டு மொழிகளைப் பேசும் வெள்ளை இனத்தவர்கள் இருக்கின்றனர்.



சமையல் அறை மொழியாக தென் – ஆபிரிக்காவின் ஆபிரிக்கான்ஸ் மொழி மாறிவிடும். ஆனால் இப்போது பள்ளிக்கூடங்களில் கட்டாயமொழியாக ஆபிரிக்கான்ஸ் படிப்பிக்கப் படுகின்றது.

இங்கிலாந்திலும் அதை ஒட்டிய நாடுகளிலுமிருந்து முதல் ஆட்சியாளர்களாகவும், பின்பு குடியேற்ற வாசிகளாகவும் வந்தவர்களின் மொழி ஆங்கிலம், 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்து நாட்டில் இருந்து ஆட்சியாளர்களாகவும், குடியேற்ற வாசிகளாகவும் வந்தவர்களின் டச்சு (Dutch) தாய்மொழியிலிருந்து பிறந்த மொழி தான் ஆபிரிக்கான்ஸ் மொழி. உலகின் வேறெங்கிலும் இம் மொழி பேசப்படுவதில்லை. இது குன்றி வரும் மொழிகளில் ஒன்று. ஆனால் அப்பாதைட் (Apartheid) எனப்படும் வெள்ளையர்களின் மேலாதிக்க ஆட்சியின் சின்னமாகவே இம்மொழி விளங்கி வந்துள்ளது. உலகமொழிகள் பலவற்றுள் கலந்துவிட்ட அப்பாதைட் என்ற இந்த நிந்தனைச் சொல் ஆபிரிக்கான்ஸ் மொழியின் உபயமாகும். தென் ஆபிரிக்க மக்களில் ஏழு பேருக்கு ஒருவர் தான் ஆபிரிக்கான்ஸ் மொழி பேசுபவராக இருந்தும் இதுவரை காலமும் ஆட்சி அவர்கள் கையில் இருந்து வருகின்றது. பல்வேறு மொழி பேசும் கறுப்பின மக்களும், தமிழர் உட்பட இந்தியர்களும் தென் ஆபிரிக்க் நாட்டில் தமக்குள் ஆங்கில மொழி மூலமாகத் தொடர்புகளை வைத்திருக்கின்றனர். சோசா மொழி பேசும் நெல்சன் மண்டேலா அவர்கள் ஆங்கிலத்திலேயே தனது நாளாந்திர அரசியல் அலுவல்களையும், பெரும் பகுதியான மேடைப் பேச்சுக்களையும் நடத்துகின்றார். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ், இதுவே கறுப்பின மக்களின் மிகப் பெரியகட்சி, தனது அலுவல்களை ஆங்கிலத்தில் மாத்திரம் நடத்துகின்றது.

ஆபிரிக்கான்ஸ் மொழி வெள்ளை இனத்தவர் காட்டிய நிறத்துவேஷத்தின் சின்னமாகக் கருதப்படுவதால் கறுப்பின மக்கள் அதை வெறுத்து ஒதுக்குகின்றனர். அவர்கள் வெள்ளை இன ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதங்களிலொன்றாக ஆங்கிலத்தை ஏற்றுள்ளனர். நெல்சன் மண்டேலா பன்னெடுங் காலம் சிறையில் கிடக்கும் போது ஆபிரிக்கான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைக் கற்றுப் புலமை பெற்றார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மொழி அறிவை அவர் ஓர் அரசியல் யுக்தியாகவே பயன்படுத்தியுள்ளார். ஆபிரிக்கான்ஸ் மொழி பேசும் ஆளும் வர்க்கத்தினருடன் பேசுவதற்கும், கறுப்பினத்தவர்கள் ஆட்சிக்கு வந்தால் ஆபத்து என்ற பயத்தைப் போக்குவதற்கும் மண்டேலா இந்தப் புலமையைப் பயன்படுத்தியுள்ளமை வெளிப்படை.

அரசியல் சாசனம் பதினொரு மொழிகளுக்கு இடம் கொடுத்திருந்தாலும் இது நடைமுறையில் சாத்தியமற்றபடியால், பெரும்பான்மையானோர் ஆங்கிலத்தை விரும்பும் காரணத்தால் இம்மொழியே நாளடைவில் தேசிய மொழியாகிவிடும் என்பது திண்ணம். வெள்ளையர்கள் பதவி வகித்த தென் ஆபிரிக்கப் பாராளுமன்றத்தில் ஆபிரிக்கான்ஸ் மொழி முதல் ஸ்தானமும், ஆங்கிலம் நெருங்கிய இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. இனிவரும் புதிய ஏற்பாட்டில் ஆங்கிலம் முன்னிடத்திற்கும் ஆபிரிக்கான்ஸ் பின்னிடத்திற்கும், தள்ளப்படுவதும் உறுதியாகி விட்டது. வெள்ளை இன ஆதிக்க வீழ்ச்சியுடன் ஆபிரிக்கான்ஸ் மொழியின் வீழ்ச்சியும் இரண்டறக் கலந்துள்ளது.

ஆனால் ஐந்து மில்லியன் ஆபிரிக்கான்ஸ் மொழி பேசுவோர்கள் தம்மொழி மெல்லச்சாக விட்டுவிடுவார்களா? ஆபிரிக்கான்ஸ் மொழி ஆணைக்குழு (Afrikaans Language Commission) என்ற மொழிக்காப்பு இயக்கம் பேராசிரியர் யோகான் கொம்பிறீன்க் அவர்கள்தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. "சகல தொழில்களிலும் அரசியல், விளையாட்டு, விஞ்ஞானத்துறைகளிலும் எம்மொழி உதாசீனம் செய்யப்படுகின்றது. நாம் விழிப்பாக இருக்காவிட்டால் இருபது வருடங்களில் இது ஒரு வீட்டு மொழியாகி விடும். எமது மொழியைப் பயன் படுத்தாத ஸ்தாபனங்களை நாம் பகிஸ்கரிக்க வேண்டும்" என்று அண்மையில் இவர் கொள்கைப் பிரகடனம் செய்துள்ளார்.

மொழி விஷயத்தில் இன்று தென்-ஆபிரிக்காவில் நடப்பதென்ன? தொலைக்காட்சியில் ஆங்கிலமும், ஆபிரிக்கான்சும் இதுவரை காலமும் சமநேரம் பெற்று வந்துள்ளன. ஆனால் இது ஆங்கிலத்திற்குச் சாதகமாக மாறத் தொடங்கியுள்ளது. பள்ளிக்கூடங்களில் இப்போது ஆங்கிலமும், ஆபிரிக்கான்சும் கட்டாயபாடங்களாகப் போதிக்கப்படுகின்றன. ஆனால் இம்மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் வகுப்பில் ஆங்கிலத்தைப் பிரயோகிக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. கறுப்பினத்தவர் கைகளுக்கு ஆட்சி மாற ஆபிரிக்கான்ஸ் மொழி கட்டாய பாடமாகப் போதிக்கப்படுவது சந்தேகமே. தென் ஆபிரிக்காவின் தேசியப் புகையிரதம் தனது நுழைவுச் சீட்டுக்களை ஆங்கிலத்தில் மாத்திரம் பிரசுரித்துள்ளது. வர்த்தக மொழியாக ஆங்கிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது ஆபிரிக்கான்ஸ் மொழிக்கு வீழ்ந்த பெரியதோர் அடியாகும். சென்ற நவம்பர் மாதத்துடன் கொக்காக் கோலா போன்ற சர்வதேச நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புக்களில் ஒட்டப்படும் துண்டுகளில் ஆங்கிலத்தை மாத்திரம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. ஆனால் ரோயோட்டா கார் கொம்பனி தொடர்ந்தும் ஆபிரிக்கான்ஸ் மொழியைப் பயன்படுத்தப் போவதாக விளம்பரம் செய்துள்ளது, தென் ஆபிரிக்காவுக்கெதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டுள்ளபடியால் ஆங்கிலப் பிரயோகம் விரிவுபடுத்தப்படுவது திண்ணம். நெல்சன் மண்டேலாவும், அவருடைய ஆபிரிக்கத் தேசிய காங்கிரசும் மொழி விஷயத்தில் மென்போக்கைக் கடைப்பிடித்தாலும் அடிமைச் சின்னமான ஆபிரிக்கான்ஸ் மொழியைச் சாதாரண கறுப்பினத்தவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்பது தெளிவாகத் தெரிகின்றது.

நியூஸ்வீக், ஜனவரி, 10, 1994


## 1994 ஹொண்டா அக்கொட்

இவ்வருடத்திற்கான புதிய தெரிவு, மிகவும் கவர்ச்சிகரமான, மிடுக்கான தோற்றத்தைக் கொண்டது, இதன் அடிப்படை விலை 14, 130 டொலர்களில் இருந்து தொடங்குகிறது. இது 1993ஆம் ஆண்டு மொடல்ற்குச் சமமானது. 50வீதம் செலவைக் கட்டுப்படுத்தக்கூடியது. நான்கு வருடங்களுக்கு முந்திய சில மாதிரி உதிரிப்பாகங்களும் பொருத்தப்பட்டுள்ளன. நவீன மாதிரிகள் உறுதியானவை; இதில் பயணம் செய்யும்போது மோட்டார் வேலை செய்வதை மறந்து தொடர்ந்து ஓடக்கூடிய மாதிரி இதன் இரைச்சல் சத்தமே கேட்காது. 320,000 வரையில் விற்பனையாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒகியோ உற்பத்தியான சொகுசு மோட்டார் வாகனங்களும் இதனுள் அடங்கும். 1993 இல் இம்மாதிரி 290,000 வாகனங்கள் சந்தைப்படுத்தப்பட்டன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தான், உங்கள் வாழ்க்கையாக இருக்கலாம்

## இலத்திரனியல் நாட்குறிப்பு - வெளிவந்து விட்டது.

உங்களது சிறந்த நண்பரின் பெயரையும், புதன்கிழமைகளில் நீங்கள் செல்ல விரும்பும் விடுதியையும், அப்பிள் கணனியில் உள்ள நியூட்டன் தகவல் ஏடு (Newton Message Pad) அறியும். நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு வாகனத்திலிருந்து, ஈஓ வினாற் தகவல் அனுப்ப முடியும் என, (AT &T) கூறுகிறது. '' வாழைப்பழம்—banana '' என்ற சொல்லை, இந்தோநேசியன், யிடிஷ், எஸ்பேறன்ரோ உட்பட 26 மொழிகளில், (Zoomer) இனால் மொழிபெயர்க்க முடியுமென காஷியோ (Casio) கூறுகிறது. மொழிபெயர்ப்பில் ஈடுபடும் அதே வேளையில், இச் சாதனம் உங்களது கணக்குகளையும் சரிபார்த்துக் கொள்ளும். அதி திறமைபடைத்த குழந்தைகளைப் பற்றிப் பறைசாற்றும் பெருமிதங் கொண்ட பெற்றோர்களைப் போல, கணனி நிறுவனங்கள் '' Personal Digital Assistants '' (PDA) முதற்றொகுதிக் கருவிகளால் விளையவிருக்கும் பெரும்நன்மைகள் பற்றி விளம்பரப் படுத்தப்படுகின்றன. இம்மினிக் கணனி தயாரிப்பாளர்களின் கருத்துப்படி, பாதையொன்றிற் பயணம் செய்யும் போது, விளையாட்டு நிகழ்வொன்றை அவதானித்துக் கொண்டிருக்கும் போது, அல்லது பூங்காவொன்றிற் சுற்றுலா 'மேற்கொள்ளும் போது தகவல்களைப் பரிமாற்றஞ்செய்ய முடியும்.



Casio
கசியோ
Z 7000
$ 699 டொலர்கள்
1 இறாத்தல்
மொழிபெயர்ப்புக் கருவி உட்பட, கொம்பியூட்டர் நிகழ்ச்சித் திட்டச் சாதனங்கள் இதில் அடங்குகின்றன.

எவ்வாறெனினும், அது வாக்குறுதியே. வளர்ந்து வரும் பீ. டீ. ஏ தொழிற்சாலையானது, ஏறத்தாழ அரை டசின் வித்தியாசமான வகையான சாதனங்களைச் சந்தைக்கு விட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில், மேலும் சாதனங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளது. இதனால், இந் நிறுவனத்திற்குச் சிரமங்கள் ஏற்பட்டது உண்மைதான்.

நன்கு பிரசித்திபெற்ற பீ.டீ.ஏ நியூட்டனை எடுத்துக் கொள்ளுங்கள். ஆகஸ்ற் மாதம் அறிமுகப் படுத்தப்பட்டது. நவீன முறையில் இக்கருவி இயக்கப்படவல்லது. பாவனையாளரது விருப்புக்கள், பழக்கவழக்கங்களைக் கருவி அறிந்து கொள்வதற்கு இது உதவும். நவீனப் பொறியியல் விசிறிகளிடம் இச்சாதனம் மதிப்பைப் பெற்றுள்ளது. நியூட்டன், எல்லோருக்கும் எட்டக்கூடியதல்ல. அதன் விலை மிக உயர்ந்தது. அடிப்படை அலகொன்றுக்கான விலை 699 டொலராகும். அத்துடன், கொம்பியூட்டர் நிகழ்ச்சிகள் அடங்கிய ஒவ்வொரு தொகுதியும் 50 விருந்து 100 டொலர் வரையில் விலை போகின்றன.

முதல் இரு மாதங்களில் மட்டும், 50, 000 இற்கும் மேற்பட்ட கருவிகளை விற்றுவிட்டதாக அப்பிள் நிறுவனம் கூறுகிறது. '' சிலிக்கன் வலி '' தொலைத் தொடர்பு நிறுவனத்தின் ( Silican Valley Telecommunications) மேலதிகாரியான ஜோன்செபில், முதன் முதலாக வெளிவந்த நியூட்டன்களில் ஒன்றை வாங்கினார். ஒருவாரகாலத் தீவிர பயன்பாட்டின்பின், அக்குறிப்பு ஏட்டை எறிந்துவிடுவதற்கு அவர் சித்தங் கொண்டார். நியூட்டனுடன் அவர் செலவிட்ட ஆரம்ப நேரங்கள், முழுச் சித்திரவதையாகவே தொடர்ந்தும் விளங்கின. '' அதை, யன்னலுக்கு வெளியே எறிந்துவிட விரும்பினேன் '' என அவர் கூறுகிறார். '' வெடிகுண்டொன்றைத் தந்திருப்பீர்களாயின், அக்கருவியைத் தகர்த்திருப்பேன் '' என்கிறார் மேலும் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன



AT & T EO.
$ 2,000 டொலர்கள்
3 இறாத்தல்கள்.
இது ஒரு தொலைபேசி! இது ஒரு ஃபாக்ஸ்! இது ஒரு திட்டமிடற் கருவி! அத்துடன், இது மிகப் பெரியதும், விலை மதிக்கமுடியாத பீ. டீ. ஏ கருவியும் ஆகும்.

பீ. டீ. ஏ கருவிகள்இருப்பதை, கோடிக்கணக்கான நுகர்வோர்கள் அறிவார்கள். இருந்தும், இக்கருவிகள் இயங்குகின்றனவா? அல்லது, மக்கள் ஏன் அவற்றை விரும்புகின்றார்கள்? என்பதையிட்டு, அவர்கள் உறுதியாகவில்லை. ''அவப் பெயருடன் சந்தையை அது களங்கப்படுத்தவில்லை'' என நாம் நம்புகின்றோம்'' எனக் கூறுகிறார் ஏ.எஸ்.ரீ ஆய்வு நிலையத்தைச் சார்ந்த லோறன் பேக்கர். கணனி, மற்றும் கணனி நிகழ்ச்சிக் கருவிகள் தயாரிப்பிலீடுபடும் இந்நிலையம், தனது பீ.டீ.ஏ கருவிகளை அடுத்த வருடம் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றது. நியூட்டனிலிருந்து, தமது பீ. டீ. ஏ கருவிகள் வித்தியாசமானவை எனக் கூறுவதன் மூலம், ஏனைய உற்பத்தி நிறுவனங்கள், நியூட்டனின் பிரதிகூலங்களைத் தமக்குச் சாதகமாக்க முயற்சி செய்கின்றன. உதாரணமாக, கசியோ நிறுவனத்தின் தயாரிப்பான (Zoomer) இன் விலையும், நியூட்டனின் விலையும் ஒன்றே. ஆனால், (Zoomer) சாதனத்தில் நிகழ்ச்சிகள் நிரம்பியுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் அமெரிக்கத் தொடர்புச் சேவை, இலத்திரனியல் நூற்சேவை போன்றன உள்ளடங்கும். பிரித்தானிய உற்பத்தி நிறுவனமான அம்ஸ்ற்றொட் (Amstrod), தனது (Pen Pad) கருவி பயன்படுத்துவதற்குச் சுலபமானதெனக் கூறுகிறது. ஏனெனில், இது ஒரு பாரம்பரிய ஒழுங்கமைப்புக் கருவி வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கீழ்ப்புறப் பக்கத்தில் ஒரு விசேட பேனா முனையினாற் தொடும்போது, ஒரு நாட்காட்டி அல்லது, விலாசப் புத்தகம் அங்கே தென்படும்.

## Wireless Faxing:

### PDA பற்றிய கருத்துக்கள்

ஒப்பீட்டு ரீதியிற் புதியனவாயிருப்பதால், அவை பற்றிய வரைவிலக்கணங்கள் தொடர்ந்தும் தெளிவற்றனவாய் இருக்கின்றன. AT & T நிறுவனம் தனது EO சாதனத்தை, ''தனியாள் தொடர்புச் சாதனம்'' என வர்ணிக்கின்றது. இச்சாதனத்துடன் இணைந்துள்ள Cellular Phone, Wireless faxing என்பவற்றின் மீது முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஏனைய P. D .A கருவிகள் போல, EO கருவியிலும் ஒரு நாட்காட்டி, விலாசப் புத்தகம் இருக்கின்ற அதே சமயம், அது அதிகபட்சம் நடமாடும் தொலைபேசி, Pagers போன்றவற்றின் சேவையை வழங்குவதாகவே காணப்படுகிறது. இதன் விலை 2,000 டொலர்கள். இலத்திரனியல் விளையாட்டுப் பொம்மைகளை விரும்பும் உயர் அந்தஸ்துடைய மேலதிகாரிகளே, இதன் இயல்பான பாவனையாளர்கள்; சராசரிப் பாவனையாளர்கள் அல்லர். Bell South Cellular Corp நிறுவனத்திற்காக, I. B. M இனால் வடிவமைப்புச் செய்யப்படும் Simon கருவியானது, மற்றொரு தொலைபேசிசார் P. D. A ஆகும். இது அடுத்த மாதம், 1,000 டொலருக்கும் குறைவான விலையில் விற்பனைக்கு வரவிருக்கிறது. இக்கருவி, Key pad இன் மேலாகச் சிறிய திரையைக் கொண்ட நடமாடும் தொலைபேசியைப் போலத்(Simon) தோற்றமளிக்கிறது. Psion's series 3a ($499) என்பது, மற்றுமொரு கருவியாகும். ஏனைய P. D. A கருவிகள் போல, இது பேனா சார்பானது அல்ல; பதிலாக இதனைப் பயன்படுத்துவோர், ஒவ்வொரு கையினதும் ஏறத்தாழ இரு விரல்கள் கொள்ளக் கூடிய சிறிய கீபோட் (Key Board) இற் தட்டுவார்கள். Psion, உண்மையிலே உள்ளங்கையிற் தாங்கக் கூடிய ஒரு கொம்பியூட்டர் ஆகும். இதில், சொல்லாக்கி (Word Processor) Spread Sheet. கல்குலேற்றர், தேச மணிக்கூடு என்பன உள்ளன.



SHARP
ஷாப்
Expert Pad
$ 699 டொலர்கள்
15 . 5 அவுன்சுகள்
நியூட்டனைப் போன்ற ஓர் இயந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அழகான வண்ணங்களிலும், அற்புதமான
டிசைன்களிலும் தரமான புடவைகளை
உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்ய

# மகாராணி புடவை அகம்

அழகின் ஆரம்பம் அழகுசாதனப் பொருட்கள் மூலம் உலகெங்கும்!
உங்கள் தங்கமேனியின் இரகசியம் ........ *சோமன்ஸ்*
அழகு சாதனப் பொருட்களின் உபயோகம்!!

உங்கள் அழகின் இரகசியத்தை
நீங்களும் நேசியுங்கள்

## மகாராணி புடவை அகம்

50, பெரிய கடை,
*யாழ்ப்பாணம்.*

## சோமன்ஸ்

48, கஸ்தூரியார் வீதி,
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலசரக்கு மாளிகை

மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அரிசி முதல் பருப்பு வரையான பலசரக்குகளை மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்வது

## ★ சேகர் வர்த்தக நிலையம் ★

தரமான, நயமான பலசரக்கு வகைகளுக்கு நாடவேண்டிய இடம் இதுவே!

முகவரி:

**சேகர் வர்த்தக நிலையம்**

மகேசன் வீதி, மானிப்பாய்.

---

நாங்கள் உங்கள் உணவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம்.

நாங்கள் சொல்லவில்லை

வாடிக்கையாளர்கள் சொல்கிறார்கள்.

நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்

அப்பொழுது தெரியும்.

உங்கள் உணவிற்கு நாங்கள்

உத்தரவாதம் அளிக்கின்றோம்

## ஜோ. எகட்டனின் ஜெரித்தாரா உணவகம்

சுண்டுக்குளி.

( சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிள் நிறுவனம் கூட, நியூட்டன் கருவியின் Handwriting recognition மீது அதிகளவு முக்கியத்துவத்தை இப்போது தரவில்லை. பதிலாக, நியூட்டன் கருவியினுள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்ளேயும் அனுப்பப்படும் கம்பியில்லாத் தந்திக் தகவல்கள் பற்றியே கம்பனி பேசுகின்றது. இத்தகவல்களில், தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட்ட பொருள் இருப்புப் பற்றிய தகவல், அல்லது, வேலையிலிருந்து வீட்டுக்கு வரும் வழியிற் பால் எடுத்து வருவதற்கான பாரியாரின் ஞாபகமீட்டல் என்பனவும் அடங்கும். ''கையெழுத்திற் தங்கியிராதபென்மேலும் நிகழ்ச்சித் திட்டங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன'' எனக் கூறுகிறார், நியூயோர்க் ஆலோசனைச்சேவை நிறுவனத்தின் தொழில்நுட்பவியற் குழுவினரில் ஒருவரான றிச்சார்ட் சபர் என்பவர். ''இக்கருவிகளை இறுதியாக, தொடர்புச் சாதனங்களாகவே காண்கின்றேன்'' என, அவர் மேலும் கூறுகின்றார். பீ. டீ. ஏ கருவிகளின் தோற்றமும் கணிசமான அளவிற்குமாறவுள்ளது. அநேகமாக முப்பது, நாற்பது வயதுடைய, தாராள வருமானமுள்ளவர்களே இவ்வகையான புதிய தயாரிப்பை வாங்குகிறார்கள். ஓர் இன்டெக்ஸ் காட் (Index Card) இன் பரிமாணத்தையுடைய இதன் திரை, சிறுபிள்ளைகளுக்கு ஏற்புடையதாக அமையவில்லை. அடுத்த வருடம், நியூட்டன் கருவியிற் பெரியதிரை காணப்படும் என அப்பிள் நிறுவனம் கூறுகிறது.

எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் பீ. டீ. ஏ கருவிகள் மூலம், இரு வேறுபட்ட குடும்பங்கள் உருவாகும். உயர் மின்னழுத்தம் கொண்ட திகதிப் புத்தகங்கள், தொடர்புச் சாதனங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தும் பல்வேறு வகைப்பட்ட பாவனையாளர், அத்துடன் விசேட தேவைகளுக்காக உருவாக்கப்படும் இயந்திரங்களும் காணப்படும். உதாரணமாக,



AMSTRAD
பீடீஏ 600
$ 499 டொலர்கள்
14 அவுன்சுகள்
பாரம்பரிய நாட்குறிப்புப் புத்தகம் (Date Book) போன்ற வடிவமைப்புடையது. நீங்கள் எழுதுவதை, இச்சாதனத்தால் அறிய முடியும்.

பெற்றோரின் ஆயுட் காப்புறுதிக்கான விண்ணப்பப் படிவங்கள், கட்டணத் தகவல்கள் என்பவற்றுடன் கூடிய இயந்திரமொன்றைக் காப்புறுதி முகவர் ஒருவராற் பயன்படுத்த முடியும். வாடிக்கையாளரின் வீட்டிற் காப்புறுதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்பு, ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம், பீ. டீ. ஏ கருவியினால் அவ்வுடன்படிக்கையைப் பிரதம காரியாலயத்திற்கு அனுப்பமுடியும். ''கறன்சி'' வியாபாரிகள், பிந்திய நாணயப் பெறுமதிகளை இக்கருவி மூலம் அறிந்து கொள்ளமுடியும். ஒரு நோயாளியின் முழுமையான மருத்துவக் குறிப்புக்களை, ஒரு வைத்தியன் அறிந்து கொள்ளவும் இக்கருவி உதவும்.

## புதிய கணனி நிகழ்ச்சித் திட்ட அமைப்புக்கள்:

பீ. டீ. ஏ கருவிகளுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு, பல கணனி நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளர்கள் ஏற்கனவே முயற்சியில் இறங்கியுள்ளார்கள். அடுத்த வருடம், 400 இற்கும் மேற்பட்ட புதிய விண்ணப்பங்களை எதிர்பார்ப்பதாக அப்பிள் நிறுவனம் கூறுகிறது. இதோ! சில சுவாரஷ்யமான தகவல்கள்:- பீற்றர் ஜெனிங்ஸ் போல, இயந்திரத்திலிருந்து வெளிப்படும் பேச்சொன்றை நீங்கள் வாசிக்க உதவும் ஒரு சிறிய (Tele - Prompter) கருவி, ஒரு கல்குலேற்றர், ஒரு குழந்தைப் பராமரிப்பாளருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படல் வேண்டும்? என்பது தொடக்கம், குறிப்பிட்ட உடல் அப்பியாசத்தின் போது எவ்வளவு கலோரி செலவிடப்படுகிறது? கொழும்புத் தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்படும் புதிர்ப்போட்டி போன்றன வரை, பல விபரணங்களை வெளிப்படுத்துகிறது. இது Institute Fcr TheFuture என்ற நிறுவனத்தினைச் சார்ந்த (Saffo) என்பவர் சொல்வது போன்று, 1984 இல் சாதாரண மக்களும் சொந்தக் கணனிகளைப் பயன்படுத்தத் தொடங்கியமை போல, 1995 இல் பீ. டீ. ஏ. கருவிகள் பாவனைக்கு வரும். அது வரை, உங்கள் Day – Timer சாதனத்தைக் கைவிட்டு விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் மீது ஒரு கண்ணோட்டம்

## துணைக்கோள்கள், எதிர்காலத்தை எவ்விதம் வடிவமைக்கப் போகின்றன?

இங்கிலாந்திலுள்ள அபெடீன் பல்கலைக்கழகத்து உயிரியல் விஞ்ஞானி மாட்டின் கோமன், பிரான்ஸிலே கணனியைச் செயற்படுத்தி ஓர் இலக்கத்தினைத் திருப்பினால், தென்னாபிரிக்காவிற் காட்டு விலங்குகளாய் அலைந்து திரியும் ஆபிரிக்க நாய்களின் கூட்டம் ஒன்றை அவரால் காணமுடியும். தாய்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், வங்காள விரிகுடாவிலே ''விரைந்து மழையைப் பெய்வித்தல்'' பற்றித் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தெற்கு லண்டனில் ஒரு கம்பனி 'பெலிஸ்' என்ற கடற்பிரதேசத்தின் பவளப் பாறைகளைப் புவியியற் படமாக்குவதில் இத்தகைய துணைக்கோள் ஈடுபடக் கூடியதாகும்.

விண்வெளியிலே செயற்படுத்தப்படும் கருத்து நிலை சார்ந்த இத்தகைய உருவகச் செய் திட்டங்களால் விளையக்கூடிய பயன் என்ன? ஸ்புட்னிக் - 1 என்ற பெயர் கொண்ட சிறிய துணைக் கோள்ஒன்றை முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்பு பூகோளப் பாதையிலே நிறுவியதைத் தொடர்ந்து, விண்வெளி அவதானிப்பு என்பது விஞ்ஞானிகளினதும், எதிர்கால நோக்கினரதும், வானிலை ஆய்வாளரதும், நிலப்படவரைவாளரதும், திட்ட உருவாக்கர்களதும் நாளாந்தத் துணைக் கருவி ஆகிவிட்டது. 2,030 துணைக் கோள்கள் இன்று பூகோளப்பாதையில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெறப்படும் தகவல்கள், உலகம் பற்றியும், உலகு வாழ் உயிரினங்கள் பற்றியுமான எமது விளக்கத்திற் பல கருத்து மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. 'லைக்கஓன் பிக்ரஸ்' என்னும் பெயர் கொண்ட ஆபிரிக்கக் காட்டு நாய் இனம், மத்திய ஆபிரிக்காவின் ஏரிப் பிரதேசம் தொடங்கி, தெற்கே நன்னம்பிக்கை முனை வரை பரந்து பெருமளவில் வாழ்ந்து, இன்று அந்த உயிரினம் அந்தப் பகுதிகளில் அருகி வருகிறது. இன்று, அவற்றில் எஞ்சியிருப்பவை சுமார் 5,000 மட்டுமே இந்தக் காட்டு நாய் இனம் பற்றி ஆராய்ந்து, அவற்றின் உயிர் வாழ்வை எந்த அளவிற்கு உறுதி செய்யலாம் என்ற முடிவினை மேற்கொள்ள முயன்று வரும் கோமன், ''இவை ஆபிரிக்காவின் மிகப்பயங்கரமான ஊனுண்ணிகள்'' என்கிறார்.



கால் நடையாகவோ, வாகனங்களிற் சென்றோ, ஒரு தொகுதியை ஆராய்வது நடைமுறைச் சாத்திய மற்றிருக்கையில், ஆய்வுக் கூடத்திலேயே இருந்தபடி, துணைக் கோள்கள் மூலம் ஆய்வு நடத்துவது இன்று சாத்தியமாகியுள்ளது. ஒரு தொகுதியிலிருந்து ஒரு நாயைத் தனித்துப் பிரித்து, அதன் மீது எறி ஊசிமூலம் (இலக்கு நோக்கி ஊசியை எறிந்து) ஃபெற்றாங்குயிலை சர் எனப்படும், உணர்ச்சியைச் சாந்தப்படுத்தும் மருந்தினைச் செலுத்த முடியும். பின்பு அது வானொலி நாடாவிலும், ஏரியலிலும் பொருத்தப்பட்டு, சமிக்ஞைகளின் மூலம் கால நிலை ஆய்வு நிறுவனத்திற்கும், துணைக்கோளின் காலநிலை எதிர்நோக்கு நிலையத்திற்கும்- அவை பூமிக்கு 500 மைல் மேலே அமைந்திருக்கும்- அறிவிக்கப்படும் இவ்வறிவிப்பு, துணைக்கோளிலிருந்து பிரான்ஸிலுள்ள ருஓலோஸ் தரை நிலையத்திற்கு அறிவிக்கப்பட, சாதாரணத் தொலைபேசி மூலம் அச் செய்தி கோமனுடைய அபெடீன் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் கூடத்திற்குத் தெரிவிக்கப்படும். இவ்வாய்வுகள் மூலம், அருகி வரும் காட்டு நாய் இனத்தை அவற்றின் பயங்கரத்திலிருந்து விடுவித்து, பேணி வருவது சாத்தியமாகும்.

ஆபிரிக்கக் காட்டு நாய் இனம் போலவே, பல்வேறு காரணிகள் பவளப்பாறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அழிவைத் துரிதப்படுத்து கின்றன. இவை உல்லாசப் பயணிகளின் கவனத்திற்கு உள்ளாகியுள்ளதால், அழிவினின்றும் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். இந்த முயற்சியின் முன்னோடியாக, பவளப்பாறைப் பிரதேசத்தின் புவியியற்படத்தை வரைந்து கொண்டு, அப் பிரதேசத்தினைப் பாதுகாத்து, அடுத்த கட்டமாக உல்லாசப் பயணிகளின் பார்வைக்கான கடற்பூங்காவாக உருவாக்குவது அவசியம். சுழியோடிகள் மூலம் படம் வரைவிக்கும் முயற்சி நீண்ட காலமாக எடுக்கப்பட்டு, அது செயல் முறையில் அதிக பயன் அளிக்கவில்லை 'பெலைஸ்' அரசின் கடற்பகுதியிலே, உலகிலேயே இரண்டாவது 'கடற்பூங்கா' மிக அழகான முறையில் அமைக்கப்பட வாய்ப்பு உள்ளது. இது, அவுஸ்திரேலியாவின் பவளப் பாறைப் பூங்காவிற்கு அடுத்த இடத்தை வகிக்கும் தகுதி உடையதாகும். இதனைச் சாத்தியமாக்க, துணைக்கோள்களின் உதவியோடு, பவளப்பாறைப் பிரதேசத்தினைப் புவியியற் படமாக வரைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வில், லண்டனிலுள்ள ஆய்வுக் கூடம் ஈடுபட்டுள்ளது. அது, கடற்கீழ் அளவைகளை எடுத்து வருகிறது. இதற்காக, பெலைசிற்குச் சென்று அளவைகள் எடுப்பதும், படம் வரைவதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வளவீடுகள், துணைக்கோளின் மூலம் கருத்துருவம் செய்யப்பட்டவற்றோடு ஒப்பீடு செய்து சரிபார்க்கப் படுகின்றன.

துணைக்கோள் படிமங்கள் ( Satellite Images ) மூலம், பெறுமதி வாய்ந்த கனிமங்களை (Minerals ) மலைப் படிவுகளிலிருந்து தனிப்படுத்தி அறிந்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு. இந்த ஆய்வின் முன்னேற்றத்திற்கு. நாசாவின் ஜெற் உந்து ஆய்வுக்கூடமாக இயங்கும், கலிபோர்னியாவின் பசடேனா ஆய்வுக் கூடம் முயன்று வருகின்றது. இம் முயற்சியின் முன் மாதிரிப் பறத்தலுக்காக, U–2 உளவு விமானம் பயன்படுகிறது. இந்த ஆய்வின் பயனாக, ஐரோப்பிய விண்வெளி அளவு முகவத்தின் ஆணைக்கோள் அமைப்பு, 2,004 இல் விண்வெளி சென்று தொடர் ஆய்வு நிகழ்த்தக்கூடிய சாத்தியம் உண்டு. இது, ஒரு புரட்சிகரமான எதிர்நோக்கலாகும்.

தரையிலிருந்து, 200 ஒலி அலை தொலைவிற்குக் கதிர் வீச்சினைச் செலுத்தி, தாழ்நிலைச் சிவப்பு நிறத்திலிருந்து பார்வைக்குப் புலனாகும் வெளிச்சத்தினூடாக, பாறைகளின் படிவங்கள் பற்றிய விபரமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் நோக்கம், பல்



லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறைகளிலே படிவுகளாய்ப் பதிந்து விட்ட பலவகை உலோகங்கள், தங்கம் உட்பட உள்ளமையைத் தெளிவாகக் கண்டு கொள்வதே. எரிமலைகளின் வெடிப்புக்கள், கெந்தகம் நிறைந்த நீரினைச் செலுத்தி அவற்றின் அடித் தளத்தைக் கொதிக்க வைப்பதால், கெந்தகக் காடியை உருவாக்கலாம். இந்தக் கெந்தகக்காடி, கனிமப் படிவுகளை உண்டாக்க வல்லது. அது, வெடிப்புக்களிடையே கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தி, படிவுகளை வெளிக்கொணரும். இதனால், நிலவியல் நிபுணர்கள் நிலத்தரை மீது மேலும் பல ஆய்வுகளை நிகழ்த்தும் சாத்தியத்தை ஏற்படுத்தும். வளர்முக நாடுகளுக்கும், துணைக்கோள் படிமங்கள் பலவகையான நன்மைகளையும் விளைவிக்க வல்லன. முகில் விதைப்பு மூலம் ( Seeding Clouds ) செயற்கை மழையினைத் தாய்லாந்து ஏற்படுத்த வாய்ப்பு உண்டாகும். இதனால், மழை குன்றிய காலங்களிற் பயிர் விளைச்சலுக்குப் போதிய நீர் கிடைக்கும். றேடார் மூலம் செயற்கை மழையை ஏற்படுத்த முடியுமென்றாலும், அது 156 மைல் இடைவெளியில் மட்டுமே அதிபாரமுடைய முகில்களைப் பிடித்துப் பயன்படுத்துமாதலால், றேடாரிலும் பார்க்க, செயற்கைக் கோளினூடாக மழை பெய்விக்கும் முயற்சி கூடிய பயனுடையதே.

ஜப்பானிலே, காலநிலையை நிர்ணயிக்கும் துணைக்கோளினைப் பயன்படுத்தி, வங்காள விரிகுடாவிற்குக் குறுக்காக, தாய்லாந்துக்கு மேற்கில் முகில்கள் செல்வதைப் படமாக்கலாம். சமீபத்தில், இவ்வாறு பிடிக்கப்பட்ட படத்தின் மூலம், பயனுள்ள முகில்களின் 24 மணிநேர வருகைப் பயணத்தினைக் கண்டு கொள்ளக் கூடியதாய் இருந்தது. இதனோடு, தாழ் சிவப்பு நிற வெளிப்பாட்டு அளவைகள் கொண்டு, சரியான வெப்பநிலை கணிக்கப்பட்டு, எந்த இரசாயனக் கலவை மூலம் கூடிய மழை வீழ்ச்சியைப் பெறலாம்? என்பதையும் பாகுபடுத்தி அறியக் கூடியதாயுள்ளது.

இன்று, உலகம் எங்குமே துணைக்கோள் அவதானிப்புக்கள், அமைதியாகவும், பரவலாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அவதானிப்புக்கள், எதிர்காலத்தைச் சிறந்த முறையிலே வடிவமைக்க, பெரிதும் பயன்படும் என்பது உறுதி.

எழுதியவர்:— நிகெல் ஹாவ்க்ஸ்.

றீடேர்ஸ் டைஜஸ்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாசா:-
# விண்வெளி காவலன்

— எழுதியவர் —
சா(ர்)ல்ஸ் கிறாஉதாம்மர்.

அண்மைக்காலத்தில், ஒரு சில அமெரிக்க வானசாஸ்திரிகளும், விண்வெளி மண்டல விஞ்ஞானிகளும், உயிரோட்டமுடைய மனிதனிலும் பார்க்க இயந்திர மனிதன் விண்வெளி ஆய்வுக்குகந்தவன் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதில் கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இயந்திர மனிதனுக்கு, ஆங்கிலத்தில் றொபோ (Robot) என்ற பெயர் வழங்கப்படுகிறது. எம்மின மனிதன் செய்யும் வேலைகளைச் செய்யும் இயந்திரம் என்பதே இதன் பொருள். மனிதனைத் தள்ளி வைக்குமளவுக்கு, இந்த இயந்திரம் சக்தி வாய்ந்ததா? என்ற பலமான கேள்வி எழுகின்றது. சந்திரனுக்கு மனிதன் சென்று வந்தான்; அதுபோல், மனிதன் பூமியிலிருந்து அனுப்பிய இயந்திரசாதனங்களும் விண்வெளிக்குச் சென்று, ஆய்வுகள் நடத்திவிட்டுத் திரும்பியுள்ளன. மனிதன் மூலப் பொருள், அவன் இடும் கட்டளையை நிறைவேற்றுவது இயந்திரம். கணனிகள் மனிதனின் தயாரிப்பு. ஆனால், அவை மனித சக்திக்கப்பாற்பட்ட பலகருமங்களை ஆற்றுகின்றன என்றாலும், கணனியின் செயற்பாட்டை நிறுத்தவும், மீண்டும் துவக்கவும், கட்டளைகளை மாற்றியமைக்கவும் கர்த்தாவாகிய மனிதனால் மட்டுமே நிச்சயம் முடியும். எம் மத்தியில், இன்றும் வாழும் ஆர்தர்சி கிளா(ர்)க் (Arthur Clarke) என்ற விஞ்ஞானியும், ஸ்ரான்லி குயுபிறிக் (Stanley Kubric) என்ற தயாரிப்பாளனும் கூட்டாகத் தயாரித்த ''2001:- ஒரு விண்வெளிப் பயணம்'' (2001: A Space Odessy)



என்ற திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியை நினைவு கூருவது, இவ்விடத்தில் பொருத்தம்.

பாரிய விண்வெளிக்கப்பல், நெடும்பயணம் சென்று கொண்டிருக்கின்றது. மனிதப் பயணிகள், மரணம் போன்ற ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார்கள், 'ஹால்' (Hal) எனப்படும் சுப்பர் கணனி, கப்பலை இயக்கியபடி இருக்கின்றது. இருந்தாற் போல், மனிதர்களைக் கொன்று, கப்பலைத் தனதாக்கிக் கொள்ளும் சிந்தனை, அதற்கு வருகின்றது, அதன்படி, சிலரைக் கொன்று விண்வெளியில் வீசி விடுகின்றது. கதாநாயகன், கணனியின் மூளைப் பகுதியிலுள்ள சில முக்கிய பாகங்களை அப்புறப்படுத்தி, அதைச் செயலிழக்கச் செய்கின்றான்.

இறுதிக் கட்டத்திற் கணனி, கூட்டுச்சேருவோம் என்று ஆசை காட்டி, கதாநாயகனுடன் பேரம் பேசுகின்றது. ஆனால், மனிதன் தனது மேலாதிக்கத்தை நிரூபித்து விடுகின்றான். செய்மதிகள் போன்ற, பல இன்றைய சாதாரண விஷயங்களின் தந்தையென வர்ணிக்கும் ஆர்தர்சி கிளார்க், இந்தத் திரைப்படத்தை வெளியிட்டு இருபது வருடங்களுக்கு மேலாகின்றன. ஆனால், அதன் மையக் கருத்து இன்றும் வலிதாக இருக்கின்றது.

ஹபிள் (Hubble) என்ற பெயருடைய, 1.6 பில்லியன் டொலர் பெறுமதிவாய்ந்த தொலை நோக்கியை (Telescope) அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பியதையும், அது அங்கு இயங்காமல் விட்டதையும் வாசகர்கள் அறிவார்கள், பின்பு ''என்டேவர்'' எனப்படும் (Endeavour) விண்கல ஓடத்திற் சென்ற விஞ்ஞானிகள், ஹபிள் தொலை நோக்கியை இயக்க வைத்து விட்டனர். இப்படியானதொரு திருத்தவேலை, விண்வெளி ஆய்வுச் சரித்திரத்தில் இதற்கு முன் நடைபெறவில்லையென்று துணிந்து கூறலாம். தான், இயந்திரத்திலும் பார்க்க மேலானவன் என்பதை மனிதன் நிரூபிக்க, இது அரியதொரு சந்தர்ப்பம் என்றும், இந்த நிகழ்வைக் குறிப்பிடலாம். மேலே குறிப்பிடப்பட்ட விஞ்ஞானிகள், ஹபிள் தொலை நோக்கியை மாத்திரமா காப்பாற்றி விட்டார்கள்? இல்லையே, அமெரிக்க விண்வெளி ஆய்வுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரசபை (Nasa National Aeronautics and Space Administration) யின் எதிர்காலத்தையுமல்லவா காப்பாற்றி விட்டார்கள்! 1986 ஆம் ஆண்டின் பின், இந்த அதிகாரசபை தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்து வந்துள்ளது. இதன் மேல் நம்பிக்கை இழந்த கிளின்ரன் நிர்வாகம், இது கேட்கும் நிதியைக் கொடுக்க மறுத்துள்ளது. மேலும் பலர், இச்சபை தொடர்ந்து இருப்பதிற் பலனுண்டா? என்றும் கேட்கத் தொடங்கியுள்ளனர். இந்தத் திருத்த வேலை, நாசாவுக்குப் புத்துயிர் அளித்துவிட்டது என்றால் மிகையாகாது. மனிதன் இனிமேல், விண்வெளியில் வெறும் பயணியாக மாத்திரமல்ல, திருத்தங்கள் செல்யும் பொறியியலாளனாகவும் கடமையாற்றுவான் என்பது கண்கூடு. சமயத்திற்குத் தகுந்தவாறு திருத்த வேலை செய்ய, இயந்திரத்தை விட மனிதனே சிறந்தவன் என்பதில் ஐயமில்லை ஹபிள் திருத்த வேலை, நாசா உற்சாகத்துடன் புதிய பணிகளை ஆரம்பிப்பதற்கு, உந்து சக்தியாகவும் அமைந்து விட்டது இதே திருத்த வேலைகளை, இயந்திரங்களும் செய்யலாம் என்று வாதாட முடியும். எங்கே பிழை இருக்கின்றது? என்று, முன் கூட்டியே அறிந்திருந்தால் தான் இது சாத்தியப்படும். மனிதன் ஒருவன் தான், சுற்றிப்பார்த்துப் பிழையை இனங்கண்டு, அதற்கு ஈடு செய்யக்கூடியவன். நெடுந்தூரமுள்ள எதிர்காலத்தில், சிந்தித்துச் சுயமாகச் செயலாற்றும் றொபோக்களும் வந்துவிடுமோ தெரியவில்லை. அப்போது, போட்டி பலமாகத்தான் இருக்கும். அந்த நாள் வரும்வரை, மனிதனின் கை ஓங்கியே இருக்கும்.

*ரைம் டிசம்பர் 20, 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு துணிகர மனிதர் 15 சிறுவரைக் கடத்திச் சென்று, சட்டவிரோதச் செயலை நாடெங்கும் பரப்புகின்றனர்.

நாள் சோவியத் ஒன்றியத்தின் சில பகுதிகளில் வளர்ந்து வரும் சட்ட விரோத போக்கைக் கோடிட்டுக் காட்டுவதாயிருந்தது இந்நிகழ்ச்சி.

டொன் நதியின் றோஸ்ரோவ் என்பது, ஒரு கைத்தொழில் மையம். அங்கு குற்றம் பெரும் அளவில் நிகழ்வதுண்டு என்ற கெட்ட பெயர் இருந்தது. 25 ஆம் இலக்கப் பாடசாலைக்கு வெளியே நிறுத்தி

— எழுதியது —

வில்லியம் ஆர். டோஅர்ணர்

இரண்டு வாலிபர்கள் வகுப்பறையில் நுழைந்து, எம்மைக் கடத்தப்போவதாகக் கூறிய போது, நாங்கள் இது செயல் முறைக்கு கேலிக்கூத்து என்று முதலில் நினைத்தோம். பின், மற்றொருவன் உள்ளே வந்து கூரையை நோக்கி வெடிவைத்தான். தன்னியக்கத் துப்பாக்கியிலிருந்து சன்னங்கள் எங்கும் பறந்தன. எனவே, இது கேலி விளையாட்டு அன்று என்பது தெரிந்தது.''



பேரம் பேசுபவர், வானூர்தியினுள் இருக்கும் கொள்ளையருடன் நேரே பேசுகிறார்.

## பத்து மில்லியன் டொலர் கோரி, பாடசாலைச் சிறுவர் அபகரிப்பு

இந்த உரை, பயத்தின் மத்தியில் எழுந்த நினைவின் வெளிப்பாடு, 15 வயதினளான மரீனா பந்துரினாவின் வாய்மொழி மூலம் கிடைத்தது. அவளுடன், வேறு 15 பாடசாலை மாணவரும். இரு முதியோரும் நான்கு முரடர்களால் கடத்தப்பட்டனர். தென் ருஷ்யாவின் டொன் நதியிலுள்ள றோஸ்ரோவ் நகரில், சென்ற டிசம்பர் 23 ஆம் நாள் இது நிகழ்ந்தது. நான்கு நாள் நாடகத்தில், கடத்தியவர்கள் தம்வசமிருந்த மாணவர்களைக் கொன்று விடுவதாக மிரட்டி, ருஷ்ய மத்திய வங்கியிடமிருந்து பத்து மில்லியன் டொலர் பணத்தைப் பெற்றும், ஓர் எம். ஐ. 8 இராணுவ உலங்கு வானூர்தியை அபகரித்தும், ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பாதுகாப்புப் படையினரை அலைக்கழித்தும் திருவிளையாடல் நடத்தினர். இறுதியில், இரத்தம் சிந்தாத வகையில் முடிவுற்றாலும், முன்னையிருந்த மினி பஸ்ஸை அபகரித்தனர் நால்வர். அர்ஸ்லன் கசிமோவ் என்பவன் 48 வயதினன்; அவனது நண்பர் அவனை 'கொஸாக்' என்று அழைப்பர். இவன் மத்திய ஆசியக் குடிரசான கிர்ஜிஸ்தான் வாசியும், பெரிய குற்றவாளியுமாவான். அனற்ரோலி மிக்கியேவ் என்பவன் 44 வயதினன்; விமானப்படையில் விமானம் ஓட்டியாயிருந்து, குடிகாரன் என வேலை நீக்கம் பெற்றவன், 19 வயதுடைய மாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌஸ்ஸக் கோவும், 21 வயதுடைய அப்துல் கஃப்பார் அப்துஷமிலோவும் தாஷ்கென்ற் நகர் மாணவர்கள். ஒருவன் பஸ் சாரதியைத் தடுத்துவைத்திருக்க, மற்ற மூவரும் பாடசாலையினுட் புகுந்து, ஒன்பது ‘ ஸீ ’ வகுப்பின் 9 மாணவர்கள், 6 மாணவிகள், ஆசிரியை லூட்மிலா செல்க்கோவா ஆகியோரை வளைத்துப் பிடித்தனர். உடனேயே, கைதிகளை வியாபாரப் பண்டங்கள் போல, பரிமாற்றம் செய்யலாயினர். ஏற்கனவே நன்கு திட்டமிட்ட படி, ஒரு பிள்ளையைக் கொடுத்து, தம்மைப் பொலிஸ் பாதுகாப்புடன் ஒரு விமானப்படைத் தளத்துக்கு எடுத்துச் செல்லப் பண்ணினர். ‘சிகரெட்’ பெறுவதற்கு, மற்றும் இருவரை விட்டனர். (இது ஹெலிகொப்ரரைத் தம் வசமாக்கிய பின்பு.)

பின், இரு உப படையினரைக் கொண்ட விமானம் செலுத்துவோர் குழுவுடன், துப்பாக்கி தாங்கிய அக்கொள்ளையர் நாட்டைவிட்டு ஓட முனைந்தனர். புறப்பட்ட றோஸ்ரோன் நகரிலிருந்து, 400 கி. மீ. தெற்கேயுள்ள கிராஸ்னோடர் நகரிலிருந்து கொண்டு, பத்து மில்லியன் டொலர் (பிறநாடுகளில் மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தாள்களாக) தரும்படியும், தமக்கு ‘எயிட்ஸ்’ நோயிருப்பதால் ஈரான் நாட்டுக்குப்போய் மருத்துவம் செய்யப்போவதாகவும், அதற்கே இப்பணம் வேண்டும் என்றும் கோரினர். (இது நம்பகமான நோய்க்கதை அன்று.)

நாடக பாணியில் நிகழ்ச்சிகள் ஓடிக்கொண்டிருப்பது ஒரு புறம்; மறுபுறம் நிலைமை பெரும் ஆபத்துக்கள் இருக்கிறது என்பதால், ருஷ்ய மத்திய வங்கித்தலைவர் விக்ரர் ஜெராஷ்செங்கோ, பல வர்த்தக வங்கிகளிடம் உத்தியோக ரீதியாகக் கடன் பெற்று, அவசரத் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டியதாயிற்று. மனிதக் கொள்ளையரிடம், மினரல்நியே வோடி என்னுமிடத்தில் அமெரிக்கச் சிறுபண நோட்டுகளாகக் கேட்ட தொகை கையளிக்கப்பட்டது.

பணவீக்கம் மிகுந்த ருஷ்யாவிற்கூட, சதிகாரர் சிறு அளவில் யோசிக்கவில்லை. தற்கால வரலாற்றில், வற்புறுத்திப் பெற்ற ஆள் மீட்புப்பணத் தொகையிற் கணிசமான பெரியது இத்தொகை. (இதற்குக் கூடியதொகை, இரு சந்தர்ப்பங்களில் மட்டுமே அபகரிக்கப்பட்டது. ஒன்று, ஆர்ஜென்ரீனா நாட்டில் 1974 இல் மாக்ஸிய கெரில்லாக்கள், எக்ஸ்ஸொன் கம்பனியின் நிர்வாகி ஒருவரை மறித்து வைத்துப் பெற்ற தொகை, 14.2 மில்லியன் டொலர். மற்றது, இத்தாலிய இரத்தின வியாபாரி கியோவன்னி புல்காரி என்பவரை மீட்பதற்கு, 1975 இல் அவர் குடும்பம் செலுத்தியதொகை, 16 மில்லியன்.) ஒரு கட்டத்தில், கொள்ளையர் பெற்ற தொகையில் ஒரு பகுதியை மறித்து வைக்கப்பட்டவர்களுக்கு வழங்கவும் சம்மதித்தனர். ஒரு காசும் கொடுபடவில்லை. எனினும், கொள்ளையர் சுடச்சுட உணவு வகைகள் வழங்கியதுடன், இனிப்புச் சொக்லேற் வகைகளும் சாப்பாட்டுக்குப் பின் வழங்க ஏற்பாடு செய்தனர். காசு கொடுபட்டவுடன், 11 பேரை விடுவித்தனர்.

இவ்வேளையில், ருஷ்யாவின் சகல பாதுகாப்புச் சேவைகளும் இவ்வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டன. பாதுகாப்பு அமைச்சு, உள்நாட்டு அமைச்சின் படைகள், பயங்கரவாத எதிர்ப்பு விசேட அணி, (அ) விசேடக் காவல் துறைப் படையினர் ஒவ்வொன்றின் பெரும் படைத்தலைவரும் சம்பந்தப்பட்டிருந்தமையை அவதானித்த மொஸ்கோ பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது.– ‘‘ அவர்களிடையே எழுந்த உணர்ச்சியின் வேகத்தைக் கற்பனை செய்து பாருங்கள்.’’ ருஷ்ய உத்தியோகக் கட்டமைப்பு மாற்றங்களால், இவ்வெவ்வேறு படையணிகளின் முயற்சிகளை ஒன்றிணைப்பது பெரும் பாடாகியது. ஜனாதிபதி போரிஸ் யெல்சின், சற்று முன்னர் அரசியற் காரணங்களுக்காகக் கலைத்துவிட்ட பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தரிடம், கொள்ளையர் யாராயிருக்கலாம்? என்று செய்தியாளர் கேட்டபோது, பாவம் அந்த உத்தியோகத்தர்; ‘‘ நாங்கள் யார்? என்றே, என்னாற் கூறமுடியாத நிலையில் அல்லவா இருக்கின்றேன் ’’ என்றாராம்.

இறுதியாக, மினரல்னியே வோடி நகரிற் காசு வழங்குவதற்கிடையே நாலு நாள்கள் கழிந்துவிட்டன. மீதியாயிருந்த 2 சிறுவரையும், பஸ் ஓட்டியையும், விமான ஓடுபாதையில், வானூர்தியிலிருந்து பிடரியைப்பிடித்துத் தள்ளிவிட்டு, காசுடன் ஓட்டம் பிடித்தனர். காசுத்தாள்களை அள்ளி எறிந்து, துரத்துவோரின் கவனத்தைத் திருப்ப முயன்றனர். வானூர்தி காற்றில் எழுந்தது; தென் கிழக்கு நோக்கிப் பறந்தது. ‘செச்நியா’ என்ற, புரட்சி செய்யும் குடியரசுக்கூடாகச் சென்று, டாகெஸ்தர் குடியரசின் தலை நகரான மகச்கலாவை நோக்கிச் சென்றது. முன்னரே திட்டமிட்ட படி, மற்றொரு ஹெலியில் வர வேண்டிய உதவிக் கொள்ளையரைச் சந்திக்க முடியவில்லை. அவர்களிற் சிலர் பிடிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் கருத்துப்படி, அவர்கள் பெரும் கொள்ளைக் கூட்டத்தில் தொடர்புற்றிருக்கலாம். அந்நால்வரையும் கால் நடையாகச் சென்றபோது பொலிஸ் பிடித்தது. காசில் பெரும்தொகை மீட்கப்பட்டது. ஹெலி பறந்தபோது, அள்ளிவீசிய தொகையான சுமார் 5 இலட்சம் டொலர் மட்டுமே கிடைக்கவில்லை. மத்திய வங்கித் தலைவர் ஆறுதல் உற்றவராய்க் கூறினார்:– ‘‘ இச்சம்பவங்கள், நாம் வேகமாயும், நன்கு ஒழுங்குசெய்யப்பட்டும் ஆற்றவேண்டிய கருமங்களுக்கு, எம்மைத் தயார்ப்படுத்தவில்லை என்பதையே காட்டுகின்றன.’’

*யூரி ஸரகோவிச் மொஸ்கோ நகரிலிருந்து அனுப்பிய செய்தி அறிக்கை.*

*டைம், ஜனவரி 10. 1994*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர்:
கொய்றோவிலிருந்து
— கிறிஸ்ரோபர் டிக்கி —

"மம்மிகள்'' என்றழைக்கப்படும் பழைய அரசர்களின் பூதவுடல்கள் வேறுபட்ட ஓர் உணர்வினை ஏற்படுத்துகின்றன. அவர்களது முகங்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தின் நிலையைச் சுட்டுகின்றன. தற்கால நாட்டுத் தலைவர்கள் கூட இந்த முன்னோரின் முகங்களைப் பார்த்துப் பீதியடைகின்றனர். ராம்சேஸ் II, தன் பூட்டனார் என்று கூறிய எகிப்திய தலைவர் அன்வர் சதாத் கூட எகிப்திய நூதனசாலையிற் பழங்கால அரசர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருந்த 52 ஆம் இலக்க அறையைப் பொதுமக்கள் பார்வையிலிருந்து மூடிவிடும்படி கட்டளையிடும் அளவிற்குப் பீதியடைந்திருந்தார். 13 ஆண்டுகளின் பின்னர் இந்த நூதனசாலைகளில் இன்று தொழிலாளர்கள் கடுமையாக உழைக்கின்றனர். 1993 டிசம்பர் 15-க்கு முன்னதாகப் புதிய மம்மி அறைகளை உருவாக்கி முடித்து இனங்காணப்பட்ட 27 அரசர்களிற் 11 பேரின் உடல்கள் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன. இவ்வுடல்கள் பூரண அரச மரியாதையுடன் கலிபோர்னியாவின் கெற்றி (California's Getty Conservation Institute) பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட பிரத்தியேகக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளன. சூழல், வளி என்பன அவர்களது உடல்கள் வைக்கப்பட்ட கல்லறை களின் மலைகளில்-குடைந்தெடுக்கப்பட்ட கல்லறைகள், அல்லது பிரமிட்டுக்கள் அதே நிலையில் வைக்கப்படும். ஒட்சிசன் வாயுவின் அளவு குறைவாயும், நைதரசன் வாயுவினளவு கூடுதலாயும் உள்ளேயுள்ள ஈரப்பதன் கட்டுப்படுத்தப்படக் கூடியதாகவும் இப் பெட்டிகள் அமைந்திருக்கும். இவை பக்ரீரியாக்கள் உருவாகி உடலைச் சிதைப்பதைக் கட்டுப்படுத்தும். எகிப்தியத் தொல்பொருள் நிறுவனப் பாதுகாப்பு அதிகாரியான (Nasry Iskander) திரு. நாஸ்ரீ ஸ்கான்டர் கூறுவது என்னவென்றால், ''இப்படியான சூழலில் வைக்கப்படும் இவ்வுடல்கள் இனி ஒருபோதும் எக்காரணங் கொண்டும் திறக்கப்படமாட்டாது'' என்பதே.

*நில அகழ்வியல்:-*

**பழைமை வாய்ந்த இரகசியங்கள், பரம்பரையில் ஆராய்ச்சிக்கும், மற்றும் நவீன தொழில் நுட்பத்திற்கும் துணை போகின்றன.**

## செல்வந்த அரசர்களின் வாழ்க்கை முறை

ஆனால் மம்மிகளுடைய கல்லறைகள், அவை மலைக்குகைகளென்றாலென்ன, பிரமிட்டுக்களென்றாலென்ன, அல்லது நவீன கண்ணாடிப் பெட்டிகளென்றாலென்ன அவை முன்னோருடைய இரகசியங்களை முழுமையாகத் தரமுடியாது. நாம் றேடியோக் கதிரியக்கத் தொழில் நுட்பத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நுண்ணுயிலாளர், உயிரியலாளர்கள் மற்றும் பற்றொருதி ஆராய்ச்சியாளர்களுக்கும் கடமைப்பட்டுள்ளோம், கடந்த இரண்டு சகாப்தங்களில் நூலகங்கள் நிறைந்த பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் 4,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இம் முன்னோர் பற்றிய பல பயனுள்ள தகவல்களைத் தருவதற்கு உதவியுள்ளன.



மம்மிகள் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் இம் முன்னோர்களுடைய உணவு வகை, நோய்கள், மற்றும் இவர்களது வியாபாரத் தொழில் நுட்பங்கள் என்பவற்றைக் கண்டறிந்துள்ளனர்.

இன்று மூலக்கூற்று உயிரியலாளர் மம்மிகளுடைய பரம்பரையலகுகளை உற்றுநோக்கத் தொடங்கியுள்ளனர். அண்மைக் காலமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், அரசப் பரம்பரையைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர்களின் எலும்புகள், பற்கள் சேதமடையாத பகுதிகள் ஆகியவற்றிலிருந்து டி. என். ஏ. (D. N. A) (பரம்பரையலகின் கூறு) யைப் பிரித்தெடுத்து இம் முன்னோர்களினது தனிப்பட்ட வாழ்க்கையினை வெளிக்கொணரத் தொடங்கியுள்ளனர். இந்தத் தனிப்பட்ட வாழ்க்கைத் தகவல்கள் அவர்கள் வாழ்ந்த காலத்து மக்களுக்கோ, அல்லது அவர்களது மனைவிமார்களுக்கோ தெரிந்திராத உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளன. மேல் எகிப்தின் "ஹகர்சாவிற்கிடைத்த (Hagarsa) மம்மிகளின் மூன்று தலைமுறையினரது டி. என்.ஏ (D. N. A) ஆராயப்பட்டுள்ளது. இவை பல உண்மைகளைத் தருகின்றன. மிகப் பழைமைவாய்ந்த மனிதனின் பிரேதப்பெட்டியில், பெண்ணுடைய முகமூடி உருவப்படம் பதிக்கப்பட்டிருந்தது. அதே போல பெண்ணின் பிரேதப்பெட்டியில் ஆணின் முகமூடி உருவம் பதிக்கப்பட்டிருந்தது. இவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோரின் உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பேரப்பிள்ளைகள், பிள்ளைகள் ஒரு தாய்க்குப் பிறந்தவர்களல்லர்.

ஹகர்சாவின் மம்மிகளுடைய இரகசியங்கள் வெளிவரும் தகவல்களுக்கு ஓர் ஆரம்பமேயன்றி முழுமையல்ல. எகிப்தியப் 18 ஆம் பேரரசு புதிய இராச்சியத்தின் ஆரம்பத்தில் வன்முறைகளும், துன்பமும் நிறைந்ததாகவே யிருந்தது. இந்நிகழ்வானது செக்யுன்னெனார் ரா-II இன் கொலையோடு ஆரம்பமானது. இவரது தலையோடானது வட்டவடிவான கோடரியால் கி. மு. 1550 இல் இரண்டாகப் பிளக்கப்பட்டது. இதன்பின் 200 ஆண்டுகளில் அக்ஹெனற்ரென் என்பவரின் சிறந்த ஆட்சியுடன் 18 ஆம் பேரரசின் ஆட்சி நிறைவு பெற்றது. இந்த அக்ஹெனற்ரென் ஒரே கடவுளை வழிபட்டவன். இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த வயதில் இளையவனான ருற்ராங்ஹாமன் அக்ஹெனற்ரென் பற்றிய எல்லாத் தடயங்களையும் அழித்துவிடும் முயற்சியில் ஈடுபட்டான். மிகவும் ஆச்சரியமூட்டும் பல இரகசியங்கள் இந்த இளம் அரசனைச் சூழ்ந்திருந்தன. இந்த இளம் அரசனின் கல்லறையிற் கண்டு பிடிக்கப்பட்ட பெருஞ் செல்வங்கள் இவனைப் பிரபல்யமாக்கியது. அக்ஹெனற்ரென் அரசனும், ருற்ராங்ஹெமெனும் சகோதரர்களா? அல்லது தகப்பன் மகனா? என்பது தெரியவில்லை. ஸ்கான்டருடைய கூற்றுப்படி 19 வயது ருற்ராங்ஹாமென் அவனது இளம் வயது நோய் காரணமாக ஆண்மையற்றவனானான். (Importence) ஆனால் இவனது கல்லறையிற் கண்டுபிடிக்கப்பட்ட கருப்பையில் வளரும் கரு, மற்றும் அக்கருவைச் சூழ்ந்துள்ள பகுதி (Placenta சூல்வித்தகம்) வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன. இவை இவனது இளம்விதவை மனைவியினால் வைக்கப்பட்டிருக்கலாம். அப்படியானால் யார் இந்தக் கருவின் தகப்பன்? என்ற வினா எழும்புகின்றது.

கற்பனைத் தொடர்புகளை மனதிற் கொண்டு இது முடியக் கூடியதா? இப்படி நடக்குமா? என்ற கேள்விகளை நாம் கேட்க முடியாது என்கிறார் திரு. ஸ்கொற் வூட்வோட் என்னும் மூலக்கூற்று உயிரியலாளர். ஆனால் பல மம்மிகளுடைய மாதிரிகள் இதனை உறுதிப்படுத்தத் தேவை. 18 ஆம் பேரரசைப் பொறுத்தவரையில் 12-க்கும் மேற்பட்ட மாதிரிகள் கிடைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது ஆராய்ச்சியாளர்கள் தங்கள் பரிசோதனைகளை மேற்கொண்டு முழுமையான புதிய தகவல்களைப் பெற்றுள்ளனர். கடந்த வருடம் கெய்றோவிலுள்ள பழைய குஸார் அல்-எய்னி மருத்துவக்கல்லூரியில் 528 அரசப் பரம்பரையின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் சில முழுமையானவை; சில துண்டங்கள். 1940 களில் இவை



கடந்த காலத்தை, முகத்திலிருந்து அறியலாம் திரு. ஸ்காண்டர் அவர்கள், துற்மோஸ் IV என்னும் அரசனின் மம்மியை, எகிப்திய நூதனசாலையிற் சோதித்துப் பார்க்கிறார். மற்ற இரு முகங்களுக்குரியவர்கள் இன்னும் இனம் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே போடப்பட்டன. ஆனால் யாரும் அதைக் கவனிக்கவில்லை. கடந்த வாரம் திரு. ஸ்காண்டரினால் தனது நிறுவனத்திற்காக இவை பொறுப்பேற்கப்பட்டன. ''அவர்களுக்கு இதன் பெருமை விளங்கவில்லை. இவற்றால் என்ன பயன் என்பதும் விளங்கவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் இவை வெறும் எலும்புகளும் சதைகளும் மட்டும்'' என்று கூறுகிறார் திரு. ஸ்காண்டர். ஷோஸ்ஷிகென்ஹ் (I இம்மாதிரிகளுள் நம்பகமாக இனங்காணப்பட்டவரிலொன்று Shohenq I) என்பவரின் தலையாகும். இவர் 21 ஆம் பேரரசின் அரசனாவார். இவரே சொலமன் அரசனுக்குப்பின் ஜெருசலேமை முற்றுகையிட்டவராவர். சொலமன் அரசனின் எல்லாச் செல்வங்களையும் (உடன்படிக்கைப் பெட்டி தவிர்ந்த) கொள்ளையடித்தவராவார். இந்தச் செல்வங்கள் எல்லாவற்றிலும் பார்க்க விஞ்ஞானிகளுக்குச் சிறந்த செல்வமாக விளங்குவது துற்றாங்ஹொமெனின் கல்லறையிற் கண்டுபிடிக்கப்பட்ட கருப்பையில் வளரும் கருவும், அதனைச் சூழ்ந்துள்ள பகுதியுமாகும். இவற்றிலிருந்து மீளப் பெறக்கூடிய டீ. என். ஏ. இருக்குமானால் விஞ்ஞானிகள் அதன் தாய் பற்றியும், இக் குழந்தைகள் யாருக்குச் சொந்தமானவை? இவை அரசப் பரம்பரையைச் சேர்ந்தவை தானா? என்பது பற்றியெல்லாம் சொல்லக்கூடியதாயிருக்கும்.

''புதிய வெளிப்பாடுகள் எப்போதுமே புதிய இரகசியங்களைக் கொண்டு வருகின்றன. அதனை நாம் நிறுத்த முடியாது. அது ஒரு போதைவஸ்து போன்றது. ஒன்றைக் கண்டுபிடித்தால் மேலும் பலவற்றைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது'' என்று கூறுகிறார் 30 வருடங்களுக்கு மேலாக மம்மிகளில் ஆராய்ச்சி செய்துவரும் திரு. ஸ்காண்டர்.

---

# கலையின்போக்கு

## அமெரிக்காவின் செவ்விந்தியர்கள் செய்த கைவினைப் பொருள்கள், இன்று பெருவிலைக்குப் போகின்றன.

அமெரிக்கச் செவ்விந்தியர்களின் கலைத்திறன், அண்மையில் வெளிவரத் தொடங்கியுள்ளது. இவர்கள், 19ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தயாரித்த கூடைகள், சிறிய பெட்டிகள் போன்ற ஆடம்பரப் பொருள்கள், நூதனசாலைகளாலும், பணம் படைத்த தனி மனிதர்களாலும் வாங்கப்படுகின்றன. இவை, பலவிதமான புல் வகைகளாலும், செடிகளின் பட்டைகளாலும் செய்யப்படுகின்றன. இப் பொருள்களை இனங்காண்பதற்கு, தனியாக ஆய்வாளர்கள் பல பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

இவ்வினத்தவர்கள், எத்தனை கலை நயத்துடன் இந்த நாளந்தப் பாவனைப் பொருள்களைச் செய்தார்கள் என்பதை, கொடுக்கப்படும் விலைகளிலிருந்தே யாம் யூகிக்கலாம். வருடமொன்றுக்கு, பல்லாயிரக் கணக்கான டொலர்கள் இப் பொருள்களுக்காகச் செலவிடப்படுகின்றன. பழைமை வாய்ந்தவையும், நல்ல நிலையில் உள்ளவையும் பெரும் விலைக்குக் கைமாறுகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்ட கூடையொன்று, சென்ற வாரம் 250,000 டொலருக்குக் கலைப் பொருள்கள் ஏலம் விடப்படும் நிறுவனம் ஒன்றினால் விற்கப்பட்டுள்ளது. இவை உருவாக்கப்பட்ட நாளில் எப்படி இருந்தனவோ, அவ்வாறே நிறங் கெடாமல், உருவம் மாறாமல் இருப்பதே அவற்றின் சிறப்பம்சம்.

இத்தியாதிப் பாவனைப் பொருள்கள், அமெரிக்காவிற் காணப்படும் பல்வேறு புல் வகைகளாலும், ஓலை, பட்டை போன்றவற்றாலும் செவ்விந்திய மக்களின் பாரம்பரியத் தொழிலாகச் செய்யப்படுகின்றன. மூலப் பொருள்கள் சேகரிக்கப்பட்டபின் பதனிடப்படுகின்றன. பின்பு, சாயம் பூசப்பட்டு, பலதரப்பட்ட பொருள்களாக வடிவமைக்கப்படுகின்றன. இழைகள் மிகவும் இறுக்கமாகப் பின்னப்படுகின்றன. தேவையேற்படின், தண்ணீர் ஏந்தும் பாத்திரங்களாகக்கூட, இவற்றைப் பாவிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.



இத் தொழிலில் ஈடுபடுவோர், பெரும்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பெண்களே. பல மாதங்கள் செலவு செய்து, ஒரு கூடையைப் பின்னும் பொறுமையும், மென்மையும் அவர்களிடம் உண்டு போலும். பெருந் தொகையான பெட்டிகளும், கூடைகளும் சந்தைக்கு வந்தாலும் குறிப்பிட்ட சிலரின் தயாரிப்புக்களுக்கே மிகக் கூடுதலான விலை கொடுக்கப்படுகின்றது. இவை, கிடைப்பதற்கரிய தாகவும், உயர்ந்த கலைத்திறன் கொண்டதாகவும் இருப்பதே காரணம். 250, 000 டொலருக்கு விற்கப்பட்டதாக



முன்னர் குறிப்பிடப்பட்ட கூடை நெவாடா மாகாணத்தில், 19ஆம் நூற்றாண்டின் மிகப் பிற்பகுதியில், ''வோசோ'' இனச் செவ்விந்தியர் ஒருவராற் செய்யப்பட்டதாகும்.

இன்றும், செவ்விந்தியர்கள் கைவிடாது இத் தொழிலைச் செய்து வருகிறார்கள். இயந்திரச் சாதனங்களைப் புகுத்தாமல், புராதன முறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன. சாதாரண அமெரிக்கர்கள் விரும்பி வாங்கும் இக்கைவினைப் பொருள்கள், சராசரி 200 டொலருக்கு விற்கப்படுகின்றன. இன்றும், இவை தரங் கெடாமலும், தமது தனித்துவம் குறையாமலும் காட்சி தருகின்றன.

நியூஸ் வீக்.
13 டிசம்பர், 1993

# விளையாட்டில் சதி

*பனிகால விளையாட்டுப் போட்டிகள் நோர்வேயில் ஆரம்பிக்கப்பட உள்ள நேரத்தில் அமெரிக்காவை இவ்விளையாட்டுத் தொடர்பான கொலை முயற்சியொன்று கலக்கிவருகிறது. பனிச்சறுக்குப் போட்டியில் அமெரிக்காவில் இரு பெரும் வீராங்கனைகள் முன்னிலையில் நிற்கிறார்கள். இவர்களில் ஒருவர் நான்சி கெரிகன்; மற்றவர் ரோன்யா ஹாடிங். நான்சி கெரிகன்; பனிச்சறுக்கு விளையாட்டுக்களில் பல சாதனைகளைப் புரிந்தவர். 1992 ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றவர். சென்ற வருடம் அமெரிக்க தேசிய பனிச்சறுக்குப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர். நான்சியால் இம்முறை அமெரிக்க தெரிவுப் போட்டியிலோ, அல்லது நோர்வே ஒலிம்பிக் போட்டியிலோ கலந்து கொள்ள முடியாமற் போய்விட்டது. காரணம் அமெரிக்க போட்டி நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இவர் பயிற்சியிலீடுபட்டிருக்கும்போது தூரத்தில் இருந்து வீசப்பட்ட உலோகக் கம்பியொன்று இவரது முழங்காலைத் தாக்கிப் பலத்த சேதப்படுத்தியது. இதனால் இவர் போட்டியில் கலந்து கொள்ள முடியாமற் போய்விட்டது.*

*ஜனவரி 6 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தினால் அமெரிக்காவே அதிர்ந்து போய் விட்டது. விளையாட்டில் இவ்வளவு போட்டி பொறாமைகளா? இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க சமஷ்டி புலனாய்வுத் துறையினர் (FBI) தீவிரமாக விசாரிக்க முற்பட்டனர் இந்த விசாரணைகள் ரோன்யா ஹாடிங்கினை நோக்கித் திரும்பியது. இறுதியில் பல உண்மையான தரவுகளின், சாட்சிகளின் அடிப்படையில் ரோன்யாவின் மெய்ப்பாதுகாவலரான சோண் எக்காடிட் என்பவரே, டெரிக் சுமித், சோண் ஸ்ரான்ற் என்ற இருவரைக் கொண்டு இந்தச் சதியைச் செய்து முடித்தார் என அறியப்படுகின்றது. இந்தச் சதிக்கு ரோன்யாவின் கணவரான கில்லூலியும் உடந்தை என அறியப்படுகின்றது. இந்தச் செயலிற்காக 65,000 டொலர் கூலியாக பேரம் பேசப்பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் ரோன்யாவிற்கு இந்தச் சதியைப்பற்றி தெரியுமா? தெரியாதா? என்பதுதான் இன்னும் அறியப்படாமல் உள்ளது. இவர் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் ஒலிம்பிக்கில் இல்லாமல் சிறைக்கம்பிகளுக்குப் பின்னே இருக்க நேரிடும்.*

*இவற்றைவிட சோண்யாஸ்ரான்றிங்கின் பழக்கவழக்கங்களும், இந்தச்சதியும் இவருக்குள்ள நல்ல பெயரை காணாமற் போகச் செய்துள்ளன. பத்திரிகைகள், பொதுமக்கள், இரசிகர்கள் என எல்லோரும் இவரைச் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். விளம்பர நிறுவனங்கள் அனைத்தும் இவரை விட்டுப் போயின. ஆனால் நான்சி கெரிகனைப் பொறுத்த வரையில் இதற்கு எதிர்மாறாக நடந்துள்ளது. ஆனால் பிரபல நிறுவனங்கள் இவரது ஒப்பந்தத்திற்காகக் காத்திருக்கின்றன. நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் வேறு பணிகளுக்கும் அழைப்புக்கள் வந்த வண்ணம் உள்ளன. ஒரு கோடி டொலருக்கு மேல் ஒப்பந்தங்கள் வந்து குவிந்துள்ளன. இவர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்ல வேண்டும் என்பதில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கொலைகள்

எழுதியவர்
லுவாண்டாவில்
— ஸ்கொற் மக்லியொட் —

பார்வைக்கு, தீங்கு விளைவிக்காத ஒரு பொருள் போலவும், உள்ளங்கையிலே அடக்கிக் கொள்ளக் கூடியதுமான ஒரு பிளாஸ்ரிக் துண்டின் தோற்றத்தைக் கொண்டது தான், மக்களுக்கு எதிராக உபயோகிக்கக்கூடிய நிலக்கண்ணி வெடியாகும். அதன் உற்பத்திக்கான செலவும் ஒரு சில டொலர்கள் மட்டுமே. அதன் மீது காலை வைத்துவிட்டால், வயது வந்தோருக்கு வைத்த கால் போய்விடும். சிறு பிள்ளையானால், அதனைச் சுளை,



குர்திஸ்தான்:- சிக்கலானதும், ஆபத்துமானதுமான பணி. ஈராக்கியர் விதைத்த எண்ணிலடங்காக் கண்ணி வெடிகளுள் ஒன்று செயலிழக்கச் செய்யப் படுகிறது.

சுளையாகப் பிய்த்து எறிந்துவிடும். இந்தக் கண்ணிவெடியால், அல்லது இரத்த வெளிப்பாட்டால் இறக்காதவர்களுங்கூட, குண்டிலிருந்து பாயும் சன்னங்கள் உடலின் இழையங்களுக்குக்குள் ஆழமாக ஊடுருவுவதால் ஏற்படும் நோய்த் தொடர்பால் இறந்து விடுவார்கள். மனித முரண்பாடுகளால் ஏற்படும் மோதல்களில் கொல்லவோ, முடமாக்கவோ கூடிய இதனிலும் எளிய சாதனம் வேறு கிடையவே கிடையாது.

அதன் நஞ்சகத்தன்மை இது மட்டுமல்ல, நிலக்கண்ணி வெடிகளின் உபயோகம் அபரிமிதமாக அதிகரித்திருப்பதால். முரண்பாடுகளின் மரண பயம் கொண்ட எச்சங்களால், பொது மக்களின் உயிரழிவு முன்னெப்போதும் இவ்வளவு இருந்ததில்லை. காடுகளில், பாலைவனங்களில், மலைக் கணவாய்களில், வயல் வெளிகளிலெல்லாம் உலகளாவிய ரீதியில் இவை புதையுண்டிருக்கின்றன. புதைக்கப்பட்ட போது அது எவ்வளவு ஆபத்தானதாக இருந்ததோ, அந்த அளவு ஆபத்து இப்போதும் அவற்றால் உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவை இன்னமும் மறைந்தே இருக்கின்றன. எப்போது தமது கொலைத் தொழிலைச் செய்வதெனக் காத்திருக்கின்றன. உலகின் மூன்றிலொரு பங்கு நாடுகளிற் கொலை விதைகள் புதைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

36 வயதான உவாங்கோ குற்றா, ஒரு நல்ல எடுத்துக்காட்டான பலிப் பேர்வழியாவார். அங்கோலாவின் உள்நாட்டுப் போரின் 18 ஆண்டுக்காலமும், எந்த அனர்த்தத்திற்கும் ஆளாகாமல் இருந்த அவர், சென்ற மே மாதம் தனது கிராமத்தை விட்டு, காட்டிற்கு விறகு தேடப் போனபோது அது நடந்து விட்டது. அவர் கால் பதித்த மிதிவெடி, கால்களைத் துவம்சம் செய்து விட்டது. அவர், லுவாண்டாவுக்கு விமான மூலம் கொண்டு செல்லப்பட்டார். இரண்டு மாதங்களின் பின்னர், அவரது 24 வயதுச் சகோதரி மரியாவும் மிதி வெடியால் காலிழந்து அவரோடிணைந்து கொண்டார். இருண்ட நிலவறைபோன்ற அந்த மருத்துவமனையில் உயிர் பிழைத்துக் கொண்டாலும், இருண்ட எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கிக்



கம்போடியா:- அமைதியான வயல் வெளிகளிலே, மரணாபத்தை விளைவிக்கும் இலட்சோபஇலட்சம் கண்ணி வெடிகள்

கொண்டுள்ளது. அவர்கள் இனி வயல் வெளிகளில் வேலை செய்ய முடியாதவர்கள். மொத்தம் ஒன்பது பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வழியில்லாது போயுள்ளது. ''எனக்குத் தொழிலெதுவுமில்லை. எப்படி நாங்கள் வாழப் போகிறோம்?'' என்று அங்கலாய்க்கிறார், மரியாவின் 36 வயதுக் கணவனான அன்ரோனியோ.

மிதிவெடிகளின் வரலாறு மிகவும் தொன்மையானது. ரோமானியச் சக்கராதிபத்தியக் காலத்திலேயே, இது உருக்கொண்டு விட்டது. எதிரியின் குதிரைப்படையினருக்குத் தொல்லையளிக்கும் விதத்தில், வெளியே ஈட்டிபோன்று சிறிது நீண்டிருக்கும் உலோகப் பந்துகளைப் பரவலாக விதைத்து விட்டிருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். முதலாவது உலகப்போரின் போது, இதற்கு வெடிக்கும் விசை சேர்க்கப்பட்டது. முன்னேறும் நேச நாடுகளின் வாகனங்களைத் தடுப்பதற்காக, மேற்கு முனையில் வெடிக்க வைக்கும் சாதனங்களோடு கூடிய எறிகணைகளை ஜேர்மனியர் புதைத்து வைத்திருந்தனர்.

இரண்டாவது உலகப் போர்க் காலத்தில், கவச வாகனங்களுக்கு எதிரான சாதனமாகப் பாரிய அளவில் நிலக்கண்ணி வெடிப் புதைப்புத் தோற்றமெடுத்தது. பாரிசில் இருந்து கிடைக்கும் தகவல்களின் படி, 1944 இற்கும், 1950 – க்கும் இடைப்பட்ட காலத்தில் நோமண்டிக் கடற்கரையோரங்களிலும், வேறு போர் முனைகளிலும் மிதிவெடிகளைக் கண்டெடுக்கும் பணியில் பிரான்ஸ், ஜெர்மனிய போர்க்கைதிகளைப் பெருமளவிற் பயன்படுத்தியதாக அறியமுடிகிறது. அதன்விளைவு, 1,700 போர்க்கைதிகள் கொல்லப்பட்டனர். 2,988 பேர் காயமடைந்தனர். இது தவிர, பிரான்சின் போர் வீரர்கள் 471 பேர் கொல்லப்பட்டு, 238 பேர் காயமடைந்தனர். எல் அலாமின் போர் முடிவுற்று அரை நூற்றாண்டுக்குப் பின்னரும், எகிப்திலுள்ள பெடோயின் இனத்தவர், '' பிசாசின் வயல் வெளிகள் '' என்று கூறி, அந்தப் பக்கம் செல்வதேயில்லை. 75, 000 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பில் இந்தப் போர் நிகழ்வு இடம்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. பிரித்தானியாவின் மிகநெருக்கமான நிலக்கண்ணி வெடிப்புதைப்பு, ஹிற்லரிடமிருந்து எகிப்தைக் காப்பாற்றிய போதும், ஏற்பட்ட செலவினம் சொல்லுந்தரமன்று. '' நிலக் கண்ணி வெடிகளுக்குப் பதிலாக மரங்கள் நாட்டப்பட்டிருந்தால், எமது பொருளாதாரச் சிக்கல்கள் இல்லாதொழிந்திருக்கும் '' என்கிறார், மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான, கெய்றோவின் மையப் பணியகத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் அகமட் அப்துல் ஹாலிம்.

பிசாசின் வயல்வெளிகள், இப்போது உலகளாவிய ரீதியிற் பரந்து கிடக்கின்றன. மக்கள்



அங்கோலா:– அந்த நாட்டின் உள் நாட்டுப் போராற் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் வாழ்க்கை சீர்குலைக்கப் பட்டுள்ளது. குழந்தைகளைக் காப்பது, பணி செய்வதென்பதெல்லாம் இனி நடக்க முடியாதவை ஆகிவிட்டன.

கவனத்தைச் சிறிதளவு மட்டுமே ஈர்த்துள்ள இந்த நோய், இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்று வளர்ந்து வருகிறது. உலகின் வல்லரசுகள் அணுவாயுதங்கள் பற்றி ஓசை எழுப்பிக் கொண்டிருக்க, ஆயுதக்கட்டுப்பாட்டு அமைப்பு அணுவாயுதப்பரவல் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, அதனிலும் ஆபத்தான ஒன்று துரோகத்தனமான வளர்ச்சியடைந்து வருகிறது. கம்போடியா, வியட்நாம், அங்கோலா, மொஸாம்பிக் போன்ற நாடுகளில் பனிப்போரின் மாதிரிச் சண்டைகள் நடைபெறுவதால், கரந்தடிப்படையினருக்கும், ஆளணியும் ஆயுதமும் பற்றாக் குறையாயுள்ள அரச படையினருக்கும் கண்ணிவெடிகளே தேர்ந்த ஆயுதங்களாகவுள்ளன.

இலாபகரமானதும், ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதுமான இவை, எதிரியைச் செயலிழக்கச் செய்ய உதவுவதோடு, கொல்வதற்காக மட்டுமல்லாது, சாதாரணக் குடிமக்களை அச்சுறுத்தி, பெரும்பரப்பிலான விவசாய நிலங்களையும், வேறு பிரதேசங்களையும் உலா வரக் கூடாத ஆபத்தான இடங்களாக மாற்றியும் விடுகின்றன.

பிரதேச முரண்பாடுகள் பல இல்லாதொழிந்த பின்னருங் கூட, இலட்சோப இலட்சம் கண்ணிவெடிகள் அப்படியே புதையுண்டு இருக்கின்றன. அமெரிக்க ஐ. நா. ஆய்வின் படி, 62 நாடுகளில், 8 கோடியே 50 இலட்சத்திலிருந்து 10 கோடி வரையிலான கண்ணிவெடிகள் அப்படியே இருக்கின்றன. இதே அளவு எண்ணிக்கை, அந்தந்த நாடுகளின் கையிருப்பிலுமுள்ளன. அகில உலகரீதியில் இவற்றைச் செயலிழக்கப் பண்ணுவதற்கு ஆகும் செலவு 8,500 கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. வைத்திய உதவியும், புனர்வாழ்வும் வேண்டி நிற்கும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கான உதவித் தொகை இதனுள் அடங்கவில்லை.

பிரான்சின் லியோன்ஸ் நகரில் அமைந்துள்ள சர்வதேச அங்கவீனர் உதவி நிறுவனத்தின் கணிப்பின்படி, கடந்த 15 ஆண்டுகளில் மட்டும், 10 இலட்சம் பேர்வரையில் கண்ணி வெடியாற் பாதிக்கப்பட்டுள்ளனராம். கண்ணிவெடிக்கெதிரான, சர்வதேச அங்கவீனர் உதவி நிறுவனத்தின் பிரச்சாரத்திற்குப் பொறுப்பான ரிம் காஸ்ரெயாரின் கூற்றுப்படி, 400, 000 லிருந்து 450, 000 பேர் வரையில் கண்ணி வெடியால் முடமாக்கப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு, அது போன்று இரண்டு பங்கினர் கண்ணிவெடியால் ஏற்பட்ட காயங்களுக்குப் பலியாகியுமுள்ளனர். ''மறைக்கப்பட்ட கொலையாளிகள்'' என்ற தலைப்பில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த ஜூலையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், வருடாந்தம் 7,800 பேர் கொல்லப்படுவதாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, மிகக் குறைந்த எண்ணிக்கையாகும் என்பது, நிபுணர்களின் அபிப்பிராயமாகும். ''பின்தங்கிய இடங்களில், கண்ணிவெடிகளாற் பலர் இறக்கிறார்கள். யாருக்கும் அது தெரியவருவதில்லை'' என்கிறார், ஜெனிவாவிலுள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த யிவேஸ் சாண்டோஸ். ''கண்ணிவெடிகளால் துன்புறுவோர் எண்ணிக்கையும் சரியாகத் தெரியாது. அந்தத் துன்பத்தின் தாக்கமும் எல்லோருக்கும் புரியாது'' என்கிறார் அவர்.

''இந்தத் துன்பியலின் அளவோ, எல்லோருக்கும் புரியுமளவிற்கு மிகவும் விசாலமானது. ஆனால், அது உலகத்தின் அக்கறைக்கு அகப்படாமல் தப்பிக்கொண்டுள்ளது. இந்த மட்டத்திற்கு, மக்கள் பட்டினியாற் சாகும் நிலை தோன்றியிருந்தால், எல்லா வகையான மக்களும் வெள்ளைநிற வாகனங்களில் வந்து, உணவு விநியோகம்'' செய்யத் தொடங்கிவிடுவார்கள் என்று கூறுகிறார் றாயே மக்றாத். பிரித்தானியாவிலுள்ள அவருடைய நிலக்கண்ணி ஆலோசனைக்குழு, ஆப்கானிஸ்தான், கம்போடியா, ஈராக் போன்ற இடங்களில் இந்தச் சிக்கலை அளவிட்டிருக்கிறது.

வளங்கள் ஏலவே குறைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில், அங்கவீனமாகும் ஒவ்வொருவரும் பொருளாதாரப் பளுவை அதிகரிக்கவே செய்கிறார்கள். ஒரு கால கட்டத்தில் உற்பத்திக்குதவிய தொழிலாளி ஒருவர் முடமாவதால், அவருக்கு உணவு, உறையுள், வைத்திய உதவியனைத்தும் கொடுபடவேண்டியாகிறது. 18 ஆண்டுக்



வல்செல்லா எஸ். வீ. 50:- உலங்கு வானூர்தியில், அல்லது வாகனத்திலிருந்து பரப்பிவிடக் கூடியதும், 185 கிராம் எடையுள்ளதுமான, முழுவதும் பிளாஸ்ரிக்கிலான, ஆட்களைத் தாக்கும் கண்ணிவெடி.

காலம் உள்நாட்டுப் போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள மொஸாம்பிக்கில், 20 இலட்சம் நிலக்கண்ணிவெடிகள் 28 பிரதான வீதிகளை உபயோகமற்றதாக்கியுள்ளன. தமது வயல்களெல்லாம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக அஞ்சும் 35 இலட்சம் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அகதிகள், சொந்த நாட்டுக்குத் திரும்ப மறுக்கும் முக்கியகாரணம் இதுவாகும். ''மறைக்கப்பட்ட கொலையாளிகள்'' அறிக்கையின்படி, கண்ணிவெடிப் புதைப்பால் தென் சூடான் முழுவதிலுமே விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள், ''பாரிய சரித்திர வரட்சித்தாக்கச் சிறைக்குள் அகப்பட்டுத் தவிக்கிறார்கள்.''

மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் வரிசையில் அங்கோலா, ஆப்கானிஸ்தான், கம்போடியா என்பன வருகின்றன. அங்கோலாவில் 90 இலட்சம் கண்ணிவெடிகள் இருக்கலாம் என்பது, அமெரிக்க அதிகாரிகளின் கணிப்பீடு. அவை, 2 கோடி வரை என்கிறது, றோயல் எஞ்சினியேர்ஸின் பிரித்தானிய இராணுவ அணி. ''மறைக்கப்பட்டுள்ள கொலையாளிகள்'' ஆய்வின்படி, ஆபிரிக்காக் கண்டமே இந்த வகையிற் பெரிய அளவிலான தொந்தரவுக்காளாகியுள்ள பகுதியென்றும், 3 கோடி கண்ணிவெடிகள் அங்கே உள்ளன என்றும் தெரிகிறது. அந்தக் கண்டத்தின் 18 நாடுகளிலே இவை பரவிக் கிடக்கின்றன சென்ற ஆண்டு அங்கோலாவில் மீண்டும் உள்நாட்டுப்போர் ஆரம்பித்து விட்டமையால், அங்கே மேலும் நிலக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால், கிராமப்புற மக்கள் முற்றுகையிடப்பட்ட நகரங்களை விட்டுத் தப்பி வெளியேறி, உணவுக்கும் விறகுக்கும் அலைகின்றபோது, பாதிப்புக் குள்ளாவோர் எண்ணிக்கையும் அதிகமாகும். அரசப் பதிவேட்டின்படி, அங்கே பாதிப்புக்குள்ளாவோர் எண்ணிக்கை 38,500 ஆகும். ஆனால், இது அங்கம் கழற்றப்பட்ட இராணுவத்தினரை மட்டுமே உள்ளடக்கும். கம்போடியாவில், மொத்தம் 30,000 அங்கம் குறைக்கப்பட்டோருள்ளனர். குடிமக்களில், 236 இற்கு ஒன்று என்ற விழுக்காட்டிற் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். கால் நூற்றாண்டுப் போரினால், 40 இலட்சத்திலிருந்து 70 இலட்சம் வரையிலான நிலக் கண்ணிவெடிகள் அங்கே நெல் வயல்களிலும், காடுகளிலும் புதையுண்டு கிடக்கின்றன. ஒவ்வொரு கம்போடியனுக்கும் ஒவ்வொரு வெடி என்ற கணக்கு இதுவாகும். ''கம்போடியக் கண்ணிவெடிச் செயல் மையம்'' என்ற ஒன்றை, ஐ நா. அங்கே அமைத்துள்ளது. கண்ணிவெடியகற்றும் குழுக்களுக்குப் பயிற்சியும், நிதியுதவியும் அளிப்பதோடு, குடிமக்களுக்குக் கண்ணிவெடிபற்றிய அறிவையூட்டுவதுமே இதன் நோக்கமாகும். இந்தப் பயங்கரத்திலிருந்து மீளுவதற்கு, கம்போடிய நாடு 700 கோடி டொலர்களைச் செலவிடவேண்டும். இது, அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் ஐந்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமாகும் என்பது "மறைக்கப்பட்ட கொலையாளிகள்" இன் இணை ஆசிரியரான டேவிட் கௌடியின் கருத்தாகும்.

மிகவும் ஆபத்தான நிலை ஆப்கானிஸ்தானிலேயே உள்ளது. 350,000 த்தில் இருந்து 500,000 பேர்வரை, பாதிக்கப்பட்டுள்ளனர். 14 ஆண்டுகாலப் போரில், 90 இலட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கணிக்கப் படுகிறது. "மறைக்கப்பட்ட கொலையாளிகள்", இது 6 கோடி வரையிலாகுமென்கிறது. சுத்திகரிப்புக்களை, முஜாகுதீன் பிரிவுகளுக்கிடையிலான மோதல்கள் பாதிக்கின்றபோதும், ஐ. நா. வின் ஆதரவில் நடக்கும் கண்ணிவெடியகற்றும் பணி, உலகிலேயே இங்கு தான் மிகவும், சிறப்பாக நடந்தேறுவதாகப் பாராட்டப் படுகிறது. ஒவ்வொரு குழுவிலும் 32 பேரைக்கொண்ட 35 குழுக்கள், கடந்த மூன்று ஆண்டுகளிற் காபூல் போன்ற நகரங்களுட்பட்ட, 2 கோடியே 50 இலட்சம் சதுர மீற்றர் நிலப்பரப்பில் 60,000 கண்ணிவெடிகளை மீட்டுள்ளனர். எவ்வகையிலும், இது மிகவும் கடினமான பணியாகும். முன்னுரிமை அளித்துச் சுத்தமாக்கப்படவேண்டிய 6 கோடி சதுரமீற்றர் நிலப்பரப்பு இன்னமுமுண்டு. உடலை உபயோகிக்கும் முறையில் சுத்தப்படுத்துவதானால், ஒவ்வோர் ஆண்டும் 30 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பையே சுத்திகரித்து முடிக்கலாம். இந்த வகையில், பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானத்தின் கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலப்பரப்பின் 20 விழுக்காட்டுப் பிரதேசத்தைச் சுத்தப்படுத்த, 4,300 ஆண்டுகள்வரை செல்லலாம் என்பது செஞ்சிலுவையினரின் கணிப்பீடாகும்.

கண்ணிவெடி அகற்றுவதென்பது, ஆபத்து நிறைந்த ஒரு தொழிலாகும். குவைத்தில், ஈராக்கியர் விதைத்த 70 இலட்சம் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் 84 பேர் கொலையுண்டனர். அமெரிக்காவின் தலைமையில் நடந்த கூட்டுத் தாக்குதற் போரிலேயே இறந்தோர் தொகை 240 என்கின்றபோது, இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமானதாகும்.

கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதற்கான மூல காரணம் அதற்கேற்படும் செலவாகும். பாதிக்கப்பட்ட நாடுகள் இன்னமும் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன; அல்லது இதற்கான செலவைத் தாங்க முடியாதவையாயுள்ளன. பனிப்போர் மோதல்களுக்கு ஆக்கமும், ஊக்கமுமளித்து வந்த அமெரிக்காவும், ருஷ்யாவும் ஏற்பட்ட சிக்கலின் விளைவுகளைத் தீர்ப்பதற்கு அதிக நாட்டம் கொள்வதாகத் தெரியவில்லை. வோஷிங்ரனின் கணிப்பீட்டின்படி, 15 விழுக்காடு கண்ணி வெடிகள் அதாவது, ஒரு கோடியே இருபத்தெட்டு இலட்சத்திற்கும் அதிகமானவை அமெரிக்காவில் தயாரானவையாகும். வோஷிங்ரனின் வரவு செலவுத் திட்டத்திலுள்ள கட்டுப்பாடுகளும், மொஸ்கோவின் நிதித் தட்டுப்பாடுகளும், இவ்விரு நாடுகளும் இந்த வகையிற் பங்கேற்காமைக்குக் காரணங்களாகும்.

ஏனைய நாடுகளும் உதவ முன் வருவதாயில்லை. சமீபத்தில், ஆப்கானிஸ்தானின் கண்ணிவெடிகளகற்றும் பணிக்காக ஐ. நா. 2 கோடி டொலர் உதவி கோரியபோது கிடைத்தது அரைப்பங்கு மட்டுமே.

கம்போடியா விடயத்திலும் இவ்வாறே நடந்தது. ஐ. நா. உருவாக்கிய சுத்திகரிப்புத் திட்டத்திற்காய்க் கோரப்பட்ட 1 கோடி டொலருக்குப் பதில், 30 இலட்சம் மட்டுமே தேறியது. 1993 – 94 வரவு செலவுத் திட்டத்தில், நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிக்கு அமெரிக்காவின் ஒதுக்கீடு 1 கோடி டொலர்கள் மட்டுமே. ஒப்பீட்டு நோக்கில் 1986-க்கும், 1991 -க்கும் இடைப்பட்ட காலத்தில், ஒரு நாட்டில் மட்டும், அதாவது அங்கோலாவில் ஜோனாஸ் சவிம்பியின் யுனீற்றா இயக்கத்திற்கு மட்டும், அமெரிக்கா 25 கோடி டொலரை உதவியுள்ளதென்பது கவனிக்கத் தக்கதாகும்.

முந்தைய யூகோஸ்லாவியாவில், 1991 ஆம் ஆண்டிலிருந்து 30 இலட்சத்திற்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருக்கிறதென்றும், ஜோர்ஜியா, ஆர்மீனியா, அசர்பைஜான், தஜிக்கிஸ்தான் போன்ற நாடுகளிற் புதிய வெடிகள் உருவாக்கப்படுகின்றன வென்றும், ஐ. நா. அதிகாரிகள் மதிப்பிடுகிறார்கள். வோஷிங்ரனிலுள்ள மனித உரிமைகளைக் கண்காணிக்கும் ஆயுதப் பகுப்பாய்வாளரான ஸ்டீபன் கூஸ், உற்பத்தியாளர்கள் மிகவும் துரிதகதியில் அதிநவீன கண்ணிவெடிகளை அபிவிருத்தி செய்து சந்தைப்படுத்தி வருவதால், மூன்றாம் உலக நாடுகளிலும் இந்தவகை உற்பத்தி பெருகும் என்று கருதுகிறார். விழுக்காட்டு ரீதியில், 48 நாடுகளிலுள்ள 96 உற்பத்தியாளர்கள், 50 இலட்சத்திலிருந்து ஒரு கோடி வரையிலான மனித அழிவுக் கண்ணி வெடிகளை ஓர் ஆண்டில் உருவாக்குவதாகவும், அதன் மூலம் 20 கோடி டொலர் அளவுக்கு வர்த்தகம் பெருகியிருப்பதாகவும் கூஸ் கூறுகிறார்.

"நிலக் கண்ணிவெடிகள்– உயிராபத்துச் சொத்து" என்ற பெயரில், நியூயோர்க் நகரை மையமாகக் கொண்டு இயங்கிவரும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பும், மனித உரிமைக்கான மருத்துவர்களும் இணைந்து, கடந்த ஒக்ரோபரில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சமீபக் காலங்களில் முன்னைய சோவியத் யூனியன், சீனா, இத்தாலி போன்ற நாடுகளே கண்ணிவெடிகளைப் பெருமளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் நாடுகள் என்றும், அமெரிக்காவும் இவ் விடயத்தில் அதிகம் பின் தங்கிவிடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளன. 3 டொலர்கள் பெறுமதியான சீன மாதிரி – 72 கவசவாகன எதிர்ப்புக் கண்ணி வெடிதான், அதிக விற்பனையாகும் வகையாகும். வெடித்தும், பயனளிக்கும் இதன் வெடிமருந்து நிறை 5 கிலோ எனத் தெரிகிறது. இத்தாலியின் 6.50 டொலர்கள் விலையிலான வி. எஸ். 50 வகை, முழுவதும் பிளாஸ்ரிக்காலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க கிளேமோர் கண்ணிவெடியின் விலை 27 டொலர்களாகும். இது வெடிக்கும் போது, 700 உருக்குச் சிதறல்களாகப் பரவிப்பாயும். வியட்நாம் போரின்போது, ஹோசிமின் நெடுஞ்சாலை நெடுகிலும் விதைப்பதற்காக, அமெரிக்கா கண்டுபிடித்த தானாகவே பரவிப்புதையும் முறையிலான கண்ணி வெடிகள், விதைக்கும் பணியை இலகுவாக்கியுள்ளது. இத்தாலியின் ஆயுத விற்பனையாளரான வல்செல்லா மெக்கானோற்றெக்னிக்கா, இப்போது ஒரு புது முறையிலான கண்ணி வெடியை உற்பத்தி செய்து வருகிறார். இது வாகனங்களின் மேல் வைக்கப்பட்டு, ஒரு விநாடிக்கு 30 கண்ணிவெடி வீதம் தெளித்துவிடும் சக்திமிக்கது. இன்னும் 10 ஆண்டுக் காலத்தில், ஒரு கண்ணிவெடியின் இயக்கம் பலவற்றின் இயக்கத்திற்கு உந்து சக்தியாகி, கொலையின் அளவை அதிகரிக்கும் வகையிலான ''சாமர்த்திய நிலக் கண்ணி வெடியைத்'' தயார் செய்வதற்கு, உற்பத்தியாளர்கள் தயாராகி வருகிறார்கள்.



தற்போதைய பயங்கரங்களும், இன்னமும் இருள் சூழ்ந்த எதிர்கால விளைவுகளும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், நிலக் கண்ணி வெடிகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற ஓர் இயக்கம் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளது. இதனை முன்னின்று நடத்துபவர்களில், அமெரிக்க பவுண்டேஷன் எனப்படும் உதவி நிறுவனத்திலுள்ள, வியட்நாம் போரிற் பங்குகொண்ட முன்னாள் வீரர்கள் முதன்மையானவர்கள். மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனம், உலகளாவிய ரீதியில் உற்பத்திச் சேகரிப்பு, நிலக்கண்ணி வெடிகளின் உபயோகம், இடமாற்றம் என்பனவற்றைத் தடை செய்ய வேண்டும் என்ற, மேற்படி இயக்கத்தின் கோரிக்கைக்கு வலுவேற்றி வருகிறது. ''மெதுவாக இயங்கி, பாரிய அளவிலான நாசம் விளைவிக்கும் கருவியாக நிலக்கண்ணி வெடி மாறிவருகிறது'' என்கிறார் அந்த அமைப்பின் ஆயுதக் கருத்திட்டத்தின் இயக்குநரான கெனத் அன்டசன். ''இரசாயன, உயிரியல் ஆயுத உபயோகத்திற்கெதிரான எமது எதிர்ப்பளவு, எதிராகவும் பிரயோகிக்கப்படுவதே தீர்வுக்கு வழி'' என்பது, அவரது நிலைப்பாடு.



அமெரிக்க 1.6 கிலோ கிராம் கிளேமோர். பல் திறப்பட்ட உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடியது, தொடர்கம்பி கையாளப்பட்டவுடன், 700 உருக்கு பந்துகள் விசிறி அமைப்பில், பக்கவாட்டில்வெளியேறித் தாக்கும்.

இவ்வாறான தடைக்கு, மிகவும் முக்கியமான முதல் நடவடிக்கை சென்ற ஆண்டு உருவாகியது. நிலக் கண்ணிவெடி ஏற்றுமதிக்கு, அமெரிக்கக் கொங்கிரஸ் ஒரு சட்ட ரீதியான காலக்கெடு விதித்தமையே அதுவாகும். சென்ற வாரம், அது மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது சர்வதேச அளவில், ஐ. நா. தடையொன்றைக் கொண்டுவர வேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது. இந்தப் பிரேரணை மீது இந்த மாதத்திற் பொதுச்சபை வாக்களிக்கும். முற்று முழுதான தடை என்பது, வெகு தொலைவிலுள்ள ஒரு விடயமாகும். அகில உலகத் தடைக்கு, அமெரிக்கா உட்படப் பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையிலேயேயுள்ளன. அந்த நாடுகளின் இராணுவத் தலைவர்கள் தடையை விரும்பவே மாட்டார்கள். இவ்வாறான எதிர்ப்புக்குக் காரணம், கண்ணிவெடியின் செயற்றிறனாகும். ''நிலக்கண்ணி வெடிகள், சட்டபூர்வமான பாதுகாப்புக் கருவிகளாகும். தனது துருப்பினரைப் பாதுகாக்க, அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இது தேவை'' மினெசோற்றாவின் ஹொப்கின்சிலுள்ள, முன்னணி அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்களான அலாய்யன்ஸ் றெற்சிஸ்ரெம்ஸ் நிறுவனத்தின் உபதலைவர் கிறிஸ்ரி றொலாக் வங்ஸ்ராட்டின் கருத்து இது. ஜேனின் ''படைய வாகனங்களும், இடப்பெயர்வும்'' என்ற நூலின் இணை ஆசிரியரான கிறிஸ்பொஸ், தரைவழித் தாக்குதலுக்கிலக்காகும் சிறிய நாடுகளுக்கு, நிலக் கண்ணிவெடிகள் மிகவும் அவசியமானவை என்கிறார்.

மூன்றாம் உலகநாடுகளும், கரந்தடிப்படைக்குழுக்களும் சட்டவிரோதக் கள்ளச் சந்தையிலேயே ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதால், முழுத்தடை சாத்தியமானதல்ல என்பது, பல நிபுணர்களின் சந்தேகமாகும். முழுத்தடை என்பது நடைமுறையிலாகாதது. ஆதலால், சர்வதேசச் செஞ்சிலுவை நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் கெட்டுப்போனதும், செயற்பாடற்றதுமான 1980 ஆம் ஆண்டின் நிலக்கண்ணிவெடி உடன்பாட்டை இறுகப்பிடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. அந்த உடன்பாட்டின்படி, நிலக் கண்ணிவெடிகள் சாதாரணக் குடிமக்களைப் பாதிக்கக் கூடாது என்பதும், நிலக்கண்ணிவெடி புதைக்கப்பட்ட வெளிகளில் விபரங்கள் தெரிய வேண்டும் என்பதுங் கட்டாயமாகும். இப்போது முன்னுரைக்கப்பட்டுள்ள கருத்து, ''முன்னேற்றம் உள்ள உற்பத்தியாளர்கள் தாமாகவே முன்வந்து, சகல நிலக்கண்ணிவெடிகளிலும் ஒரு வேகக்குறைப்பு முறைமையைக் கைக்கொண்டு, உயிரையும் உடலையும் அச்சுறுத்துவதை நிறுத்த வேண்டும்'' என்பதாகும். ''உற்பத்தியாளர்கள் நிலக் கண்ணிவெடிகளை விற்று விட்டதும், தமது பொறுப்புக்களைக் கைகழுவி விடுகிறார்கள். தவறான கரங்களுக்கு அது போய்ச் சேருவது பற்றியோ, தமது பிள்ளைகளுக்கே அங்க அவயவங்கள், போய்விடுவதைப் பற்றியோ அவர்கள் கவலைப்படுவதில்லை. இன்றைக்கும், அமெரிக்கக் கண்ணிவெடிகளால் அப்பாவி மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இவ் விடயத்தில் உதவவேண்டிய கடமைப்பாடு அமெரிக்காவுக்கு உண்டு'' என்று கூறுகிறார், கண்ணிவெடிகள் பூரணமாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக நிற்கும் வே(ர்)மொன்ற் செனற்றர் பற்றிக் லீஹி.

இப்போதைக்கு, போர்த் தேவைகள் முடிந்த பின்னர், சாதாரண மக்களின் இறப்பு விகிதம் கணக்கில்லாமல் அதிகரிக்கப்போகிறது. கண்ணிவெடிகளால் முடமாக்கப்பட்ட குடிமக்களின் மனதில் ஆழ வேரூன்றியுள்ள இந்த அபாயம் பற்றிய அச்சம், அந்த மக்களின் அன்றாட வாழ்வையே பாதித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு மரண நாட்டிய விவகாரம் ஆரம்பமாகியுள்ளது. உள்ளூர் மக்கள், பல பெயர்களைச் சூட்டி, இந் நிலக் கண்ணிவெடிகளை அழைக்கிறார்கள். தம்மாற் பாதிக்கப்படுவோருக்காக, அவை காத்திருக்கும் தன்மையைக் குறிப்பிடும் வண்ணம், ''கறுப்பு விதவைகள்'' (Black Widows) என்று கவிதை நயம்படக் கூறுவோரும் உள்ளனர். ஆப்கானிஸ்தானில், சோவியத் படையினர் உலங்கு வானூர்திகள் மூலம் பரப்பி விதைத்த தன்மையைக் கொண்டு ''பச்சைக்கிளிகள்'' என்றும், ''வண்ணத்துப் பூச்சி'' என்றும் கூறுவோரும் உளர். அங்கோலாவில் ''ஒஸ்மியூற்றிலாடோஸ்'' எனப்படும் இதனால், தெருப் பிச்சைக் காரரின் பட்டாளமே உருவாகியுள்ளது. கம்போடியாவில், அங்கோர்வற் செல்லும் வழியில், ஓர் அறிவிப்புப் பலகையில், ''காலற்றுப் போவதற்கு இங்கே வாருங்கள்''.



சீன மாதிரி 72:- கவசவாகன எதிர்ப்புக் கண்ணிவெடி. 300 கிலோகிராமுக் கதிகமான நிறையின் அமுக்கத்தில் வெடிக்கும். 6.5 கி. கிராம் எடையுள்ள இதுவே, உலகில் சாதாரணமாக உபயோகிக்கப்படுவது.

என்ற விளம்பரம் காணப்படுகிறது. சிதைக்கப்பட்ட தமது உடன் மாணவர்களைப்பார்த்து, கம்போடியப் பள்ளிச் சிறுவர்கள் ''முதலை இறைச்சி'' என்பார்கள்.

அங்கோலாவின் மாநிலத் தலைநகரான, லுவேனாவைச் சேர்ந்த 13 வயதேயான அன்ரோனியோ டொமிங்கோ குவென்ஹாவுக்கு, பள்ளிப்படிப்புக்கு இனி வழி கிடையாது. காற்பந்தாட்ட வீரனாகவோ, அல்லது கூடைப்பந்தாட்ட வீரனாவோ வரவேண்டுமென்று கனவு கண்டவன் அவன். சென்ற ஜூன் மாதம் விறகுதேடிப் போனபோது, அவனது கால்கள் கண்ணிவெடியாற் சிதறுண்டது. லுவாண்டாவின், ஜோசினா மக்கல் மருத்துவ மனைக்கு வெளியே, ஒரு கிளையற்ற மரத்தின் கீழ் அமர்ந்து, ''சிகரெற் விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்'' என்று கூறுகிறான் அவன். பிசாசின் வெளிகளில் துணிந்து செல்லும் உலகின் பலரைப் போல, அன்ரோனியோவும் சென்றதால், சிதைக்கப்பட்ட கனவுகளோடு தனது வாழ்நாளின் எச்சத்தைக் கழிக்கப் போகிறான்.

வோஷிங்ரனிலிருந்து:–
மறியா கிறிஸ்ரீனா கபோலறொ; பாரிசிலிருந்து புறாஸ் குறும்லே;

புதுடில்லியிலிருந்து:-
மீனாக்ஷி கங்குலி, மற்றும் அலுவலகங்கள் என்பனவற்றிலிருந்து வந்த அறிக்கைகளுடன்.

அகற்றப்படாத
கண்ணிவெடிகளின் விபரம்
(பிராந்திய ரீதியில்)

| | |
|---|---|
| இலத்தீன் அமெரிக்கா | 0.3— 1 மில் |
| ஐரோப்பா | 3— 7 மில் |
| ஆபிரிக்கா | 18—30 மில் |
| மத்திய கிழங்கு | 17—24 மில் |
| தென் ஆசியா | 13—25 மில் |
| கிழக்கு ஆசியா | 15—23 மில் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தரமான, சுவையான
பாணைத் தேடித் திரிகின்றீர்களா? கவலையை விடுங்கள்;

பாண், பணீஸ், கேக் போன்ற
அனைத்துப் பொருட்களையும்
தரமாகவும், சுவையாகவும், சுகாதார
முறைப்படியும் தயாரித்து வழங்கும்

# லிங்கம் பேக் ஹவுஸ்

இற்கு இனிமேல் செல்லுங்கள்.
*லிங்கம் பேக் ஹவுஸ்,*
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் உணவின் சுவை!
எங்கள் அரிசியின் தரம்!!

சுவையான உணவுகளையே
நீங்கள் எப்போதும் விரும்புகிறீர்கள்.

தரமான அரிசியினை,
மலிவான விலையில் தருவதையே
எப்போதும் நாங்கள் செய்கிறோம்.

# சசி அரிசி ஆலை

சீரனி, சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விருப்பம்! எங்கள் கைவண்ணம்!!

தமிழீழத்தின் முன்னணி
அச்சுப்பதிப்பாளர்களாகிய நாங்கள்

உங்கள் தேவைகள் அனைத்தையும்
அழகுற அச்சிலே பதித்திட காத்திருக்கிறோம்.

# ★ இராசன் அச்சகம் ★

*144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.*

---

தமிழீழத்தின் தரமான சஞ்சிகையாக
வெளிவருவது *"உலக உலா"*
உலக அரங்கின் உன்னத செய்திகள் யாவும்
உயிரோட்டமாய்த் தருவது *'உலக உலா'*
திங்கள்தோறும் இல்லம் தேடிவர
இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்!

தொடர்புகளுக்கு :- 'உலக உலா' செயலகம்
144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களைக் காப்பாற்றலும், மீட்டலும்.

— எழுதியவர் —
பா(ர்)பறா றுடோல்ப்

றுவாண்டாவிலுள்ள தனது செயலகத்திற்குத் தினமும் காலையில் நடந்து செல்லும் ரொமி பேர்ஸ்ஸனுக்குத் தனது பணி ஒருபோதும் முடியாது என்று தெரியும். அவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த உடற்பாதிப்பைச் சரிசெய்யும் பொறியியலாளர். நிலக் கண்ணிவெடிகளால் உடலூறுபட்ட 38,500 - க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்கும் அங்கோலாவின் இரண்டு நிலையங்களில் ஒன்று இவருடையது. செயற்கை அவயவங்களில்லாமல் வீதிகளிலே தத்தித்திரியும் எண்ணிக்கையற்ற மக்களை பேர்ஸ்ஸன் பார்த்திருக்கிறார். மிகவும் புராதன முறையிலான குறை நிரப்பும் மருத்துவத்தைக் கூட 16,000 அங்கோலா மக்களே இந்நாள் வரை பெறமுடிந்திருக்கிறது. ஜோர்தானிலும், பாகிஸ்தானிலும் மனிதாபிமானப் பணிகளில் அனுபவம் மிக்க இந்த 55 வயதான சுவீடிஷ்காரர் ''நாட்டிற் பல இலட்சக்கணக்கான கண்ணிவெடிகள் இருக்கின்றன; சிக்கல் மேலும் அதிகரிக்கிறது'' என்று சொல்லுகிறார்.

கண்ணிவெடிகளாற் பாதிப்புற்றோருக்கு மறுவாழ்வளிக்கும் இரண்டு நிறுவனங்களுமில்லாது போனால் நிலைமை கற்பனைக்கும் அப்பாலே போயிருக்கும். சர்வதேசச் செஞ்சிலுவை அமைப்புக்களின் குழுவும், சர்வதேச அங்கவீனர் அமைப்புமே அவையாகும். சென்ற ஆண்டில் மட்டுமே 9,035 பாதிக்கப்பட்ட குடிமக்களுக்குச் சிகிச்சையும் செயற்கை அவயவங்கள் பொருத்தியதும் உட்பட 1979 ஆம் ஆண்டிலிருந்து செஞ்சிலுவை அமைப்பு 44,000 பேருக்கு இந்தப் பணியினைச் செய்து முடித்துள்ளது. 15 நாடுகளில் இந்த நிறுவனம் 27 சிகிச்சை நிலையங்களை இயக்கி வருகிறது. சிறிய வரவு செலவோடு சர்வதேச அங்கவீனர் அமைப்பு உருவாகவேண்டிய அபாயம் குர்திஸ்தான் முன்னைநாள் யூகோஸ்லாவியா போன்ற நாடுகளிற் சூழ்ந்து வருகிறது. 11 ஆண்டுகளுக்கு முன் பிரெஞ்சு மருத்துவர்களால் தோற்றுவிக்கப்பட்ட லியோன் நகரில் அமைந்துள்ள இந்நிறுவனம் 30 நாடுகளில் 120 புனர்வாழ்வு நிலையங்களை நிர்வகித்து வருவதோடு 150,000 பேருக்கு இதுவரை செயற்கை அவயவங்களை அளித்துமுள்ளது. ''மனித உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஏமாற்றத்தால் தோன்றிய சர்வதேச அங்கவீனர் நிறுவனம் அவர்களை இந்த ஆபத்திலிருந்து மீட்க முடியாமல் தவிக்கிறது'' என்கிறார் நிலக் கண்ணிவெடிக்கெதிரான இந்நிறுவனத்தின் திட்ட மேற்பார்வையாளர் ரிம் கா(ர்)ஸ்ரெயாஸ்.

மேற்குலகின் வசதிமிக்க நடுத்தரக் குடும்பங்களிலிருந்து வெளியேறும் மருத்துவர்கள் தொழில்நுட்ப வல்லுநர்கள், சிகிச்சையளிப்போர் என்பவர்கள் மூன்றாவது உலகநாடுகளில் வித்தியாசமான மருத்துவ முறைகளை எதிர்கொள்ளுகிறார்கள். சுகாதாரமற்ற சத்திரசிகிச்சை அறைகள், பற்றாக்குறையுள்ள மருத்துவப் பொருள் விநியோகங்கள் முடிவேயில்லாத எண்ணிக்கையிலான நோயாளர்களென அனைத்துக் குறைபாடுகளோடும் அவர்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. மொஸாம்பிக்கிலிருந்து கம்போடியா வரை அவர் தம் பணி இவ்வாறானதுதான். முதலில் செயற்கை அவயவங்களை நோயாளரில் மாட்டிவிடுகிறார்கள். அதைத் தொடர்ந்து அதனை உபயோகிக்கப் பயிற்சி அளிக்கிறார்கள். எப்படியும் இரண்டிலிருந்து நாலு வாரம் இது நடைபெறும். அதைத் தொடர்ந்து நோயாளர் முடமாகிவிட்ட வாழ்க்கையிலேற்படும் வேதனை மிக்க உளரீதியான பாதிப்புக்குப் பழக்கப்படச் சிகிச்சையாளர் உதவுவார்.

கம்போடியாவைப் பொறுத்தமட்டில், உடல்ஊனமுற்றோரை ஏனையோர் வெறுப்புடனேயே பார்ப்பர். அந்த நாட்டில் சர்வதேச அங்கவீனர் நிறுவனத்தின் 6 நிலையங்களை நடத்திவரும் பெனொயிற் டெனிஸ், ''இங்கே, அங்கமிழந்தவர்களை மக்கள் விரும்புவதில்லையென்றும், இந்த நாட்டில் உடலுறுப்பை இழப்பதென்பது, ஆத்மாவையே பறிகொடுப்பது போலாகும்'' என்றும் கூறுகிறார். இதற்கான மாற்றுமருந்து, ஏதோவிதமான தன்னிறைவு மட்டுமே. பழம் பறிக்கும் ஒரு தொழிலாளி தன் இரு கால்களையும் இழந்த பின், பொய்க்கால்களோடு மரமேறித் தொழில் செய்வதை, தான் பார்த்ததாகக்கூறுகிறார் டெனிஸ். ''இரண்டு கிலோ எடையுள்ள மரமும், றப்பரும் சேர்ந்து, ஒரு மனிதனை மீளவும் முழுமனிதனாக்கிவிடுகிறது'' என்று மேலும் சொல்கிறார் டெனிஸ்.

மிக எளிதான பொருள்களே சிலவேளைகளிற் கிடைப்பதில்லை. அங்கோலாவில், கண்ணிவெடியாற் காயமுற்ற படைவீரர்களுக்கு உதவியாக மாதாந்தம் கிடைப்பது 3 டொலர்கள் மட்டுமே. அரசு, கக்கத்தண்டம் எனப்படும் உடல் தாங்கி கூட வழங்குவதில்லை. செயற்கை அவயவம் எதையும் உதவுவதில்லை. செயற்கை அங்கங்களை உருவாக்குவதற்கான மரம், பசை என்பனவற்றைச் சுகாதார அமைச்சு எப்போதும் வழங்குவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

வளர்ந்து வரும் உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கையின் தேவைகளைப் பூரணமாக்க, ஆகக்குறைந்தது நாலு நிலையங்கள் மேலும் அமைக்கப்படவேண்டும் என்கிறார் பே(ர்)ஸ்ஸன். தொடக்க மூலதனமாக 40 இலட்சம் டொலர்களும், வருடாந்தச் செயற்பாட்டு வருவாயாக 16 இலட்சம் டொலர்களும் சேர்ந்து, தேவைக்குப் போதுமானதாக இல்லை. '' மக்கள், இன்னமும் எவ்வளவோ செய்யமுடியும். அங்கோலாவுக்கு யாருமே உதவப் போவதில்லை என்பதே எமது கருத்தாகும்'' இதுவும், பே(ர்)ஸ்ஸனின் கூற்றாகும்.

சோமாலியாவிலிருந்து பிரிந்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட சோமாலிலான்டின் கதையும் இது தான். அங்கே நிலக் கண்ணிவெடிகள், 23,000 பேரை முடமாக்கியுள்ளன. நியூயோர்க் நகர மருத்துவர் டாக்ரர் கெவின் கஹிலும், ஐ. நா. வின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகமான ஏ. ஏ. ஃபாறாவும், ஒரு சில அங்கவீனர்களுக்காவது புனர்வாழ்வளிக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளனர். அங்குள்ள பாதிக்கப்பட்டோரில், 2/3 பங்கினர் 15 வயதிற்கும் குறைந்தோராவர் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

ஹார்ஜெயிசா என்ற இடத்தில் அமைந்துள்ள சிகிச்சை நிலையத்தில், ஜெய்ப்பூர்க்கால் என்னும் செயற்கை அங்கம் பொருத்தும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் ஜெய்ப்பூர் நகரத்தில், அங்குள்ள மக்களுக்காகச் செயற்கைக்கால் உற்பத்தி முறை கண்டுபிடிக்கப்பட்டதால், இந்தப் பெயர் வரக் காரணமாயிற்று. றப்பரினால் செய்யப்படும் இந்தச் செயற்கைக் காலின் விலை, 10 டொலருக்கும் குறைவாகும். முழங்காலுக்குக் கீழும், மேலும் இழக்கப்பட்ட பகுதிக்கு இதனைப்பொருத்த முடியும். இதுவரை, 500 பேருக்கு இக்கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில், நிலக்கண்ணி வெடியால் முடமாக்கப்பட்டோரின் எண்ணிக்கை 350,000 த்திலிருந்து, 500,000 வரையிலாகும். இந்த எண்ணிக்கை, அச்சமூட்டத்தக்க வகையில் வளர்ந்து கொண்டு போகிறது. மிகவும் பின்தங்கிய பகுதிகளில், இவ்வாறு காயப்படுவோரில் 10 இற்கு 8 பேர் மருத்துவமனைக்கு கொண்டு போகப்படுவதற்கு முன்னரே இறந்து போயுங்கூட, இவ்வளவு அதிகமானோர் முடமாகி உயிரோடு வாழ்கிறார்கள். ஏப்ரலுக்கும், ஜூலைக்குமிடையில் செஞ்சிலுவை நிலையங்களில் 629 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இந்தக் காலப்பகுதியிலும் பார்க்க, இது இரட்டிப்பாகும். உலகிலேயே மிக அதிகமாக நிலக்கண்ணிவெடி பொருத்தப்பட்ட இடம் என்று ஐ. நா. குறிப்பிடும் '' ஹேறற் '' என்ற நகரிலுள்ள செஞ்சிலுவை மருத்துவ நிலையத்தில், ஒரே நேரத்தில் 20 பேருக்கு மட்டுமே சிகிச்சையளிக்க முடியும். 400 பேர், அந்தவேளையிற் காத்திருக்க வேண்டிய நிலை. '' இந்தச் சிக்கலை மறைத்திருக்கும் முகத்திரையை நீக்கவேண்டிய பணி எமதாகும். பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த, எதையாவது செய்தேயாக வேண்டும். '' என்கிறார், சர்வதேச அங்கவீனர் அமைப்பின் ஸ்தாபகர்களுள் ஒருவரான ஜீன் பப்ரிஸ்ற்றிச்சாடியர். பார்வைக்கெட்டிய எதிர்காலத்தில் அவரும், அவரைப் போன்றவர்களும், தாம் சிகிச்சையளிக்க நினைக்கும் நோயாளர்களைப் போன்று, பன்மடங்கானோருக்கு மருத்துவம் புரிய வேண்டியிருக்கும்.

அறிக்கைகள்:- பாரிசிலிருந்து:- புறூஸ் குறும்லே. லுவாண்டாவிலிருந்து:- ஸ்கொற் மக்லியொட்.

## மனிதக் கருவூலம் பிரிக்கப்பட்டு, பல கருக்களாகி உற்பத்திப் பெருக்கம்.

கட்டுக்கதைகள் இன்று உண்மையாகி விட்டன. வோசிங்ரனிலுள்ள ஜோர்ஜ் வோசிங்ரன் பல்கலைக்கழக மனிதக்கரு ஆய்வாளர் 'ஹால்' அவர்கள் கடந்த அக்ரோபர் மாதத்தில் இவ் ஆராய்ச்சியில் தான் வெற்றியீட்டியுள்ளதாக அறிவித்தார். இவர் மனிதக் கருக்கள் 17ஐ, 48 ஆகப் பிரித்து இவற்றைத் தனித்தனியாக வளர்ச்சியுறச் செய்யமுடியும் என்று நிருபித்துள்ளார். இயற்கைக்கு மாறான கருவூலத்தைப் பயன்படுத்தி, ஒரு கருவை இரண்டாக்கி அவற்றை வளர்ச்சியுறச் செய்து அவ்விரு கருக்களையும் திரும்பவும் நான்கு கருக்களாக்கி ஜெலிபோன்ற ஒரு பொருளினுள் வைத்து இதனைப் பல்கிப் பெருகச் செய்துள்ளார். விஞ்ஞானி 'ஹால்' அவர்கள் இப்படி ஒரு ''குழந்தைப் பண்ணையை'' யே உருவாக்கிவிட்டார் என்ற செய்தி உலகையே வியப்புக்குள்ளாக்கி விட்டது, அமெரிக்கர்களில் 14 வீதமானோர் இதனை வரவேற்பதாகவும். தற்போது 19 வீதமானோர் இதனை அனுமதிக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர். இக்கூற்றை நிர்ணயிக்க வேண்டியது சாஸ்திர வல்லுநர்களின் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருக்கடியிற் புதைபொருள் வேட்டை

## நவீன தொழில் நுட்பம், இதற்கு உதவுகின்றது.

— எழுதியவர் —

நஸ்லி ஜிப்பாஸ்

காற்றும், அலையும் கூட்டாக மோதிச் சிதைத்த பல கப்பல்கள் கடலுக்கடியிற் கிடக்கின்றன. அண்மைக் காலத்தில் புதிய தொழில் நுட்பத்தின் உதவியுடன் இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை ஏற்றிச் சென்ற விலை மதிப்பற்ற பொக்கிஷமும், இதில் ஈடுபடுவோருக்குக் கிடைத்துள்ளது. 'றோபோ' (Robot) எனப்படும் மனித இயந்திரம் ஆழ்சமுத்திரத்தின் அடிமட்டத்திற்குச் சென்று தேடுதலை நடத்துகின்றது. படம் பிடிக்கும் கருவிகளும், 'சோனர்' எனப்படும் (Sonar) ஒலிமூலம் ஒளிந்திருக்குப் பொருள்களைக் காட்டும் சாதனங்களும் தேடுதலிற் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கங்கள் இந்த வேட்டையில் ஈடுபடத் தயக்கங் காட்டுகின்றன. பெருஞ் செல்வந்தர்களும், புதைபொருள் தேடும் நிறுவனங்களும் பெரும் முதலீடு செய்து கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர்.

அமெரிக்காவும், ஆசியாவும், ஐரோப்பிய நாடுகளுக்குத் திறக்கப்பட்டபின் இங்குள்ள பழம் பெரும் நாகரிகங்கள் சேமித்துவைத்திருந்த அருஞ்செல்வங்களைச் சூறையாடுவதில் ஸ்பெயின் (Spain) போர்த்துக்கல், (Portugal) ஒல்லாந்து, (Holland) பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் முனைப்பாகச் செயற்பட்டன. அப்போதைய ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டின் கையோங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் தென் அமெரிக்காவைத் தம் வசப்படுத்தியுள்ளனர். அங்குள்ள இன்காஸ் (Incas) அஸ்ரெக்ஸ் (Aztecs) மாயாஸ் (Mayas) ஆகிய பழைமைவாய்ந்த இனங்களை நசுக்கி அவர்களுடைய நாகரிகங்களை அழித்ததுடன் விலைமதிப்பற்ற செல்வங்களையும் தமது நாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். அற்லான்ரிக் சமுத்திரத்தைக் (Atlantic Ocean) கடக்கும்போது இக் கப்பல்களிற் பல அமிழ்ந்து போயுள்ளன.



1656 ஆம் ஆண்டில் சிதைந்த கப்பலொன்றின் நங்கூரம். இது, மேற்கிந்தியத் தீவு பஹாமாஸ் (Bahamas) கடலில் உடைந்து சிதறிய "நியூஸ்ற்றா செனோரா டீ மறவிலாஸ்" என்ற கப்பலுக்குரியது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1715 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி மேற்கூறிய தென் அமெரிக்க இனங்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட அரச வைப்புக்கள், பொதுமக்கள் ஆபரணங்கள், மத வைபவங்களுக்குரிய அணிகலன்கள், இன்னும் பல பெறுமதிமிக்க பொருள்களை ஏற்றிய படி 12 ஸ்பெயின் நாட்டுக் கப்பல்கள் தென்அமெரிக்கக் கண்டத்தைச் சுற்றிக்கொண்டு கியூபா வரை வந்துவிட்டன. பின்பு இவை வடஅமெரிக்காவின் ஃபுளோறிடா (Florida) வை நோக்கி வந்தன. காரணம், இக்கரையிலிருந்து வசதியான கல்ஃப் (Gulf Stream) எனப்படும் சமுத்திர நீரோட்டத்தையும், கப்பற் பாயை (Sail Cloth) விரித்துத் தள்ளும் காற்றையும் ஐரோப்பா வரை பெறமுடியும். ஆனால் மாலுமிகள் எதிர்பார்ப்பு வீண் போயிற்று. பெரும் புயலொன்று அத்தருணத்தில் வீசியதால் 11 கப்பல்களும் நீரில் மூழ்கின. ஒன்று தான் தப்பியது. இந்தப் பன்னிரண்டு கப்பல்களிலும், ஏற்றி வரப்பட்டவை அக்காலக் கணக்குப்படி 14 மில்லியன் டொலர் பெறுமதி வாய்ந்தவை. 2,000 பயணிகள் இதில் சென்றார்கள். இவர்களிற் கூடுதலானவர்கள் ஸ்பெயின் நாட்டு இராணுவத்தினர். உணவுக்கென உயிருள்ள கால்நடைகளும் இதில் ஏற்றிவரப்பட்டன. 700 பயணிகளும், மாலுமிகளும் இதில் இறந்தனர். ஃபுளோறிடாக் கடலில் 14 கிலோ மீற்றர் நீளத்துக்கு ஏற்றிவரப்பட்ட பொக்கிஷங்கள் சிந்தப்பட்டன. அங்கு வந்து மொய்த்த இங்கிலாந்து நாட்டுக் கடற் கொள்ளைக்காரர்களுடன் போர் இட்டவாறு ஸ்பெயின் நாட்டவர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கொண்டு வரப்பட்டவற்றிலே 80 வீதம் காப்பாற்றப்பட்டதாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திராசிரியர்கள் இயம்புகின்றனர். மிகுதி 20 வீதம் இன்னும் கடலுக்கடியிற் கிடக்கின்றது. இது போன்று இன்னும் பல உலகை வலம்வரும் கடற்பாதையெங்கும் சிதறிக் கிடக்கின்றன.

கடலிலும், மண்ணிலும் புதைந்து கிடக்கும் அருஞ்செல்வத்தைத் தேடிப்பிடிப்பது, மனித இதயத்திற்கு மிகவும் உவப்பான செயல். ஆழ்கடலில் தேடும் பணியில், பெருஞ் செல்வந்தராகிய 68 வயதுடைய இளைப்பாறிய அமெரிக்கப் பொறியியலாளர் கப்ரன் வெல்லர் (Captain Weller) முதன்மையானவர். ஃபுளொறிடாவின் தெற்குப் புறக்கடலில், நவீன உலோகம் காட்டும் கருவிகளைப் பயன்படுத்தி, பல பவுண், ஆபரணங்களைக் கைப்பற்றியுள்ளார். அண்மையில், இவரிடம் தொழில் புரியும் சுழியோடிகள், பின்வருவனவற்றை மேலே கொண்டு வந்துள்ளனர். எண்ணிலடங்கா மோதிரங்கள், வைரங்கள் பதிக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சி உருவில் பென்டன்ற் (Pendant) இதன்சோடியான இன்னொன்று, 441 வைரக் கற்கள். இவைகளின் கூட்டுப்பெறுமதி 2 மில்லியன் டொலர்கள். இது போன்ற தேடுதல், எப்போதும் மகிழ்ச்சியான காரியமல்ல. அமெரிக்காவின் இன்னுமொரு கோடீஸ்வரர் மெல்ஃபிஷர் (Mel Fisher) அண்மையில் தனது மகனையும், மருமகளையும் கடலுக்குப் பலி கொடுத்துள்ளார். என்றாலும், அவர் தனது செயற்பாடுகளை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய தொழில் நுட்பம், இதுவரை காலமும் மறைந்து கிடந்த பல பொக்கிஷங்களைக் காட்டிக் கொடுத்துள்ளது. கிட்ட நெருங்க முடியாதென்று கூறப்பட்ட பல வைரக் குவியல்களை மேலே கொண்டுவர உதவியுள்ளது. இவ்வித வேட்டையில், 1985 ஆம் ஆண்டு மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஒல்லாந்து நாட்டின் கப்பலொன்று, சீனாவிற் கொள்ளை



மரகதம் பதித்த பவுண் மோதிரங்கள் சில.

அடிக்கப்பட்ட பொருள்களுடன், 1752 ஆம் ஆண்டு தென் சீனக் கடலில் அமிழ்ந்துள்ளது. இது கண்டுபிடிக்கப்பட்டு, இதிலுள்ள 120 பெறுமதி மிக்க தங்கப்பாளங்கள் மைக்கேல் ஹச்சர் (Michael Hatcher) என்பவரால் மீட்டு எடுக்கப்பட்டுள்ளன. அதே வருடம் ஜூலை மாதம் 16 வருடத் தேடுதலின் பின், மேற்குறிப்பிடப்பட்ட மெல்ஃபிஷர், அரோச்சா (Atocha) என்ற கப்பலைக் கண்டுபிடித்துள்ளார். இதில் எடுக்கப்பட்டவை, 1,000 வெள்ளிப் பாளங்கள். இதே எண்ணிக்கையுள்ள தங்கப்பாளங்கள், பவுண் உணவுக் கோப்பைகள், வைரக் கற்கள், மரகதக்கற்கள், புட்பகக் கற்கள் ஆகியன. இவையாவற்றினதும் கூட்டுப் பெறுமதி 300 மில்லியன் அமெரிக்க டொலர்.

இது ஓர் ஆரம்பமே; முடிவல்ல. இந்தத்துறையில் ஈடுபட்டிருக்கும் பிரபல விஞ்ஞானியும், கடலாய்வாளருமாகிய கிறாஹாம் ஹவ்க்ஸ் (Graham Hawkes) பின்வருமாறு கூறுகின்றார்:- ''மிக விரைவில் கடலிற் பொன்வேட்டை ஆரம்பமாகும். பண்டுதொட்டுக் கடலில் தொலைந்ததெல்லாம், அடுத்த 25 லிருந்து 50 வருடங்களுக்குள் வெளிவந்துவிடும். ஆனால் தனி மனிதர்களும், குழுக்களும் கடலோடு போராட, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அரசுகள், இலாபத்தை எவ்வாறு தாம் மட்டுமே ஈட்டலாம் என்று திட்டமிட்டபடி, சட்ட நடவடிக்கை எடுக்கின்றன. சர்வதேசச் சட்டநிபுணர்கள், இன்று இது சம்பந்தமான காரசாரமான விவாதங்களில் இறங்கியுள்ளனர். முன்பு கடலில் இருந்து மீட்கப்பட்டவை பெறுமதி குறைந்தவையாக இருக்கும் போது பேசாமல் இருந்த அரசுகள், இன்று கோடிக் கணக்கானவை மேலே வரும்போது, பேராசைப் படுவதில் வியப்பில்லை.



பவுணிற் செய்யப்பட்ட நகம், காது, சுத்தம் செய்யும் கருவி.

கனேடிய அரசும், சட்டமியற்றுவது பற்றி அண்மையில் யோசித்துள்ளது. ஆசியாவில், மலேசியா நாடு இம்முயற்சியில் முன்னணி வகிக்கின்றது. ஐ.நா. தனது பங்குக்கு, நீதிப்பிரிவை முடுக்கிவிட்டுள்ளது. சட்டங்கள் கொண்டுவர, களவுகளும் கூடும். இதனால், சரித்திர ஆய்வுக்குதவும் அருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் பொக்கிஷங்கள் உரு மாற்றப்படும்; அல்லது, ஒளித்து வைக்கப்படுமென்று அங்கலாய்ப் போரும் உளர். ஆனால், பொறுப் புணர்ச்சியுள்ள திரவியந் தேடுவோர், கற்றறிந்தோரின் ஆக்கபூர்வமான உதவியை நாடுவதும் மறைக்க முடியாததொன்று.

எதிர்காலத்தில் மீட்கப்படவிருக்கும் திரவியங்கள் யாவும், நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர் பெறுமதி வாய்ந்ததென, சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவைச் சுற்றி, ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட கப்பற் சிதைவுகள் கிடப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் பல மில்லியன் கப்பல்கள் வேறு தண்ணீருக்கடியிற் கிடக்கின்றன. மத்தியதரைக் கடலுக்கடியில் ரோமாபுரிக் கப்பல்களும், அவர்களுக்கு முந்திய பீனீசியர்களின் கலன்களும் கிடக்கின்றன. இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் ஜேர்மன், அமெரிக்கன், பிரிட்டிஷ் கப்பல்கள் விலைமதிப்பற்ற செல்வத்துடன் கடலின் அடிமட்டத்திற்குச் சென்றுள்ளன. தென் அமெரிக்காவைச் சூறையாடுவதில் ஈடுபட்ட ஸ்பெயின் நாட்டுக் கப்பல்களிற் பாதிக்குமேல் அற்லான்ரிக் சமுத்திரத்தின் அடியிற் கிடப்பது வரலாற்று உண்மை. இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றிலும். தொன் நிறைக்கணக்கிற் பொன்னும், வைரமும் எடுத்துச் செல்லப் பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. இவை, 16 ஆம் நூற்றாண்டுச் சம்பவங்கள். 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்துக் கண்மையில் உடைந்த ஸ்பெயின் நாட்டுக் கப்பலில், 220 பெட்டிகளிற் பொன்னும், 2½ தொன் வெள்ளியும் வைக்கப்பட்டிருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது. 16 ஆம் நூற்றாண்டில், மலாக்காக் கடலிற் போர்த்துக்கல் நாட்டுக் கப்பலொன்று, இவையெல்லாவற்றையும் தூக்கியடிக்கக்கூடிய திரவியங்களுடன் சிதைந்துள்ளது. இந்தக் கப்பல் இன்னும் மீட்கப்படவில்லை. ஆனால், மலேசியா, இந்தோனேசியா அரசுகள், இது யாருக்குச் சொந்தம்? என்று மோதிக்கொள்ள ஆரம்பித்துள்ளன.

திரவியந் தேடும் படலம் ஓர் இலாபகரமான பொழுதுபோக்கோ, செல்வந்தர்களின் விளையாட்டோ அல்ல. நூற்றுக்கணக்கான மணித்தியாலங்கள், அரசுக்குச் சொந்தமான காப்பகங்களிற் தூசுபடிந்த வரைபடங்களைப்படிக்க வேண்டும். பின்பு, தேடுதலுக்கு வேண்டிய கப்பல், மாலுமிகளின் உன்னதமான தொழில் நுட்பக்கருவிகள், ஆழ்கடற் சுழியோடிகள், மேலாக



மீட்கப்பட்ட சில மோதிரங்கள். காலணிக்குப் பூட்டப்படும் பக்கிள் (Buckle).

மூலதனம் ஆகியவற்றை ஒன்றுபடுத்த வேண்டும். பல சமயம் பெரும் பொருட் செலவின் பின், பலன்கிட்டாமல் விடுவதுண்டு, இதன் பின் அதிர்ஷ்டம் கண் திறந்தால் கைக்கெட்டியவற்றை அரசன் தட்டிப் பறிக்கக் காத்திருக்கிறான். மெல்ஃபிஷர், 100 கீழ் நீதிமன்ற வழக்குகளையும், 3 மேன்முறையீட்டு வழக்குகளையும், 1 அதியுயர் நீதிமன்ற வழக்கையும் சந்தித்துள்ளார். இனி வரவிருக்கும் புதிய சட்டங்களை இவர் வெல்வது கடினமென்று சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## கடல் திரவியமும், கடல் சம்பந்தமான புதிய சட்டங்களும்

1910 ஆம் ஆண்டு, பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிறசெல்ஸ்சில், கடல் திரவியம் சம்பந்தமான சர்வதேசச் சட்டம் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது:- கடலுக்கடியிற் கிடப்பவை, அவற்றை முதலில் எடுப்பவருக்குச் சொந்தம் என்பதே அதன் சுருக்கம். இன்று வெளிக்கொணர்பவை, பெறுமதியில் மிகவும் கூடியவை என்பது வெளிப்படை. கரையோர நாடுகள், தனிமனிதர்கள் பெருஞ் செல்வத்தைக் கைப்பற்றிச் செல்வதை, இன்னமும் அனுமதிக்கத் தயாராயில்லை. ஐ. நா. வும், இந்த நாடுகளுக்குப் பரிவுகாட்டும் வகையிற் சட்ட அறிஞர்களைக் கூட்டியுள்ளது. கடல் வலயச் சட்டத்தில் ஊறிய சில சட்ட வல்லுநர்களின் கருத்துப்படி, ஐ. நாவின் நடவடிக்கை நாடுகளுக்கிடையில் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது. ஆனால், தமது காப்பகங்களிற் சேர்ப்பதற்காகவும், வருவாயைக் கூட்டுவதற்காகவும் கடல்திரவியத்தைத் தனி நாடுகள் பெரிதும் விரும்புகின்றன. ஆனால், தாங்களே இந்த முயற்சியில் ஈடுபட, அவர்கள் தயாரில்லை. தனியார் கண்டுபிடித்ததைக் கைப்பற்றுவது தான், அவர்களின் முழு நோக்கம். நாடுகள் இறுக்கமான சட்டங்கள் கொண்டுவர, தேடுதல்கள் களவாக நடத்தப்படுவதும், கண்டுபிடித்ததை வெளியரங்கப்படுத்தாமல் விடுவதும், கள்ளச் சந்தையில் விற்பனைகள் நடப்பதும் பெருக வாய்ப்புண்டு. அதே சமயத்தில், இன்று பற்பல முன்னேற்றகரமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்தி, திடீர்க் குபேரராகவரும் நோக்குடன் கடலில் இறங்கும் பேர்வழிகளும் மலிந்து விட்டனர். இதனால், அரசுகள் கண்காணிக்க வேண்டியுள்ளன. சட்டங்கள், நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகின்றன. கண்டு பிடிப்போர்களுக்கு, பிரிட்டிஷ் அரசு வெகுமதி கொடுக்க முன்வந்துள்ளது. அதனால், அங்கு கண்டுபிடிப்புக்கள் மறைக்கப்படும் சாத்தியம் குறைவு. போர்த்துக்கல் நாட்டுச் சட்டத்தின்படி, கண்டுபிடிப்புக்கள் அரசுக்குச் சொந்தம். ஆனால், எடுக்கப்பட்ட பிரயத்தனத்திற்கும், பட்ட கஷ்டத்திற்கும் தாராளமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கொடுக்கப்படும். பொதுவில், எல்லா ஐரோப்பிய நாடுகளும் கடல் திரவியம் அரசுக்கே சொந்தம் என்ற சட்டத்தையே கடைபிடிக்கின்றன. இதனால் சிதைந்த கப்பல்களின் தொகைக்குப் பெயரெடுத்த பிரான்ஸ், கடற்கொள்ளைக் கூட்டங்களின் புகலிடம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அமெரிக்கச் சட்டத்தின்படி, நாட்டிற்குள் நீரடியிற் காணப்படும் திரவியங்களும், கரையோரத்திலிருந்து 5கிலோ மீற்றருக்குள் காணப்படும் திரவியங்களும் அரசுடைமையாகும். சட்டம் இப்படிக் கூறினும், நீதிமன்றங்களில் வழக்குகளுக்கோ குறைவில்லை. சட்டத்தை இன்னும் இறுக்கமாகவும், தெளிவாகவும் செய்யவேண்டியுள்ளது என்பது, சட்ட வல்லுநர்களின் அபிப்பிராயம். ஆனால், பெரும் முதலீடு செய்து தான், அடியிலிருந்து மேலுக்குப் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. பெருஞ் செலவு செய்ய அரசுகளே தயங்கும் போது, மெல்ஃபிஷர் போன்றவர்கள் தங்கள் பணத்தையும், நேரத்தையும், சில சமயம் உயிரையும் பணயம் வைக்கத் தயாராகவுள்ளனர்.

ரைம் சஞ்சிகை–ஒக்ரோபர் 25, 1993.

## கடலுக்கடியில்

1 1912 ஆம் ஆண்டு கனடாவின் நியூபவுன்ட்லாந்து கடற்கரையிலிருந்து 640 கிலோ மீற்றர் தூரத்தில் பிரிட்டிஷ் அரசுக்குச் சொந்தமான 'ரைற்றானிக்' என்ற பெயருடைய கப்பல் மிதக்கும் பனிப்பாறையுடன் மோதிச் சிதறியது. 1985 ஆம் ஆண்டு இதன் சுவடுகள் நீரில் மூழ்குவோரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது இன்னும் மேலுக்குக் கொண்டு வரப்படவில்லை. இதன் பெறுமதி கணக்கிலடங்காததெனத் தெரிவிக்கப்படுகின்றது.

2 கறோலினாஸ் தீவுகளுக்கு 260 கிலோ மீற்றர் அப்பால் அமெரிக்காவுக்குச் சொந்தமான நீராவிக் கப்பல் 'எஸ் எஸ் சென்றிறல் அமெரிக்கா' 1857 ஆம் ஆண்டு கடலடிக்குச் சென்றது. இதில் ஏற்றிச் செல்லப்பட்ட திரவியங்கள் 1988 ஆம் ஆண்டு மீளப் பெறப்பட்டுள்ளன. இதன் பெறுமதி ஒரு பில்லியன் டொலர்.

3 1715 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமான 12 கப்பல்கள் தென் அமெரிக்காவின் செல்வங்களை ஏற்றிக்கொண்டு கியூபாத் தீவைக் கடந்து வட அமெரிக்காவின் புளொறிடாவை நெருங்கும்போது பெரும் புயலிற் சிக்கி ஒரு கப்பலைவிட மற்றெல்லாம் மாண்டன. 1993 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டு மில்லியன் டொலர் பெறுமதியான ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. மிகுதி கடலுக்கடியில். இதன் பெறுமதியும் கணக்கிலடங்காதது.

4 புளொறிடாவுக்குத் தென்மேற்குப் புறமாக ஸ்பெயின் நாட்டின் 'நுஎஸ்ரிறா செனோறாடீ அற்றோச்சா' என்ற பாய்க்கப்பல் 1622 ஆம் ஆண்டு புயலில் அடிபட்டுத் தாண்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு மீட்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 300 மில்லியன் டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

5 வேறாகுறூஸ் கப்பல் தொடர்: ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமான 16 கப்பல்கள் கொண்ட இத்தொடர் பாத்றேதீவு, ரெக்சாஸ் மாநிலக் கடலில் தாண்டுள்ளது. இதுவரை இரண்டு கப்பல்கள் மாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பெறுமதி 1.8 பில்லியன் டொலர்.

6 மேற்கிந்தியப் பகாமாஸ் தீவுகளுக்கு அண்மையில் 656 ஆம் ஆண்டு 'நுஎஸ்ரிறா செனோறாடிமறவிலாஸ்' என்ற ஸ்பெயின் நாட்டுக் கப்பல் நீரடிக்குச் சென்றுள்ளது. இதன் உத்தேச மதிப்பீடு ஒரு பில்லியன் டொலர்.

7 'சன்ரிஸ்சிமா ரிறினிடாட்' என்ற ஸ்பெயின் கப்பல் 1711 ஆம் ஆண்டு கியூபாத் தீவின் ஹவானாவுக்கு 24 கிலோ மீற்றர் மேற்குப் புறமாக பெரும் புயலின் காரணமாகக் கடலடியைத் தழுவியுள்ளது. இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. பெறுமதி 400 மில்லியன் டொலர்.

8 மென்டோசா கப்பல் தொடர்: 1614 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டுக் கப்பல்கள் பல தென் அமெரிக்காவின் யுக்கட்டான் மாகாணத்திற் கண்மையிலுள்ள கடலில் புயலின் காரணமாக மூழ்கியுள்ளன. இக்கப்பல் தொடரில் ஏற்றிச் செல்லப்பட்ட திரவியங்களின் பெறுமதி 900 மில்லியன் டொலர்.

9 இங்கிலாந்தை நோக்கி வந்த ஸ்பெயின் நாட்டின் '' ஸ்பனிஷ் ஆர்மடா '' என்று அழைக்கப்படும் கப்பல் அணி அயர்லாந்து நாட்டுத் தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குக் கரைக்கும், கெபிரைடிஸ் தீவுகளுக்கு மிடையில் அமிழ்ந்துள்ளன. இதன் பெறுமதியைக் கணக்கிடமுடியாது.

10 இங்கிலாந்தின் வேல்ஸ் கடற்கரைக்கப்பல் 'சான்ரா குரூஸ்' என்ற ஸ்பெயின் நாட்டுக் கப்பல் 1679 ஆம் ஆண்டு நீரடிக்குள் சென்றுள்ளது. இதில் பவுண், வெள்ளி போன்றவை பெட்டிகளில் எடுத்துச் செல்லப்பட்டன. உத்தேச மதிப்பீடு 60 மில்லியன் டொலர்.

11 இங்கிலாந்துக்குச் சொந்தமான 'ஏச்.எம்.எஸ் லுட்டீன்' என்ற கப்பல் 1799 ஆம் ஆண்டு நெதர்லாந்துக் கடலில் அமிழ்ந்துள்ளது. கிடக்கும் இடம் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த இடம் அபாயகரமானதால் நீரடிக்குச் சென்று பார்க்கமுடியவில்லை. இதன் உத்தேசப் பெறுமதி 195 மில்லியன் டொலர்.

12 நுஎஸ்றிறா செனோறாடீலாஸ் மெர்சிடீஸ், என்ற ஸ்பெயின் நாட்டுக்கப்பல் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களால் 1804 ஆம் ஆண்டு போர்த்துக்கல்நாட்டுக் கடலில் தாழ்க்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 200 மில்லியன் டொலர்.

13 1944 ஆம் ஆண்டு ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பலால் அமுக்கப்பட்டது 'எஸ். எஸ் ஜோன்பறி' என்ற அமெரிக்கக் கப்பல். இது ஓமான் நாட்டிலிருந்து 200 கிலோ மீற்றருக்கு அப்பால் கிடக்கின்றது. இதிலுள்ளவற்றின் பெறுமதி டொலர்கள் 5 மில்லியனிலிருந்து 200 மில்லியன் வரையாகும்.

14 மலாக்கா நீரிணைக்கண்மையில் 1512 ஆம் ஆண்டில் புயலில் சிக்கித்தாண்டது 'புலோர்டீலாமார்' போர்த்துக்கல் கப்பல். இதன் பெறுமதி 1 மில்லியன் டொலரிலிருந்து 9 மில்லியன் டொலர் வரை இருக்கும்.

15 டச்சு கிழக்கு இந்திய கம்பனிக்குச் சொந்தமான டீகெல்டாமால்சன், வியாபாரக் கப்பல் தென் சீனக்கடலில் 1752 ஆம் ஆண்டு அமிழ்ந்துள்ளது. 1985 இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பெற்ற பணம் 15 மில்லியன் டொலர்.

16 ஸ்பெயின் நாட்டின் 'சான்டீகோ' என்ற கப்பல் 1600 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டுத் தெற்கில் நசுக்பூ குடாவில் டச்சுக் கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு இதன் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெறுமதி கணக்கிலிட முடியவில்லை.

## ஹபிள் தொலைகாட்டி அழிவிலிருந்து விடுவிக்கப்பட்டது

எழுதியவர்:- மைக்கல் டீ. லெமொனிக்

டிசம்பர் 18 ஆம் திகதி நடுநிசிக்குச் சற்றுப்பின் அதாவது 'என்டோர்' புவிக்குத் திரும்பிய 5 நாள்களின் பின் விஞ்ஞானிகள் இரகசியமாக முதலாம் ஆய்வை மேற்கொண்டனர். ஹபிள் தொலைகாட்டி புவிக்கு அருகிலிருக்கும் உடு பக்கம் திருப்பப்பட்டது. அங்கிருந்து பெறப்பட்ட படம் புவியில் பெறப்பட்டது. மேரிலண்டின் பால்டிமோரிலிருந்த விண்வெளி ஆய்வகத் தொலைகாட்டிக் கணனி முன் பல விஞ்ஞானிகள் கூடினர். ஆவலுடன் தொலைகாட்டி அனுப்ப உள்ள படத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். என்டோரில் சென்ற விண்வெளி ஆய்வாளர்கள் வில்லைகளையும், ஏனைய உபகரணங்களையும் ஹபிள் தொலைகாட்டி பொருத்திய பின் திரும்பியுள்ளனர். ஆனால் செவ்வையாகச் செயற்படுமா எனத் தெரியாது. கோளின் படம் திரையில் விழுந்தவுடன் எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர். 4 வருடங்களின் பின் பழையபடி, புதிய நிலைக்குத் திரும்பி விட்டது.

அமெரிக்க தேசிய வானோடி, மற்றும் விண்வெளி நிர்வாகத்தைச் சேர்ந்த டானியல் கோல்டின் பத்திரிகையாளர் மாநாட்டில் புனரமைக்கப்பட்ட தொலைகாட்டியிலிருந்து பெறப்பட்ட முதற் படங்களைக் காட்டிய பின் கூறியதாவது: ''இன்று தொலைகாட்டி 4 மடங்கு வினைத்திறன் கூடியதாயுள்ளது. அதன் பார்வை தெளிவாக உள்ளது. வோஷிங்ரனிலிருந்து பார்த்தால் ரோக்கியோவிலுள்ள ஓர் ஈயை அது தெளிவாகப் பார்க்க முடியும்.''

நம்புவதற்குக் கடினமல்ல. திருத்துவதற்கு முன்பும் பின்பும் உள்ள படங்களைப் பார்க்கும் போது விளங்குகிறது. ஆயினும் டேவிட் லெக்றொன் கூறுகிறார்: ''இதுவே முதற் படங்கள். இன்னும் தூர இடங்களை ஆராயவில்லை. இப் பிரபஞ்சத்தின் (universe) வயது யாது? இந் நட்சத்திர மண்டல ஒளி வீதி எப்படி உருவாகியது? வேறு உடுக்களை, கோள்கள் வலம் வருகின்றனவா? இக் கேள்விகளுக்கு ஜூலை மாதத்திலிருந்து ஹபிள் விடையளிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.''

ரைம், ஜனவரி 24, 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய மருத்துவம்



நேபாள நாட்டுக் கோவில்களில் வெங்காயத்தைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். இதே வெங்காயத்தை ஒரு தத்துவஞானி, ''வாழ்க்கை ஒரு வெங்காயம், நாளந்தரம் அதன் தோலை உரித்துக்கொண்டு வருகிறோம். இடையிடையே எமது கண்கள் குளமாகின்றன'' என்கின்றார். வெங்காயம் ஒரு கிருமிநாசினி, பலசத்துக்கள் உள்ளடக்கிய மூலஉணவு; அத்துடன் உணவுக்கு உருசி சேர்க்கும் சரக்கு என்பதையும் யாம் அறிவோம். கிறிஸ்து பிறப்பதற்கு 6 நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட 'சரக சம்கிதை' வெங்காயத்தின் மருத்துவ உபயோகத்தை விபரித்துள்ளது.

மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக வெங்காயத்தைப் பயன்படுத்துகிறார்கள். மரக்கறியென்றாலென்ன, மாமிசமென்றாலென்ன வெங்காயமில்லாமல் சமையல் செய்யும் வழக்கம் எம்மிடம் இல்லை. பழைய சோற்றுடன் இதைக் கடித்து உண்ணுகிறோம். சம்பல் எனப்படும் அரையலில் இது முக்கிய அங்கம் வகிக்கின்றது. பொரியல் செய்கிறோம், சாம்பாரில் கரையவிடுகிறோம், இத்தியாதி, இங்கிலாந்தில் கிராமப் புறமக்கள் எம்மைப் போல வெங்காயத்தைப் பச்சையாக உண்கிறார்கள். பிணியால் பீடிக்கப்பட்டிருப்போரின் அறையில் வெங்காயத்தை நறுக்கிப் போடுகிறார்கள். பிரான்சில் காக்காய் வலிக்கு வெங்காயச்சாற்றை உட்கொள்ளக் கொடுக்கிறார்கள். காது இரைச்சல், காது வலி போன்ற நோய்களுக்கு ருஷ்யாவில் வெங்காயச்சாறு பயன்படுத்தப்படுகிறது. கிரேக்கநாட்டில் விஷத்தை இறக்க வெங்காயத்தை உபயோகிக்கிறார்கள்.

வெங்காயம் ஒரு பக்ரீறியாக் (Bacteria) கொல்லி என்பதை விஞ்ஞான உலகு ஏற்றுள்ளது. வெங்காயம் ஒரு கிருமிநாசினி என்பதை நாம் ஏற்றே ஆகவேண்டும். பழைய ரோமானியர்களின் கணிப்பில் வெங்காயம் இருபத்தியெட்டுப் பிணிகளைப் போக்கும் தன்மை கொண்டது. வெங்காயத்தைப் போன்று வெள்ளைப் பூண்டும், கடுகும், மிளகும், சக்திவாய்ந்த மருந்துகளாகும். வெங்காயம் ஊட்டச் சத்து நிறைந்ததோர் தாவர உணவு. இதை கிழங்கு வகையைச் சேர்ந்த பூடு எனலாம். நல்லுடலுக்கு இதன் சத்துக்கள் இன்றியமையாதவை. இதன் தாவரப் பெயர் 'ஆலியம் சிப்பர்.'

வெங்காயத்தில் இருக்கும் 'அலைல் சல்பைடு' (Aliyl Sulphide) பல நோய்களுக்குக் காரணமான கிருமிகளை அழிக்க வல்லது. மேனாடுகளில் வெங்காயச் சாற்றில் பல நவீன மருந்துகள் தயாராகின்றன. ஊர் வெங்காயத்திலிருந்து செய்யப்படும் 'அலியூம் கோபா' என்ற மருந்து நீர்க் கோவைக்கும், மூக்கு எரிச்சலுக்கும் பயன்படும். வெங்காயத்தில் உள்ள 'சிலிக்கன்' என்னும் தாது உப்பு கேச வளர்ச்சிக்கு உதவுகின்றது. வெள்ளை வெங்காயத்திலிருந்து தயாராகும் மருந்துகள் மூச்சு சம்பந்தமான நோய்களுக்கும், நீர்க்கோவைக்கும், இரத்த அழுத்தத்திற்கும் கொடுக்கப்படுகின்றன. ஜீவாக்கினியை வெங்காயம் விருத்தி செய்கின்றது. கூடுதலான பித்தத்தைக் கட்டுப்படுத்துகின்றது. சரீர வெப்பத்தைத் தணிக்கின்றது குன்மத்தைப் போக்குகின்றது. உடற் கடிகளுக்குப் பழுத்த வெங்காயத்தை வைத்துக் கட்டலாம். நரம்புத் தளர்ச்சிக்கு வெங்காயம் சிறந்த மருந்து. தாது விருத்திக்கு வெங்காயம் உதவுகின்றது. இதனாலேயே ஆன்மீகவாதிகளும், துறவிகளும், விதவைகளும் வெங்காயத்தை உணவிற் சேர்ப்பதைத் தவிர்க்கின்றனர். சீனர்களும், இக்கருத்தை வலியுறுத்துகின்றனர்.

வெங்காயம் பலவிதமான பிணிகளைப் போக்குவதற்குக் காரணமாகவிருப்பது அதிலுள்ள விட்டமின் 'சி' தான். பச்சை வெங்காயத்தில் இது நிறைய இருக்கின்றது. வேகவைக்கும் போது இது ஓரளவு அழிந்து விடும். முழு மருத்துவ நலனையும் பெற வெங்காயத்தைப் பச்சையாக உண்ண வேண்டும். வெங்காயத்தில் கெந்தகச்சத்தும் உண்டு. வெங்காயத்தின் தாள் உடல் வெப்பத்தைப் போக்கும். அதன் பூ குடற் பிணியையும், உடல் வாதத்தையும் போக்கும். வெங்காயத்தை உரிக்கும்போது கிளம்பும் ஆவி செரிமான சக்தியைத் தூண்டும். மேலும் வெங்காயம் உரித்து நறுக்கியவுடனேயே பயன்படுத்த வேண்டும். தவறின் பயனற்றதாகிவிடும்.

ஈரமான புரைகளைக் கொண்டதால் ஈரவெங்காயம் என்று தமிழர்கள் அழைப்பார்கள். ஈருள்ளி, நீருள்ளி, உள்ளிகட்டா, பலாண்டு, பியாஜ், ஒனியன் என்று முறையே மலையாளம், கன்னடம், தெலுங்கு, சமஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. வெங்காயம் விலை ஏறிய காலத்தில் அதை எமது உணவில் பாவிக்காமல் விடுவதால் வயிற்றோட்டம் முதற்கொண்டு நாம் பல பிணிகளுக்கு இடம் கொடுக்கின்றோம்.

தொகுப்பு: உலக உலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சகோதர, அங்கத்துவ சங்கமான

## கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இம்மாதம் **24-03-1994** இல் ஆரம்பிக்கப்பட்ட

# பனம் சீனி ஆலை

இப்பனம் தொழிற்சாலை சிறப்புற்று
இயங்கி எம் மக்களிற்குத் தேவை
அறிந்து சேவை வழங்க

*எம் இதயம் நிறைந்த*
*இனிய வாழ்த்துக்கள்!*

பனை வளம் பெருக்கி பயன் பல பெற்று
மனை வளம் சிறக்க மகிழ்வுடன் வாழ்வோம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்க கொத்தணிகள்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

★ உங்கள் தேவை எதுவோ ...........
அதற்கேற்ப சகல விதமான மரத்தளபாடங்
களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

★ சகல விதமான கொத்து விறகுகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளவும்

★ குறித்த தவணையில் உங்களுக்கு வேண்டிய
கட்டிட ஒப்பந்த வேலையானாலும் சரி
மரத் தளபாட வேலைகளுக்கும்

★ நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் ★

# சிறீ முருகன் மரத்தொழிற்சாலை

பொன்னாலை வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ். மாநகரில் வெளிநிலைப் பட்டப்படிப்புகள்

யாழ். பேராதனை பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

★ கலை மாணி (B. A) ★ வணிகமாணி (B.Com)

★ விஞ்ஞான மாணி (B. Sc)

ஆகிய உயர்கல்வி பட்டப்படிப்புக்கள், க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியடைந்த வர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மேற்கொள்ளலாம்.

பட்டப்படிப்புகளுக்குத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம்.

யாழ் நகரில் இதுவொன்றே

மேலதிக விபரங்களுக்கு:—

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புக் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது மிகப் பெரிய நேர வீணடிப்புகளும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும்.




| நேர வீணடிப்புகள் | காரணிகள் | தீர்வுகள் |
|---|---|---|
| 01 இயல்புக்கு மிஞ்சிய எத்தனிப்பு | o பேரவாவும் பெறுபேற்று வேட்கையும்<br>o மிதமிஞ்சியபதில்நடவடிக்கை<br>o ஒத்துழைப்பை வெளிக் காட்டுவதில் அளவு மீறிய விருப்பம். | * எதை நிரூபிக்க முயலுகிறீர்கள் என்று உங்களை நீங்களே வினாவுங்கள். யதார்த்த வாதியாயிருப்பதையும், அளவு மீறிய வேலை செய்வதையும் நிறுத்துக.<br>* உண்மை நிலைவரத்திற்கேற்றபடி பதில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவும்,<br>* பிறர் செய்யக்கூடியவற்றிற் தலையிடாதீர். மற்றவர்கள் உங்களைப்பாராட்டுவார்கள் என்பதற்காகச் சம்மதம் தெரிவிக்காதீர். |
| 02 தெளிவற்ற பொறுப்பு அல்லது அதிகாரம் | o பொறுப்புக்களை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கத் தவறுதல்<br>o தொழில்கள் ஒன்றின் மீது ஒன்று குவிதல்<br>o அதிகாரமற்ற பொறுப்பு | * அங்கீகாரத்திற்காகக் கடமைப் பட்டியலைத் தயாரியுங்கள்.<br>* இரட்டிப்பு வேலைகளை இனம் கண்டு அகற்றுங்கள்.<br>* பொறுப்புக்கேற்ற அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் |
| 03 முன்னேற்பாடின்றி வருதல் | o காணவேண்டியவர் இல்லாத விடத்து மாற்றுத் திட்டமின்மை | * கதவு திறந்திருக்கும் என்பது, உண்மையாக கதவைத் திறந்து வைத்திருப்பதல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள். உதவி தேவையானவர்களுக்கு மாத்திரமே கதவைத் திறவுங்கள், அமைதி வேளைகளையும், தேர்வு செய்தலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | ● கீழ்ப்பணியாளர் உம்மைச் சந்தித்துச் சரிபிழை பார்க்கும் படி, அதிக எதிர்பார்ப்பு.<br>o வருகைகளை விரைவாக முடித்துக் கொள்ள முடியாமை | யும், மறைத்தலையும் நடைமுறைப் படுத்துங் கள்.<br>* மற்றவர்களை அலுவலகத்திற்கு வெளியே சந்திக்கவும். உட்புகுந்து நில்லுங்கள். |
| 04 இல்லை என்று சொல்ல முடியாமை | o பிறர் நாடும் பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல்.<br>o மறுக்க இயலாமை<br>o மேலதிகாரிக்கு இல்லையென்று சொல்ல முடியாமை | * உங்களது மேலாண்மை வலுவை மிக மெலிந்த அளவில் பிரயோகிக்க மறுங்கள்.<br>* ஆம் என்று சம்மதம் தெரிவிக்குமுன் 10 வரை எண்ணுங்கள். இல்லை எனும் போதெல்லாம் காரணங் காட்டுங்கள். அத்துடன் மாற்று வழிகளையும் கூறுங்கள்.<br>* சம்மதம் கொடுக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலைக் காட்டி மறுப்புத் தெரிவியுங்கள். மேலதிகாரி வற்புறுத்தும் பட்சத்தில் இணங்குங்கள். எனினும் நிறைவேற்ற முடியாதென்று நினைப்பதை புத்திமதியாக எடுத்துக் கூறுங்கள். |
| 05 போதாத கட்டுப்பாடுகளும், முன்னேற்ற அறிக்கைகளும் | o முக்கியத்துவத்தை உணராமை<br>o கட்டுப்பாட்டு நெறிகளை நடைமுறைப்படுத்தும் திறமின்மை. | * கட்டுப்பாடுகள் முன்னேற்றத்தை நெறிப்படுத்தும் என்பதை அறியுங்கள், தவறான மார்க்கங்களைத் திருத்துங்கள். இவ்விதம் திருப்திகரமான செயற்பாட்டிற்கு உத்தரவாதம் அளியுங்கள்.<br>* நடைமுறைப்படுத்த இயலாத கட்டுப்பாடுகளைக் கைவிடுதல் நன்று. |
| 06 போதியளவு திட்டமிடாமை | o முக்கியத்துவத்தை அறியாதிருத்தல்<br>o சில நாட்களே மாதிரியானவை என்ற எடுகோளை வைத்துத் திட்டமிடாது விடுதல்<br>o மனதில் திட்டமிட்டிருப்பின் அது போதிய முக்கியமானதல்ல என்று எண்ணி அதை எழுத்தில் வடிவமைக்காதொழிதல். | * சிறந்த பலன்களைத் தரும் திட்டம் வகுத்தலிற் செலவு செய்யும் ஒவ்வொரு மணித்தியாலமும் நிறைவேற்றுப்பணியில் 4 மணித்தியாலங்களைச் சேமிக்க உதவுவதுமல்லாமல் சிறந்த பலாபலன்களையும் தரும் என்பதை அறிவீர்களாக.<br>* அநேக முகாமையாளர் நிறைந்த திட்டங்களைத் தயாரிப்பதில் தினமும் நேரத்தை வீணாக்குகிறார்கள் என்பதை அறிவீர்களா?<br>* எந்த ஞாபகமும் தவறற்றது அல்ல என்பதை அறியுங்கள். மேலும் அந்த செய்யவேண்டியனவற்றின் பட்டியலிலும் முன்னுரிமைகளும், இறுதித் திகதிகளும் சேர்க்கப்படுமட்டும் முடிவானதல்ல என்பதையும் அறிந்துகொள்க. |
| 07 பணியாட்கள் பற்றாக்குறை | o போதிய பயிற்சியின்மை<br>o மட்டுப்படுத்தப்பட்ட பணவசதி. | * தகைமை வாய்ந்த அலுவலர் இன்றிப் பயன் தரும் அதிகார பரவலாக்கத்தை நடைமுறைப் படுத்த முடியாதென்பதை அறிந்து கொள்ளுங்கள். அலுவலருக்கு பயிற்சியளித்தலுக்கு முன்னுரிமை கொடுங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | * செலவு நன்மைப் பகுப்பாய்வை நடாத்துங்கள். மேலதிக அலுவலர் செய்யக் கூடியதையும், அதனால் ஏற்படும் செலவையும் எடுத்துக் காட்டுங்கள். |
| 08 பூரண தகவலின்மை | o ஒழுங்கு முறையின்மை<br>o வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள அதிகாரப் பற்றாக்குறை.<br>o தீர்மானமெடுக்கும் திறனின்மை, அல்லது தேவையான தகவல்களை மற்றவர்கள் தருவதில் தாமதம். | * என்னென்ன செய்திகள் தேவை என்பதைத் தீர்மானியுங்கள். பின்பு அவற்றைக் கிடைக்கக் கூடியதாகவும், நம்பகரமானவையாகவும், தருணத்திற்குப் பொருத்தமானவையாகவும் செய்யுங்கள்.<br>* அதிகாரத்தை தெளிவு படுத்துங்கள். விடைகளுக்குக் கால எல்லை வகுங்கள். அனுகூலமடையாவிடில் பிரச்சனையை மேலதிகாரிக்கு எடுத்துச் செல்லுங்கள்<br>* செய்திகளின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு ஒன்று கூடுங்கள். |
| 09 திறமையற்ற அதிகாரப் பரவலாக்கம் | o மற்றவர்களைப் பார்க்கத் தான் வேலையைத் திறமையுடனும், விரைவாகவும் செய்வேன் என்ற நம்பிக்கை.<br>o மிதமிஞ்சிய கட்டுப்பாடுகள்.<br>o முகாமைத்துவத்திலும் பார்க்க தானே செய்து முடித்தல் வசதி கூட என்ற எண்ணம் | * ஏற்கக்கூடிய அளவிற்குத் தரத்தைக் குறைக்கவும் உங்களுடைய செயலாற்றும் தரத்தையல்ல முழுநிறைவு வேண்டி நிற்றலைத் தவிர்க்கவும்.<br>* கண்டிப்பைத்தளர்த்துக. குறிக்கோளை அடைதலை - அதை அடையும் மார்க்கத்தையல்ல— அழுத்துங்கள். செயற்பாடுகளை அல்ல பயன்களை அளவிடுங்கள்.<br>* ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். முகாமையாளர் என்பவர் முகாமைத்துவம் செய்வதற்கேயொழிய வேலை செய்யவல்ல. |
| 10 சுய கட்டுப்பாடின்மை | o இலக்கு அல்லது இலக்களவு இன்மை.<br>o தொடர்நடவடிக்கையின்மை<br>o வேலைகளை நேரத்திற்கு முடிக்காமை | * முக்கிய பலாபலன்தரும் பகுதிகளில் இலக்குகளை அமைக்கவும். நல்ல முறையிற் செயற்படும் பொழுது உண்டாகும் தரத்தை வளர்க்கவும்.<br>* நீங்கள் பரிசீலிப்பதையே மக்கள் செய்கிறார்கள். நீங்கள் எதிர்பார்ப்பனவற்றையல்ல; நீங்களும் அதேபோற் செயற்பட வேண்டும்.<br>* கீழே வைக்குமுன் வேலைகளை முடிக்கவும். ஒருமுறையே செயற்படவும். முதன்முறையே வேலை முடிவடையும்படி செய்விக்கவும். |
| 11 வேலைகளை முடிக்காது வைத்திருத்தல் | o குறிக்கோள், முன்னுரிமை, கால எல்லை ஆகியன இல்லாமை<br>o அவசரமானவையை மாத்திரம் முடித்து வைத்தல்.<br>o ஒழுங்கற்ற நிரம்பிய மேசை சொந்த விடயங்களில் ஒழுங்கற்றிருத்தல். | * இலக்குகளை வகுத்து அவற்றை முக்கியத்துவத்தின்படி நிரைப்படுத்தவும்.<br>* அவசர விடயங்கள் அருமையாகவே முக்கியமானவையாய் இருக்கும் என்பதை அறிவாயாக,<br>* மிதமிஞ்சிய செயற்படும் தன்மையை எதிர்க்கவும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12 நெருக்கடி முகாமைத்துவம் | o பிரச்சனைகளை எதிர்பார்க்கத் தவறுதல்<br>o மிதமிஞ்சிச் செயற்படுதல் ஒவ்வொரு பிரச்சனையையும் கெடுபிடியாகக் கருதுதல்.<br>o தீயணைத்தல் போன்ற அந்தரச் செயற்பாடு. | * எதிர்பாராததை எதிர்பாருங்கள்; என்ன தவறு ஏற்படக்கூடும் என்று கேளுங்கள். நிகழக்கூடிய பிரச்சனைகளின் பட்டியலைத் தயாரித்து இயலக்கூடிய அளவுக்கு அவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவும்.<br>* உங்களது பதில்களை (i) பொருட்படுத்த வேண்டாதவற்றைப் பொருட்படுத்தாது விட்டும், (ii) பொறுப்புக்களைப் பரவலாக்கியும், (iii) நீங்கள் கவனிக்க வேண்டியவற்றை மாத்திரம் கவனித்தும் அளவுபடுத்தவும்.<br>* பழைய பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் பார்க்கப் புதியன ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளல் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியுங்கள். |
| 13 கூட்டங்கள் | o நோக்கமின்மை<br>o மிகக் கூடிய / குறைந்த கூட்டங்கள்.<br>o முறைப்படுத்தாமை | * நிகழ்ச்சி நிரலில்லாமலோ, அல்லது நோக்கமின்றியோ கூட்டங்களை நடாத்த வேண்டாம். தேவையானவர்களை மாத்திரம் அழையுங்கள். பொருத்தமான திட்டத் தயாரிப்புக்கு இடமளியுங்கள்.<br>* கிரமமாகக் கூட்டங்கள் தேவையோ என்பதை ஆராய்ந்தறியுங்கள். இடைக்கிடை கூடுவதைத் தவிர்க்கவும்; நீண்ட நேரமெடுக்குமாயின் நேரத்தைச் சிக்கனப்படுத்தவும்.<br>* அங்கத்தவரின் சம்மதத்தைப் பெறும் பொருட்டு முடிவுகளைத் தொகுக்கவும். அங்கத்தவரின் பொறுப்புக்களை ஞாபகமூட்டிப் பயனுள்ள பின்னூட்டலைப்பெறவும், |
| 14 செயற்பாடற்ற எழுத்து வேலைகள் | o நீர் வெறுக்காமை<br>o மிதமிஞ்சிய கோவைப்படுத்தல்<br>o முறையைக் கடைப்பிடியாமை | * ஒருமுறை வாசித்த உடன் நடவடிக்கை எடுங்கள். தினமும் 80 வீதமானவற்றை இவ்வாறு செய்து முடிக்கலாம். சேர்த்து வைக்க வேண்டாம்.<br>* பிரதி தேவையில்லாத விடத்து மூலத்தில் பதில் எழுதவும், அல்லது மூலப்பிரதியின் பின்புறத்தில் பதிலின் பிரதியை எழுதலாம்.<br>* பிரதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும். நிர்மாணிக்கப்பட்ட படிவங்களை உபயோகிக்கவும். தெரிந்து அகரவரிசைப்படி கோவைப் படுத்தவும். பதிவுகளை வைத்திருப்பதை நிச்சயப் படுத்தவும். |
| 15 சுய ஒழுங்கு முறையின்மை | o நான் என்ற செருக்கு (அதிக அலுவலாயிருத்தல் முக்கியஸ்தராயிருத்தல் இன்றியமையாமை ஆகியவற்றின் அடையாளமாகத் தன்னை காட்டிக் கொள்ளல்) | * பேப்பர் வேலை அதிகரிப்பது தீர்மானமின்மை. பிற்போடல், பாதுகாப்பின்மை, முன்னுரிமை பற்றிய குழப்பநிலை ஆகியவற்றின் சின்னமாகும் என்பதை அறியுங்கள்.<br>* திட்டமிடற் படிவங்களை உபயோகித்து கட்டுப்பாட்டின் தரத்தை உயர்த்தி மேசை மேல் அடுக்கி வைப்பதைத் தவிர்க்கவும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | o தனது கட்டுப்பாட்டிற்கு அடங்காதோ என்ற பயம்.<br>o மறதிப் பயம் | * கலண்டரில் திகதிவாரியாக நிகழ்ச்சி நிரலை முன்கூட்டியே எழுதி அதனை ஒழுங்காகப் பார்த்து வந்தால் போதுமானது, |
| 16 திறமையற்ற தகவல் தொடர்பு | o தவறான வழிகளைப் பின் பற்றல்<br>o வேறுபட்ட மதிப்பு முறை<br>o பின்னூட்டலின்மை | * பொருத்தமான தொடர்புச் சாதனங்களைத் தெரிந்தெடுக்கவும் (தொலைபேசி, கடிதம், குறிப்புகள், மகா நாடுகள்)<br>* அனுபவமும், சூழலும் வித்தியாசமான தொடர்புப் பின்னணிகளை உண்டாக்கித் தொடர்புகளுக்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்கும் என்பதை அறிவியுங்கள்.<br>* நல்ல விளக்கத்தை நிச்சயிக்கும் பொருட்டுப் பின்னூட்டலைப் பெறுக; பின் திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும். |
| 17 பிற்போடல் | o நெருக்கடி நிலையில் திறம் படச் செயலாற்றலாம் என்ற நம்பிக்கை<br>o நான் வீரன் என்பதை வளர்க்க முயலல். (நெருக்கடி நிலையை உருவாக்கல்)<br>o இலகுவானதை முதல் செய்யும் பழக்கம். பொறுப்பான வற்றைப் பிற்போடல். | * ஊகம் ஓர் அறிவார்ந்த விளக்கமென்பதை அறிந்து கொள்ளுங்கள்.<br>* பிரச்சனையைத் தீர்க்கும் வீரர்களாக உங்களைக் காட்டிக்கொள்ளும் பொருட்டு ஒரு நெருக்கடியை வளரவிடும் தன்மையை இனம் காணுங்கள்.<br>* இதிற் பெரிய ஆபத்து, இதைச் செய்து முடிப்பது மிக முக்கியமானது. அப்படியானதை முதற் செய்து முடிக்கவும். |
| 18 கூடிக் களித்தல் | o செயல்வேகத்தை மாற்றவும் சூழ்புலக் காட்சியை மாற்றவும் விரும்புதல்<br>o பல விடயங்களையும் அறியும் ஆவல்<br>o உங்கள் தொழிலுக்கு அது அவசியம் எனக் கருதுதல் | * உந்தல்களைக் கட்டுப்படுத்த வேண்டும். களிக்கும்பொழுது மற்றவரைப் பற்றியும் சிந்தியுங்கள். மற்றவர்களைக் குழப்பாதீர்கள். ஒருவரும் வேலை செய்யாத நேரத்தில் ஓய்வெடுக்கவும்.<br>* தேவையான செய்திகளை முறையான வகை முறையிற் திட்டமிட்டுத் திரட்டுங்கள்.<br>* தொடர்புச் சாதனங்களை உபயோகிப்பதில் தேவையற்ற கூடிக் களித்தலைத் தவிர்க்கவும். |
| 19 தொலைபேசியின் குறுக்கீடுகள் | o இதன் உபயோகத்திற் திட்ட மின்மை<br>o சம்பாஷணையை முடிக்கும் திறனின்மை<br>o அதிகாரப் பரவலாக்க லின்மை | * தெரிவு செய்யவும், பரவலாக்கவும், திட்டம் தயாரிக்கவும் தொலைபேசியை உபயோகிப்பதற்குத் தகுந்த நேரத்தை வகுத்துக் கொள்ளுங்கள்.<br>* தொலைபேசியில் பேசும் கால எல்லையைத் தெரிவியுங்கள். பேச்சை முடிப்பதற்கு முன்னறிவிப்புக் கொடுங்கள். (ஆள் தொலைபேசியை நாம் வைக்குமுன்) கள்ளங் கபடமின்றிக் கூறவும். (மன்னியுங்கள் நான் இப்பொழுது போகவேண்டும்). |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பரவலாக்கத்தைக் கூட்டிக்கொள்ளுங்கள். தொலைபேசி அழைப்பைப் பிரதிநிதிகளிடம் கொடுக்கவும். தொலைபேசிப் பேச்சைத் திட்டமிடுங்கள். பேச வேண்டியவற்றை நிரற்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| 20 பிரயாணம் | o தெளிவற்ற நோக்கம்<br>o வழியில் நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தாமை.<br>o திரும்பியதும் மேசைக்குமேல் அடுக்குக் குவியலைக் காணல் | * நோக்கத்தைத் தெளிவாக்கவும். பிரயாணத்திற்கு மாற்று முறை உண்டா எனவும் ஆராயுங்கள். உ-ம்: மற்றவரை உங்களிடம் வரச்செய்தல். தொலைபேசிச் சம்பாஷணைக் கடிதம்.<br>* வாசிக்க வேண்டியவற்றிற்கு மடிப்படியாளங்களை வைக்கவும். எழுதவேண்டியவற்றிற்கும், கலந்தாலோசிப்பதற்கும் அப்படியே சிந்திக்கவேண்டியவற்றின் பட்டியலைத் தயாரியுங்கள். திட்டமிடலுக்கும், சொல்வதெழுதலுக்கும் அவ்வாறே.<br>* நீங்கள் இல்லாத நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்க அலுவலர்களுடன் திட்டம் தயாரிக்கவும். உதவியாளர் கடிதத் தொடர்புகளினதும் அவற்றின் பிரதிகளின் பட்டியலையும் உங்களுக்கு அனுப்பி வைக்கலாம். |

# அவர்களுடைய எண்ணம் என்னவோ?

சென்ற நவம்பர் 15 ஆந் திகதி தென்கொரியாவின் தலைநகர் சியோலில், விமானத்தாக்குதல் எச்சரிக்கை ஊதல் ஒலித்தது. மாதந்தோறும் நிகழும் அந்தப் பரீட்சார்த்த ஒலியெழுப்பலை, அநேகமானோர் பொருட்படுத்தவில்லை. அந்தப் பத்து மில்லியன் மக்கள் வாழும் பெருநகரத்தினர் படையெடுப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டனர். ''ஃபோல் ஈகிள்'' என்று பெயரிடப்பட்டுள்ள யுத்த ஒத்திகை நடவடிக்கையைக் கண்டித்த வடகொரியா, 48 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள நாட்டு எல்லையில், தனது ஒரு மில்லியன் துருப்பினர் கொண்ட படையைக் குவித்துள்ளது என்ற தகவல், சியோல் நகரில் எவருக்கும் இதயத்துடிப்பு அதிகரித்ததாகத் தெரியவில்லை. முன்பு பலமுறை அவர்கள் அதனைக் கேட்டுப் பழக்கப்பட்டுவிட்டார்கள்; அது, வெறும் மிரட்டல் தான் என்று, சியோல் தேசியப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கூறினார். வடகொரிய ஜனாதிபதி கிம்-இல் சுங்கையும், அவருடைய மகனையும், அந்த நாட்டின் யொங்பியோன் நகரில் அமைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு அணு ஆயுத உற்பத்திச் சாலைகளை, அனைத்துலகக் குழுவொன்று சோதனையிட அனுமதிக்கும்படி, அமெரிக்கா தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு உள்ளது. அதற்குப் பதிலாக, வடகொரியாவை இராஜதந்திர ரீதியில் அங்கீகரிக்கவும், வடகொரியாவுக்குக் கோபம் ஊட்டுவதாகவும், கடுஞ் செலவை உண்டுபண்ணுவதாகவும் உள்ள இராணுவ ஒத்திகைகளைக் கைவிட அமெரிக்கா தயாராக உள்ளதாகவும், அறிக்கைகள் சாடை காட்டுகின்றன. வடகொரியத் துருப்புக்கள், தங்கள் மாபெரும் படைப்பலத்தை அடிக்கடி அணிதிரட்டிக் காட்டினாலும், அடுத்த ஆண்டளவில் தென்கொரியாவின் படைப்பலத்திற்கு ஈடு கொடுக்கக் கூடிய அளவு எரிபொருள் கூட இல்லாத நிலை வரலாம் என்று, இராணுவ அவதானிகள் சிலர் கூறுகின்றனர் அல்லது, அவ்விதமாக நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை ஏமாற்றி விடமாட்டீர்களே?

தமிழீழத்திற் பிரசுரமாகும் தரமான சஞ்சிகைகளில் ஒன்றாக விளங்கும் உலக உலா வேறு எந்தச் சஞ்சிகைகளிலும் இல்லாதவாறு மிகவும் இரசனைக்குரிய புதிய விடயங்களை ஒவ்வொரு மாதமும் சுமந்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. அதிலும் கடந்த இரண்டு மாதமாக வெளிவரும் பொது அறிவுப் புதிர் என்னும் பகுதி மிகவும் தரமானதாகவும், வித்தியாசமானதாகவும் அமைந்துள்ளது. இப்பகுதி எம்மை மிகவும் கவர்ந்துள்ளது. இந்தப் பொது அறிவுப் புதையலில் பொது அறிவை அகழ்ந்தெடுப்பதே ஒரு புதிராக விளங்குகிறது. இருந்தும் அடுத்த மாதம் சந்திப்போம் என்று கடந்த மாதப் பொது அறிவுப் புதையலில் பிரசுரித்த தாங்கள் எம்மைச் சந்திக்கத் தவறியதுதான் ஏனோ? ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வாசகர்களாகிய எம்மை ஏமாற்றுவது உலக உலாவின் எண்ணமல்ல என்பது நாம் அறிந்திருந்தும், எம் பிஞ்சு நெஞ்சங்களைத் தங்கள் செயல் ஒரு கணம் வஞ்சித்து விட்டது. எனினும் தன்பால் எம்மைக் கவர்ந்திழுக்கும் எம் பிரியமான பத்திரிகை உலக உலா என்றென்றும் தரமானதும், புதுப் பொலிவுடனும் விளங்க எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்,

இங்ஙனம்,
த. கார்குழலி

★

ஆழ்கடலில் அமிழ்ந்து முத்தெடுப்பது போல உலக உலாவில் அமிழ்ந்ததால் அருமையான அறிவு முத்துக்களை அள்ளி ஆனந்தமடைந்தேன். தமிழீழத்திலே தனியிடத்திலேயே இருந்து உலகை வலம் வருவதற்கு உலக உலா வானூர்தி போல அமைந்திருந்தது. அத்தனை கருத்துக்கள் அனைத்தையும் அள்ளி விருந்திட்ட உலக உலா என்றென்றும் வலம் வர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
நாவற்குழி. ச. ஜெனு

★

## நேசப்பூக்கள்

தமிழ்க் கலாசார அறிவியற் பரப்பின் மீது அக்கறை கொண்டவன் என்ற முறையில் தங்கள் வெளியீடான உலக உலா வரவினைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் காலத்தின் தேவையான இந்தப்பணியினைச் செய்யும் தங்களிற்கு எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சஞ்சிகையின் உள்ளடக்கம் சிறப்பாக அமைந்துள்ளது. மொழியாக்கங்களும் முன்னரை விடத் தற்போது மெருகேறி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. உலக உலா நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
பருத்தித்துறை து. குலசிங்கம்

மாதந் தோறும் எம் வீடு தேடி வரும் ''உலக உலா'' மூலம் உலகைக் கற்றுக் கொண்டிருப்பவர்களுள் நானும் ஒருவன். உலகின் வெளித்தோற்றத்தை மட்டும் அறிந்திருந்த எனக்கு உலகின் உட் கிடக்கையைத் துலாம்பரமாகக் காட்டுவது உலக உலாவே. ஆகஸ்ற் இதழ் முதல் பெப்ரவரி இதழ் வரை அதன் தரம் உயர்ந்து கொண்டே வருகின்றது. விண்வெளி, முகாமைத்துவம், மனிதவியல் வரலாறு, உயிரியல் வரலாறு, உலக விவகாரங்கள் செய்திச்சரம், புதியன அறிமுகம் என உலக உலாவில் வெளிவராத விடயமே இல்லையெனச் சொல்லும் அளவிற்குச் சகல விடயங்களையும் உள்ளடக்கி வரும் தமிழீழத்தின் ஒரேயொரு சஞ்சிகை உலக உலா என்றால் மறுப்போர் உளரோ? பெப்ரவரி இதழில் வெளிவந்த முகாமைத்துவம் என்னும் பகுதி மிகவும் பயனுடையது. அதை வாசித்ததின் மூலம் இதுவரை காலமும் செய்ததை விட அதிகமான அலுவலக வேலைகளை என்னால் தெளிவான சிந்தனையுடன் செய்ய முடிகிறது. மேலும் இன்று உலகிலே பரபரப்பாகப் பேசப்படும் மறைந்து போன உயிரினமான டைனோசர் பற்றிய சுவாரஸ்யமான கட்டுரையொன்றைப் பிரசுரித்திருந்தீர்கள். வாசிக்கவாசிக்கச் சுவையாக இருந்தது; வியப்பாகவும் இருந்தது. ஒட்டு மொத்தமாகச் சொல்லப்போனால் எனக்கு உலகைப் பற்றிக் கற்பிக்கும் ஆசான் ''உலக உலா''வே.

இங்ஙனம்,
வி. ரூபரன்
ஒட்டுசுட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் சிறந்ததையே
கொள்வனவு செய்கிறோம்
உங்களின் நலனுக்காக



★ தரமான மருந்துப் பொருட்கள்!

★ ஊட்டச்சத்து மிக்க பால்மா வகைகள்!!

★ உற்சாகமூட்டும் உணவுப் பொருட்கள்!!!

எதுவானலும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
யாழ் மாநகரில் தனிப்பெரும்
நிறுவனமாக விளங்குவது

# ஆர். வி. ஜி. மருந்தகம்

ஆர். வி. ஜி. மருந்தகம்
504, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பா

தமிழீழத்தின் மூலவளங்களைப் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தை மேம்படுத்த உற்பத்தி செய்யப் பட்டு வருவது; ''பனை வெல்லம்''

புரதம், இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ், உயிர்ச் சத்து B, உயிர்ச்சத்து C, போன்ற ஊட்டச் சத்துக்களை ஒருங்கே கொண்டது;

''பனை வெல்லம்''

தரமான, சுத்தமான, தித்திக்கும் 'பனை வெல்லங் களை' வாங்க இன்றே நாடுங்கள்;

மொத்தமாகவும், சில்லறையாகவும் பின்வரும் அலுவலகங்களிலும், விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- **சங்கானை :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
  பனம்பொருள் விற்பனை நிலையம்,
  அராலி வீதி, சங்கானை.

- **சுன்னாகம் :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், உடுவில்.
  கற்பகதரு விற்பனை நிலையம்
  ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

- **மானிப்பாய் :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
  மானி-கோப், விற்பனவு நிலையம்
  வைத்தியசாலை முன், மானிப்பாய்.

- **கோண்டாவில் :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
  கற்பகதரு விற்பனவு நிலையம்
  சாவடிச் சந்தி, கோண்டாவில்.

- **தெல்லிப்பழை :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.

- **பண்டத்தரிப்பு :**
  பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி**
*மானிப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org